பிரதிஷ்டாசத்தி பதிந்தபொழுது மந்ததரம், அப்பொழுது முந்துண்டான விவேகமும விரத்தியும பிரதிஷ்டிதமாம் இவ்விடத்து கரபப்புப்பிரத்தியம நியூநத்திலே.

வித்தியாசத்தி பதிந்தபொழுது சிவஞானம பிரகாசம, இது தீவரசத்திநிபாதம.

சாந்திசத்தி பதிந்தபொழுது தீவரதரம, இவ்விடத்துத்த ரபப்புப் பிரத்தியம் அதிகத்திலே. நிர்விகார ஞானத்தினு லுபசாந்திவரும்

இந்த சத்திகளுக்குச் சத்திமானுயிருக்கிற சிவனுடைய நாமமும் நிவிர்த்தீசன பிரதிஷ்டேசன் வித்யேசன சாந்தீசன என்று வியவஹரிக்கப்படுமே. சத்திசிவனுக்கு ஆதாரதேக கரணங்களாகையா லிவ்விடத்துச் சத்திகள் ஸ்தானமென்றுஞ் சொல்லப் பெறும்.

ததுக்தம் ஸ்ரீமத்ரௌரவே — நிவர்த்தயதி ஸம்ஸாரம் யாஸாஸ்ய நிவ்ருத்திகா । நிவ்ருத்திரிதி தஸ்யோக்தா நாம தத்பொரவி நிவ்ருத்திஜாது || நிவ்ருத்தஸ்ய ஶக்திஸ்து

யோ யாஸ்யாப்ரத்யவஸ்தலக்ஷணா। நிக்ஷிப்யதே ப்ர
திஷ்டாஸா ஸ்தானம் தத்ராஸ்த்யத்வஜிஃ॥ த்ருக்ஷ்ணா த்ம
த்ருவிஷயம் யத்ஞானதாத்ருணோஃ। ஸாவித்ர்யாஸ்தா
நதேவ்யஸ்ய விதேவ்யஸ்ததீஸ்வராஃ॥ ஸர்வஜ்ஞஃ ஸர்வ
ஸ்தானம் யத்ஸ்யாக்ஞானதேஹாஃ। ஸாஸாந்தி ஸ்வ
பக்ஷம் வித்தி தத்க்ஷ்யத்நோஸாவிஸாமந்த்ராணி.

இவ்வாறு கனம சாம்யமு மலபரிபாகமுமான காலத்தி லே ஆன்மாவினுடைய ஞானதிருஷ்டியை விழிப்பிக்கிற ஏஸ்வர சத்தியானது பதியும். அது பதிந்தமாத்திரத்திலே யானவமலத்தினாலே யான்மாவை விஷயோன்முகமாகப் பண்ணுவிக்கிற திரோதான சத்தியானது மலத்தைச் செலுத்தாமல்விடும். அந்தத்திரோதானசத்தி நிவிருத்தியான மஹானமாவுக்குத் துக்க ‡சாகரமாகிற சம்சாரத்திலே §சடிதி வைராக்யமுண்டாம் கண்ணைப் பெற்றவன் காக்ஷியை யிச்சிக்குமாப்போல ஞான திருஷ்டியைப்பெற்ற ஆன்மா சிவனுடைய பாதாரவிந்த தரிசனத்திலே யிச்சையுண்டாய் எப்பொழுது தரிசிப்பேன், எப்பொழுது பந்தத்திலே நின்றும் முத்தனாவேன், ஆரவனைத் தரிசிப்பிக்கிறவரென்று புத்தியையுடையவனாய் இவ்வாறு சம்சாரத்திற் பயப்பட்டிருக்கிறவனை யாசாரிய மூர்த்தியானுகிய சிவன சத்திநிபாதானுகுணமாக வநுக்கிரகம்பண்ணுவன.

‡ சாகரம் - சமுத்திரம்

§ சடிதி - சீக்கிரம்

சத்திநிபாதானுகுணமான அநுக்கிரஹமாவது? மந்த சத்திநிபாதத்தை யுடையவனுக்கு நிவிர்த்திகலையி லுண்டான புண்ணிய பாபங்களைச் சோதித்துப் பிருதுவியாதி யாகாச பரியந்த

மூண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்துப பிரமாண்டோ ¶ பரிலோகங்களிலே + யோசிப்பது.

¶ உபரி - மேல்

+ யோசித்தல் - கூட்டுதல்

மந்ததர சத்திநிபாதத்தை யுடையவர்களுக்கு நிவிர்த்தி பிரதிஷ்டை யிரண்டுகலையில் புணய பாபங்களையுஞ் சோதித்துப பிருதிவியாதி பிரகிருதி பரியந்த மூண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்து புருஷோபரி தத்துவங்களிலே பிரளயாகலருக் கிருக்குமபடி யோசிப்பிக்கது.

தீவரசத்திநி பாதத்தை யுடையவனை நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தியை மூன்றுகலைகளையுஞ் சோதித்து பிருதிவியாதி மாயாந்த தரிசித்து நீங்கும்படி யுபதேசித்து சுத்தவித்யாதி யுபரமுத்தி ஸதானமாகிய சுத்தாத்துவ ×வாசியாகப பணணுவது

தீவ்ரதர சத்திநிபாதத்தை யுடையவனைப் பஞ்சகலையுஞ்சோதித்து நாமரூபசமும் நிராதாரமும பிரத்தியக்ஷா — கமயமும அநுமானாகமயமும § ஷட்தரிமசத தத்துவாதீதமுமாய் அகண்டாகார சச்சிதானந் தாத்வய பரிபூர்ண பரமசிவத்திலே வேறறத் ததாகாரமாமபடி யோசிப்பது.

× வாசி - இருக்கிறவன

— அகமயம் - அறியக்கூடாதது

* ஷட்திரிம்சத் - முப்பத்தாறு.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

த்யாயாம் ஸஹாத்ருக: ॥ வைராக்யம் ஜாயதே க்ஷிப்ரம்
ஸம்ஸாராஸ்ஸாரவஸ்துந: । தத்ர ஜ்ஞானம் ஜாயதே ஸம்
ஹோபாஸனைகஜ்யோதி: ॥ க்ஷாத்ரஞ்ச ப்ரதி தேவ
ஸம் ஜோத்யம் மோக்ஷம் யே க்ஷாராந்தர்த்தாவ த்ஸர்வ
தாஸ்யோஹ ஸித்திஸம்ஜாயதே த்ருதி: ॥ ஏவம் ஸம்ஸார
தோஷீத உதய ப்ரஹ்மாதி வைஸ்வர: ।

தேவிகாலோத்தரே — ஜ்ஞானவைராக்ய ஸிராஜம்
வை ஸம்ஸாரமோஹாந்தவஞ்சிதே । நிஷ்கேவ யோஜி
தா உத்தமாதிஸாஷஸ்ய நிச்சய: ॥ யதாஜ்ஞம் ஜம்ப
க்ஷிப்ரம் க்ஷீரக்ஷீரம் வர்த்ததேவர்த்தநே । ஸம்ஸேஷஹ
வத்துதாத்ரத பரஜாத்ரதீதி ॥

வைராக்ய மதுபத்து அவையாவன? வியாதி பீடையாலே வரும் ஜநக வைராக்கிய மொன்று,

தனனுடைய தேஹ தோஷத்தைக் கண்டு வரும் தேஹவைராக்கிய மொன்று,

சகல ஐஸ்வரியங்களையுங் குறைவற வனுபவித்து இனிப் போதுமென்று வரும் ஐஸ்வரிய வைராக்கியமொன்று,

ஆதியாத்மிக ஆதிதைவிக ஆதிபௌதிக தாபத்திரயங்களினாலே வரும் பிரபஞ்ச வைராக்கியமொன்று,

அர்த்தத்தைத் தேடுகிறதிலும் ரக்ஷிக்கிறதிலும் கள்ளர் கொண்டுபோகிறதிலும் யாதொரு துக்க முண்டாகிறதுகம்வரும் திரவ்ய வைராக்கியமொன்று,

மாதா பிதா ஸ்திரீ புத்திரன இஷ்டபந்து ஸ்நேகித ரிவர்களோட பிரிந்த தத்தினாலே கூட்டமெல்லாமபிரிந்த காலத்தில துக்கத்துக்கேதுவென்று வரும சலக வைராக்கிய மொன்று,

காமுகனு யிருக்கிறவன் ஞான மோகமாயிருக்கிற ஸ்திரீயினிடத்திலே குணத்திலே யாகிலும தேஹத்திலே யாகிலும வைராக்கிய ஏதுவான தொரு தோஷத்தைக் கண்டு விரகதிவரும ஸ்திரீ வைராக்கிய மொன்று,

அன்னபானாதிக ளொருபொழு தில்லாதிருக்கிலும் தேகம நில்லாது, எத்தனை ரொத்தனை வகையிலே புசித்தாலும திருப்தியை யடையாதென்றுவரும புசிப்பு வைராக்கிய மொன்று,

தாரத்துக்குப் போய்த் தளருண்டதினால வரும பிரசுக்கிரஹ வைராக்கியமொன்று,

தேஹத்திலே யாதொரு ஏதுவுமில்லாமல் பூர்வஜந்ம சிவபூஜா புண்யபலத்தினாலே தேஹாதியான சாவ வஸ்துக்களிலும வரும வைராக்கிய மொன்று,

ஆகப்பத்து

இவற்றுள் நிரு ஏதுகமாக வருகிற வைராக்கிய முத்தமம்.
நினைவொனபதும மத்யமம்.

[illegible]

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சகலனுக்குமாத்திரம் அநுக்கிரகமென்றெண்ணவேண்டாம மூவருக்கு முண்டென்னு முறைமை யுரைக்கின்றார்.

நிராதாரமாகி - நிரதிகரணஞ்செய்கின்று,—

அவித்தா சத்திநிபாதத்தால் தீவிர தீவிரதர சத்தி விழுக லாற் றீவிரதரத்தாற் பரமுத்தி, தீவிரத்தாஞ் அபரமுத்தி.

தீவிரதரனுக்கும் மந்த மந்ததர சத்திநிபாத முண்டு.

அபரமுத்தி யுணர்த்தவிதமாதலால் நிரதிகரணனுக்கிரகஞ் சகலர்க்கு மேகதேசத்திற் சாற்றியதுண்டு,—

ஆசான மூர்த்தி ஆகாரமாகித் தரித்து - சாதிகரணனாயி ருந்து,—

சதுரர்த்தாசத்திநிபாதத்தால - மந்தகராதியால்,—

மலங்கழிப்பன் - மலத்தை யொழிப்பன.

ஒழிப்பனென்பதற்குப்பின சிவத்துவாபிவியத்தியும் செய் வனெனபது செப்புக.

விஞ்ஞானகலரெனபது கலைக்குறையாதலால் விஞ்ஞா னகலரென நின்றது.

விஞ்ஞானத்தால் மாயாபுருஷவிவேகஞானத்தால கலை முதல் முப்பது தத்துவத்தால் மூடப்பட்ட சூக்குமதேகமில் லை யாது சில பெயர்களவர்கள் விஞ்ஞானகலாகள்

பிரளயத்துக் கலைநீங்கினபெயர் பிரளயாகலா.

ஆதலால், இருவர்க்கத்துக்கும நிரதிகரணனுக்கிரகம்.

சிலபெயர் அனந்தாதி யனுசதாசிவாதிய ரிவர்களை விஞ்ஞா னகலர்களென்றும், அபர மந்தரேசுவராகளாகிய ஸ்ரீகண்டா தியர்களைப் பிரளயாகல ரென்றும் பேசுவார்கள்; அவர்கள மல மலகன்ம முத்தராய்ப் பதிபதார்த்தத்துள அந்தர்ப் பவித்து மலமாத்திரகலுஷித விஞ்ஞானகலர்க்குறி மலகன்மமாத்திர கலுஷித பிரளயாகலக்குறி, பிரியாது தரியாமையால் அப்படி ய பேசுதல் அறியாமையாலென வறிக.

பெரியோர் சிலவிடத் தப்படிப் படித்துப் பேசியதேது ? முன்னிருப்பைக் குறித்துக் கூறிய தெனக் குறித்தறிக.

பிரளயாகலர்க்குத் தேவகுருவா யனுக்கிரகம் பண்ணுவ ரென்று சிலர் பேசிய தேது? தேகமில்லாப் பிரளயாகலர்க்குத் தேவகுருவாய்வந் தனுக்கிரகம் பண்ணுவ ரென்பது தெய்திதெ ரியாது செப்பியது.

இருவர்களும நிராதாரமாகி யெனுமாசிரியர் வசனத்துக்கு
ம் சிவாகமத்துக்கும விரோதச சொல்லுமாம.

ஆணமதத்துவ மிருபத்திஞனிற்கு மேல பிரகிருதி முதராக
யிராகாதி கலாதத்மாகிய தத்துவங்களி னிரஞசனா தவிரச
சாஞசனரா யிருப்போரகள் பிரளயாகலர்களென்று சிலா பே
சிய தேது? ஸ்ரீமத் காமிகாகமத்தில் ஏகதேசத்தில அபபடியிரு
த்தலால், இசைத்தாரகள.

அச்சகல விசேஷ பிரளயாகலரைக் குறித்து உருத்திர தே
வர்களிற் றேவகுரு வெனபது கூடும், தேகமில்லாப் பிரளயாக
லர்குத் தேவகுருவெனபது கூடாது; மற்றது பிரசித்தப பொ
ருள.

விஞஞானகலர்கள் பரிபக்குவ மலர்கள் அபரிபக்குவ மல
ரகள எனறிருவகையர்

அந்த இருவகையருககுட் பரிபககுவ மலர்கள சிவானுக்கிர
கம்பெறறுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவனகளாயும அ
னு சதாசிவர் அநந்தாதிகள் மந்திரர்கள புவனவாசிகள் எனனு
ம அபர முத்த சிவன்களாயும போயிருப்பார்கள்

அபரிபக்குவமலர்கள் மாயைககுமேற் சுத்தவித்தைக்குக
கீழ மலமாத்திர கலுஷிதர்களாய்ப் பசுபதாரத்தங்களா யிருப
பார்கள்.

பிரளயாகலர் பரிபக்குவமலர் அபரிபக்குவ மலரென விரு
வகையா

அவ்விருவகையருள் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம்
பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் ஸ்ரீ
கண்ட வீரபத்திரர் முதலிய அபரமந்திரேஸ்வரர்கள் புவன
வாசிகளென்னும் அபரமுத்த சிவன்களாயும் போயிருப்பார்கள.

அபரிபக்குவமலர்கள் இருஷடிகாலத்திலே சகலராவார்
கள.

சகலர்கள் திரிபந்திகளென்றும் விஞ்ஞானிகளினுமேல் கனமாகமவந்து விஞ்ஞான கைவல்லியம் வருமளவும் துவிபந்திகளென்றும் இருவிதமாயிருப்பார்கள்.

அந்த விருவிதமாயிருக்குஞ் சகலர்கள் தூலதேகிகளென்றும், அபபிராத்தவாகிய சரீரிகளென்றும், பிரநட்டவாகிய சரீரிகளென்று சொல்லப்படும் தூலவிதேகிகளாயும் இருப்பார்கள்.

திரும்ப அந்த நால்வகையோருந் தனித்தனிப் பரிபக்குவ மலர்களென்றும் அபரிபக்குவ மலர்களென்றும் எண்வகையர்.

அவ் வெண்வகையருள், பரிபக்குவ மலர்கள் என்னும் நால்வகையினரும் சிவானுக்கிரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் நாலுபத முத்தராயிருக்கும் அபரமுத்த சிவன்களாயும் போயிருப்பார்கள்.

அபரிபக்குவ மலர்களெனும் நால்வகையோரும் சம்சாரிகளாயிருப்பார்கள்.

ஆக மூவகையோரும் பன்னிருவகையரென்பது பாரதந்திக.

சகலானுக்கிரகங் குருத்திருமேனி குறித்திருக்குஞ் சிவன் பண்ணுவது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இவற்றுட் 'குருவாகியுந் துணர்த்தி' என்ற முதற்கூற்றுப் பொருளை ஒன்பது செய்யுளான் வகுத்துக் கூறுவான் றொடங்கினார்.

எண்ணரிய வுயிர்களெல்லாம் பந்தவேறுபாட்டான மூவகைப்படும். அவற்றுள் மும்மலங்களுமுடைய சகலவர்க்கத்திற்கு நால்வகைச் சத்திநிபாத முறைமையின்வைத்து அரிதுணர்

தத வேண்டுதலின், அவ்வுயிர்கட்கே குருவாகி வந்துணர்த்தி யென மேற்கூறிய சாதாரதீக்கை செய்வது ஒருமல மிருமலமுடைய மற்றை யிருவர்க்கத்திற்கும் தீவிர தீவிரதரமெனனும் இருவகைச் சத்திநிபாதத்தினை வைத்துணர்த்த வேண்டுமாதலின், சகலர்க்கும்போற் குருவடிவின் மறைந்து நின்று பட்டாக்கையா லுணர்த்தப்பட் டறிதுணர வேண்டாது அவ்விருதிறத்துயிர்கட்கும் முறையே உண்ணின்று முன்னின்று முணர்த்துவதாகிய நிராதாரதீக்கை செய்யப்படு மென்பதாம்

இதனானே தீக்கை இருவகைத் தென்பதூஉம் அவ்விருவகைக்குமுரியா ரிவரென்பதூஉங் கூறப்பட்டன

இனி இவ்விரண்டனுள் எண்ணெடுத்துக்கொண்ட சாதார தீக்கையிற் படிமுறையும் அவற்றியல்பும் வகுத்துக் கூறுதற்கெழுந்தன வருஞ்செய்யுட்களென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

முன்னே சொல்லப்பட்ட வான்மவர்க்க மூன்றுவகைப் பட்டிருக்குமென் றருளிச்செய்கிறார்.

உரைதருமிப் பசுவர்க்கமுணரின் மூன்றும்— இவ்வியாகமங்களிற் சொல்லப்பட்ட இந்த வான்மவர்க்கத்தை விசாரிக்கில் மூன்றுவகைப் பட்டிருக்கும். அவையாவன?—உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் — மேலான விஞ்ஞானாகலரொன்றும் பிரளயாகலரொன்றும் சகலரொன்றும் — இவையின்மல மலகன்ம மலங்களுமாயை நிற்கும் - இந்த அடைவிலே விஞ்ஞானகலர்க்கு ஆணவமல மொன்றும் ப்ரளயாகலர்க்கு ஆணவமலமுங் கன்மமலமும் ஆக விரண்டும் சகலர்க்கு ஆணவமலமு மா

யாமலமுஞ் கன்மமலமும் ஆக மூன்றுமலமும்; இவை யநாதியே யுள்ளதாய் நிற்கும்.—முதலிருவர்க்கும் - முற்பட்ட விஞ்ஞான கலரிற் பிரளயாகலரிற் பக்குவராயுள்ள விரண்டுவகைக்கும்,— நிராதாரமாகிக் கரையிலருட் பரன்றுவிகா சத்திநிபாதத்தாற் கழிப்பன்மலம் - எல்லையில்லாத வனுக்கிரகத்தை யுடைய பரமேஸ்வரன் அவர்களுக்குப் பிராணனாய் நின்ற முறைமையிலே தீவிரம் தீவிரதரம் என்றுசொல்லப்பட்ட விரண்டு சத்திநிபாதத்தாலு மலங்களைப்போக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிப்பன் — சகலர்க்கு - சகலரிற் பக்குவரா யுள்ளவர்களுக்கு,—கன்மவொப்பில் - புண்ணியபாவங்களிரண்டும் தன்னிலேறாமற் குறையாமல இரண்டுமொத்த வவசரத்திலே;—தரையி லாசானமூர்த்தி யாதாரமாகித் தரித்தொழிப்பன் மலம் - பூமியிலே ஆசாரியமூர்த்தியிலே யதிட்டித்துக்கொண்டு நின்று மலங்களைப்போக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிப்பன்.—சதுர்த்தா சத்திநிபாதத்தால்-மந்தம் மந்ததரம் தீவ்ரம் தீவிரதரம் என்று சொல்லப்பட்ட நாலுவகைச் சத்திநிபாதத்தாலும

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்-௮-சூ,௩-வெ "மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு, கஞ்ஞான வசசகலர்க்குக் குருவாய்—மெய்ஞ்ஞானம், பின்னுணர்த்து மன்றி யப்பிரளயா கலருக்கு, முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்" என்னுமதனை கண்டுகொள்க

இதனாற் சொல்லியது, பரமேஸ்வரன் மூவகை யான்மவர்க்கத்தில் விஞ்ஞானகலர் பிரளயாகலரிற் பக்குவரா யுள்ளவர்களுக்கு நிராதாரமாய்நின்று தீவிரம் தீவ்ரதரம் என்கிற சத்திநிபாதத்தாலே மலங்களைப் போக்கி இரட்சிப்பனென்றும், சகலரிற் பக்குவரா யுள்ளவர்களுக்குக் கன்மவொப்பில் பூமியிலே ஆசாரிய மூர்த்தியை யதிட்டித்துநின்று மந்தம் மந்ததரம் தீவ

ரம் தீவரதரம் எனகிற நாலுவகைச் சத்திநிபாதத்தாலும் இர
ட்சிப்ப னென்னுமுறைமையும் அறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உரைதரு மிப்பசுவாகம - எண்ணரிய வுயிர்களெல்லாம்,—
உணரின - உணருமிடத்து,—உயரும விஞ்ஞானகலா பிரளயாக
லர் சகலர்-உயர்ந்த விஞ்ஞானகலரும் பிரளயாகலரும சகலரு
மென,—நிரையினமல மலமகனம மலமகனமமாயை - முறை
யே யாணவமலமு மதனொடு கனமமலமு மவைகளொடுமாயா
மலமுமாக,— நிறகுமனறும - இபபநத வேறுபாடடான மூவ
கைபபடும —சகலர்களுக கன்மவொப்பில்-அவற்றுள் மும்மலங
களுடைய சகலவர்க்கத்திறகு இருவினை யொப்பினகண்,—சது
ரதரா சத்திநிபாதததால்-நால்வகைச் சததிநிபாதமுறைமையி
னைவைத்தத தெரிநதுணரதக வேண்டுதலின,—நரையிலாசா
னமூர்த்தி யாதாரமாகித தரிநதுமலமொழிப்பன- இவவுலகின
க ணவவுயிர்கட்கேகுருமூர்ததியாதாரமா யதிட்டித்தநினறு
மல நீககுவதாகிய சாகாரதீககைசெய்து,—முதலிருவர்ககும்-ஒ
ருமலமிருமலமுடைய மறறை யிருவர்ககதநிற்கும,—துவிதா
சததிநிபாதததால் - தீவிரம தீவிரதரமெனனு மிருவகைச சத்
திநிபாதததினவைத துணர்ததலையயு மாதலில்,—கரையிலரு
ட்பரன மலங்கழிப்ப விராதாரமாகி - அன்விடுதற்கரிய கரு
ணைவடிவாகிய முதல்வன சகலவர்ககம் போற் குருவடிவின ம
றைநது நினறு படர்கையா லுணரதகப்பட் டறிதுணர வேண
டா து அவ்விருதிறத் துயிர்கட்கு மலநீக்குதற்கு முறையே புண
ணினறு முனனின றுணர்த்துவதாகிய நிராதாரதீட்சை செ
யயபபடும.

இதனானே தீக்கை யிருவகைத்தென்பதூஉம் அவ்விருவகைக்குமுரியா ரிவரென்பதூஉங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இனிச் சகலர்க் காசாரியன் செய்யுந் தீக்கையாதி
தொகுத் துணர்த்துகின்றார்

பலவித மாசான்பாச மோசனந்தான்பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமானதமும், மலகில்சா
த்திரம்யோக மவுத்திராதி யநேகமுள வவற்றினவுத்
திரியிரண்டாம்றியி, னிலகுஞா னக்கிரியை யெனஞா
னமனத்தா லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட
லாதி, நிலவுவித்துச் செய்தல்கிரியா வதிதானின்று
நிராட்பீசம்பீச மெனவிரண்டாய் நிகழும். (௫)

(இ-ள்) **பலவித மாசன பாச மோசனந் தான்பண்ணும் படி** ஆசாரியன் ஆன்மாக்களுக்குப் பாசத்தைச் சேதிக்கையின் பொருட்டுச் செய்யுந் தீக்கை பலபிரகாரமா யிருக்கும் அஃதெவ்வாறென்னின் சாதிபேதத்தாலு மலபாக தாரதம்மியத்தாலும் பலவாகக் கூறியது. அவையாவன ?

நயனத் தருள் பரிசம் வாசகமானதமுமலகில்சாத்திர மியோகம மீனானது சினையைப் பார்த்த மாத்திரத்திலே யதனைப் பேதித்துத் தன்னைப்போலாக்குமாறுபோ லாசாரிய னுண்மைப் பொருளிலே சித்தத்தை வைத்துத் திவ்வியமான நயனத்தினாலே பார்த்தவனுக்குக் கட்டுப்பட்ட பந்தங்களைச் சோதிக்குமது நயன தீக்கை.

வாரணமானது போல வாசாரியன் றனது வலது கையிற் சிவ அத்தங் கற்பித்துச் சோதிரூப மாகத் தியானம்பண்ணி மாணவகன் றலைதொடங்கிச் சர்வாங்கமும் பரிசித்துப் பின்னாலே விடுவது பரிசதீக்கை.

ஆமையானதுபோல ஆசாரியன் றனது முதலாகிய வுண்மைப் பொருளிலே சித்தத்தை வைத்துப் பரமமான சோதியுடன் கூடித் தியானித்துச் சங்கிதா கிரியா விதிக்குச் செய்யுமாறுபோல மந்திர கிரியா பாவனைகளுடன் வழுவின்றி யெல்லாத்தையு முள்ளபடி யறிந்து சோகம்பாவனை பண்ணி யிந்தக் கைவிசேடத்தினாலே மாணாக்கன் பாசத்தைச் சேதிப்பது மானத தீக்கை மந்திரங்களை யந்தந்த வன்னங்களுக் குடைய மாத்திரைகளை யறிந் தேருமற் குறையாம லுச்சரிக்கும்படி வாசக தீக்கை

ஆசாரியன் ஆகமத்திற் சொன்னப்படி யோதியுணர்த்தி மாணாக்கனுக் கையந் திரிவின்றி யந்த வாகமத்தின் பொருளை யறிவிக்கை சாத்திர தீக்கை.

ஆசாரியனுடைய சந்தான மார்க்கத்தினாலே மாணாக்கனுடைய விதய கமலத்திற் பிரவேசித் தவ்விதய கமலத்தி னடுவே விந்துரூபமான வான்மாவைச் சுழுமுனை நாடியிற் பிரமரந்திர மளவாகக் கொண்டு சென்று சிவனிடத்தில் யோசிப்பித்து நிறுத்துவது யோகதீக்கை; ஆகவறுவகை யெனவறிக

அவுத்திராதி யநேகமுள — ஓம சமமந்தமாகிய அவுத்திரி யென்று சொல்லிய தீக்ஷையை விசாரிக்கி லேகத்தத்துவ, திரிதத்துவ முதலாகிய தீக்ஷைபலவு முளவென்றறிக.

இதன்விகற்பமு வருணபத்ததியிற் காண்க.

இத்தீக்ஷையினுக் கதிகாரி யாவரெனில்? நல்லிய சாதியி

ஞானக்கு அவுத்திரி யாகாவையி லிந்த தீக்கைகளைக் கூறியதென
வறிக

இம்முறைமை காலோத்தரத்திற் காண்க
"அனலியாகரும பாசமறுத்திடுக பாலையிறுற-நனைறு
கைவந்துந்த தலை" எனவுமறிக

அவற்று ளவு அவைகளை விசாரித்தறியி லிரண்டுபிரகா
த்திரி யிரண்டா ரமாம். அவையாவன?
மறியில

இலகுஞானம் அந்தவவுத்திரி, விளங்காநின்ற ஞானதீக்
கிரியையென கையெனவும் கிரியாதீக்கை யெனவுமாம்
ஞான மனத் தீவிர தீவிரதரமெனனும் சத்திநிபாதத்
தா லியற்றுவது தையுடைய மாணாக்கனுக் காசாரியர் கிரியா
தீக்கையைப்போல மற்று வியாபாரத்தினு
லே செய்யமுடியாது

முற்கூறிய ஞானதீக்கைக்கு மிதற்கும் பேதமியாதெனில்?
சாமானிய விசேடமென விருவிதமாம்.

அவற்றுள் விஞ்ஞான தீக்கையென்று சாமிகத்துக்கு சிந்தி
ய விசுவத்துள் கூறாகைப்பா லிணங்க கூறியதே விசிட்டமெனவ
றிக, அதனைவிரிக்கிற் பெருகும்.

கிரியையெழுற விதிவழி குண்ட மண்டலமிட்டு வடக்கும
குண்ட மண்ட ண்டபத்தைப் பதினாறுக்குப் பதினாறு கூத்
லாதி நிலவுவித் திரமேற்றி நூறறுப் பத்தொன்பது பதமாக
து செய்தல் கி நடுவொன்பது பதத்தில் மண்டலேசுர
பூசைக்கு வேதிகையும் இதற்குமேற்குக் கிழ
க்கு மிட்டலிங்க பூசைக்கு வேதிகையும் கு
ண்டமும் குண்டத்துக்கு வடக்கே கும்ப
தினுக்கு வேதிகையும் அதற்குமேற்கே யாசாரிய ரபிடேகத்
துக்குக் கும்பங்காயிக்க வேதிகையும் அதற்குமேற்கே பஞ்சேச

விதி பஞ்சகத்தவர்க்குப பல்லவம வைக்கவும ஆக வேதிகையரு சக்குங குண்டத்தசருப பசம (ருச) மறறவிருபத தேழிலா சாரிய ரிருக்கவுஞ சீடனிருக்கவும தாலீபாகம பணணவும பஞ்சகவயங் காபிக்கவு மெனவறிக. இதனைச சூழச சஞசார பதமொனறு மதனைச சூழந்த குமபமுதலிய குமபங தாபிக்கவு மெனவறிக

கிரியாவதிதா அந்தக கிரியாவதியைய விசாரிக்கிற் சபீசம வினறு நிரபீச நிரபீசம சாதிகாரை நிரதிகாரை யெனமபீசமென விர நால்வகையுந தொகுத்தறியு மிடத்தச சபீசனடாகி நிகழும. தீக்கை நிர்ப்பீசதீக்கையென விரணடாக விளங்கா நிற்கும் எ-று

இதறகு வருணபத்ததியினும அஞ்சுமானினு மறிக. (௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இனி யாசாரியன பக்குவானமாக்களுடைய பாசவிமோசனம பணணுவ தெவவாறெனனில்?

(பலவிதமாசான பாசமோசனம் தானிரண்டாகிநிகழும) இத அங்வய மாங்குவது. ஆசான பாசமோசனம் பணணும்படி பலவிதம் அவவிதஙகளாவன,—

நயனத்தருள—* அவலோகனமானது சருங்காரமென்றும் நிககிரகமெனறும அநுககிரகமெனறும மூனறு விதம்ாம.

* அவலோகனம் - பார்வை,

அதிலே யாசாரியன சிஷ்யனிடத்திலே பணணு மவலோகனஞ் கருடபாவனை வைவததவன பாம்பினுலே கடிபட்டவனை பாம்பரகவுந தான கருடனாகவும பாவித்துக கருடனு

னுடைய கிரகாவலோகனம் பண்ணி விஷந் தீர்க்கவாறே யவனுடைய † சிராந்தி நிவிர்த்தியார்த்தமாகத் தானே சந்திரபாவனையைப் பண்ணி யவனை யமிர்தகலையினாலே யபிஷேகம் பண்ணினதாகக் கிருபாவலோகனம் பண்ணினதுபோல, சிறப்பாவனாசித்தனான வாசாரியன் பாசநிவிர்த்தியார்த்தமாக நிக்கிரகாவலோகனமும் ஆன்மாவினுடைய ‡ ஆப்பியாயனார்த்தமாக அநுக்கிரகாவலோகனமும் பண்ணுவது சக்ஷுர் தீக்ஷை —

† சிராந்தி - இளைப்பு.

‡ ஆப்பியாயகம் - திருப்தி,

பரிசம் - ஆசாரியன் தன்னுடைய அஸ்தத்திலே சந்தனலேபனத்தைப் பண்ணிச் சிவனை யாசனமூர்த்தி மூலம் வித்தியாதேகம் பஞ்சப் பிரமஷடங்க மூலமந்திரங்களினாலே புஷ்பங்கொண்டு பூஜித்துச் சிஷ்யனுடைய மஸ்தகத்திலே வைத்து, ஸ்பரிசவேதி ஸ்பரிசத்தினாலே தாம்பிராதி லோகங்களினது களிம்பு நீங்கி ஸ்வர்ணமானதுபோல, சிஷ்யனுடைய பாசத்திரயம் நீங்கிச் சிவமாம்படி பண்ணுவது ஸ்பரிச தீக்ஷை —

வாசகம் - வர்ணாச்ரமாநுகுணமாக பஞ்சாக்ஷரத்தை யுபதேசம் பண்ணுவது வாசகதீக்ஷை —

மானதம் - ஆசாரியன் றன்னுடைய ரேசகவாயுவினாலே புறப்பட்டுச் சிஷ்யனுடைய பூரகவாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்துச் சிஷ்ய சைதந்யத்தை வாங்கித் துவாதசாந்தமளவாகக் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்திலே சிவசைதந்யத்துடனே கலந்து உப்பும் அப்புங் கலந்து ஏகரசமானது போலப் பாவித்துச் சிஷ்ய சைதந்யத்தைச் சிஷ்யதேகத்திலே பிரதிஷ்டை பண்ணுகிறது மானச தீக்ஷை —

சாத்திரம் - முடிவற்ற சாஸ்திரார்த்தங்களை யெல்லாம் சங்கிரகித்துப் பதிபசு பாசத்தினுடைய லக்ஷணங்களை

யுஞ் சிவ ஜீவர்களுடைய ஐக்கியத்தையும் சத் சம்பிரதாயமாகப் போதிப்பது சாஸ்திர தீக்ஷை —

யோகம் - நிராதார சிவயோகத்தை யப்பியாசம் பண்ணுவிப்பது யோகதீக்ஷை —

அவுத்திரி - †ஹோத்ர சஹிதமாகப் பண்ணுந் தீக்ஷை, அவுத்திரி —

† ஹோத்ரசஹிதம் - ஓமத்தோடு கூடியது.

ஆதி யநேகமுள - கீழ்ச்சொன்ன தீக்ஷைக ளாதியாக வின்னு மநேக தீக்ஷையுண்டு —

அவற்றி லவுத்திரி யிரண்டாம்,— அவற்றுகளுக் குள்ளே அவுத்திரி தீக்ஷையானது இருவகைப்படும் —

அறியில் - இரண்டையு மறியில், —

இலகு ஞானங் கிரியையெனும் - பிரகாசத்தை யுடைய ஞான தீக்ஷையென்றும் கிரியா தீக்ஷையென்றும் சாஸ்திரங்கள் சொல்லும், —

ஞான மனத்தாலியற்றுவது - மனதினாலே சிஷ்யனுடைய தேகத்தை பிரவேசித்து நாபி குண்டத்திலே சிவாக்கினி மூட்டி இந்த ஓம பூர்வமாக ஷட்தத்வ சுத்தியைப் பண்ணுவது ஞான தீக்ஷை —

கிரிகையெழிற் குண்டமண்டலாதி நிலவுவித்துச்செய்தல், சிறப்ப ¶ கௌசல்யத்துடனே குண்டமண்டப வேதிகளைச் சமைத்து ஆகமோக்தமாக கலாசோதனையைப் பண்ணுவது —

¶ கௌசல்யம் - சாமர்த்தியம்,

இன்னுங் கிரியாவதிகா னிர்ப்பீச சபீசமென விரண்டாகிடும் - மேலுமக் கிரியாவதியான நிர்ப்பீச தீக்ஷையென்றும் சபீச தீக்ஷையென்றும் இரண்டாகச் சொல்லப்படும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சகலர்க் கனுக்கிரகங் குருத்திருமேனி குறித்திருக்கும் சிவன் பண்ணுவது பலப்ரகாரமென்பபடிக்கின்றார்.

ஆசான் - குருவைக்குறித்துக்கொள்ளுஞ் சிவன்,—பாசமோசனம் பண்ணும்படிக்குத்தான்-அனுக்கிரகஞ் செய்யும்பிரகாரம்,—பலவிதம் - வெகுபிரகாரம்.— நயனத்தருள் - அந்தவாசாரியனாக்கையைக் குறியாது குறித்துச் சுருக்கிப் பாசங்கழலப் பார்த்தல் சாக்ஷுஷீயென்னுந் தீக்ஷை,— பரிசம்-அப்படிக்குறித்துச்சிவஹஸ்தமவைத்தல் பரிசதீக்ஷை.— வாசகம்-அப்படிக் குறித்துப் பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்ஷர முபதேசித்தல் வாசகதீக்ஷை,— மானதம்-அப்படிக்குறித்து யோகயாகத்தில் சீஷனதிருதயம் பிரவேசித்துச் சிந்தித்தல் மானசதீக்ஷை,— அலகில்சாத்திரம் - அப்படிக் குறித்து ஆன்மப்பொருளைச் சுருக்கி யுபதேசித்தல் சாத்திரதீக்ஷை,— யோகம் - அப்படிக்குறித்து யோகமார்க்கத்தால் சீஷனது இருதயகமலத்தில் பிரவேசித்து நக்ஷத்திரம்போலிருக்கின்ற சீவனைப் பாசம் பறித்துத் தவாத சாந்தத்திற் சிவனிடத்திலே யோசித்தல் யோகதீக்ஷை. இவ் வறுவகை தீக்ஷையும் அவுத்திரி தீக்ஷைக் கருகரல்லாத பெயர்க்குப் பண்ணுவதெனவும் அவுத்திரிக்கை யெனவு மறிக.—அவுத்திரியாதி - அவுத்திரிப் பிரகாரமா யிப்படித் தீக்ஷைகள்,— அநேகமுள - வெகுபேதமுண்டு,—அவற்றுள் அவுத்திரி இலகுஞானம் - விளங்கும் ஞானவுத்திரி என்றும்,— கிரியை-க்ரியாவுத்திரி என்றும்,— இரண்டுதிறமாம் - இருவகையாம். அவற்றுள்,— ஞானம் - ஞானதீக்ஷை. அது சத்தி சாம்பவி யென்றிருவகை. அதில் சத்தி - யோகதீக்ஷை, சாம்பவி - ஞானதீக்ஷை. அதில் சத்தி,—ம

னத்தா லியற்றுவது - புறம்பேபோற் குண்டமண்டலாதி மன சின்றப்புச் சங்கற்பத்தாற் குறித்துப் பண்ணுவது சாம்பவி - ...ஞானதீக்ஷை சிறசத்தி மனச்சங்கற்ப பூர்வ சிறசத்திகட் சிறப்பு பானவயாற் பாசம் முறைமையிற் பறியப் பார்த்துப்பண்ணுவது சிரியாதீக்ஷை,—கிரியை எழிற்குண்ட மண்டலாதி நிலைவுவித்துச் செய்தல் கிரியாவதிதா னினும் நிர்ப்பீசஞ் சபீசமென் றிரண்டாய் நிகழும் - விளங்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்வுயிர்க்கண்ணதாகிய மலபரிபாகம் பலவகைப் படுதலின் அம்மலத்தைப் போக்குஞ் சாதாரதீக்கையு மதற்கேற்பத் திருநோக்க முதலியனவாகப் பலவேறுவகைப்படும் அவற்றுள் வினைத்தீக்கைகளெல்லாந் தனக்கங்கமாகவுடைத்தாய்ச் சிறந்த ஒளத்திரி தீக்கையாவது, ஞானவதி கிரியாவதியென இருவகைப் படும் அவற்றுட் குண்டமண்டலம் அங்கி நெய் சுருக்குச் சுருவமுதலிய வனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி யகத்தே யாகுதிமுதலிய கிரியை செய்வது ஞானவதி அவையனைத்தும் புறத்தே நிலைவக்கொண்டு புறம்பே யக்கிரியை செய்வது கிரியாவதி யெனப்படும். இங்ஙன மிருவகைப்பட்ட ஒளத்திரி தீக்கைதான் இன்னும் நிர்ப்பீசஞ் சபீசமென வெவ்வே றிருவகைப்பட்டு மெனப்படும்.

கிரியையியற்றுவதென மாறுக

ஒளத்திராதி யென்றதனாற் சாம்பவதீக்கை முதலியனவுந் தழுவப்பட்டன.

நயனதீக்கை முதலிய ஆறும், சுத்திரமாய்ச் செய்யப்ப

வெனவும் அவுத்திரிக சங்கமாய்ச் செய்யப்படுவனவுமென் றி ருவகைப்படும்.

அவற்றுள் முன்னையவை ஒளத்திரிகருரிய ரல்லாதாரைக்கு ச் செய்யப்படுவனவெனக் கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவன் ஆசாரிய மூர்த்தியை யதிட்டித்துக் கொண்டு நின் று சகலருடைய பாசத்தைப் போக்குகிற முறைமை பலபிரகா ரமா யிருக்குமென் றருளிச் செய்கிறார்.

பலவிதமாசான பாசமோசனம் பண்ணும்படி - சகலரு டைய பாசத்தை ஆசாரியன் மோசனம் பண்ணும்படி பலபிரகா ரமாயிருக்கும். அவையாவன?— நயனத் திருள்பரிசம் வாசக மானதமும் மலகில சாத்திர மியோக மவுத்திராதி யநேகமுள- தனது காருணியத்திலே திருக்கண்சாத்தியும் சிபாதங்க ளா பரிசித்தும் உபதேசித்தும் தன்னைப்போல நின்மலனாகப் பா வித்து என்னுமிறந்த நூலுரைகாட்டியும் பொருளோடு கூட்டியு ம குண்டமண்டல மிட்டுச் செய்யுந் தீட்சைமுதலாக அநேகமு ண்டு — அவற்றி லவுத்திரி யிரண்டா மதியில - அவையிற்றைவி சாரித்துப் பார்க்கில் அவுத்திரி யென்கிற தீட்சை இரண்டுவ கைப் பட்டிருக்கும் — இலகுஞானங் கிரியையெனும் - விளங் காநின்ற ஞானவதி யென்றும் கிரியாவதியென்றும் சொல்லும் அதிதனையென்னில்;—ஞான மனத்தா லியற்றுவது - ஞா னவதியாவது ஆசாரியன் தன்னுடைய மனோ பாவகத்திலே மலங்களைப் போக்கி இவனுக்குப் பிராணனும் இறைசிவன் தன் னைப் பிரகாசிப்பித்து,—கிரியை யெழுத குண்டமண்டலாதி ய னுவித்துச் செய்தல்-கிரியாவதியாவது அழகிய குண்டமண்ட

லங்களை யிடமி விளக்கச் செய்தல்—கிரியாவதிதா னிலைநிரா பேக்ஷம் சாபேக்ஷமென விரண்டாகி நிகழும் - கிரியாவதியாவது இன்னமும் நிரப்பேக்ஷமென்றும் சாபேக்ஷமென்றும் இரண்டாய் விளங்காநிற்கும்

இதனாற் சொல்லியது சிவனே ஆசாரிய மூர்த்தியாக வெழுந்தருளிச் சகலர்களுக்குப் பாசமோசனம் பண்ணுகிறமுறைமை பலபிரகாரமாயிருக்குமென்றும் இவர்களுக்குச் சமயம் விசேட நிருவாணம் என்கிற தீட்சைகளைச் செய்யுமிடத்துக் கிரியாவதியாகவும் ஞானவதியாகவுஞ் செய்யலாமென்றும், கிரியாவதிதான மேலும் நிரப்பேக்ஷமென்றும் சாபேக்ஷமென்றும் இரண்டுவகையாயிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

பலவிதம் - அவ்வுயிர்கட்கு உண்டாய மலபரிபாகம் பலவிதப்படுதலின்,—ஆசான் பாசமோசனந்தான் பண்ணும்படி-அதற்கேற்ப ஆசாரியனும் அம்மலத்தை மோசிக்கும்படி செய்யுஞ் சாத்திர தீக்கையும்,— நயனத்து - திருநோக்கமும்,— அருள பரிசம் - அருளுகின்ற பரிசமும்,—வாசகம் - வாசகமும்,— மானதமும் - பாவனையும்,—அலகில் சாத்திரம் - மிக்க நூல்களும்,— யோகம் - யோகமும்,— அவுத்திராதி யனேகமுள - அவுத்திமுதலியனவு மாகப் பலவேறு வகைப்படும்—அவற்றினவுத்திரி - அவற்றுள் ஔத்திரி தீக்கையெல்லாம் தனக் கங்கமாக வுடைத்தாய்ச் சிறந்த அவுத்திரி தீக்கையாவது,— இலகுஞானக் கிரியையென விரண்டிதனுள் - விளங்கும் ஞானவதி கிரியாவதியென இரண்டு வகைப்படும்,—எழிற் குண்டமண்டலாதி மனத்தாற் கிரியை யியற்றுவது ஞானம் - அவற்று ளெழுகிலையு

டைய குண்டமண்டல மங்கி நெய் சுருக்கு சுருவமுதலியவனை த்து மனக்காறகற்பித்துக் கொண்டு விதிப்படி யகத்தே யாகுதிமுதலிய கிரியைசெய்வது ஞானவதி —நிலவுவிதத்துச் செய்த ல கிரியாவதி - அவையனைத்தும் புறத்தே நிலவுகக்கொண்டு புறம்பே யக்கிரியை செய்வது கிரியாவதி யெனப்படும்;— தானினும் - இங்ஙன மிருவகைப்பட்ட அவுத்திரி தீக்கைதானினும்,— நிராபீசம சபீசமென விரண்டாகி நிகழும் - நிராபீசஞ் சபீசமென வெவ்வே றிருவகைப்படும் .

மறைஞானதேசிகர் உரை

மேல் விருத்த முறையானே நிரைநிறையாக நிர்ப்பீ சமு நிரதிகார லக்ஷணமு முணர்த்துகின்றார்.

பாலரொடு வாலீசர் விருத்தர்பனிமொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவாக்குப்பண்ணுஞ்,
சீலமது நிராபீசஞ் சமயாசாரந் திகழ்சுத்தி சமயிபுத்
திராக்குநித்தத், தேலுமதி காரத்தை யியற்யித்தா
னு மெழினிரதி காரையென நிலையிரண்டாயவிளங்கு
ஞ், சாலநிகழ் தேகபா தத்திடுனொடு சத்தியநிரு வாண
மெனச் சாற்றுங்காலே. (௪)

(இ-ள்.)பாலரொ	மூன்று வயதுக்குமேற் பதினறு வயதள
டு வாலீசர்	வாகிய பாலர்களுக்கும், கனடி முளையடி டறு
விருத்தர்ப	டிக்கமாட்டாது மிகவு மறிவில்லாத வ
னி மொழியார்	ர்களுக்கும், எழுபது வயதுக்குமேற பட்டவி
பலபோகத்தவர்	ருத்தர்களுக்கும், மாதர்களுக்கும், போகத்திலே மிகவு
வியாதி பட்டவ	ம விருப்பத்தை வைத்த விராசாக்களுக்கு

ர்க்குப் பண்ணு ஞ் சீலமதுகிர பீசம — மாவியாதியினால் வருத்தமுறு மவர்களுக்கும் இவர்களுக்கெல்லாஞ் சரீராந்த மனுட்டிக்க த் தக்கதான கன்மங்களனைத்தையும் தீக்ஷா காலத்திலே யாசாரியர் நிறைவேற்றினதாகச் செய்து முடிக்குந் தீக்ஷை நிராபீசம்.

சமயாசார நிஷ்களதீ — அக்காலத்தி லாசாரியன் குண்டத்தி லக்கினியிலே நந்தியாதி சண்டேசுராந்தமான வெட்டுக்கணங்களையும் பூசித்துச் சுவாகாந்தமாகத் தர்ப்பண மந்திரங்களை யொவ்வொருக்கா லோமம்பண்ணிச் சமயாசார சோதனை நிமித்தமாக மூலத்தா லஞ்ஞூறு ஹோமம் பண்ணிப் பூர்ணாஹுதி கொடுத்து முடித்து இவர்களைச் சமயபாசத்தை விட்டதாகக்கேவலைக் கனைவருங் கிரியாகச் சமயாசார சுத்தி செய்வது. இதற்கு அதிகாரி யாவரெனில்?

சமயி புத்திரர்கள் — சமயாசாரத்துடன் கூடின சமயிகளும் புத்திரர்களுஞ் செய்வது. இவர்களொருத்த கிருத்தியத்திலே யேவப்படுவ ரெனில்?

நித்திய நேம மதிகாரத்தை யிட்டது — "புனரூழ்கித் தர்ப்பித் தமலனடி பூசித் தனலோமமபலாதி நித்தியம்" என்பதனாற் சமயிகளுப் புனருழுகித் தர்ப்பணஞ்செய்து தாதமாகக்கஞ் செய்வது புத்திரர்களதுவுஞ் செய்து சிவபூஜையு மக்கினிகாரிய முதலாயினவும் புத்திரமாகக் கருமஞ்செய்வது. இவ்விருவரையு மிக்கக் கருமங்களுக் குரிமையாகக் கற்பித்தது

தானுமெழுதி வி ரதிகாரையென் — அந்தத் தீக்ஷையுடைய சமயிக்குப் பூசாதிகார மில்லாத படியாலும் புத்திரர்களுக்குத் தீக்ஷையிரதிட்டைமுதலிய கன்ம

ஞ்செய்தற் கதிகார மில்லாத படியாலே யசத்த் தீக்கை நிராதி சார தீக்கையெனப் பெயர் பெறும்.

நின்றிரண்டா ய்விளங்குஞ் சா லநிகழ்தேகபாத த்திறேரு சத்தி ய நிர்வாண மெ ன்ச சாற்றுவர் லே

என்பதனை, சாற்றுங்காற் சாலநிகழ் தேகபாதத்திறேருடுஞ் சத்திய நிருவாணமென நின்றிரண்டாய் விளங்கும் எனப்பொருள் கூட்டுக. அத்தீக்கையை விசாரித்துப் பார்த்துச் சொல்லுமிடத்துச் சத்திய நிருவாண தீக்கை யெனவு மசத்திய நிர்வாண தீக்கை யெனவு மிரண்டாக விளங்காநிற்கும் எ-று.

இவ்விரண்டினுக்கு மதிகாரி யாரெனில்.

தேகாதி பிரபஞ்சத்தைக் கானற்சோறெனக் கருதி மிகவு மவிரத்தராகிய பக்குவர்க்குக் கட்டுப்பட்ட சஞ்சிதத்தையும் பிராரத்துவத்தையு மாகாமிய கன்மங்களையுந் தீக்கையிற் சோதனை பண்ணிக் கிரியை முடிந்தவாறே சரீரம் பாதமானவுடனே மோட்சத்தை யடைவது சத்திய நிருவாண தீக்கையெனப்பெறும்.

நிகழ்காலத்துப் பிராரத்த கன்மபோகம் புசிக்கையின் பொருட்டு வைத்து ஆசார மனுட்டிக்க மாட்டாத பாலீசா முதலாயினோர்க்குத் தீக்கையிற் சுத்தியைப் பண்ணி யாகாமிய மேற்றட்டி தியானபூசை முதலிய கன்மங்களைப் பண்ணி யெடுத்துச் சரீரத்துக்கமைத்த பிராரத்தகன்மம் புசித்துத் தொலைந்தவாறே சரீரபாதம் வந்து மோட்சத்தை யடைவது அசத்திய நிருவாண தீக்கை யெனப்பெறும்.

இதற்கு வருணபத்ததி, சைவ சன்னியாச தீபிகை, காலோத்தரம், சித்தாந்த சேகரத்து மறிக. (௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிவ்விரண்டு தீக்ஷைகளுக்கும் அதிகாரிகளைக் கூறுகின்றது.

பாலா-பதினாறு வயதளவும்,—ஒடு-அசை,— வாலீசா-இருபத்தைஞ்சு வயதளவும்,—விருத்தா எழுபத்தைந்து வயசுக்குமேல்,—பணிமொழியார்-ஸ்திரீஜனங்கள்,—பலபோகத்தவா-ஸ்ரீ அநியம புஷ்டிகள்,—வியாதிப் பட்டவர்க்குப் பண்ணுஞ் சீலம் ஆநிர்ப்பீசம்-தீராக்க ரோகத்தை யுடையவர்களுக்குப் பண்ணும் தீக்ஷா விதியாவது பீசாக்ஷரகிதமாக மந்திரங்களினாலே ஓமமும் உபதேசமு மாகையால் இவர்களுக்குச் சாமயவ தீக்ஷை யில்லை ஆசாரியபிஷேகமு மில்லை —

தது³க்தம் ஸித்³தா⁴ந்தஶேக²ரே — பா³லபா³லிஶவ்ருத்³த⁴
ஸ்த்ரீபா⁴வக்ருத் ஹோமலாயக: । வ்யாதி⁴க்³ரஸ்த ஸ
ஶக்யாநாம் நிர்பீ³ஜா விதீ⁴யதே ॥ யாவஜ்ஜீவம்
த்ரஸ்தா²யிநாம் தாவத்ஸாதீ⁴ ஸம்மதா । ஸ
யாதி³ஶ்ரீக்ஷாஹி: கார்யா ஸபீ³ஜா விதீ⁴யதே ॥ தீ³
க்ஷாவ ஶக்தி விஹீநஸ்யாநாதி⁴காரஜ ஸித்³தி⁴.

சமயாசாரத் திகழ சுத்தி-இதை நிர்ப்பீசதீக்ஷையைப் பண்ணுகிறபேர்க்குச் சமயாசாரக் கிரியைக்கு உள்ளவ யிருக்கிற காம பீசத்தையும் சுத்திப்பண்ணப் பண்ணுது.—

சமயிபுத்திரர்க்கு நித்தத்தேது மதிகாரத்தை யியற்றி-சமய ஜ தீக்ஷையையுடைய சமயிக்கும் புத்திரனுக்கும் நைமித்திகத்தினாலே ஆசாரியனுக் கொழிய அதிகார மில்லையாகையால் நித்

தியத்திலே அதிகாரத்தைக் கொடுத்து,—தானுமெழி நிரதிகா ரையென்னின் றிரண்டாய் விளங்கும்-நிர்வாண தீட்சை யுடையவர்களுக்குத் தாமும் நித்தியத்திலே சாதிகாரமென்றும் நிரதிகாரமென்று மிருவகைத்தாயச் சொல்லப்படும்—சாலங்கிழ தேகபாதத்திலொடு சத்தியநிருவாணமெனச் சாற்றுங்காலே - இன்னுமந்த நிருவாணதீக்ஷா பேதங்கூறுங்கால நிகழ்காலத்து த தேக† பதனமாயப்பொழுதே பரமுத்தியை யடையப்பண் ணுவது × சத்தியோ நிர்வாணமென்றும் சீவன் முத்தி+ வியவ தானமாகப் பண்ணுவது அசத்தியோ நிர்வாணமென்று மிரு வகைத்தாம்

¶ அக்கிரம புபுக்ஷு-நியமமில்லாமல் சாப்பிடவிருப்புவன் § சாம்பவம் - சம்புவினது † பதனம்-விழுகை, × சத்தியோ நிர் வாணம் - உடனேசுகம் + வியவதானம்-மறைவு

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இருவகை தீக்ஷைக்கு மருச்சரை முறைமையி லிசைக்கின்று ராய் நிரபீசத்தருக்கரை நிகழ்த்துகின்றார்.

பாலர்-சத்திபாத லக்ஷணங்காணப்பிக்குஞ் சாமாத்தியமு டையராய்ச் சமயாசார மனுஷ்டிக்குஞ் சாமர்த்தியமில்லாராய் நி ரம்ப ஓதியுணராதவர்களாய்ப் பதினாறு வயதுட்பட்டவர்,—

ஒடு-அவர்களோடு,—

வாலீசர்-வலிசா வாலீசரென நீட்டியவாறு. சத்திபாத தினர்களாயும் ஓதி யுணராதார்,—

விருத்தர் - சத்திபாதத்தினர்களாய் ஓதியுணர்ந்தாலும் அனுஷ்டானத்தில் அசத்தரா யெழுபது வயதுக்கு மேற்பட் டார்,—

பனிமொழியார் - உள்ளபடி யோதியுணர்ந்து சமயாசிசெபதி சாதகமாயனுஷ்டிக்குஞ் சாமர்த்திய மில்லாதவராய்ச் சத்திபாத சின்னிகளாய்ச் சஞ்சரிக்கும் மகளிர்,—

பலபோகத்தவர் - சாத்திர பாத்திரராய்ச் சத்திபாத சின்னந்தாகித் தூக்கவும் போகவாஞ்சை போகமு மூக்கமில்லாதார்,—

வியாதிப்பட்டவர் - உரைத்தவை யெல்லா முடையராயினு முரோகத்தார் இவர்கட்கு,—

பண்ணுஞ் சீலமது - செய்யுஞ் செயற்கையுடைய தீக்ஷை,—

சமயாசார திகழுந்தி,—பேச்சொற சொல்லுஞ் சைவ சமயசேஷானுஷ்டானப் பொருளில் விளங்கும் பிரசொற சொல்லுஞ் சோதனைப்பொருள்,—

நிர்ப்பீசம்-தீக்ஷை.சாதகா ஆசாரியர் இருவர்க்குந் தகாதாதலால்,—

சமயி புத்திரர்க்கு - புத்திரரென்று நிருவாண தீக்ஷிதராகனுப பெயர் பேசுதலாற சமயவிசேஷ சாதகாபிஷேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகளில் நித்திய கிருத்திய மாத்திரத்திற சாமர்த்தியமானகள ஒரு பிரகாரஞ் சாதிகாரிகளாகனும அவருள நித்திய முற்றும பண்ணுஞ் சாமர்த்தியமில்லாப் பாலா மூகற சமயி விசேஷி சாதகாபிஷேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகட்கு

நித்தகேதுமத்காரத்தை பியற்றி - மூழுகுதல், சர்ப்பித்தல், சபித்தல், குறக்குறிப்பேவல், பூசித்தல், ஓமித்தல், கேட்டுச சிந்தித்துத் தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலிய நித்தியகன்மத்திற குறைக்குறிய பேலாலா நைமித்திக கன்மத்துஞ் சிறிதிற காமியத்துஞ் சிறிதிற சாமா

த்த சமயிமுதலோர் பண்ணும் கிருத்தியத்தில் இப்பால் கிருத்தியத்தைப் பண்ணுவது, கூடாதிருந்தால் குருக்குறிப் பேவல் மாத்திரம் பண்ண, அதுவும் கூடாதிருந்தால் புத்திராதிகளால் பொருள்கொடுத்து வேண்டிக் கொண்டாதல் பிறராலாதல் பேணக் குறைவைக் கொண்டு கழிக்கப் பண்ணி—

தானும் - அந்த நிர்ப்பீச தீக்ஷையும்,—

எழினிரதிகாரையென நின்று - வடிவுறு நிர்ப்பீசை தீக்ஷையென நிருத்தம்,—

இரண்டாய் விளங்கும் - ஏலுங்கிருத்தியம் ஏலாக்கிருத்தியம் குறித்த சாதிகாரையாயு நிரதிகாரையாயும் இருத்தலால் சபீசையாயும் நிர்ப்பீசையாயும் இருவிதமாய் ஒருவகை சாற்றத்தோற்றும்,—

சாலநிகழ் தேகபாதத்தினிறுதி-பண்ணுமென்று கொள்ளுதலால், பண்ணுங்காலே யென்ப பண்ணுக சபீசதீக்ஷாயோக்கியர்க்குள் இயற்கையால் சீரவைராக்கிய முடையோர்க்கும், நிர்ப்பீச தீக்ஷாயோக்கியர்க்குள்ளும் வியாதி முதிர்ச்சி விருத்தத்தன்மை மிகுதி முதலியவற்றால் சீரவைராக்கிய முடையோர்க்கும், சஞ்சிதத்துங் காயமுடன் முற்றுங் கழியப்பண்ணும் நிர்ப்பீச தீக்ஷைதானே,—

சத்தியோ நிர்வாண மெனசாற்றும் - முத்திவிரும்பினார்க்கு நயிஷ்டிக தீக்ஷையென்று நாட்டப்படும் தீக்ஷை சத்தியோ முத்திப்பிரதமாதலால் சத்தியோ நிர்வாண தீக்ஷையென்று பேசப்படும்.

சிலவிடத்தில் சித்தி விரும்பினார்க்குப் பவுதிகதீக்ஷை யென்று பார்க்கப்படும் தீக்ஷை சத்தியோ புத்திப்பிரதமாதலால் சத்தியோ போகதீக்ஷை யென்றுபோ சாற்றப்படும்.

விதேக விஞ்ஞானகலர்களுக்கும் விதேக ப்ரளயாகலர்களுக்கு குருதேக தேகியல்லாத சிவனால் நிர்பீஜ தீக்ஷையாய்ப் பண்ணுமுன் சொல்லிய நிராதார தீக்ஷையெனவும் நிரதிகரண தீக்ஷையும் இவ்விருவகைப் பெயர்பெறுமென்பதறிக.

தேகபாதமில்லாமற் செய்யும் நிர்பீஜதீக்ஷையும் சபீஜதீக்ஷையும் அசத்தியோ நிர்வாணதீக்ஷை யென்பதறிக

சிவஞானயோகியருரை வருமாறு

—o—

அவ்விரண்டனுள் நிர்ப்பீஜ தீக்கையாவது, மலபரிபாகமுடையவராயுந் தீக்கைப்பின் ஒருதலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலறிவிலராயினோர்க்கு, ஆசாரியனுவானதனையுணர்ந்து ஏனைக் கன்மங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து, நித்தியகன்ம மாத்திரையினை ஏனையவரனுட்டிக்கு மதிகாரமுடையராகச் செய்வதாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்துங் காமியத்து மதிகாரங் கொடாமையான் இது நிரதிகார தீக்கையெனப்படும். அத்தீக்கை மூன்றனுள் சமயமும் விசேடமு மொரோவொன்றேயாம். ஏனை நிருவாணதீக்கை தேகாந்தத்தின் முத்தியைப் பயக்கும் அசத்தியோ நிருவாணமெனவும், அப்பொழுதே முத்தியைப் பயக்குஞ்சத்தியோ நிருவாணமெனவும், இருவகைப்படு மென்பதாம்.

சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்கையும் அதற் கங்கமாயுஞ் சுதந்தரமாயுஞ் செய்யப்படு சமயவிசேடங்களும் நிர்ப்பீஜ தீக்கையெனக் கொள்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல நிரபேக்ஷதீக்ஷையினருக்கென்றும, நிரதிகாரை அதிகாரையின முறைமையும, சத்தியோ நிருவாணம அசத்தியோ நிருவாணத்தின முறைமையும, அருளிச்செய்கிறார

பாலரொடுவாலீசர் விருத்தாபணிமொழியார பலபோகத் தவாவியாதிப் பட்டவர்க்குபபண்ணுஞ் சீலமதநிராபேக்ஷம்-சிறு பிள்ளைகளுக்கும அவர்களோடு அபோககியர்க்கும வயோதிகர் களுக்கும ஸ்திரீகளுக்கும் வெகுவிதமான புசிப்புகளை யிச்சித்தவர் களுக்கும வாத பித்த சிலேத்தம முதலான வியாதிகளினாலே ஆக்கப்படுகிறவர்களுக்கும செய்கிற தீக்ஷையினுடைய முறைமை, (ஈசுவரகூடாமலிருக்கிற தீக்ஷையாம —சமயாசாரநிசழ் சுத்தி சமயபுத்திரர்க்கு - சமயாசாரங்கள விளங்கா நின்ற சமய தீட்சையிலும விசேஷ தீக்ஷையிலும நின்றவர்களுக்கு,—நித்தத்தேனு மதிகாரத்தையிபற்றி - பொருந்தப்பட்ட நித்தியமான வதிகாரத்தைக் கற்பிக்கிறது. அதுதானென்னெனில்?—தானுமெழில நிரதிகாரையென்னுநிறு இரண்டாய் விளங்கும - அதுதானுடை அழகிய நிரதிகாரையென்றும இதுவொழிந்த அதிகாரையென்றும் இரண்டாய் விளங்காநிற்கும். இன்னும்,—சாலநிகழ் 'தேகபாதத்திறேறு சத்தியநிருவாணமெனச்சாற்றுங்காலே - மிகவும் விளங்காநின்ற நிருவாணமிரண்டு வகைப்பட்டிருக்கும். அதெங்ஙனேயெனனில்? தீட்சை செய்தவுடனே சரீரத்தைக் கமனமாகிறது சத்தியோது சேகர நிருவாணமென்றும், தீட்சை செய்தபின்பு சிலகால சரீரமிருக்கத்திலே முத்தியைக் கொடுக்கிறது அசத்தியோ நிருவாணமென்று சொல்லப்படும்.

இதனாற் சொல்லியது, பாலராயுள்ளவர்கள் முதல் வியா தியத்தராயுள்ளவர்களுக்குச் செய்கிறமுறைமை நிர்பீச தீட் சையென்றும், சமய தீட்சை யுடையவனுக்கும் விசேஷ தீட் சை யுடையவனுக்கும் அதற்றகுத்தக்க நித்திய கன்மங்களைக் கற்பிக்குமது நிரதிகாரையென்றும், விளங்காநின்ற நிர்வாண மிரண்டு வகைப்பட்டிருக்குமென்றும், அவையாவது தீக்ஷை செய்தவுடனே சரீரத்தைக் கமனமாக்குகிறது சத்திய நிர்வா ணமென்றும் தீக்ஷைசெய்த பின்பு சரீரம் சில நாளிருந்து தேகாந்தத்திலே முத்தியைக் கொடுக்கிறது அசத்தியோ நிரு வாணமென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நிர்பீசம - அவ்விரண்டினுள் நிர்பீச தீக்கையாவது மலபரி பாக முடையவராயுந் தீக்கைப்பின்றொகுதலையான் வழுவினறி ச செய்யக்கடவனவாய சமயாசாரங்களை யநுட்டிக்கு மாற்ற லறிவில்லராகிய,—பாலரெருவாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப் பட்டவர்க்கு - பாலருடன் குமார ருமமுதியோரு மாதருமப பலபோகத்தினை யுடையவரு மிகக நோயினை யுடையவருமாகிய விவர் முதலாயினோர்களுக்கு;—சமயா சாரத் திகழுசத்தி -ஆசாரியனுவா னதனையுணர்ந்து ஏனைககன மங்களோடு கூடச் சமயாசாரத்தையு மாருத்தியாற் சுத்திசெய தொழிந்து,—நித்தத்தேது மதிகாரத்தையியற்றி - நித்தியகன ம மாத்திரையி. னேனைவா யநுட்டிக்கு மதிகார முடையரா கச செய்வதாமாயினுஞ் சமயாசாரங்களைச் சுத்திசெய தொழி ந்தமையினை,—எழுநிரதிகாரையென நின்றதுமுனு நீலம - நைமித்திகத்துங் காமிகத்து மதிகாரங் கொடாமையா லதுவ அ

முகுபொருந்திய நிரதிகார தீக்கை யெனப்படும் — அது - அத் தீக்கை மூன்றனுள், — சமயிபுத்திரர்க்கு - சமயி புத்திரர்க்குச் செய்வதாகிய சமயமும் விசேடமும் ஓரோவொன்றே யாம — சாற்றுங்கால் - ஏனை நிருவாண தீக்கையைச் சொல்லுமிடத்து, — சாலநிகழ் தேகபாதத்தினோடு சத்திய நிருவாண மென விரண்டாய்விளங்கும் - மிக்கு நிகழ்கின்ற தேகாந்தத்தின் முத்தியைப் பயக்கு மசத்தியோ நிருவாணமெனவும், அப்பொழுதே முத்தியைப் பயக்கும் சத்தியோ நிர்வாணமெனவும் இருவகைப் படுமெனபதாம்.

சமயாசார சுத்தியோடு செய்யப்படு நிருவாண தீக்கையும், அதற் கங்கமாயும சுதந்தரமாயும செய்யப்படுஞ் சமய விசேடங்களும நிர்ப்பீச தீக்கையெனக் கொள்க

மறைஞானதேசிகர் உரை.

மேலிருந்த முறையானே சபீச தீக்கையெனவும், அந்தச்
சபீசஞ் சிவ தன்மணி லோகதன்மணியென விருவித
மா மாறுமுறையே யுணர்த்து கின்றார்.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்காநல்ல வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவாதம்மை, நீதியினை னித்திய நைமித்திக காமியத்தி னிறுத்தின்ரம் பதிகார நிகழ்த்துவதுஞ்செய்து, சாதகாசாரியரு மாக்கிவீடு தருவிக்கு மூலோகசிவ தருமிணியென்றிரண்டாம், மாதவினை னதிகாரரை யாஞ்சமயவிசேட நிருவாண மபிடேகமி வற்றடங்குமன்றே. (௫)

(இ-ள்.) ஓதியுண ஆசாரியனிடத்திலே யாகமங்களை யோதி ரகதொழு யத ஞானமைப் பொருளை யறிந்து சமயாசா

ககநெறியி ழுககா நல்லவுத் தமாகருச் செய் வ தயாரிசம

ரங்களை வழுவற வனுட்டியென ருசாரியனை
சண்டேசுரன் சன்னதியிற் கற்பித்தபடி நட
வாரினை உத்தமராகிய மாணாக்கர்க்குச் செய
யுந் தீக்கை மேலான சபீசமெனப் பெறும

இவர்தம்மை

இந்தத் தீக்கைபெற்ற சாதகரையு மாசா
ரியரையு முத்தமாதிகாரிகளென்று சொல்லு
மிருவரையும்,

நீதியி ஞ னித திய நைமித்திக காமியத்தி னிறு தி

சாதகரை நித்தியசன்மங் காமிக கன்ம
மாகிய விரண்டு முறைமையிற் செய்தற்கதி
காரியாகக் கற்பித்து, ஆசாரியரை "புனன
லூழ்கித் தற்பித் தமலனடி பூசித் -தனலோ
ம்பலாதி நித்தியம்" "பரமப்பிரதிட்டை தீக
கை பணுங் - கருதின்கா ளைமித்திகம்" "உரைத்தமலன வா
கனை யுளமுகொளக்கற் பாற்கு-விரித்ததுவகை மித்திகமாமே. "சி
த்தியினைவேண்டியருச் சிக்கை சபம் பண்ணலென்-றுரைத்தவிதங்
காமியமென ரோர்." இங்ஙனங் கூறிய நித்தியமுதலிய மூன்று
கிருத்திய மாசாரியர்க்கும், நித்தியமுங் காமியமுமாகிய விரண்
டுஞ் சாதகர்க்கும் இம்முறைமையாற் கற்பித்து.

நிரம்ப திகார நிகழ்த்து வ துஞ் செய்து

இம்மூன்று தொழிலையுஞ் செய்தற் கா
சாரிய ருரித்தாதலாற் குரு மனுட்டித்தற்
காசாரியராய் அதிகாரம்பெற்று மாணாக்
கர்க்கு முபதேசம்பண்ணி நடக்கும்படி கற்
பித்து,

சாதகாசாரிய ருமாகவி

சாதகர்க்குச் சாத்திய மந்திரத்தையுங் கற்
பித்துச் சாதகாபிடேகமும் பண்ணி யாசாரி
யற்குச் சருவ வித்தியாபிடேகத்தையுஞ் செ
ய்து,

வீடு தருவிக்கு மூலோக சிவதன மணியென திரண்டாம

அந்தீக்கை யபரமுத்தியைக் கொடுக்கு மூலகதனமணி தீக்கையெனவும் பரமுத்தியைக் கொடுக்குஞ் சிவதனமணியெனவு மிருவகைப்படும் அவையாவன,—

நிருவாண தீக்கையி லாசாரியன் மாணாக்கனுடைய பாவ கன்மத்தையே சோதித்துப் புண்ணியத்தைச் சோதியாமல் வைத்துச் சிகாச்சேதமு மின்றிப் பதப்பிராப்தியாகிய புவனங்களிலே யோசனைசெய்யும் தீக்கை லோகதனமணி மோட்சகாயியாகிய மாணாக்கற் காசாரியன் புண்ணியபாவமாகிய விரண்டினையு நாலுவிதமாயிருக்கிற சஞ்சித கன்மங்களையுஞ் சுத்திசெய்து விதிவழிச் செய்யப்பட்டுச் சிகா மந்திரத்தி னேழுபிரகாரமபிமந்திரிக்கப்பட்டதுமாய் ஞானசத்தி ரூபமா யிருக்கிற கத்திரிகையைக் கொண்டு பிரம ரந்திரத்துக்குமேலே பன்னிரண்டங்குலமுடைய சிகையில சத்தி வியாபினி சமனை யுன்மனையெனக் கூறிய சத்திகள் நாலுக்கு மேற் சிவம் வியாபித்து நிற்கையா லடியி லெட்டங்குலமவிட் டான்மாக்களுக்கு மூலபாசமா யவர்கள ஞானக்கிரியைகளைத் திரோதானஞ் செய்யுந் திரோதான சத்தி ஸ்வரூபமாயிருக்கிற மேல் நாலங்குல முடைய சிகையை யத்திரத்தாலே சேதிக்குமது சிவதனமணி தீக்கையெனப் பெறும்.

ஆனதிருவதி காரையாம்

இச்சிறப்பினை யுடைத்தாகையினாலே சபீச தீக்கை சாதிகாரை யெனப்பெறும் மேலகத விருவகையினை முடித்துணர்த்துகிறா

சமய விசேட நிருவாணமபி டேக மிவற்றட ங்குமன்றே.

இங்ஙனங் கூறிய நிர்ப்பீச தீக்கையி லுண்டாகிய அதிகாரர் சமய விசேடத்தி லடங்கும், சபீச தீக்கையி லுண்டாகிய சாதிகாரர் நிருவாண தீக்கையு மபிடேகமு மடங்கும் எ-று.

சமயாசாரத்துடனே கூடி யனுட்டித்து வருகையாற் சபீசமென்றார் இது வடமொழி

நிர்பீசத்தைப் பற்றச் சபீசஞ் சிறப்புடைத்தாகையா லுபாபீசமெனச் சிறப்பித்தார்.

ஆசாரியனுக்குஞ் சாதகற்கும் செய்தொழில் வேற்றுமை யாதலால் நீதியெனச் சிறப்பித்தார்.

உலோகதன்மணி பராபரபோக வேதுவாதலாற் சிவதரு மணியைத் தருமெனச் சிறப்பித்தார்

இதற்கு வருணபத்ததி ஞானரத்நாவளியிலுங் காலோத்தரத்துங் காமிகத்துமவா றுணர்த்து மறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சபீச தீக்ஷாதிகாரிகளைக் கூறுகின்றது.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்காதல்ல வுத்தமர்க்குச் செய்வ துபாபீசம் - கன்மகாண்ட சாஸ்திரங்களைப் படித்து அதனுடைய பொருளை யறிந்து அதன்படியே வழுவாமல் அனுஷ்டானங்களையும் பண்ணிவரு முத்தமர்க்குப் பண்ணுமது சபீச தீக்ஷை.—

நித்திய நைமித்திய காமியத்தினிறுத்தி நிரம்ப திகார நிகழ்த்துவதுஞ்செய்து சாதகாசாரியருமாகி-அவர்கள வர்க ளதிகாரானுகுணமாக நித்திய கன்மமாத்திரமாகவும் நித்திய நைமித்திக கன்மமும் நித்திய நைமித்திக காமிய கன்மமும் பண்ணும்படி ஸ்தாபித்து தீக்ஷை பிரதிஷ்டை பிராயச்சித்தாதியான சர்வாதிகாரத்தையுங் கொடுத்து சாதகாசாரியாபிஷேகமும் பண்ணி.

சாதகாசாரிய னென்றது, நைஷ்டிகாசாரியனைப் போல அக்கினி காரியாதி கன்மங்களின்றி சர்வமும் ஞானத்தினாலே பண

னது அக்கினிகாரியாதி சர்வகன்மங்களையும் பண்ணும் பௌதி காசாரியனைச் சொன்னது.—

லீபிகருவிக்கு மூலோகசிவதனமணி யென்றிரண்டாம - மோக்ஷத்தைக் கொடுக்கும் நிர்வாண தீக்ஷைதானும லோகதன மணியென்றுஞ் சிவதன்மணியென்று மிருவகைத்தாம

உலோகதன்மணியாவது கிரகஸ்தனுக்கு பௌதிகாசாரியா சிகாச்சேதமன்றியிற் பண்ணுந் தீக்ஷை.

சிவதனமணியாவது ‡ நைஷ்டிகாசாரியன் நைஷ்டிகனுக்கு சிகாசசேதத்துடனே பண்ணுமதீக்ஷை.

நைஷ்டிகாசாரியன பௌதிகனுக்கு உலோக தனமணி தீக்ஷையும பணணலாம்.

பௌதிகாசாரியன் நைஷ்டிகனுக்கு தீக்ஷை பண்ண லா காது.—

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌮𑌿𑌕𑍇 — 𑌦𑍍𑌵𑌯𑌾 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌕𑍍𑌷𑌾 𑌲𑍌𑌕𑌿𑌕𑍀 𑌶𑌿𑌵𑌯𑍋𑌜𑌿𑌨𑍀 । 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌭𑌾𑌵𑌲𑍋𑌕𑌯𑍋𑌜𑌿𑌨𑍀 ॥ 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌸𑌾 𑌶𑌿𑌵𑌯𑍋𑌜𑌿𑌨𑍀 । 𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑌾 𑌲𑍋𑌕𑌯𑍋𑌜𑌿𑌨𑍍𑌯𑌾 𑌭𑍌𑌤𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥ 𑌤𑌥𑍈𑌵 𑌶𑌿𑌵𑌯𑍋𑌜𑌿𑌨𑍍𑌯𑌾 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 । 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌾 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌂 𑌶𑍈𑌵𑌂 𑌸𑍁𑌰𑌹𑌸𑍍𑌯𑌾 𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ 𑌭𑍌𑌤𑌿𑌕𑌸𑍍𑌤𑍁 𑌰𑌹𑌸𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌨𑍈𑌷𑍍𑌠𑍀𑌂 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।

ஆகலின் அதிகாரமாயாகஞ் சமயவிசேட நிருவாண மபிடேக மிவற்றடங்குமென்றே சபீச தீக்ஷையானது அதிகாரத்துடனே கூடினதாகையால் சமய விசேஷ நிருவாண மாசாரி

டாபிஷேக மெனனும் காலு நிலையு மவரவர் ஞானத்துக்கிடாகப் பண்ணப்படுவது. நிலையை யநேக பேதமாகச் சொலலிப்போத இவ்விடத்து நாலென்று சொல்லுவானே னெனனில்? அந்த நிலைபேதங்களெல்லா மிந்த நாலு நிலையிலே யந்தர்ப்பவிக்கு மென் றிதனபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சபீசத் தருகளைச் சாற்றுகின்றார்.

ஓதியுணர்ந் தொழுகநெறி யிழுக்கா நல்லவுத்தமமாகுரு—சபீச தீக்ஷை படிப்பிக்கப் பண்ணும் விசேஷ வித்தையாகிய சிவாகமங்களைப் படித்துப் பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசார மார்க்க நடக்கை தப்பாதனுஷ்டிக்குஞ் சாமர்த்தியங் காண்பிக்குஞ் சாமானிய வித்தையாகிய நாலுக்க சதுர் வேத வேதாந்த மீமாம்ச புராண முதலிய முற்று மற றருகமா யிவைகளில் ஒவ்வொன்றைத் தானபடித்துப் பாரத்துப பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசாரமார்க்க நடக்கை தப்பா தனுட்டியாநின்று காண்பிக்குஞ் சாமர்த்திய முடையராய்ச் சத்துத்தமாதி காரிகளாகுஞ் சமய விசேஷ நிருவாண சாதகாசாரியர்களா மருகர்க்கு—

செய்வது - பண்ணுவது,—

உயர்பீசம் - தலைகடை குறைதலால் றூக்கிய சபீசதீக்ஷை,—

இவர் தம்மை - இவ்வைவரையும்,—

நீதியினால் - அவரவர்க்கு அருகமாக,—

நித்திய நைமித்திய காமியத்தில் நிருத்தி—சமய விசேஷ நிருவாண மூவரையுஞ் சிரமுழுகல், தரிப்பித்தல், ஜபித்தல் பூசித்தல்ஓமித்தல் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நியாயித்த

ல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலியதுவரவர்க்கருகமான கன்மங்களை விதிப்படி விழாதுசெய் நித்தியாதிகாரத்திற பிரதானமாய நிறபித்துக் குருக்க குறிப்பேவலாற சிறிதியன்ற நைமித்திகாதிகாரத்திலும், சிகாச்சேதவானாகிய நிருவாணிகட்கு விசேஷித்த நைமித்திகத்தி லதிகார மூன்றென்று காமிக முதலிய சிவாகமஞ்செப்புதலாற் குரு கற்பனையாற் சகல நைமித்திகாதிகாரத்திலும சிறிது விரும்பிற் குருகற்பனையாற் சிறிது காமியாதிகாரத்திலும் நிற்பித்துச் சாதகாபிஷேகம் பண்ணிச் சாதகனுக்குக் குறித்த அவனைச் சாதகாபிஷேகம் பண்ணிச் சாதகிய மந்திர ஜபபூசை யோக முதலிய காமியாதிகாரத்திற பிரதானமாய நிறபித்து, நித்தியாதி காரத்திலும குருவாஞ்ஞையின்ற சகல நைமித்திகாதி காரத்திலும் நிற்பித்து, ஆசாரியாபிஷேகம பண்ணி ஆசாரியனுக்குக் குறித்த அவனை யாசாரி யாபிஷேகம்பண்ணி தீக்ஷைபிரதிட்டை சிவாகமபோதன முதலிய நைமித்திகாதிகாரத்திற்பிரதானமாய்நிற்பித்து நித்தியாதி காரத்திலும பரார்த்தம் சிறிது சுவார்த்தமாகவும் சிறிது காமியாதிகாரத்திலும் நிற்பித்து,—

நிரம்பவதிகாரம் நிகழ்த்துவதுஞ் செய்து—நிர்ப்பீச தீக்ஷைபோல் ஏதுமதிகார மாத்திரமாய் ஏலாவதிகாரக் குறையாய் இயற்றுவிப்பதின்றி, முப்போது சொல்லிய நித்தியாதிகாரி காமியாதிகாரி நைமித்திகாதிகாரி மூவர்க்கும் அவரவர்க்கருகமாய நிறைய வதிகாரம பண்ணுவது பண்ணுவித்து, அவர்க்குள் ளிருவரை —

சாதகா சாரியருமாக்கி — சாதகா சாரியர்களானுஞ் சிகாச்சேதமாத்திரஞ் செய்த நிருவாணியானுமோரிருவர் முறையில் ஸ்வதந்திரர்களாயுங் குருவாஞ்ஞையினாலும் பண்ணப்பட்டதலால்,—

வீடு தருவிக்கும் - மோக்ஷங்கொடுப்பிக்கும மூவருள ஆசாரியன சைவதந்திரமாய்ச சர்வாதி காரியாதலாற சாவசமபூரணை சபீச சாதிகாரதீக்ஷாவானுதலா லவனுக்கே சாதிகார தீக்ஷையென ப தியல்பிறற் செல்லுர

திருமப அந்தச சபீசதீக்ஷை,—

உலோகசிவதனமிணி யென றிரணடாம் - உலோகதனமிணிதீக்ஷை சிவதனமிணி தீக்ஷையென திருவிதமாம,—

. ஆதலினுல் - சொல்லிய நீதியினுல், சபீசதீக்ஷா பேதமெல்லாம நிரப்பீச தீக்ஷையில் நிரதிகாரையாய் மூன சொல்லிய சமய விசேஷ நிருவாண தீக்ஷைகளை நீக்கி —

அதிகாரையாம்-என்பது தலைக்கடை குறைதலாற் சாதிகார தீக்ஷையாம்.—

சமய விசேட நிருவாண மபிடேக மிவற் றடங்குமன்றே. அன்றே என்பதசை.

உலோக சிவதனமிணி யென்ற விடத்துச் சிறிதிசையாதது விசேஷித்திசைப்பாம.

முறைமையிற் சபீச தீக்ஷாபேத மாகுஞ் சிவதன்மிணி தீக்ஷை உலோகதன்மிணி தீக்ஷை யிரண்டினுள் சிவதன்மிணி தீக்ஷை பரையென் றுரைக்கும சயிஷ்டிகி தீக்ஷை யென்றும அபரையென றுரைக்கும் பவுதிகி தீக்ஷை யென்று மிருவிதமாம,—

அவற்றுள், பரமபரையாயும் சாக்ஷாத்தாயும் பிரதிசபசாவனுந்தாதி சிவகுணமணைபுற்ற மூத்திமாத்திர காமிகராயுஞ் சாதக காரிய காமிய சிவதனம லோகதனம கனமாநுஷ்டான பலப்பற் றற்றவர்களையும் அவரவர்களுக்கமைந்த சாமானிய விசேஷ சரியை கிரியை ஜப சாலம்ப சிவயோக நிராலம்ப சிவயோக ஞான நிரிபதார்த்த ஞான சிவத்துவ பதத்துவ விவேக ஞானவான்களாயும், அந்தந்தச் சிவதனமாநுஷ்டான சிலர்க

ளாயுஞ் சிரீகண்டாதி சதாசிவாந்த சாலோக சாமீப சாரூப சமபலத் தியான சாத்திய சமபல மூர்த்தி சாயுச்சியங்களையும் சதாசிவ தத்துவத்திற்குமேற் சத்தி சிவதத்துவ கலாபுவன சாதார நிராதாரங்களிற பரசிவ லோக சாமீப சாரூப சத்துச சித்துச சமபல சுடஸ்த மூர்த்தி சாயுச்சியமூற்றுப் பெற்று மூர்தமுதத்ஸ்வரூப சாயுச்சியங்களையும் அவரவர்க்கருகமாயச சாருத்ரகருக்காகளாயுமிருக்கும சமயிபுத்திரர்கள புத்திரவிசேஷ நிரபிஷேக நிரதிகார நிருவாணிகள சாபிஷேக சாதிகாராசாரியாக ளிவர்கட்கு யோக்கிய மறிந்து சர்வசிவ புண்ணிய பசு புண்ணிய பாவசஞ்சித கன்மசுத்தி மதியாகவும் அதிலலாதாகவும அஷடாங்குல மட்டு விட்டறுக்குஞ் சிகாசசேத வதியாகவும் அதிலலாதாகவும் பண்ணும நயிஷ்டிகி சிவதனமிணி தீக்ஷை.

சுட்டவுதிக்குமாயேய மாகாமாயேய புத்திகுண வணிமாதி குண குணஞ்சித்துப் பலமாகத்தான், அதிக பலமாகத் தான, அதிக பலமாகவுதிக்குஞ் சரீர நிரவதிக சாதிசய சர்வஞ்ஞகாதி சிவகுண மணப்புற்ற போகபோகாந்த மோக்ஷ காமிகளாயும் மகாப்பிரளய பரியந்த மிந்தச் சரீரத்தைத் தானே மரண மடாதபடி அதிமார்க்க மாந்திர சாத்திரப் பிரசித்த விசேஷ சிவதீர்த்த மருந்து மந்திர யோக முதலிய சிவதனம விசேஷா னுஷ்டானத்தாற் சித்தி பண்ணிக் கொண்டு தாமிருகருப் புவனமது விட்டு மூட்டின்றி விரும்பிப்போம் புவனங்கட்கிணங்க வேடந்தரித்து வடிவு விரித்து மாயாவதி சரிக்கும் சாமர்த்திய வாஞ்சா வான்களாயும் சரீரம் விட்டு விரும்பும் வேறு சரீரம் பரித்து மகாமாயாவதி சரிப்பவிருப்பர் தரிப்பவராயுங் காமிய சிவஞானத்தியான ஜப பூசா சேவாதி சகாமாராதனை அல்லதனுபவைப் பிரமாதி காற் சிவமூர்த்தி யான்மாருட சம்புபக்ஷ பிரமாதி காற்சிவமூர்த்தி சம்புபட்சமாத்ர சதாசிவ மூர்த்தி யாகப் பஞ்ச பஞ்ச கலேசுவர மூர்த்திகளு

ள் அவரவர்க்கிஷ்ட பலார்க கலார்க கலேசுவா மூர்த்தி ஞா னத தியான ஜப பூஜாசேவாதி சகமாராதனை அல்லது அப் படிச சிந்திக்கப்படும காலாககினியாதி அனாசிருகாநத புவ னேசுவர்களுள அவரவர்க இஷ்டபலார்க புவனர்க புவனேசுவ ர ஞானத தியான ஜபபூசாசேவாதி சகாமாராதனை யெனசி வற அதிமார்க்க மாந்திர சாஸ்திரப் பிரசித்த சிவதனமாவுடை டான வாஞசா வானகளாயு மிருக்குஞ் சாதகாக்குத தீக்ஷா னநதர மனுஷடிககுஞ் சிவபுண்ணியத்தக் கொத்து மாறினநிச சேரும முன்செய்த சிவபுண்ணிய மாத்திரம் அந்தந்தச் சாதக ரடையும் பலார்க கலார்கங்களாய் அந்தந்தக் கலாமரியாதி யிற சேவித்து நிற்கச் சர்வ பகபுண்ணிய பாவசஞ்சித கன்ம சுத்தி மதியாகவும் துவாதசாங்குல மட்டிவிட் டறுசகுஞ் சிகா சசேதவதியாகவும் புணணுமது பௌதிகசிவதன்மினி தீக்ஷை

மாயாவதிமட்டு முட்டும் பிரஞ்ஞாப் பெருக்குத தனத த னது வசநீ அவதி கருககும் பின்கூடவுதிக்குகளான சிற்றுபபல மாக அதிக பலமாக வதிக்கும் சாதிசய சாவஞ்ஞாதி சிவகு லை மணப்புற்று மாயாமணடலத திருநதாலும சிரிதுபெயரிட்ட த பபிரஞ்ஞாப்பெருககுமாயோபரி அபரிமிதமாக விரிக்கும் மா யேயபுததி அணிமாதிகுணமணபபுர்றும் அதுவன்றி வைதிகாத தியானமிக சாத்திரப் பிரசித்த யாகாதி பசுத்தனமந் தன் கோ டிககு ளடககும லௌகிக சாததிரப பிரசித்த தன்னிரபநகர் தடாகமுதலிய லோகதன்மத் தழுவியொழுகியும் லோகதனம சிவதனம தலாகோடிகளுக்குட் சிறிதொருதவைபற்றி மூனசொ லலிய அதிமார்க்க மாந்திர சாததிரப் பிரசித்த சிவ தன்ம த லாகோடி தொழுவிச அக சிவதனமாவுஷ்டானத்தால் மகா மாயாபூதி விரும்பில் தன்றேடு கூடவுதிக்கும்மகாமாயேய பு த்திகுண அணிமாதுகலிய குணபலம் சித்துப்பலமாகத்தான

அதிகபலமாக வுதிக்குஞ் சாதிசயா சாவஞ்ஞாதி குணமடைப் புற்று முதிக்கும் போகபோகாந்த மோக்ஷகாமிகளாயும், மகாபிரளய பரியந்தஞ் சிவதன்மிணி பவுத்திகீ தீக்ஷையில் சொல்லிய இருவகை முறைமையிற் சரீரந் தரித்துச் சரிப்ப விருப்பந் தரிப்பவராயும், சிவதன்மமடைப்புற்ற லோகதன்மம உலோகதன்மமடையப்புற்ற சிவதன்மம், இருதன்மாநுஷ்டான சீலர்களாயிருக்கும் சாதகர்க்கு அதத்தச சாதகர் பொருந்த விரும்பும் அதத்தப பலார்த்த கலாரங்களாய் அந்தந்தக் கலாமரியாதியிற் பசுபுண்ணியங்களை சிவபுண்ணியங்களை பரிசேஷித்து நிற்கப் பாவகன்மங்கள் அந்தந்தக் கலாமரியாதியிற் பரிசேஷியாது பரிசுத்தியாக அப் பரிசுத்தி மதியாகவும் அந்தந்தச் சாதகருக்குச் சதாசிவதத்துவோபரி சத்திசிவதத்துவ போக காமிகட்குத் தத்துவாத சாக்குலமட்டு விட்டதாகுஞ் சிகாச்சேதவதியாகவும் பிருதிவி தத்துவாதி சதாசிவதத்துவாந்த போக காமிகட்குச் சிகாச்சேதவதியன்றியும் பரையாகவு மபரையாகவு பண்ணுமது உலோக தன்மிணி பவுத்திகீ தீக்ஷை.

ஸ்ரீமத் அகோர சிவாசாரியர் பத்ததிமுதற் சிறிதுபத்ததிகளிற் பவுத்திகீ சிவதன்மிணி தீக்ஷை பவுத்திகீலோகதன்மிணி தீக்ஷை இரண்டிற்கும் இருதீக்ஷாபலார்த்த கலாந்தங்களாய்ப் பசுபுண்ணிய சிவபுண்ணிய தன்ம கன்மங்களை பரிசேஷித்து நிற்கப் பாவகன்மங்கள் மாத்திரம் பரிசேஷியாது பரிசுத்தியாகப் பஞ்சகலாசுத்தி யொருமிக்கப்பண்ணி விரும்பிய விரும்பிய புவனபோக போகாந்தத்துப் புகர்த்தீக்ஷாபேக்ஷை யபேக்ஷித்துச் சாக்ஷாத்மோக்ஷம் சாருமபடிக்குச் சிவனின்று யோசனை செய்யிருப்பது சிந்திதற்க.

நீர் தீக்ஷா பரீக்ஷை பண்ணாது நுணவியதுகானே, கிருஹஸ்தாசாரியர் விரக்தாசாரியர் என்று விசேஷியாம லாசாரி

யாகட்கு நயிஷ்டிகதீக்ஷை யென்று முன்சமுதாயத்திற சாற்
றினீர்! அதுகாலோத்தராதியில் நயிஷ்டிகாசாரியார் நயிஷ்டிகர்
கரும கிருகஸ்தர்களுக்கு தீக்ஷைபண்ணுக, பவுதிகாசாரியர் பவு
திகர்க்கு மாத்திரம் தீக்ஷைபண்ணுக வென்னும் பாட்டத்தாற்
கிருகஸ்தாசாரியர்களுக்கு நயிஷ்டிகதீக்ஷை காட்டப்படாதென்று
காட்டப்பட்டது. நீ சொல்லிய தன்னது ஆசாரியர்கட்கு ந
யிஷ்டிகதீக்ஷை யென்னும் 'சர்வஞ்ஞானோத்தர சாமானிய வ
சனத்தினும் நயிஷ்டிகாசாரியர் நயிஷ்டிகருக்கு மாத்திரம்,
கிருகஸ்தாசாரியர் நயிஷ்டிகர்களும் பவுதிகர்களும் பண்ணுக வெ
ன்று மாகமாந்தர விசேஷவசனத்தாலும் நயிஷ்டிகதீக்ஷையி
னாலே தீக்ஷிதனாயிருக்கும் கிரகஸ்தனும் விரக்தனும் வர்ஜிக்கப்
படாத வாஞ்சிகளும் பிராரத்தகன்ம பலபோகவாஞ்சை மா
த்திரத்தினாலேதான் மணியந்திர மருந்து முதலிய சாதனமா
த்திர சாத்தியகாமிக போகவாஞ்சை மாத்திரத்தினாலேயுந்தா
ன மலபரிபாகதாரதம்மியத்தால் நயிஷ்டிகதீக்ஷா வைசித்தி
ரிய மாத்திரத்தால இங்கிருந்து வாஞ்சியாதிருக்கவும் சரீராந்
த்திரானேகரும் பராபர புத்தி பயரபுத்தி போகவாஞ்சை
மாத்திரத்தினாலேயுந் தானசாதக சாத்திய பவுதிக தீட்சா ப
ல புவன பரிபூர்த்தி வாஞ்சையில்லாமையாற பவுதிகனென்று நயி
ஷ்டிகனானே யென்னுஞ் சோமசம்புவிருத்தி வசனத்தாலும்,
கிரகஸ்தாசாரியர்கட்கு நயிஷ்டிகதீக்ஷை நன்றாக காட்டப்பட்
டது.

நீரப்படிச் சொல்லில் பவுதிகாசாரியர் பவுதிகர்க்குத் தீ
க்ஷை பண்ணக் கடவாக வென்னும் வசனம் நிஷ்பலமாய்
அப் பிரமாணனியத் தானமாய்ப் போகாதோ? நீயப்படி
ப போமென்று சொல்லியதெப்படி, போகாது. சபலமாகத்
தானே சோமசம்பு பத்ததி வியாக்கியானத்திற் சுருக்கி யுரை
த்திருப்பது விரித்துரைப்பாம்.

முறைமையில் நிஷ்டை யென்று மோக்ஷத்திற்கும் சமா
திக்கும் விரத முதலியவற்றிற்கும் பெயராதலால், பாலியவய
து தொடங்கி மரணாந்தம் விரதம் நியமித்துத் துறவிகளாயிரு
க்கும் நயிஷ்டிகப் பிரமசாரிக ளென்றும் கன்னிகா கல்யாண
காலாவதி விரதம் நியமித்துத் துறவிகளாயிருக்கும் பவுதிகப்
பிரம சாரிகளென்றும் இருவகையராயிருப்பர் விரகதாசாரியர்
களும் கிரகத்தா சாரியர்களும் தனித்தனி சரீரத்திலவரும்
மோக்ஷ விருப்பத்தினாலும் அவரவர்க்கிட்ட புவனபதி பூதி விரு
ப்பத்தினாலும் அவ்விருப்பத்துக் கனுகுணமாய நயிட்டிகதீக்ஷை பவு
திகதீக்ஷை பண்ணுவித்துக்கொண்டு மூன்று பகுப்பார்களுக்கு
ம் தனித்தனி அட்டாங்குல சிகாச்சேதமுடைய நயிஷ்டிகாசாரி
களென்றும் துவாதசாங்குல சிகாச்சேத முடைய பௌதிகாசா
ரியர்களென்றும் இருவிதமாயிருப்பார்கள் ஆதலால், கிரகத்தா
சாரியர்கள் நயிஷ்டிகா சாரியர்களாயும் பவுதிகா சாரியர்களாயு
ம் குருத்துவம் பரியர்களென்பது பக்ஷமாத்திரமன்றி போற ப
தித்து நாட்டுதலாலும் வசனங்கள் சபலங்கள் தானோ! அஃதப
படியாகட்டும், ஸ்ரீகாமிகாமகத்தில் நாலாம் வருணத்தில் நயி
ட்டிகர்க்கே நைமித்திக கன்மகர்த்திருத்துவ குருத்துவம், கிரக
த்தருக்கு நித்தியகாமிய கன்ம கர்த்திருத்துவ சமயபுத்திர சா
தகத்துவ மாத்திரம், குருத்துவ மில்லை யென்று கூறியதேது?
அது உள்ளது. ஆமாத்தக மடம் முதல் மடக்குரு மனக்குறிப்பு
ப்பிரிப்பினால் மடப்பகுப்பாகமங்களிற் சித்தாகமங்களிற் கூ
றியது.

காலோத்தராதியில்,—

கருஹஸ்தஸ்ஸாவர்ணேஷு பூஜ்யோ குருருதாக்ருத
நைஷ்டிகஸ்தவதமோ கச்ரேயோ பௌதிகஸ்துவிசேஷத
சத்தூராணுமபிவாணாம்லி வக்கோமகருஹிணமபி
ஆசாரயத்துவமவேதாஸம்கலிதத்தாகதே பாதிபாதிகம்


சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் - அஷ்டாதச மகா புராணங்களையு மறிந்தும்,—

வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்தும் - வேதாந்த சிரவணம் மனன † நிதித்தியாசனங்களைப் பண்ணியும்,—

சென்றால்-இவ்வாறு உத்தரோத்தரமாகச் சனங்கடோறு மப்பியாசம் பண்ணிவந்தால்,—

சைவத் திறத்தடைவர் - அந்த புண்ணிய பலத்தினாலே சைவ சமயத்தைப் பொருந்துவார்கள் —

இதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர் - இந்தச் சைவத்திற் சரியை கிரியை யோகமென்னும் மூன்று வித்தையுங் கிரமத்திலே யநுஷ்டித் தவை யிறுக்கலின் பலமாகிய சாலோக சாமீப சாரூபங்களை யடைந்து பின்பொரு சன்மத்திலே யாசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே சிவ சாயுச்சியத்தை யடைவார்களென்றிதன்பொருள்

† நிதித்தியாசனம் - தியானம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவசமாதி சித்தாந்தத்தன்றிச் சேரப்படாதென்று செப்புகின்றார்.

புறச்சமய நெறி நின்றும் - உலோகாயதம் பௌத்தம் ஆருகதம் மீமாம்சம் மாயாவாதம் பாஞ்சராத்திரம் என்னும் புறச்சமயங்களினின்றும்,—

புகன் மிருதி வழியுழன்றும் - அப்பொருள்வழி பொருந்திப்போய்,—

வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால்,—

அகச்சமயம்-சைவம் பாசுபதம் வாமம் வயிரவம் மகாவிரதம் காளாமுகம் என்னு முள்ளறுசமயம்

புகுந்தும்,—

பின்சைவத்திறத்தடைவர் - சைவசித்தாந்தத்திற் பிரவேசிப்பார்.

இதில் எனப் பொருள் வழி பொருத்திப் பொருளுரைக்கப் பதக்கிரமத்திற் பொருளுரைத்தாற் சமயக்கிரமம் மாறுபடும்,—

ஞானத்தால் - சிவ தீக்ஷாங்க நிராலம்ப சிவ சமாதியினால்,—

சிவனடியைச் சேர்வர் - சிவசத்தி சமானமாய தமது சிற்சத்தி விரிவு திருந்தி யிருப்பார்கள்.

போகமாத்திரத்தை நிமித்தீகரித்துவரு மலபரிபாகத்தினாலும், மலபரிபாகமாத்திரத்தை நோக்கிவருஞ் சிவசத்திநிபாதத்தாலும், சிவதீக்ஷானுக்கிரகத்திற்குரிய, ஞானத்தியான சமாதி சிவனமுத்தி சாட்சாத்காரக்குறித் தீட்சாங்கத்தாலும், மோக்ஷத்தாலும், சாதிக்கிரமமாச்சிரமக் கிரமஞ் சமயக்கிரமங் காலதேசக்கிரமங் கருதி வருதலில்லாமையாற் சமயக்கிரமத்தினின்று சைவத்திறத் தடைவரெனப்பது தந்திரமன்று

சகல சமயிகளுக்கு மிலிங்கோத்தாரஞ் சைவத்திற் சொல்லுதலால், சைவத்துவந்தல்லது பரமுத்தி சித்தியில்லை, பதமுத்தியென்று தாற்பரியம்

மறைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனி, மனனுமருள் 'உணர்த்தி' என்னு மிரண்டாங் கூற்றினை இருபத்தைந்து செய்யுளான் விரித்துணர்த்துகின்றார்.

மேற்கூறிய அரும்பருவமடைதல், இங்ஙனஞ் சோபானமுறையாற் பலபிறவிகளினு மேற்பட்டு நிகழ்ந்து முற்றுப்பெறுவ

தன்றி, ஒருவகை யொருகாலத்து முற்றுப்பெறுவ தன்றென்ப தாம்.

சைவத்திறமென்றது சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை.

சென்றென்பது சேறலருளை விளக்கி நின்றது.

இதனானே மேற்கூறிய பருவமடையுமுறைமை கூறுமுகத்தான் மனனுமருளென்றதனை வகையும் அவற்றிற்கு வாயிலிவையென்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி முன் சொல்லப்பட்ட சிவஞானம் ஆன்மாக்களுக்கு உண்டாம்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

புறச்சமய நெறிநின்றும் - உலகாயதன் முதல் பாஞ்சராத்திரியீறாகச் சொல்லப்பட்ட புறச்சமயங்களிலே சென்று சென்று அந்தந்தச் சாஸ்திரஞ் சொன்ன முறைமையிலே யனுட்டித்தும்,—அகச்சமயம்புக்கும் - உட்சமயமாகிய பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வயிரவம் என்று சொல்லப்பட்ட அந்தச் சமயங்களிலே புகுந்து அந்தந்தச் சாத்திரங்கள் சொன்ன முறைமையிலே யனுட்டித்தும்,—புகல்மிருதி வழியுழன்றும் - சொல்லப்பட்ட மிருதிவழிகளிலே திரிந்தும்,—புகலுமாச்சிரம அறத்துறைக ளவையடைந்தும் - கொண்டாடப்பட்ட ஆச்சிரமமான தன்ம நெறிகளைச் செய்தும்,—அருந்தவங்கள் புரிந்தும் - பஞ்சாக்கினியை முதலான அரிய தபசுகளை விரும்பிச் செய்தும்,—அருங்கலைகள் பலதெரிந்தும் - அரிய சாத்திரங்கள் பலவுமோதியுணர்ந்தும்,—ஆரணங்களபடித்தும் - வேதங்களையோதியும்,—

சிறப்புடைய புராணங்களுமாகிறும் - நன்மைப் பகுதிகளைச் சொல்லுகிற புராணங்களை யோதியறிந்தும்,—வேதசிரப்பொருளை மிகத்தெரிந்தும் - வேதாந்தத்தினர்த்தங்களைமிகவும் ஆராய்ந்து இதுவே யதார்த்தமென்று அறுதியிட்டறிந்தும்,—சென்று சைவத்திறத்தடைவர் - இவையிற்றை வழுவறச்செய்து முடித்து யாதொரு ஜனனம், அந்த ஜனனம்போய மற்ற ஜனனத்திலே சைவநெறியைச் சென்று பொருந்துவார்கள்—இத்தற் சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் - இந்தச் சமயத்திலே நின்று சரியை கிரியாயோகங்களைச் செய்து அவையிற்றின் முதிர்ச்சியினாலே ஞானத்தைப்பெற்று,—ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர் - அந்த ஞானத்தினாலே சிவனுடைய ஸ்ரீபாதத்தைப் பொருந்துவார்கள்.

எனவே கிரியையாலே மோக்ஷமென்ற சைவரை மறுத்து ஞானத்தினாலே மோக்ஷமென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், "பல்பணி ஞான காரணமெனிற் றொல்பணி தொறும்பயன் றோன்றுபத னுமொருபணிசெய்யாச் சிறுபுறச் சிறுவரு-மரசராய தருணத்தலைவரு-முதிரா பரசமயத் திதமுறுமரசரு - ஞானம்பெற்ற நன்னெறியினும்-மீனமில்பணியருட் கேதுவன்றன்றால- ஞானோற்பத்தி நிமித்தமித்தொழிலென- வேறோறக்கிறைநூ லியம்பிற்றெனினும்" என்றும், சிவஞானபோதம், அ-சூ, க-வெ, "தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து, பவஞ்செய்து பற்றறுப்பாராகத—தவஞ்செய்த, நற்சாரியில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக், கற்றூர்க்குழ சொல்லுமாறு கண்டு" என்னும் அதுவு கண்டுகொள்க.

இன்னும் சொல்லியது, உலோகாயதன், புத்தரில் சவுத்திராந்திகன் யோகாசாரன் மாத்தியமிகன் வைபாடிகன், அமணரி

ல்லிகண்டவாதி ஆசீவகனை, மீமாஞ்சரில் பட்டாசாரியன் பிரபா
கரன் நையாயிகன் மாயாவாதி பாற்கரியன் நிரீச்சுரசாங்கி
யன் பாஞ்சராத்திரி ஆகப் புறச்சமயத்திற்பேதம் பதினாறும்;
அந்தந்த முறைமைகளிலே நின்றும், பாசுபதம் மகாவிரதம் கா
ளாமுகம் வாமம் வயிரவம் என்கிற உட்சமயத்திற் பேதம் ஐந்
திலும் புக்கு அந்தந்த முறைமைகளிலே நின்றும் 'புகல் மிருதி'
என்ற பதமுதல் 'வேதசிரப்பொருளை மிகத்தெளிந்தும்' என்
ற பதமீறாக உழன்றும் அடைந்தும் புரிந்தும் தெரிந்தும் படிந்
தும் உணர்ந்து மிகத்தெளிந்தும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட
முறைமைகளை வழுவறச்செய்து முடிந்தால் சைவநெறியைப்
பொருந்துவாரென்றும், இதிலேநின்று சரியைகிரியை யோ
கங்களை யனுட்டித்தால் அந்த முதிர்ச்சியினாலே ஞானமுண்டா
யந்த ஞானத்தினாலே சிவனுடைய ஸ்ரீபாதத்தை யிரண்டறச்
சென்று பொருந்துவார்கள் என்னு முறைமையு மறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

புறச்சமய நெறிநின்றும் - புறச்சமய நூல்வழியே யொழுகியும்,—அகச்சமயம் புக்கும் - அகச்சமய நூல்வழியே சென்றொழுகியும்,—புகன் மிருதி வழியுழன்றும் - சொல்லப்பட்ட மிருதி நூல்வழியே சென்றொழுகியும்,—புகலுமாச்சிரம அறத்துறைக ளவையடைந்தும் - வேதங்களிற் கூறியவாறு ஆச்சிரம தருமங்களிற் குறைவின்றி யொழுகியும்,— அருந்தவங்கள் புரிந்தும் - செயற்கரிய தவங்களைச்செய்தும்,—அருங்கலைகள் பலதெரிந்தும் - அரிய கலைஞானங்களைப் பலபயின்றும்,—ஆரணங்கள் படித்தும் - வேதங்களை யோதியும்,—சிறப்புடைய புராணங்களுணா

ந்தும - சிறப்புப் பொருந்திய புராணங்களை யறிந்தும்,—வேதச் சிறப்பொருளை மிகத் தெளிந்தும் - உபநிடதப்பொருளை மிகவு மாராய்ந்து தெளிவுற்றும்,—சென்ற சைவத்திறத்தடைவா- இங்ஙனஞ் சோபான முறையாற் பலபிறவிகளினு மேற்பட்டு நிகழ்ந்து சென்ற சைவக்கூற்றின முடிவாகிய சித்தாந்த சைவத்தைத் தலைப்பட்டுவா,—இதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்திய பின்-இச்சித்தாந்த சைவத்திலுஞ் சரியைகிரியா யோகங்களை யனுட்டித்தமுனிவயின் — ஞானத்தாற் சிவனடியைச் சேரவா-ஞானத்தைப்பெற்று அதனாற் சிவனருளைச் சேருஞ்சலின மேற்கூறிய பருவமடைதல் ஒருங்கே யொருகாலத்து முற்றுய பெறுவதன்று.

இதனானே மேற்கூறிய பருவமடையு முறைமை கூறுமுகத்தான் மனனுமருளென்றதன்* வகையும் அவற்றிற்கு வாயிலிவை யென்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை

ஒருதலை துணிதலெல்லனுக தந்திரவுத்தியா லுலோகாயதன்
முதலியோர் முத்திச் சிறப்பினையுஞ் சித்தாந்த
முத்தியே பரமுத்தியென்று முணாத்துகின்றூா.

இம்மையே யீரெட்டாண் டெய்தியெழிலாரு மேந்திழையார முத்தியென்று மிருஞ்சுவர்க்கமுத்தி, யம்மையே யென்றமுத்தி யைந்துகந்த மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தியென்று, மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தியென்றும் விவேகமுத்தி யென்றுநதன் மெய்வடிவாஞ் சிவத்தைச், செம்மையே

பெறுகைமுத்தி யென்றுஞ்செப்புவர்கள் சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கியாமே. (கஉ)

(இ-ள்) இமையவரொட டாணடெய்தி யெழிலாரு மோகந் திளைப்பார் முத்தியென்றும — இந்தவுலகத்தின் மடந்தைப் பருவமுடைய மாதருடன்கூடி யவருடனுடனே யொருநாளும் பிரிவுறவிட்டது வாடுகல் வணங்குந் தேவிகைகளோ யரிய தபசுபண்ணுந வர்களிடத்தி லுண்டாகிய சுகத்தை யடைகிறதே முத்தியென்றும்

இருஞ்சுவர்க்க முத்தி யம்மையே முத்தியென்றும — வேதத்திற் கிரியாபாகத்தைப்பற்றி யனுட்டிக்கு மீமாஞ்சகர் சோதிட்டோம முதலிய வனுட்டானத்தாலே யொரு கன்ம முண்டாயதுதானே பலத்தைக் கொடுக்கும், சுருதி வாக்கியாத்மகமாகிய சத்தமே தேவதையொழிந்து வேறொரு தேவதை கன்மபலத்தைக் கொடுக்க வேண்டுவதில்லை சுவர்க்கத்தை யடைகிறதே முத்தியென்றும

கந்தமைந்து மறக்கெடுகை யென்றும் — புத்திதத்துவ முதல் ஏழுள தத்துவங்களுங் க்ஷணிகமாயிருக்கும், ஆன்மாவு மீசுரனு மென்ப தொன்றில்லை, முத்தி பூதத்தினுடையதா யிருக்கிற கூட்டமேயென்று, ரூபஸ்கந்தமும், சுகதுக்க ரூபமாயிருக்கிற புத்தியினுடைய சந்ததியென்னும வேதனாஸ்கந்தமும், யாதொன்றுக்கு யாதொரு சந்தகக் கூட்டங்களுடைய சந்ததி சஞ்ஞாஸ்கந்தமும், ஞானமிடைவிடாம லிருக்கிறதே ஞானஸ்கந்தம், இந்த ஞானத்தை விசேடித்தறிகிற சந்ததியே விஞ்ஞானஸ்கந்தம், ஆக விந்தப் பஞ்சஸ்கந்தங்களும நாசமாகக் கெடுகிறதென றறிகிறது பிந்த ஞாலயுபதேசித்த சுகத பகவானையே வழிபடுகை முத்தியென்றும

அட்டகுணமு அருகசாதகிரீஞ் சொல்லிய அநந்தஞா
தியென்றும னம அநந்ததரிசனம அநந்த வீரியம அநந்த
சுகம நிராமம நிட்கோத்திரம நிராயுஷ
யம சகலசமயிபகபாவம எனக்கூறிய குணங்களோட்டு.

இது தொகை

அதனை வகுத்தறியில் அநந்தஞானம் ஐந்துவகைப்படும் அஃதாவது? மதி சுருதம் அவதி மனபரியாயம கேவலம எனவரும இதனை ஞானுவர்ணிய மெனபாகள்

இனித் தரிசனுவர்ணியம ஒனபது பேதப்படும அவையாவன? சட்சுதரிசனம அசட்சுதரிசனம் அவதிதரிசனம கேவலதரிசனம நித்திரை நித்திராநித்திரை பிரசலை பிரசலாபிரசலை தியானககிரந்தியென வரும.

இனி வேதநீயம இரண்டு சாதவேதநீயம் அசாத வேதநீயம் எனவரும்.

ஆயுஷியம் நாலு, தேவாயுஷியம் திரியககாயுஷயம மனுஷயாயுஷயம நரகாயுஷ்யம எனவரும.

இனி மோகனுவர்ணிய மிருபத்தெட்டு மித்தியாத்தவம மிகவு மிததியாதத்துவம் சமமியகம பிரகிருதி அநந்தானுசந்தி குரோதம மானம மாயாலோபம் அப்பிரதி யாசகியானதி குரோதம சசுவலனம் அதிக்குரோதம் அதிமானம அதிமாயம் அதிலோபம் சிரிப்பு அரதிருதி சோகம பயம் நிந்தை மாதாவேதம புருடவேதம் அலிவேதம சததாவலோகனம் மாதிருதரிசனம் சாகாகிரகணதரிசனம் ஞானம் எனவறிக.

நாமக் தொண்ணூற்று மூன்றுபேதப்படும். வமயம சங்தம இரசம் பரிசம உத்தியோகம் உச்சுவாசம் வாதாமபரியாததி அபரியாத்தி ஆககுமலியாததி பிரசித்தம் அப்பிரசித்தம சேவக தம்பக அதேய அநாதேய சாகாய சகிர்தகி அபகீ

த்தி அருகு இவது உபகாதா பரகாதா ஆறுபூாவி இதமூடலா கப பிணடாபிணட பிரகிருதி பேதத்திஞலே யவைகளை யறிக.

இனி கோத்திரமிரண் உயர்நத கோத்திரம தாழ்நத கோத்திரம எனவரும

இனி அநதராயம அஞசுபேதம, தாநாநதராயம இலாபாநதராயம் போகாநதராயம உபபோகாந்தராயம விரியாவரியநதராயம எனவரும்

இநத வட்டவித கன்மத்தை விசாரித்தறியில் நூற்று நாற்பத்தெட்டென வறிக.

இதனைமேல விரிக்கிற் பெருகுமென வறிக.

மெய்ம்மையே பாடாணம போல்கை முத்தியெனறும	உண்மையாகவே கருவிகரணாதிசொல்லா ங் கழிந்து பாடாணமபோலே கிடக்கிறதெ னனும் பாடாணவாதி முத்தியும
விவேசமுத்தியெனறும	மாயாவாதி சமுத்திரத்தி னிடத்திலே திரைதோனறி யதிற்றனே யொடுஙகுமாறு போலப் பிரமத்தி னிடத்திலே சகத்துத்தோனறி யதிலேதானே யொடுஙகு மாயையிற் காட்டில விலட்சணமான பிரமசுரூபத்தை வேதாந்த ஞானத்திஞலே விவேசித் தறிகிறதே முத்தியெனபதும்
தன மெய்வடிவாஞசிவத்தைச் செமமையே பெறுகை முத்தி	சிவசமவாதி யான்மாவுக்குச் சுபாவமான சைதன்னியத்தின் முறைமையினையும சிவனது சேர்பர்தத்தினையும் தானனேதலையு மறி மயக்கத்தாற் றன்னையே சிவனென மதிக்கு முத்தியும்
என்றுஞசெபபுவாகள	உமமையாற் சங்கிராந்தமாகிய பாசுபத முத்தியும் சமாவேசமாகிய காபாலமுத்தி

காலாந்தரத்திற் றிரும்பு மதுவு மாகாது சித்தாகிய சிவனிடத்திலே மலரகிதரூப வானமாத தோன்று மெனில்? யாதொன் றநேகமுமா யுற்பத்தியையு முடைத்தது நாசமடையு மிந்த மாவிரத முத்தியன்று.

இப்படிச் சமயங்கடோறு முத்தியைப் பலவாகக் கூறும் தனை மெய்யென்று கருதிப் பலங்கொள்ளக் கருதலெத்தனைபோ க்கொக்குமெனனில்? அக்கினியை விரும்பினவன் மின்மினியை விட்டதனைப் பெறுவோமென் றுசைப்பது மத்தாக்கொக்கும் அவைகளெல்லாஞ் சிருட்டிகாலத்தில் அழிந்துபோகிற முத்திகள அழியாமுத்தி யாதெனின?

சிவனடியைச் தீக்கையின் மும்மலங்களையுஞ் சோதித்துச்
சேருமுத்திசெப் சிருட்டிகாலத்தில் மீளே திரும்பாமல் சிவ
புவதிவகியாமே னைப்போல சர்வஞ்ஞத்துவாதி ஷட்குணங்க
ளபிவியக்தமாகிறதே யாஞ்சொல்லும் பரமு
த்தி எ-று. (கஉ)

செம்மையே பெறுகையென்னும் ஏகாரந் தேற்றம்.

யாமே - கற்றளை

யாம் - எழுவாய் செப்புவம்-பயனிலை

இதற்குச் சித்தியம் மிருகேந்திரம் நிசுவாசம "நாணமகச் சேதோ" என்னுஞ் சுலோகத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பரமதமுத்தியைத் தூஷித்து ஸ்வமதமுத்திக் கூறுகின்றது.

இம்மையே யிரெட்டாண் டெய்தி யெழிலாரு மேக்கிறைய யார் முத்தியென்றும்- இகமேயுள்ளது, பரமென்பதில்லை, சுவா

க்கம் நரகமென்பதே சென்னில்* மஜ்ஜன போஜன கந்த புஷ்பாதி சௌக்கியமே சுவர்க்கம், இவைகளின்றி தரித்திரத்தினாலும் வியாதியினாலும் பீடிக்கப்படுகிறதே நரகம், அழகையுடைத்தாகிய வவயவங்களை யுடைத்தாய பதினாறு வயதாய † மதனகலா வல்லபைகளாயிருக்கிற ஸ்திரீகளுடனே கூடி யநுபவிக்கிற வேளையில ‡ நீவி விடுகிறதே மோக்ஷமென்னும் லோகாயதனும்,—

* மஜ்ஜனம் - ஸ்நாநம், † மதனகலாவல்லபை - மன்மதநூலில் கெட்டிக்காரி. ‡ நீவி - துணிமுடிச்சு.

இருஞாவறகமுத்தி யம்மையேயென்றும்- வேதோக்தகன்மாநுட்டானங்களினாலே யிந்தப் பூதபரிணாம தேகத்தை விட்டு திவ்விய தேகியாய் மறுமையிலே பெரியபோகத்தை யுடைத்தாகிய சுவர்க்கத்தை யடைவதே மோக்ஷமென்னும் பூர்வமீமாம்சகனும்,—

ஐந்தகந்த மாகக்கெடுகை முத்தியென்றும்- ரூபம வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமாகிற பஞ்சஸ்கந்தமும் § சந்தானமின்றியில் நிச்சேஷமாகக் கெடுகிறதே மோக்ஷமென்னும் பௌத்தனும்,—

§ சந்தாநம் - பரம்பரை.

அட்டகுண முத்தியென்றும் - அனந்தஞானம் அனந்ததரிசனம் அனந்தவீரியம் அனந்தசுகம் நிர்நாமம் நிர்க்கோத்திரம் நிராயுஷ்யம் சகலசமயிதா பாவமென்னு மெண்குணப் பிராப்தி மோக்ஷமென்னுஞ் ஜயினனும்,—

மெய்ம்மையேயாடாணம போல்கை முத்தியென்றும் - ஆத்மா சடமாய் ஞானாசிரயமாயிருக்கும். அதெப்படி யெனில்? விளக்குத்தகளியும் விளக்கும்போல அந்த ஞானத்தினாலே சுகதுக்கானுபவ முண்டாயிருக்கும் ¶ ஷோடச பதார்த்தவ

¶ ஷோடசம் - பதினாறு

ஞானத்தினாலே சுகதுக்கங்களும் நசித்தவராயிருக்கிற ஞானமும் நீங்கப் பாஷாணம்போல வேரறிவுமற்றிருப்பதே மோக்ஷமென்னும் நியாய வைசேஷிகனும்,—

விவேக முத்தியென்றும் - பிரகிருதிபுருஷ விவேகத்தைப் பண்ணிப் பிரகிருதி விகாரங்களுக்குத் தானன்னியமாகக் கர்த்திருத்துவ போகத் திருத்துவங்களற்றிற்பதே மோக்ஷமென்னும் நிரீசுவர சாங்கியனும், மேல் மாயாபுருஷ விவேகத்தைப் பண்ணி மாயையை நீங்குவதே மோக்ஷமென்னும் மாயாவாதியும்,—

தன்மெய்வடிவாஞ் சிவத்தைச் செம்மையே பெறுமது முத்தியென்றுஞ் செப்புவர்கள் - பாஞ்சராத்திரிகள் மகாவிஷ்ணுவினுடைய கிருபையினாலே பிராகிருத தேகத்தை நீங்கித் தங்களுக்குச் சத்திய ஸ்வரூபமான சுத்த சித்தரூபியாய் விஷ்ணு× துல்யனாய் ஸ்ரீ பூமி நீலாசத்தித்திரய வியதிரிக்தமான சகல போகங்களும் மகாவிஷ்ணுவைப் போலே நித்தியமாயுடைத்தாயிருக்கை மோக்ஷமென்றும், பூர்வ சைவர் சிவானுக்கிரகத்தினாலே யாணவ மாயை காமியங்கணீங்க சத்தியமும் சுத்தமுமாயத் தங்கள் ஸ்வரூபமாகிய ஞானக்கிரியை பிரகாசிக்க வதனால் சர்வஞ்ஞத்துவாதி ஷாட்குண்ணியாபி வியத்தியாய்ச் சிவசமமாயிருப்பதே மோக்ஷமென்றுஞ் சொல்லுவார்கள், ஆதலால் இதெல்லாம் பதமுத்தியே.—

× துல்யம் - சமானம்.

சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கியாமே - ஆன்மாவுஞ் சிவனு மநாதியே பிறிவற்றது; அந்தப் பிறிவில்லாமையைத் தோன்றாதபடி யனாதியே யாணவசத்தி தடுத்திருக்கையால் வந்த வுபாதிகளினாலே யசத்தியமாகிய போகங்களைச் சத்தியமென்று மயங்கினது சிவானுக்கிரகத்தினாலே யுபாதித் திரயங்களும் நீங்கக் கண்ணினது காசகாமலாதி தோஷநீங்கக் காக்ஷி

யைப் பெற்றதுபோல, சிவனுடைய பிரிவில்லாமையைச் சிவஞா னத்தா லனன்னியமாகக் கண்டு சிவானந்த பரவசத்தினாலே சிவ மேயாய நிற்பது மோக்ஷமென்று சொல்லிய பரம முத்தியை யடைவது உத்தர சைவராகிய வெம்மனோரேயென் றின்ன பொருள்

பதமென்ற சொல்லுக்குப் பொருள் நிச்சயம், ரக்ஷை, இருக்குமிடம், அடையாளம், அடி, ஒருவஸ்து, இத்தனையுமாகையால், இவ்விடத்துச் சிவனடியைச் சேரவென்றது சிவமாகியவஸ் துவைப் பொருந்தவென்றது.

பொருந்த வென்றதினா லிரண்டிருந்து கூடிய தல்ல, தன னுடைய பிள்ளையானவன் வியாதியினாலே மிகவும் பீடிக்கப்பட் டுக் குணமானபொழுதிந்தப் பிள்ளையையிப்பொழுது பெற்றே னென்றதுபோல வுபாதியினாலே சிவானுபவம் விளங்காமலிரு ந்து விளங்கினபிறகு கூடியதென்று சொல்லவேண்டியது

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆதலால், லோகாயதன முதலோர் முத்தி, முத்திப்போலி யென்பதுந் தெரிவித்து, சித்தாந்த முத்தித்திறனுஞ் செப்புகின் றார்.

இம்மையே யீரேட்டாண் டெய்தி யெழி லாருமேக்கிழை யார முத்தி யென்றும் - முழுதுதல் புசித்தல் பூசுத[illegible]முடித்த ல முதற் சுகமே சுவர்க்கம், அந்தச் சுகமில்லாமையே நரகம், மகளி ரை மணந்த விம்மையே முத்தியென்று லோகாயதன சொல் லுவன,—

இருஞ் சுவாக்க மம்மையே முத்தி யென்றும் - பூர்வமீமா ம்சன சொல்லுவன,—

ருவம வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மெனவி
னா,

கந்தைந்து மாக கெடுகை முத்தி யென்றும - புத்தரிற
பிரதீப நிருவாணவாதி டேசுவன —

அனந்தஞான மனந்ததரிசன மனந்தவீரிய மனந்தசுகமநி
ர்நாமம நிர்கோத்திரம் நிராயுஷ்யம் சகலசமயகபாவ மெ
ன்று,

அட்டகுணமுத்தி - என்று மருக விசைப்பன —

ஞான முதலிய செயற்கைக் குணங்களகெட் டியற்கை ய
ஞ்ஞானமே குணமாய்,

மெய்மமைமயே பாடாணம் போல்கைமுத்தி என்றுந தாா
ககிகள சாற்றுவன,—

பிரகிருதி புருஷ,

விவேக முத்தி என்றும் - சாங்கிய ருரைப்பன —

தன மெய வடி வாஞ் சிவத்தை - தன திந்த வடிவு போற
சாகார சிவமுத்தி சாரூப சிவாகாரத்தை,—

செம்மையே பெறுகைமுத்தி - பரமுத்தியாகப பரியபது
முத்தி,

எனறும் - சிவசமவாதி,—

செபபுவன - இப்படி வாதிகள் செப்புவார்கள.

சிவனடியைச் சேருமுத்தி - சிவசத்திக் கொத்த விரிசகு
ஞ சாடகுண்ணிய சிற்சத்தி காம சிவத்துவாபி வியத்தியா மு
த்தி,—

யாம இதற்குச் செப்புவதே.

சில ஆதுரிக சைவாசாரியர் யாஞ் சொல்லு மிந்த முத்த
யைச் சாரூப முத்தி சாற்றுஞ் சிவசமவாதி முத்தியாய்த் திரு
டபி கமது சிவசித்தாந்த சித்த சிவசாதிர்ச்சிச சிவசாத்தியைக
கிய சிவசுத்தாத்துவைத முத்தித் துவேஷிகளாய் வேதாந்த வி

சேஷசித்த விசிஷ்டாத்துவைத கோடி கொளுவிச் சிவ விசித்தியத்துவைத விசிஷ்டாத்துவைதப் போலிமுத்தி விளம்பி விட்டுப் பிரலம்பராய் விட்டார்கள்

வாதிகளெட்டையும் பதமுத்திக் கிரமம் பகுப்பு வகுப்பாம் —

பூதானம் ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதனாகும், பூதவிசேஷப் பிராணனம் ஞானோபாய முபதேசிக்கும் சௌகணுக்கும், விஞ்ஞானகந்த விசிஷ்ட ஞானோபாய முபதேசிக்கும் பிரதீப நிருவாண வாதிக்கும்; கனமேச்வர ஞானோபாய முபதேசிக்குக் மீமாம்சனுக்கும், சோத்திரானம் ஞானோபாய முபதேசிக்குஞ் சோதிசாத்திர வித்துக்களுக்கும், சூரியாக்கினி சமாதம ஞானோபாய முபதேசிக்குஞ் சூரியாக்கினி சாம்யவாதிகட்கும், அவரவர்க்குக்கமான பஞ்ச பூதபுவனப் பிராபதிதானே மோட்சம்

பூதாண்டகாரணப் பிரம ஞானோபாய முபதேசிக்கும் ஸ்மார்த்தர்க்குத் தன்மாத்திர புவனப் பிராபதி தானே மோட்சம்

இந்திரியானம் ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதனுக்கொருவனுக்கு இந்திரியபுவனப் பிராத்திதானே மோட்சம்

மனந்தம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதர்க்கொருவனுக்கு மனோ புவனப்பிராப்திதானே மோட்சம்.

அகங்காரானம ஞானோபாய முபதேசிக்கும் வைசேஷிகனுக்கு அகங்கார புவனப் பிராத்திதானே மோக்ஷம்.

புத்தியானம ஞானோபாய முபதேசிக்கும் நையாயிகனுக்கும், புத்திவிர்த்தி யானம ஞானோபாய முபதேசிக்கும் புத்தனுக்கும் புத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சலஞ்சல சத்சத்குணானம ஞானோபாய முபதேசிக்கு மருகனுக்குக் குணபுவனப் பிராபதிதானே மோக்ஷம்.

பிரமகாரியானமா ஞானோபாய முபதேசிகரும் பரிணத வேதாந்திகரும் நாராயணப் பிரகிருதி காரியானம ஞானோபாய முபதேசிகரும் பாஞ்சராத்திரிகரும் பிரகிருதி புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சதசத்ப்பிரம கிரீடாப்பிரம சித்திரப் பிரமவாதிப் பிரமுகர்களும் பிரகிருதிபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

யோகோபாய முபதேசிகரும் பாதஞ்சலர்களும் பிரகிருதி புருஷ விவேக ஞானோபாய முபதேசிகருஞ் சாங்கியர்களுஞ் சந்நியாசோபாய முபதேசிகரும் விவர்த்த வேதாந்திகருமானம வாதிகளாதலால் புருஷபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சிவ தீக்ஷாங்கியங்க சிவஞானோப கிருத சாகார சிவாத்மபாவனோபாய முபதேசிகருஞ் சிவவாதிகளாகும் சைவரிற் சைவ பவுராணிகாக கிராக புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சாகார நிராகார சிவபாவனு பரசோம சித்தாந்திகட்குக் கலார்க்க கர்ப்ப வித்தியா புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சிவாவேச வாதிபாகுங் காபாலர்களுக்குக் கலாபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

காலேசுர வாதிகட்குக் காலதத்துவப் பிராப்திதானே மோக்ஷம்.

சங்கிராந்த வாதியாகிய சிவபாசுபதர் வைதிகபாசுபதர்க்குஞ் சமுத்பந்திவாதி மாவிரத விசேஷர்களுக்கும் மாயா புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

கலாதத்துவாந்த சோதினியாகிய தீட்சாவாஞைகளுக்கு விஞ்ஞான கைவல்லியந்தானே மோக்ஷம்.

சர்வஞ்ஞத்துவ மாத்திரவாதி மகாவிரதர்க்குச் சுத்த வித்தியா புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

பிரயோசகிய காதகிருதத்துவ வாதிகட்கும் பிரவாகேசுவர வாதிகட்கும் அநேகேசுவர வாதிகட்கும் ஈசுவர புவனப் பிராப்திதானே மோக்ஷம்

சதாசிவ சாமீப வாதிபாகிய சிவசமவாதிகளுக்குச் சதாசிவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்

சுத்தசாதகர்க்குச் சத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்

வாம தக்ஷிண காருட பூதநாகதிரிகர்க்குச் சத்திலோக புவனப் பிராப்திதானே மோக்ஷம்

சிவ தீக்ஷா சாகல்லிய சுத்தராயிருந்தும் சிவவிபத்திசையைக் கிழக்கு செய்யுமிப்போதுள்ள சைவர்க்கு

“ச தூஷு கலந்துஜாதீயாத
புருஷமலோகபாவகம்”

என்னும் வசனத்தின்படிச் சத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்

தீக்ஷா வைகல்லிய வாணகோகிய முறைசொல்லிய புருஷ புவனப் பிராப்திதானே அல்லது சிவலோகப் பிராப்திதானே மோக்ஷமென்று சித்திக்கப்படும்

சிவனுக்கு வைநதய சீரம வாஸக மெனனும் சாமானிய சைவர்க்குச் சிவதத்துவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்

உலோகாயதாதி வேதாந்தியந்த ஆன்மவாதிகளுக்கு மானம விவேகப் பிரவிருத்திமான்களாகையால் சிவவாதிகள் பண்ணும் சிவவிவேகத்திற்கு மானம விவேக மடைப்படையாதலான அவ்வான்ம விவேகிகட்கு மலபரிபாக மேற்கும் சிவசமான பரமுத்தி பார்க்கும்பாத்திரமாங் கால மெண்ணிக்கைக்கு இசையுமாதலால் அவரவர் முத்தி சாதனங்கள் சபலங்களேதானே, நிஷ்பலங்களன்று.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

புறச் சமயநூலார் கூறு முத்திகளாவன? சோபானமுறையான் இம்முத்தி ஞானமீருக்கக் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட் பலவேறுவாய அரிவையரின்புறு முத்தி முதலாயினவாம். வேதாகமநூலுண்மையுணர்ந்தோர் யாங் கூறுமுத்தியோ டது, முப்பத்தாறு தத்துவங்களுக்கு மப்பாற்பட்ட சிவனுக்கு மைச் சேருமுத்தியாமென்பதாம். ௧௫

ஏந்திழைப் பெண்ணு மிரண்டாவது விகாரத்தாற் றொக்கது.

ஆமுத்தி வினைத்தொகை.

உம்மை யெச்சத் தழீஇயிற்று; கிளந்து கூறாத சமய முத்திகளையும் இவற்றுடன் வைத்துக் கூறிக்கொள்க.

இதனானே புறச்சமயநெறிநின்றான் முதலியவரெல்லாருஞ் சைவத்திறத்தடைதற்குச் சோபானமுறையான் வாயிலாமாறு அவற்றது பயன் கூறுமுகத்தானே இனிது விளக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மேல் முத்தித்தொகை யருளிச் செய்கிறார்.

இம்மையேயீரெட்டாண் டெய்தியெழிலாரு மேந்திழையாரா முத்தியென்றும் - இம்மையிலே பதினாறு வயதைப் பொருந்தி அழகினையும்பொருந்தி ஆபரணங்களையுந் தரித்திருப்பதாயுள்ள ஸதிரீகளுடனே கூடி அவர்களிடத் துண்டான சுகத்தை யனுபவிக்கிறதே முத்தியென்னும் உலோகாயதனை முறைமையும்,—இருஞ்சுவாக்கமுத்தி யம்மையென்று - எக்கியாதி கன்மங்

களைச்செய்து மறுமையிலே சுவர்க்கத்தைப் பெறுகிறதே முத்தியென்னும் பட்டாசாரியன் முறைமையும்,—முத்தி யைந்துக்தமறக் கெடுகையென்றும் - உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்கிற பஞ்சகந்தங்களும் நேராகக் கெடுகிறதே முத்தியென்னும் பௌத்தரில் சவுத்திராந்திகன் முறைமையும்,—அட்டகுண முத்தியென்றும் - எட்டு பதினெழு ஆறு என்று மூன்று வகையாயுள்ள குணங்களை விடுகிறதே முத்தியென்னும் சமணரில் நிகண்டாவாதி முறைமையும்,—மெய்ம்மையே பாட்டாணம் போலகை முத்தியென்றும் - உண்மையாகவே ஆன்மா ஒன்றுமறியாமற் கற்களைப்போலே கிடப்பதே முத்தியென்னும் அகச்சமயத்திற் பாடாணவாதி முறைமையும்,—விவேக முத்தியென்றும் - இந்த ஜீவான்மாவுக்கு விவேகஞான முண்டாகிறதே முத்தியென்னும் மாயாவாதி முறைமையும்,—தன்மெய் வடிவாகுசிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றும் - ஆன்மா தனக்குள் விகச்சரீரமான ஸ்வரூபத்தைப் பெற்று நித்தியமாயிருக்கிறதே முத்தியென்னும் அகச்சமயத்தில் சமவாதி முறைமையும்,—செப்புவர்கள் - இப்படிப் பலவாகச் சொல்லுவார்கள் அப்படிச் சொல்லுகிற விவை குற்றத்தைப்பொருந்தின முத்திகளாம்,—சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிலகியாமே - ஆகையால் பரமேசுவரனுடைய சீபாதத்தைப் பெறுகிற முத்தியே இவ்விடத்தில் முத்தியென்று சொல்லப்படுவதும், யாவு கொள்ளப்படுவது மதுவே.

இம்மையே யீரொட்டரண் டெய்து வெழிலாரு மேதிழையார் முத்தியென்றது உலோகாயதன் பிரத்தியட்ச மொழிந்து அனுமான முதலானவை கொள்ளாத படியாலே இம்மைப்பயனாகிய மகளிரிடத்துச் சிற்றின்பமே முத்தியென்று கொண்டானென்றுகொள்க.

இதற்குப் பிரமாணம் பரபக்கம், அவன்மதம்-உ0-செ "ஊறு வதுண்ணாவதற்ற கலவிமங் கயனையுள்கி, வாடியதழியில் வீழ்ந்து வருந்துவ தருந்தவம்பின், கூடுவதனோவு கெட்டுக் குணமெலா மவேட்கைபாகி, நீடுவதின்பமுத்தியீதுதின்னருக்கள் முத்தர்," என்றும், அவன் மறுமைப்பயன் கொள்ளானென்பதற்குப் பிரமாணம் பரபக்கம், அவன்மதம்-உக-செ "வீட்டினையுள்ளதென் றேடி மெலிவதிங் கன்னைகீடு, காட்டுவோர் கண்டோர்கேட்டோர் கரியவையுண்டேற் காட்டா, நாட்டினிலரசனுன்னைக் கிசையவேநடந்து நாளு, மீட்டியபொருள்கொண் டிங்கே யின்புற்றுவியைநிட்டோ" என்னுமதுங் கண்டுகொள்க

இருஞ்சுவர்க்கமுத்தி யம்மையேயென்றது பட்டாசாரியன் இம்மையிலே நித்திய கன்மங்களைச் செய்ய நன்மைப் பகுதிகளுண்டாமென்றும் சோமயாக முதலாயுள்ள யாகங்களைச் செய்ய மறுமையிலே மகத்தாகிய சுவர்க்கத்தைப் பெறுகிறதே முத்தியென்றும் கொண்டான் எனக்கொள்க

இதற்குப் பிரமாணம் பரபக்கம், அவன்மதம்-கக-செ "நித்தியாலநித்தகன்மம் நிகழ்த்திட சுபத்தைநீங்கார், நிதிலாவிச்சா கன்மஞ் செந்தழலோமஞ்செய்ய, வேதந்தான்வேண்டித் தெல்லா மெய்தலாஞ்சோமயாக, மாதிதா னுகைக்கிசி யமைத்திட்டிடதாமே" என்ற திருவிருத்தத்திற் கண்டுகொள்க

அவன் செயல்களே முத்தியைக் கொடுக்கும் தொழிந்து ஒரு கர்த்தா வுண்டென்றுகொள்ளான் என்பதற்குப் பிரமாணம் பரபக்கம், அவன்மதம் கஉ செ "கருதியகன்மஞான மிரண்டு காலாக்கொண்டு" என்ற திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

முத்தியைப்பந்துகந்த மறக்கெடுகை யென்றது சவுத்திராந்திகன்பிருதிவி யப்புதேயு வாயு என்ற பூதரூபம் நாலும், அறிவுக

த்மிரதம் வன்னம் என்கிற உபாதான ரூபம் நாலும், ஆக ரூபகந்தம் எட்டு. குசலாவேதனை அகுசல வேதனை குசலா குசலா வேதனை என்கிற வேதனாகந்த மூன்று. சோத்திரம் நோக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் மனம் என்கிற குறிப்புக்கந்தம் ஆறு. பொய்ச்சொல்லல் கோட்சொல்லல் கோபித்துச் சொல்லல் பயனில் சொல்லல் என்கிற வாக்கினகுணம் நாலும், களவுக்குப் போகல் வதைத் தொழில் செய்தல் கொலைசெய்தல் ஆக காயத்தின் குணம் மூன்றும், கொலை நினைக்கை காமப்பற்று ஆசையென்கிற மனத்தின் குணம் மூன்றும், ஆகத் தீக்குணம் பத்து. மெய்யுரைத்தல் வாய்த்தை இனியன கூறல் பயனுடைச் சொல் என்கிற வாக்கின் குணம் நாலும், பள்ளிவலம் வருதல் தவம்புரிதல் தானஞ்செய்தல் என்கிற காயத்தின் குணம் மூன்றும், அருளினைவு ஆசையறுத்தல் தவப்பற்று என்கிற மனத்தின்குணம் மூன்றும் ஆக நற்குணம் பத்து. ஆக பாவனைகந்த மிருபது. சத்த பரிச ரூப ரச கந்தம் சித்தம் என்கிற விஞ்ஞான கந்தமாறு. ஆக இவ்வணம் நாற்பத்து மூன்றாக வெண்ணப்பட்டு வருகிற பஞ்சகந்தங்கள் ஐந்தும் காரணங்கட்கக் காரியங்கட்குமென்பது மிருத்துவரையில்வழக்குமாயப் பந்தத் தொக்கமுமாய இது குற்ற வீடென்றும் கந்தங்களைந்தும் நேராகக்கெட்டு வீட்டினப்பதத்தை யடையுமென்பதுவே முத்தியினபமாகக் கொண்டானெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபக்கம் அவன்மதம், ருக செ, "ஓங்கியுருவமோடு வேதனை கருதிப்பின்றோடு" என்னும் திருவிருத்தத்தேற் கண்டு கொள்க

அட்டகுண முத்தியென்றது நிகண்டவாதி. அட்டகுணமேலாயுள்ள மூன்றுவகைக் குணங்களையும் விடுகிறதே முத்தியென்று கொண்டானெனக் கொள்க.

மூன்றுவகைக் குணமாவன, ஞானவரணீயம் தரிசனுவரணீயம் வேதநீயம் மோகனீயம் ஆயுஷ்யம் நாமம் கோத்திரம் அந்தராயம் என்கிற குணங்கள் எட்டும், பசித்தல் தாகம் பயம் செற்றம் உவகை மோகம் சிந்தனை பழித்தல் நோய் நசித்தல் வேர்வை கேதம் மதம் அதிசயித்தல் புசிப்பு பிறப்பு உறக்கமென்கிற குணங்கள் பதினேழும் அரசிகம் இரதி ஆரம் சோகம் சுகுச்சை பயம் என்கிற குணமாறும் ஆக இங்ஙனஞ் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குணமுதலான மூவகைக் குணங்களையும் விட்டு பூர்வத்திலுண்டாகிய கன்மங்களை புசித்துத் தொலைந்த வலதரந் தானே வீட்டின்ப மென்கொண்டானெனக் கொள்க.

முதற்சொன்ன ஞானவரணீயமாதியாயுள்ள எட்டுக்கும் பிரமாணம் பரபட்சம் அவன்மதம் - ௨-செ, "ஏறிலாதன வனந்த ஞானமுதல் லெண்குணங்களொனு மொண்குண, மாறிலாதமதி மேவுசீதமென மன்னிவானவா வணங்கவே, வேறிலாவுகுண ஞானவரணீயமாதியெட்டினையும் விட்டசீ, ரேறுபானமையுடை நீவொழுக னெங்களுக்கிறைவ னென்றனன்"

இரண்டாவது சொன்ன பசித்தலாதியாயுள்ள பதினேழு குணங்கட்கும் பிரமாணம் பரபட்சம், அவன்மதம் - ௬ - செ "பசித்தல்தாகபய செற்றமோடுவகை மோகசிந்தனை பழித்தல் நோய், நசித்தல்வேர்வினொடு கேதமோடுமதம வேண்டலின்ன டதிசயித்தலும், புசிக்கவந்திடு பிறப்புறக்கமிட விட்டொரா டடகுண பூதரும், வசித்தவனனுலகின மேலிருந்தொருசொ லிகலனுக்கருளு மென்றனன்"

மூன்றாவது சொன்ன அரிசகமாதியாயுள்ள குணங்களாறுக் கும் பிரமாணம் பரபட்சம், அவன்மதம்-௮-செ. "ஏனுமொன்று டைய வாகியெங்குமனு வாயிரும்புகன மாங்களும், பூனுமங

ஏறுமெல்லாமுமாகுமிவை புறக்கலப்பொருளாக மென்னலாங், கா
ணுமைஞ்சறு வகைத்தொழில்களவை கட்டுவிட்டெறி கன்மமே
ல், மானாதிநான்குவரு மாறிமாறிமுன் வைக்கத்துணிவிட மா—
சிடே” என்றும் பிரமாணங்கள் கண்டுகொள்க.

மெய்மறைமயே பாடாணம் போலகைமுத்தி யென்றது பா
டாணவாதி அறிவிலாதவர்கள் அதிகப்பட்டுக் கிடக்கும் தன்
மைபோல ஆன்மாச் சுதந்திரத்தையிழந்து ஒன்றுமறியாமல் கல்
லைப்போலே கிடக்கிறதே முத்தியென்று கொண்டானென்றுகொ
ள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், “கொத்தைக்
மாந்த ருத்துறு துயில்போற - காட்சியென்னக் காணுத் தூய-
மாட்சியைமுத்தி யெனவகுத்தனரே” என்னுமதுவு கண்டுகொ
ள்க

விவேகமுத்தி யென்றது மாயாவாதி நிர்மலமாயிருக்கி
ற ஆகாயத்தை மேகமறைத்த தன்மைபோல சுத்தமாயிருக்கிற
பரப்பிரம மாயா வுபாதிகளினாலே வாதிக்கப்பட்டு இந்தவுட
லிலே மயங்கிநிற்கிறதே ஆன்மாவாவது, அந்த ஆகாயத்திலே
ஒரு வாயுத்தோன்றி அந்த மேகத்தை நீக்கின தன்மைபோல
தன்னிடத்திலே ஒரு விவேகஞானந்தோன்றி யந்த மாயாவவி
த்தையை நீக்குகிறதே முத்தியென்று கொண்டானென்று கொ
ள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், “இவ்வியற
பந்தப பவவமதகல - வினைமுதறந்த கொண்மூப்படலத - தி
ருளறவுதித்த காற்கவிவேகந் - தனிநின்றுதித்துச் சாதக மனனை
தையு - மனக்கப்பிரிபபு மடியிலழுவாங்கலும் - போலஞா
லம பொய்யாகச்சிந்த - தானே தானாய்த் தன்னிற்றனனே த-
தானே கண்டு தன்னலமுற்றும்” என்னுமதுங் கண்டுகொள்க.

தன்மெய்வடிவாகுசிவத்தைச் செம்மையே பெறுகைமுத்
தியென்றது சமவாதி வேட்டுவாளி யொன்றுமறியாத பச்சை

டபுமுளைவெடுத்துத தறசொரூபமாககின தனமைபோல ஒன அயறிடாமற கிடககிற ஆனமாவையும சிவனுடைய ஞானமெ டுத்துத தறசொரூபமாககி அநதவுடலே நிததத்துவததை பெ றறிருபபது முததியெனக கொணடானெனக கொளக. இதற குப பிரமாணம சறகறபநிராகரணம. "முனனேனறனனு முதிரொளிஞான- மறிபாபபசசை சிறுபுழுககவாநத- வணடென வுயிரைக கொணடுபோயிரது- தனனைநோககித தனனுருவாகி- யவவகைததொழிலு மெயவகையுணர்வும - பிரிடாவாறு பெற றுத - கிரியாடபெரியோர திருக்ஷிசோகதிடுமே" எனனுமதனை கணடுகொளக

செபபுவாகனெனறது உலோகாயதன முதலாயுள்ள எழுவகை முததியையுங குறறததையுடைய முததியெனறு சொனக கொளக அவை வருமாறு —

உலோகாயதன முததிக குறறததைப பொருநதின முததியெனறது, பனறியானது கனமத்துக கீடாக விடடையிருமபிப புசிககுந தனமைபோல வசுததமாகிய மகளிரிடத துணடாகிய சிறறினபததையுங கனமததுககீடாக விருமபிப புசிககையிறுவெனக கொளக. இதறகுப பிரமாணம பரபடசம, அவனமறுபபு-உஅ-செ. "ஆசையுறறுழல் சூகரவக எசுததமேவி" எனகிற திருவிருததததிற கணடுகொளக.

படடாசாரியன முததி குற்றததைப் பொருந்தின முத்தியெனறது, கனமத்திறகும் ஞானததிறகும் மோக்ஷமெனறு சொலலுகையில கனமததிறுலே ஆசையுணடா யதினுலே முததியுணடாகா தாகையிறு லெனககொளக இதற்குப பிரமாணம பரபடசம அவன மறுப்பு,௧0-செ "கருமஙகளை ஞானமது வுடனினறலானமருவு சநிதஙகலாவ தெனின்" எனனுந திருவிருததத்திற கணடுகொளக.

சவுக்கிராந்திகன் முத்தி குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது, கர்ப்பூரவிளக்குப்போலக் கந்தரூபமறக் கெடுகையினாலே பெறுவானில்லாத படியினாலெனக் கொள்க. இதற்குப்பிரமாணம் பரபக்ஷம், அவன் மறுப்பு ௯௯-செ "ஐந்துகந்தம் சந்தானத்தழிதல் பந்தத்துக்க" மென்னுந் திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

நிச்சடாவாதி முத்தியைக் குற்றம் பொருந்தின முத்தியென்றது, குணங்களை விட்டுவிடுந் தவமாகா தென்பதாலும் பூர்வசன்மம் நிச்சயித்துப் புசிக்கைக்கு இவ்விடத்து ஆன்மாவுக்குத் தனக்கென வேறோரறிவில்லாதபடியாலு மெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் பரபக்ஷம், அவன் மறுப்பு-கக-௯௫-செ "ஆறுகாரியங்களை மாற்றவேதவங்க ளாமெனில்" என்னுந் திருவிருத்தத்திலும் "பூர்வகன்ம மறிந்து புசித்தபின்பு" என்னுந் திருவிருத்தத்தில்" தெண்கடல்நீர் வறந்தபின்பு பூமீன் ருந்த நின்றதே" என்னுமதுவுங் கண்டுகொள்க

பாடாணவாதி முத்தியைக் குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது அவன் கேவலப்பட்டுக் கிடக்கிறதை முத்தியென்று சொல்லுகையினாலே அது முத்தியாகா தெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் அவன் மறுப்பு "காட்சியெனக் காணுந்துயர் - மாட்சிமை முத்தி யெனவகுத்த னாக்கிற - காணுபாவமரணங்கரும - மேய்ந்தவாமுத்தி சேர்ந்தவரன்றே - யினையகத்தோர் முனிவருமவேண்டா - தனிதருந்துயர மெனுமித்திடமே - பாடாணத்திற கூடாமுத்தி" என்னுமதுவுங் கண்டுகொள்க.

மாயாவாதி முத்தியைக் குற்றத்தைப்பொருந்தின முத்தியென்றது, இவனிடத்திலே தோன்றின விவேகஞானம் முன்பே யுள்ளதாமாகில் இவனுக்கு மயக்கம்வர வழக்கில்லை, பின்பு

கூடானதாகில் ஆகாயப் பூப்போலே இல்லாததொன்றாகாது, ஆகையினாலெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், "பந்தமகன்ற முத்திவிவேகம் - வானவெளியெனத் தனிற் றுன்னே தோன்றின் - முன்புள்ளதாயின் மங்காதிவ்வெளிற்-பின்புள்ளதாகா திவ்வுளவெனில்வெளி-மலர்த்தருமம்" என்னுமதனாற் கண்டுகொள்க.

சமவாதி முத்தியைக் குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது, அருவினைப்பொருந்தின ஆன்மாக்களுடைய மாயா தேகசம்பந்த நித்தியத்துவத்தைப் பெற்றிருக்கிறது பதமுத்தியாம். அதொழிந்த சாயுச்சியமாகாதாகையினாலும், யாதொருபாதொரு சரீரத்தோடுந் தனையுள்ளமட்டும் மூன்று மலங்களுநீங்காதாகையினாலுமெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், "முத்தியுற்ற நற்றவர்களையிடை-சோவொன்றனைச் சாதரு முத்தி - சாலோகமியமோ சாயுச்சியமேற்- பந்த முற்றக் கலக்கழிந்த-வறிவீனோடறிவு பிறிப்பப்பெறறி - வேண்டுமெனப் பகற இனடிவரிவவா - நிருப்பவெனப் பகற குருந்தரான வேண்டும்" என்னுமதனாற் கண்டுகொள்க.

"சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே" என்றதற்குப் பிரமாணம் பரபட்சம், சௌத்திராந்திகன் மறுப்பு-௨0 செ. "அனாதிமுத்தனாய்ப் பரனாயகலனாயெல்லா வறிவுதொழிலனுக்கிரக முடையவரனாகன்ம, னாதிசமற் றொத்தவிடத்தே சத்திபாத நுழைவித்து மலங்களெல்லா நுங்கநீக்கி, மனாதி கரணங்களெல்லா மடக்கித் தன்னை வழிபடுநல் லறிவருளி மாக கருணைக்கையா, லினிப்பிறப்பினின்று மெடுத்துமாறு வின பழுத்திக்கே வைப்ப னெங்கள் முத்தியீதேவ" என்னுமதனாற் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, உலோகாயதன் முதலாயுள்ள சமயிகள் கொள்ளப்படு முத்திகள் குற்றத்தைப் பொருந்தின முத

தியென்றும் இவ்விட்டது முத்தியென்று சொல்லப்படுவது பரமேசுவரனுடைய ஸ்ரீ பாதத்தைப் பொருந்துகிறதே முத்தியென்று முறைமையும் அறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஏனைச் சமயநூலார்கூறு முத்திகளாவன? சோபான முறையானிலமுத லுதயீறாய்க் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட் படுவனவாம் அவற்றுள்,—இம்மையே யீரெட்டாண்டெய்தி யெழிலாருமோகத்தையார் முத்தியென்றும் - உலகாயத நூலாரிம்மைக்கண் பதினாறு ஆண்டுள்ள அழகுபொருந்திய ஆபரணங்களணிந்த அரிவையரினபுறுதலே முத்தியென்பர்—அம்மையேயிருஞ் சுவர்க்க முத்தியென்றும் - மீமாம்சை நூலார் யாகாதிகன்மங்கள் செய்து அம்மைக்கண் சுவர்க்காதி போக மனுபவித்தலே முத்தியென்பர்—ஐந்துகந்த மறக்கெடுகை முத்தியென்றும் - சௌத்திராந்திக நூலார் உருவமுதலிய ஐந்துவகைக் கந்தங்களும் மறக்கெடுதலே முத்தியென்பர்.—அட்டகுண முத்தியென்றும் - ஆருகத நூலார் அநந்தஞான முதலிய எண்குணமடைதலே முத்தியென்பர்,—மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும் - மெய்ம்மையாகப் பாடாணம்போற் கிடக்கை முத்தியென்பர் வைசேடிக நூலார் — விவேக முத்தியென்றும் - சாங்கிய நூலார் பகுத்துணரும் விவேகஞானமே முத்தியென்பர் —தனை மெய்வடிவாஞ் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றும் செப்புவர்கள - சிவசமயவாதிகண் முதலியவாகச் சமயநூலார்களும் தன்னுடைய வடிவாகிய சிவசாரூப முதலிய பதமுத்திகளைப் பெறுதலே முத்தியென்றுஞ் சொல்லுவர்கள.—இங்கு டாஞ்செப்புகந்த -

வேதாகமநூ லுணமையுணாநத யாஙகூறு முத்தியாவது,— சிவனடியைச சேருமுததி - முமபததாறு ததுவஙகளுககு மப பாறபடட சிவ னடியைச சேருமுததியாம

இதனானே புறசசமயநெறிநிறறன முதலிய வெல்லாஞ் சை வத திறததடைதறகுச சோபானமுறையான வாயிலாமாறு அ வறறு பயனகூறுமுகததானே யினிது விளக்கபபடடது

மறைஞானதேசிகர் உரை

மேலிரதச சிததாநதமே சிறபபுடைததென றுணாதது கினறா.

ஓதுசமயஙகளபொரு ளுணருநூல்க ளொனறோ டொனறொவவாம லுளபலவு மிவறறுள, யாதுச மயம் பொருணூ லியாதிஙகெனனி லிதுவாகு மதுவல லவெனும்பிணககமினறி, நீதியினா லிவையெல்லா மோரிடததேகாண நினறதியா தொருசமய மதுசமய மபொருணூ, லாதலினா லிவையெல்லா மருமறையா கமததே யடஙகியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடஙகும (௧௮)

(இ-ள) ஓதுசமயஙகள — இடபடிப் பலவாகச் சொல்லப்பட்ட சமயங்களையு மதற்கதற் கேறற தேவதைகளையு ம

பொருளுணருநூல்களொனறோடொனறொவவாமலுள — தற்கதற் கேற்ற சாத்திரஙகளையு முததி பெறுமதஙகளையும பலவாக வுரைதது, இவறறுணமையான சமயம் யாது வுணமைய பொருளயாது அச்சமயத்திறகுக் கூறுமாக

பலவுமிவ்வாறான யாதுசமயம்பொருளாவியாதியகெனில்

மங்களை யாது என்று கேட்கிறாயாகில்? அவைகளை யுணர்த்துதும்

இதுவாகுமது வல்லவென்னும் பிணக்கின்றி நீங்கி யிறுவிவையெல்லா மொழிந்தே காணிறப்பது யாதொருசமயம் அதுசமயம் பொருளால்

தத்தஞ் சமயத்தின் விழைவையுந் தேவதைகள் முறைமையினையு மந்நூல்களுண்டாய வழியினையு நோக்காது சலம்பற்றி நின்றமைந்த பொருளையுண்மை மற்றொன்று முண்மைப் பொருளல்ல வென்னுஞ் சந்தேக விகற்பமின்றிக் கடாவிடையாலும் பிரமாணப் பொருள்களாலவா மெய்ப்பொருளென்றென்று விருவிதலுந் திருட்டாந்தத்தாலும் அவ்வியாபதி முதலிய குற்றங்களாற் சோர்வுபடாத வுண்மைப் பொருளு மிதுவே சமயமு மதுவே இந்தச்சமயத்தை யொன்றுந்து கூறப்பட்டதே பரமமான மோட்சமென்று கூறும் வாலோணமத்தா வாகிய மலையுமாதுபோல முனைவென்றுபின் மலைவின்றிய பிறமதங்களைந்து தனதுண்மைப் பொருளை யறுதியிட்டுணர்த்துகின்ற சமயநூலாகிய நூலெனால்?

ஆகலினுலி வையெல்லாமரு மறையாகமத் தேயடங்கியிருக்கும்

இச்சிறப்பினை யுடைய தாகையினாலே அச் சமயப் பொருள்களெல்லாம் வேதாகமங்களிரண்டினு மடங்கியிருக்கும்

அவையிரண்டு மரணடிகளிழுட வங்கும்.

இந்த வேதாகமங்களாகிய விரண்டு மந்த வாதமின்றி விதிவாதமே கூறுகையாலவை யன்று திருவாக்கே சிறப்புடைத்தெனப் பெறுமெ-று

இதற்கு சித்தியம் சிவதருமோத்தரம் மகுடம் சாமிகத்துமறிக (௪௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேல் வேதசிவாகமங்களே சாஸ்திரமென்றும் சிவஞானமே ஞானமென்றுங் கூறுகின்றது.

ஒருசமயங்களும் நூல்களும் பொருள்களுமொன்றோடொன்று முரணுவனவாயுள்ளவிவற்றுள் யாதுசமயம் பெருமை லியாதிருக்கெனனில் - சொல்லுஞ் சமயங்களும் மந்தச் சமய சாஸ்திரங்களும் சாஸ்திரங்களில் §பிரதிபாத்தியமான பதார்த்தங்களும் பந்தமுத்தியி னுடைய தன்மைகளும் மோக்ஷோபாயங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாகப் பலவாகவுள இவையிற்றுக்குள்ளே யெந்தச்சமயம் பெரியது, எந்தச்சாஸ்திரம் சர்வத்தையுஞ் சொல்லுகிறது, எந்தச் சாஸ்திரத்திலே சொல்லும் பதார்த்தம் யதார்த்தம், எந்தச் சாஸ்திரத்தில் சொல்லு மோக்ஷோபாயம் பரமுத்தியைக் கொடுப்பது, எந்தச் சாஸ்திரத்திலே சொல்லுந் தருமத்தைப் பண்ணவேண்டுவது, என்று வினவில்?—

§ பிரதிபாத்யம் - சொல்லத்தக்கது.

இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கத்தினின்றி நீதியினவை யெல்லா மோரிடத்தே காணநின்றதியாதொருசமயம் மது சமயம் பொருணூல்-உலகாயிதாதி சிவாவாத்துவைதியந்தமாகச் சொல்லும் பதார்த்த லக்ஷணங்களையும் தருமங்களையு மோக்ஷோபாயங்களையு மோக்ஷங்களையு மிதுவாகு மதுவல்லவென்று ¶ சமுத்திர கலசநியாயமாக வேதாகமங்களிலே

¶ சமுத்திரகலசநியாயம் - சமுத்திரத்தில் குடத்தைப் போட்டுமொண்டால் குடங்கொண்ட ஜலந்தான் வருமென்கிற நியாயம்.

பேகதேசத்தை யறிவிப்பது பூர்வபக்ஷமுஞ் சித்தாந்தமு மாகத்
தாகசிப்பித்து, ஆறு குருடர் யானையினுடைய ஏகதேசத்தை
ஸ்பரிசித்து யானை யிப்படியிருக்கு மிப்படி யிருக்குமென்று த
ர்க்கம் பண்ணக் கண்ணுள்ளவ னியானைகளெல்லா மவயவங்களெ
ல்லா முடைய தியானையென்று நிச்சயித்ததுபோல, இந்தச்ச
மயங்க ளெல்லாஞ் சொல்லுவது வேதாகமத்தி லேகதேசத்
தைப் பற்றியென்று பரத்துவத்தை யுணர்வதான சமயமே
சமயம், அந்தச்சமய சாத்திரமே சாத்திரம், அந்தச் சாத்திரத்
திலே சொல்லும் பதார்த்தமே பதார்த்தம், அதிற்சொல்லும் த
ருமமும் மோக்ஷோபாயமுமே சாதிக்க வேண்டியது,—

ஆகலின் விவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கி
டு மவையிரண்டு மரனடிக் கீழடங்கும் - சாலத்தையுஞ் சொல
லுவது சாஸதிரமென்ப தாதலால் வேதசிவாகமங்களுக்குள
ளே சகல சாஸ்திரங்களு மடங்கும். வேதாக மோக்தானுஷ்
டானங்களையே பண்ணவேண்டியதும், அதிலே அதிலேசொல்லு
ம பதார்த்தங்களே யதார்த்தமும், வைதிகமுஞ் சைவமுமே
சமயமும் இவ்விடத்து மிரண்டாகச் சொல்லுகையிலு மிரண
டிலே யதிகமேதெனனில்? வேதசிவாகம மாகிய அபரஞானமி
ரண்டும பரஞானமாகிய சிவஞானத்திலே × பரிபாலசானமா
கையால் *வேதோபப் பிரமிதமானது கொண்டு வைதிக சைவ
மென்றும், சிவகுண † சங்கிராந்தி சமுற்பத்தி + சமாவேச சிவ
சமத்துவ மென்ற முத்திகளுக்கு மேலாயிருக்கிற சிவசாயுச்சி
யப் பிரதமாகையா லுத்தரசைவ மென்றும், இதை பூர்வபக்ஷ
ம் பண்ணுவதற்கு ஒருசமய மில்லையாகையால் சித்தாந்தசை
வமென்றும் பெயரையுடைய வைதிகசைவமே சாவோத்கிருஷ்
டமான சமயம். வேதசிவாகமங்களே சாஸ்திரம். இதிற்சொ
ன்ன பதிபசுபாசம பதார்த்தத் திரயமே யதார்த்தம். விசிஷ

டதருமமாகிய சரிதை கிரியாயோக சிவதருமமே பண்ணவேண்டுவது கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டை யெனப்படு மோக்ஷோபாயமென் றிதன்பொருள்.

× பரியாவசானம்-முடிவு. * வேதோபப்பிரம்மிதம் - வேதத்திலே அதிகமாகச் சொன்னது, † சங்கிராந்தி - சம்பந்தம், + சமாவேசம் - பிரவேசம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேற்சாமானிய வேதவிசிஷ்ட விசேஷவேத சிவசித்தாந்தமே சிறப்புடைத்தென்று செப்புகின்றார்.

பொருள் - அந்த அந்தச் சமயத்திற்குச் சொல்லும் பதார்த்தங்கள்,—நூல் - அப்பொருளைச் சொல்லுஞ் சாத்திரம்,—பிணக்கின்று-சந்தேகமற்று,—ஓரிடத்தே - ஒருசமயத்திலே,—காண - அடங்க வேதத்திற் சாவதிப்படங்கும், சிவாகமத்திலே நிரவதிப்படங்கும்,—அரனடிக்கீழடங்கும்-அபரஞானமாதலால் வேதஞ் சிவாகமத்தடங்கும்; சிவாகமம் வேதத்தைக் குறித்த பரஞானமானாலும் சிவசத்தி சின்ன சிவாகமத்தைக் குறித்த அபரஞானமாதலால் சிவசத்தியாகுஞ் சேதன பரஞானசிவாகமத்தடங்கும்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

கண்ணில்லாபலர் குஞ்சரங்கொண்டு வேழமென்றறிந்து தலைப்பட்டுக் கையிலுறுதலைவந்த வேறுவேறு கூறுமிலக்கணங்க

ளெல்லாங் கண்ணுள்ளானொருவன் கண்டுகூறு மக்கிலக்கணத் துள் ஏகதேசமாய்க் காணப்பட்டடங்குமாறுபோல, ஏனைச்சமயநூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாயவாறுபற்றி அவ்வ நூல்களிற் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க் காணப்பட்டு அவற்றுளடங்குதல். சிவபிரானாற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக்கொண்டுரைக்கு மவ்விருவகை நூலும் அவ்விறைவன் றிருவடியி லடங்கு மென்பதாம்

நிரம்பவழகியருரை வருமாறு.

முன் சொல்லப்பட்ட சமயங்களும் அதற்கதற்குப் பொருந்தின அர்த்தங்களும் அதற்கதற்குப் பொருந்தின நூல்களும் ஒன்றுக்கொன் றொவ்வாமல் எண்ணிறந் திருக்கையினால் இவையிற்றுள் எந்தச் சமயத்தை எந்தப் பொருளை எந்த நூலைப் பொருளாகக் கொள்ளுவதென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

ஓது சமயங்கள் பொருளுணரு நூல்க ளொன்றோடொன் றொவ்வாமலுளபலவும் - சொல்லப்பட்ட சமயங்களும் அந்தந்தச் சமயிகள் கொள்ளத்தக்க அர்த்தங்களும் அதற்கு அறியத்தக்க சாத்திரங்களும் இவை ஒன்றுக்கொன் றொவ்வாமற் பல அநேக விருத்தியுண்டா யிருக்கும்,—இவற்றுள் - இவையிற்றுக்குள்ளே, — யாது சமயம் பொருணூ லியாதிங்கெனில் - எந்தச் சமயத்தை எந்த அர்த்தத்தை எந்த நூலையுண்மையாகக் கொள்ளுவதென்று நீ கேட்கில்?—இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி - இந்தச் சமயமும் இந்தப் பொரு

று இந்தச் சாத்திரமும் ஆமென்றும், அந்தச்சமயமும் அந்தப் பொருளும் அந்தச் சாத்திரமும் அல்லவென்றுஞ் சொல்லுகிற மாறுபாடில்லையாய்,—நீதியி னுவிவையெல்லா மோரிடத்தே காணநின்றிடாதொரு சமய மதுசமயம்பொருணூல் - உலோகாயதமுதல் பாஞ்சராத்திரியீறாகப் புறச்சமயத்திற் பேதம் பதினாறும், பாசுபதமுதல் வயிரவமீறாக உட்சமயத்திற் பேதம் ஆறும், சைவத்தில் ஐக்கியவாதி முதல் சைவமீறாகப் பேதம் ஆறும், ஆக இருபத்தேழு சமய பேதங்களுக்கும் அந்தந்தத் தக்கதாகப் பொருந்தின பொருளும், அதற்குப் பொருந்தின சாத்திரங்களும், அவரவர் பக்குவத்திற்குத் தக்கதாகப் பரமேசுவரன் அருளிச்செய்தான் என்கிற முறைமையை யொருசாரத்திலே யறியப்பட்டது யாதொரு சமயம் அதுவே யுண்மையான சமயமென்பதும், அதுவே யுண்மையான அர்த்தமென்பதும், அதுவேயுண்மையான சாத்திரமென்பதும் இந்தவுண்மையைச் சொல்லுகிற சாத்திரந்தானேது என்னில்?—நீதியினுவிவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடும் - சர்வஞ்ஞனுஞ் சொல்லுகிற வேதாகமங்களாகையினால் முன்சொல்லப்பட்டவையெல்லாம் ஒருவராலும் மதிப்படாத வேதாகமங்களிலே யடங்கியிருக்கும். அந்த வேதாகமங்க ளிரண்டும் எங்கே யடங்குமென்னில்?—அவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும் - அந்த வேதமும் ஆகமமுமா இரண்டும் பரமேசுவரனுடைய ஞானமாகிய சீபாதத்தின் கீழே யொடுங்கும் என்னவே சைவசமயமே சமயமும், சைவசித்தாந்தமே சித்தாந்தமும், வேதாகமமே சாத்திரமும்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் பாயிரம், "பெருங்கட லுடுவல கருங்கணோக்கி - கந்தரத் தடைத்த வந்தமில கடவுள் - பாலனை யுணர்த்து மேலவர் போலக் - கேடபோ

ராவைக கோடபடு பொருளா-லருளிய கலைக ளருளில வா லவை-பலபலசமயப பாணமைகததவறே-பல்காலனுற ரனைமயுனவிப-மாகசரிதவே பொருளென்றுகிலை-யதாக வினவேறஞோ பனுவலேறதொக-சிசையாராறு பாடுகூறுவ ரதனால்-புறசசமயங்கள சிறப்பில வாகி-யருளினமாகதை வெ ருளுற மயக்கி-யலகைத்தேரி னிலையிற்றீரு-மீவகிலைநிறக நி யகாசசமய-ரூவிருதகுதி மேவியதாகு-மொனறேடொன று செனறுறநிலையி-லாறுமாறு கிறுடைத்திலற்று-ளெவவ மில்லாச சைவசாசமயத்-திலகிலாகம நிலவுநூனைதலை-கண கமிரணிய காஞசனமீமூல்-தனதியாடகத் தமனியமெனறி வை-பலபெயராயப்படுதோர் பொருளேபோலப்-பதிபசுபா ச விதிமுறைகிளக்கும்" எனனுமதனுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது: சொல்லப்பட்ட சமயங்களுட பொருள்களும சாத்திரங்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமற் பலவாகச சொல்லுகையினாலே எந்தச் சமயத்தை எந்தப் பொருள்களை எந்த நூல்களை உண்மையாகக் கொள்ளுவதென்று மாணுக்கன் கேட்க ஆன்மாக்கள பக்குவத்துக்கீடாகப் பரமேசுவரன் இப்படிப் பலவாக அருளிச்செய்தானென்று அதிக்ராந்த சைவமாகையினுல் சைவசமயமே சமயமும் சைவசித்தாந்தமே பொருளும் வேதாகமங்களே நூலுமென்று அருளிச்செய்ததென்று முறைமையு மதிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

ஓதுசமயங்கள்-சொல்லப்பட்ட சமயங்களும்,—பொருளுணரு நூல்கள்-அச்சமயப் பொருள்களை யுணர்த்து நூல்களும்,—ஒன்றோடொன்று ஒவ்வாமல் பலவும்-மாறுபட்டன

வாக வுள்ளன பலவாகலின்,— இவற்றுள் சமயமியாது பொருணூலியா திங்கெனின் - இவற்றுள் முதன்மையான சமயமியாது அச்சமயப் பொருளுணர்த்து நூலியா திவ்விடத்தெனின்,—இறைவாகு மதுவல்ல வெனும் பிணக்கின்றி - கண்ணிலார் பலர் குழீஇக்கொண்டு வேழத்தினுறுப்பைத் தலைப்பட்டுக் கையிற்றறைந்து வேறுவேறு கூறு மிலக்கணங்க ளெல்லாங் கணுள்ளா னொருவன் கண்டு கூறு மதனிலக்கணத்தி னேகதேசமாயக் காணப்பட் டடங்குமாறுபோல, இதுபொருந்து மிது பொருந்தா தெனும் பிணக்கின்றி,—நீதியினு ளிவையெல்லா மோரிடத்தேகாண நின்றது யாதொருசமயம் - முறைமையா லிவையனைத்து மொருங்கே காணப்படநின்றதெச் சமயம்,— அதுசமயம் பொருணூலாதலினுள் - அதுவேசமயமும் அச்சமயப் பொருளுணர்த்து நூலுமாதலின்,— இவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடும் - ஏனைச்சமய நூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாய வாறுபற்றி யவ்வநூல்களிற் கூறும் பொருளியல்புக ளெல்லா முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பி னேகதேசமாயக் காணப்பட் டடங்குதலின், அவையே நூல்களும்.— அவையிரண்டு மரனடிக்கீழ் அடங்கும் - சிவபிரானாற் செய்யப்பட்ட அதனையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்கு மவ்விருவகை நூலு மவ்விறைவன் திருவடியி லடங்குமாதலின் அதுவே சமயமுமாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஆகமப்பிரமாண முணரும் முகமிய பலவிதம் இந்த குறளென றுணர்த்துகின்றார்

அருமறையா கமமுதனூ லனைத்துமுரைக்கையினு
லளப்பரிதா மப்பொருளை யரனருளா லுணர்க்க, டருவ
ர்களாயின் றனித்தனியே தாமறிந்தவளவிற் றர்க்க
மொழித்தராய்களின்று சமயஞ்சாதித்து,மிருதிபுராண
கலைகண் மற்றுமெல்லா மெய்ந்நூலின் வழியுடையா ரா
யகம்வேதாகமம், சுருதிசிவா கமமொழியச் சொல்லு
வதொன்றிலைச் சொல்லுவார் தமக்கறையோ சொ
ல்லொணாதே. (௧௪)

(இ-ள்) அருமறையாகம முதனூல் — பொருளறிதற் கரிதாகிய நாலுவேதங்களுங் காமிகமுதலிய விருபத்தெட்டாகமமு முதனூல் அஃதெக்காரணத்தா லெனனில்?

அனைத்து முரைக்கையினால — அறமபொருளின்பம் வீடாகிய நான்கினையு முரைக்கிறதினாலே அவனே சாவஞ்ஞனை "வினையினீங்கி விளங்கிய வறிவின முனைவன் கண்டது முதனூலாகும்" என்றார் தொல்காப்பியனார்.

அளப்பரிதாமப்பொருளை — வேத மநந்த சாகையையுடைத்தாகையா லளவிட்டதனை யறிதற்கரிது ஆருமொருவராலு மறியப்படாதோ வெனில்?

அரனருளா லுணர்க்க டருவர்கள் — சிவனது காருண்ணியத்தினாலே யநந்தமான வேதத்தை நாலாகப் பிரித்து வேதவியாச பகவான் விளங்க வருளிச்செய்தார்.

பின் றனித்தனியே தாமறிந்த வளவிற் றர்க்க மொழித்தராங்க — அதனையுற்று நோக்கி யாராய்ந்து தமக்கேற்ற கடாவாநுமானவிடையாநுங் கமதபொருளையே மேலாக்கிப் பிரமதத்தைக் கிழாககியந்த வேதத்தைப் பின்சென்று சமயபே

னிறுத சமயநூ ற்களையு மதற்கதற்கேற்ற பொருள்களையு
சாத்திரம் ஞ் சாத்திரம்,

மிருதிபுராண மனுமுதலிய பதினெட்டும் அட்டாதசபுரா
கலைகண்மற்று ணமு மறுபத்துநாலுகலையு மற்றுமுண்டாக
றெல்லா மெய்ய பட்ட தெல்லா மகதவேதத்தின் வழியா
நூலின்வழி தலால் வழிநூலெனப் பெறும் 'முன்னோ
ர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன்
வேண்டும் விகற்பங் கூறி யழியா மரபினது வழிநூலாகும்" எ
னவறிக

புடையாறங்க வேதங்களுக் கங்கமாகிய சிட்சைமுதலி
ம வேதாகமம் யவாறு முபாங்கமாகிய மீமாஞ்சை முதலி
ய நாலுமாகப் பத்தும் புடைநூலெனப்பெ
றும்

உபாங்கத்தைத் தலைக்குறைத்தலாக்கி யங்கமென்றார்

வேதமென்பதனை யிருபாலுங் கூட்டிப் பொருளுரைக்க.

அவையாவன:—

சிக்ஷை கற்பம் நிருத்தம் சந்தோவிசிதி சோதிடம் வியாக
ரணம்.

இவற்றாற் பிரயோசன மியாதோவெனில்?

வேதோச்சாரணத்துக்கு வர்ணத்திற் றோற்றமுஞ் சுரத்
தையு மாத்திரா பேதத்தினையும் விளங்கச் சொல்லுகையாற் சி
க்ஷையெனப் பெயராயிற்று.

வேதமோது மதற்குக் கன்மத்தையுங் கன்மபிரயோஜன
த்தையுஞ் சொல்லுதலாற் கற்பமெனப் பெயராயிற்று.

வேதவசனங்களுக் கர்த்தத்தை விளங்க வறியத்தக்கதா
க வகுத்துப் பதங்களோடும் நிர்வசனத்தைச் சொல்லுகையா லத
ற்கு நிருத்தமெனப் பெயராயிற்று.

வேதத்திற சொல்லிய மந்திரங்களினது வன்னத்தி னு டைய கலையினையு மாத்திரா விருத்தமாகிய உத்தரைமுதலி ய விருபத்தாறு சந்தபேதத்தினையும வன்னவிருத்தமாகிய க திவை முதல் யாப்பை இதிமுதல காண்டியீறாக வுள்ளவிலக்கண ங்களை விளங்கக் கூறுகையால் சந்தோவிசிதியம்

லௌகிக வைதிக கன்மங்களுக்கு உபயோகமாகிய நக்ஷ லமுதலிய காலவிசேடங்களை யிதற்கிதுவென றறிதற்கிடமாயி ருப்பது சோதிடம்

சங்கிதை பதங்களையு மறுவிதமான பதப்புணர்ச்சிமுதலி ய விதியாகிய சத்தலக்ஷணத்தை விளங்கச் சொல்லுகிறது வி யாகரணம் எனவறிக.

மீமாஞ்சை நியாயம் புராணம் ஸ்மிருதி இந்நாலு முபாங்க மெனவறிக

“இருவர் நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபுவேறுடை யது புடைநூலாகும்” எனமூலசூத்திரத்தினையு மறிக.

இனியாகமத்துக்குக் காமிகாதி யாகமங்கள் முதனூல்?

அஃதெக்காரணத்தா லெனனில்.

அநாதியே மலமில்லாதவனுமாய் ஆயுள்வேதத்தினையு மக ணிதத்தையும் மந்திரவாதத்தினையும் இரதவாத முதலியவற்றை யுங் கூறுகையா லவனே சர்வஞானவான். அவன்வாக்கியமே மு தனூல

இஃதாகவேணுமோ! கபிலர் பதஞ்சலி முதலாயினோர் வா க்கிய மாகாதோ வெனில்?

அவர்களுக்குச் சர்வஞானமில்லாத படியாலும்,பிராகிருத வேஷத்துடனே கூடினவர்களாகையாலும் அவர்கள் வாக்கிய முதனூலெனப் பெறா

அளப்பரிதா மப்பொருளை அக்கச் செய்வாக்கிய மாமென றேரிடத்திலே சொன்னது [illegible] யாதாதெனனு

DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

மந்த வாக்கியங்க ளெல்லாஞ் சாபேட்சை நிரபேட்சையாக விருக்குமாகலால் அதனைய வவிட்டபடாதென வறிக

ஆனாலிப்பட்டாமுதனில் அறியும பகுதியாதெனின்?

ஓரிடத்திலே சுத்தசாமாத்தியத்தாலும வத்துசாமாத்தியத்தாலும சங்கிதாக்தரங்களைக்கொண் டறிவதென வறிக

காரசிங்கமுதலிய வுபபேதங்க ளிருநூற்றேழும வழிநூலெனப்பெறும்

முனனூலாகிய வாகமத்தையும வழிநூலாகிய வுபாகமங்களாக விரண்டினையு முற்றுநோக்கி யுக்கிரசசோதி சத்தியசசோதி பிரகற்பதி பரதா முதலாகிய வாசாரிமார்ற செய்யப்பட்ட போககாரிகை மோட்சகாரிகை பரமோட்ச நிராசகாரிகை முதலிய பிரகரணங்களைப் புடைநூலெனப பெறும

இத்தனைமையை யுடைத் தாகையினாலே.

சுருதிசிவாகம இத்தசசுருதியு மாகமங்களுமே பிரமாண
மொழிபச் சொ சாத்திரம, மற்றுக ளெலலாவற்றிற்கும பி
ன்னுவ தொன்றி ரமாணிகக முண்டென்று சொல்லப பெரு
வலே

சொல்லுவார் இதற்கு வேறாயிருக்கிற சாத்திரமே பிரா
கமங்களையோ மாணியமென்று கூறுமவர்களுக்கு நாமென
சொல்லொன்று ன சொல்லப்போகிறோம எ-று
சே

ஏகார மீற்றசை

இதற்கு அசிதம் காமிகம் மிருகேந்திர பத்ததி சுவாயம்புவம பராசரோப புராணம் சாவசித்தாந்த சயங்கிரகங்களிலறிக. (௪௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் வேத சிவாகமங்களே சித்தாந்த சாஸ்திரமென்பது திடப்படுத்துகின்றது

அருமறையாகமமுதனூ லனைத்துமுரைக்கையினு லளப்பரிதாமப்பொருளை-முடிய வோதியுணர்தற் கரிதாகிய வேதசிவாகமங்க ளிரண்டிலு மெல்லாத்தையுஞ் சொல்லுகையினு லதனுடைய பொருளைப் பூர்வோத்தர விரோதமற வேகவாக்கியத்தைப் பண்ணவரிது,—

அரனருளா லணுக்கள் தா மறிந்தவளவிற் றர்க்கமொடுத்தரங்களினுற ரலித்தனியே பின்சமயஞ்சாதித்துத்தருவார்கள—விஞ்ஞானத்தின் பொருட்டு ருஷிகள் ஞானப்பிரதமான மந்திரங்களைத் தபசுடனேகூட புனாச்சரணையண்ணி சர்வமந்திரபதியானவ ரநந்தத மந்திரங்களுக்கும் தபசுக்குந் தக்க விஞ்ஞானத்தைப் பிரகாசிப்பிக்க அந்த ஞானத்தளவு வேதாகமங்களிலே யேகதேச மறிந்து தாமறிந்த மட்டிலேகொண்டு பூர்வபக்ஷமும சித்தாந்தமுமாக வேறுவேறு சமயமாகச சாதித்து அந்தப்படியே தாங்கள சாஸ்திரங்களும் பண்ணுவார்கள் —

மிருதி புராணங் கலைகள மற்றுமெல்லா மெய்க்நூலின வழிபுடையா மங்கம வேதாங்கஞ் சுருதி சிவாகம மொழியச் சொல்லுவதொன்றிலலைச சொல்லுவார தமக்கறையோ சொல்லொணுதே- ஸ்மிருதிகள் புராணங்கள் சிக்ஷா கற்பம் வியாகரணம நிருத்தம ஜோதிஷம சந்தசு என்னுங் கலைகள் இவைநூ சாஸ்திரமென்று சொல்லப்பட்ட வைகளெல்லாம் யதார்த் தோகத்தமான வேதசிவாகமங்களாகிய முன்னூலினுடைய வழிநூலும் அதற்கு சமான தந்திரமும் வேதத்துக்கு அங்கமுமாம பிரதானமாச் சொலலப்பட்டது வேதமுஞ் சிவாகமமு மொழி

யில்லை, இதற் கத்தியமாக சைவத்திராகமங்களை யிடத்து நூலாதிக ளென்றென்று சொல்லுமவர் வேதபாஹ்ய ராகையால் அசம்பாவிதரானதென்று கொண்டவர்களோ டுத்தரஞ் சொல்லலாகாதென்றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

முன்னூல் வழிநூல் சார்புநூலிதுவென்று சாற்றுகின்றனர் அணுக்கள் - ஆன்மவர்க்கங்களாகிய மனுமுதலிய மிருதிகர்த்தாக்கள் வியாசர் முதலிய புராணகர்த்தாக்கள்,—பன்னின—மிருதி-முதலியன, வேதமாகிய முதனூலுக்கு,—வழிநூல் ஆறங்கமுடை-சார்புநூல் முதனூலாகிய சைவாகமத்துக்குபாகமங்கள் வழிநூல்,பிரகரணமுதலியன சார்புநூல்,—சுருதிசிவாகம மொழிபச சொல்லுவதொன்றில்லை- வேதத்துஞ் சிவாகமத்தும் புறச்சமய முட்சமய மடங்குதலால் ஸம்ஸ்தவஸ்துக்கு வியாபகமாய்க் கொண்டு புறம்பா பொருசாஸ்திரமில்லை,—அறை - உத்தரம்

மற்றவை வெளிப்பொருள்.

ஒன்றில்லையென்பதற்குப் புறச்சமய முட்சமய சாஸ்திரங்களும் பிரமாணங்களாய்க் கொண்டு இல்லையென்று பேசவேண்டாம், தமதுவதிப் பிரமாணங்களென்று பௌஷ்கராதிகளிலும் ஸ்ரீகண்ட குருபண்ணின சர்வாகமப் பிராமாண்ணியத்துஞ் சாதித்திருத்தலால்.

சிவஞானயோகியருரை வருமாறு.

நூலெனப்படுவன வெல்லா மொருகர்த்தனவாதலின்றி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்கநூலெனப் பலவேறுவ

கைப்பட்டுமென்பே னூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கண் மே
ன்மையுடையனவாம். அவற்றுள் ஏனைச் சமய நூல்களெல்லாம்
முதனூலாகிய வேதாகமப் பொருளை முழுவதும் முள்ளவாறுணே
ரமாட்டாதார் அவற்றுட் சில பொருளைச் சமுத்திரகலச நயம்
பற்றி ஆண்டாண்டெடுத்துக் கொண்டு தத்தமறிவளவுக்கேற்பத்
தொகுத்தும் விரித்துஞ் செய்த நூல்களாதலின் அவையெல்லாம்
புறப்பக்க நூலெனப்படும். சமய நூலல்லவாகிய மிருதிபுரா
ணங்களைகள், மற்றுமென் பதனாற் றழுவப் படும் உபாகமமுதலா
யின வெல்லாம் அவ்வேதாகமப் பொருளை உள்ளவாறுணர்ந்தோ
ர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற் பொருட்டு நால்வ
கையாற் பிறழாவண்ணம் வழிப்படுத்துச் செய்த நூல்களான
அவை வழிநூலெனப்படும். ஏனைக் காருடம் தக்கிணமுதலிய
வாமாகமங்களும், சிக்கை கற்பசூத்திரமுதலிய வேதாங்கங்
களும், முறையே அவ்விரண்டனையு முள்ளவாறுணர்ந்தார்க்குச் சா
ர்பாயப் புடைபட்டு நிகழ்தலின், அவை சார்புநூலெனப்படும்.
இவ்வாறன்றி வேதாகமங்களின் அடங்காத பொருளை யொன்ற
னை யெடுத்துக்கொண்டு சுதந்திரமாய்ச் செய்யுநூல் ஒன்றுமில்
லை, உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகள் எங்கடவா
ரெனப்படாம்.

சமுத்திர கலசநயம்பற்றி யெடுத்துக்கொண்டு தருதற்கு
ம் அவர் சுவதந்திர ரல்லரெனபார் அரனருளாலென்றார்.

பிறநூ நிகழ்பூர்வமென முன் வருதலின் நன்கு வேறுகூ
றுதொழிகார.

சாதித்த தருவர்க்கென விடையும்,
ஆபெய பதனை மேலுங் கூட்டுக.
ஆகமாஞ்சுதனை அங்கமென்றது தனக்குறை.
ஒன்றுமொனமுமை விகாரத்தாற் றொக்கது.

அறை : தந்த

எல்லா மருமறையாகமத்தே காணப்பட்டவைகுக்கலை இனிது விளக்கியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொன்ன வேதாகமங்களிலே எல்லா மடங்குமாகில் மற்றுமுள்ள நூல்களேதுக்கென்ற மாணுக்கரை நோக்கி அருளிச் செய்கிறார்.

அருமறையாகமமுதனூல் - அறிதற்கரிய வேதாகமங்களிரண்டும் எல்லாத்துக்கு முதனூல்,—அவைதந்த முறைக்கையினால் - சாரத்தையும் விரியச் சொல்லுகையினாலே,—அளப்பரிதாம - அந்த நூல்களிலுண்டாகிய வஸ்துக்களைச் சேர வாராயுந் தன்மைக்கு அரிதாயிருக்கையினாலே,—அப்பொருளை யரனருளாலுணர்க்கட்டருவர்கள் - அந்த வேதாகமங்களை விரியச்சொன்ன வஸ்துக்களைத் தம்பிரானார் திருவருளைப்பெற்ற பெரியோர்கள் அந்தத் திருவருளினாலே சுருக்கி ஒருநூலாகச்செய்து அந்த வஸ்துத்தைப் பக்குவான்மாக்களுக்குக் கட்டுரைப்பார்கள் இது வொழிந்து,—பின் தனித்தனியே தாமறிந்த வளவிற் றற்கோடிகதரங்களினாற் சமயஞ்சாதித்து - இந்த நூல்களையறிப் பினையும் பரமேஸ்வரனை யறியாதவர்கள் ஒருவர் சொன்னதொருவர்க்குப் பொருந்தாமல் தங்கள் தங்கள் போதத்துக்குத்தக்க சங்கற்பங்களையும் அதனுடன் கிராகரணங்களையும் வைத்துக்கொண்டு அதுக்கதற்குத்தக்க சமயங்களைச் சாதித்துச் சொல்லுகிற நூல்களும் அநேகம். இப்படி யான்மபோதத்தாலே சொல்லுகிற விந்த நூல்களுமின்றி,—மிருதிபுராணங் கலைகள் மற்றுமெல்லா மெய்க்நூலின் வழிபுடையாம - மிருதி என்கிற நூலும் பு

ராணங்களும் சாத்திரங்களும் இவைமொழிந்து சொல்லப்பட் டவையெல்லாம் சத்தியமாயிருந்தன வேதாகமங்களின் வழி யே வந்த விரிந்த நூல்களாம் — அங்கம் வேதாங்கம் - சந்தை கற்பம் வியாகரணம் நிருத்தம் சிக்ஷை சோதிடம் என்னும் அங்கம் ஆறும் வேதத்துக்குச் சொரூபமாயிருக்கும் — சுருதிசிவா கமமொழிப்படிச் சொல்லுவதொன்றில்லை- வேதமும் ஆகமமுமொ ழிப வேறொன்று இப்படி சர்வத்தையுஞ் சொல்ல மாட்டா து — சொல்லுவார்தமக் கறையோ சொல்லொணாதே - அந்த நூல்களைப்போல மற்றுள்ள நூல்களையும் நூலென்றுசொல்லு வாரக்கெல்லாம் சொல்லவோ! சொல்லவென்று விசாரிக்கில் சொல்லிமுடியப் போகாது

பின் றனித்தனியே தாமறிந்த வல்லிற் றர்க்கமோ தெதாரங் களினால் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றது பரசமயி களைப் பற்றியதெனக் கொள்.

உலகாயதன் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றதற் குப் பிரமாணம் அவன்மறுப்பு பரபக்ஷம் அவனமதம்- க-செ "இந்திரபுரோகித னியம்புமொரு நூலின், றந்தரமெனுந்தறிவி னோடருளிலாமல், சந்தனைபுயத்தமனை மாலைகடையங்க, வந்தி யுலகத்துலகாயதனுரைப்பான்" என்றும்,

புத்தன் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றதற்குப் பிரமாணம் அவனமதம்-க-செ. "நீதியார்வேதநூலின் நெறி யலாவறங்களெல்லாம், மோதிபோனைக்கசேல முடையராயுடல்மு டிப, போதினைமாதினமேவு புத்தர்காலவரினும் வைத்துச, சாதிதானிலாதகொள்கைச் சவுத்திராந்திகன் மொழிந்தான்" என்றும்,

அமணன் சமயம் சாதித்துச் சொன்ன நூலென்றதற்கு ப் பிரமாணம் அவனமதம் - ரு - செ. "அந்தவாய்மொழிபி

ஞாலவனைத்தும் மாதிரியோர் முதலானாரும், விதமானிட மாங் கிடாதவனை யிங்கியம்பிய விதனையாரும், வந்தகாலமுயிர் தனமதனைப்பற மாறுவினைமருவு புறகலம், பந்தமகிழ்விருட ருதிபாயினை படைப்பதின்றியுள பதத்தே" என்றும்,

மீமாங்கிசன் சமயஞ்சாத்துச் சொன்ன நூலென்றதற்கு ப் பிரமாணம் பட்டாசாரியன் மதம் - க - செ. "வேதமேபோ திசாத்திரமென்றுவினைவிலேறச், சேதமாங்கன்மஞ்செய்ய ச் செபமுனிசெப்புநூலில், நீதியைக்கொண்டிபட்டா சாரியனிகழ்த் திரமைம், யோதலீராலத்துள்ளே யுள்ளவாறுரைக்கலுற்றும்" என்றும்,

மாயாவாதி சமயஞ்சாதித்துச் சொன்ன நூலென்றதற் குப் பிரமாணம், அதன்மதம் - க - செ. "நானேபிரமமென றுரைத்து ஞாலமபொய்த்தேரொளைவெண்ணி, பூனேபுருநதின றுயிர்கட் குபதேசஞ்செய்தவரும் மாறுதிகேடனுமாய மாயாவாதிபோகித், தானேயுரைக்குமினநூலி லுண்மைதன னைச்சாற்றுவாம்" என்றும்,

பாஞ்சராத்திரி சமயஞ்சாதித்துச் சொன்ன நூலென்றத ற்குப்பிரமாணம் அவன்மதம் - க - செ. "ஆதிபாயருவமாகி யகண்ட பூரணமாய்ஞானச், சோதியாய்நின்றமாயன் சுவேச்சையா லுருவுகொண்டு, நீதியார்கருணையாலே நீள்கடற்றுயின்றுநாலு, மோதினானென்றுபஞ்ச ராத்திரியுரைப்பனாரே" என்றும்.

அகசமயங்கள் ஆறுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, வேதமும் ஆகமமும் சர்வக்ஞையுஞ சொல்லுகையினாலே அந்த வாக்கியமெல்லாத்தையும் அறிதற் கரிதானதுகொண்டு அவையிற்றுக்குள் வேண்டத் தக்கவை பிறரைத்த தம்பிரானார் திருவருளைப் பெற்றவர்கள் அருளிச்செய்தன சாத்திரங்களும் வேண்டினதென்றும் அந்த இரண்டு நூலு

சுருமம் அர்த்தந் தெரியாமல் தங்கள் சித்தக் கருத்துக்குத் தக்க சமயஞ் சாதித்துச் சொன்ன நூல்களும் அநேக முண்டென்றும் இப்படிச் சொல்லப்பட்ட நூல்களு மிருதிமுதலான மற்றுமுள்ள நூல்களும் இந்த விரண்டு நூலினுமுள்ள தொழிந்து வேறல்லவென்னு முறையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(நூலெனப் படுவனவெல்லாம் ஒருசிகரணவாதலினறி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்ஷநூலெனப் பலவேறு வகைப்பட்டு மேன்மேனூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாம்),—சமயம்-அவற்றுள்ளே சமயநூல்களெல்லாம்,—அனைத்துமுரைக்கையிலுளப்படுகிறாம்-அனைத்துங் கூறுகையிலுளவிடற்கரிய.—முதனூலருமறையாகம மப்பொருளை - முதனூலாகிய வேதாகமப்பொருளை,— அணுக்களாரனருளாற் பின்றனித்தலின்றிய - முழுவதும் முனைவா தைவரமாட்டாத உயிர்கள் முதல்வனருளாலவற்றுட் சிலபொருள்களைச் சமுத்திரகலசந்யாயம்பற்றி யாண்டாண்டெடுத்துக் கொண்டு,—தாமறிந்தவளவில் - தத்தமறிவளவிற் கேற்ப,—தர்க்கமொடுக்கரங்களினூற் சாதித்துத் தருவர்கள் - பூர்வபக்ஷ சித்தாந்தங்களினூற் சாதித்துத் தொகுத்தும் விரித்தும் செய்தநூன்முதலான வைபெல்லாம் பூருவபக்ஷ நூலெனப்படும்—மிருதி புராணங்கலைகள் மற்றுமெல்லாம்-ஸ்மிருதி நூலல்லவாகிய மிருதி புராணங்கலைகளை. மற்றும் என்றதனால் [illegible] முதலாயின வெல்லாம்,—மெய்ந்நூலின்வழிபரம்-அவ்வேதாகமப்பொருளை யுள்ளவாறுணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற்பொருட்டு நால்வகை யாப்பினுள் ஒன்றால் வழிப்படுத்துச

செய்த நூலாகலா னவை வழிநூலெனப்படும் — அங்கம் வேதாங்கம் புடையாம் - ஏனைக் காருடந் தக்கண முதலிய வாகமங்களுஞ் சிக்ஷை கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களு முறையே யவ்விரண்டனையு மோரளவாற் றுணாதற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின் அவைசார்புநூலெனப் படும்,—சுருதி சிவாகம மொழிப்ச சொல்லுவதொன்றில்லை-இவ்வாறன்றி வேதாகமங்களினடங்காத பொருளா யொன்றனை யெடுத்துக்கொண்டு சுதந்தரமாய்ச் செய்யுநூ லொன்றுமில்லை —சொல்லுவார் தமக்கு றைபோ சொல்லொணாதே - உண்டென்று சொல்லிப் பின்னும் பேதைகட்குத் தாஞ்சொல்லுதன் முடியா தென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

ஆதிகாலத்திலே ஞான மொன்றாயிருக்க வேதாகமங்களென
விரண்டாகக் கூறியதென்னெனில்? அதிகார பேதத்தா
லென்பதூஉ மதனுட் சித்தாந்தமே சிறப்புடைத்
தென்பதூஉ முணர்த்துகின்றார்

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் பிறந்தநூல்க, ளாதிநூலநாதியம லன்றருநூலிரண்டும் பூரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்புநூலா, நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபாதராக்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத், தீதில்பொருள் கொண்டுரைக்கு நூலசைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும் (௧௫)

(இ-ள்) வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் — ஆப்த வாக்கியமாகிய வேதமு மாகமமுமாகிய விரண்டுமே யுலகத்திற் சிறப்புடைய நூல்கள். அஃதெக்காரணத்தா லெனின்?

வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதி நூலநாதியமலன் றருநூ லிரண்டுமே — அநாதியே மலமில்லாத நிட்களமான சிவனிடத்தினின்று வாக்குப் பிரபஞ்சமாகப் புறப்பட்டதை யொருவராலு மதனைக் கர்த்தத்திரிக்கப்படாதபடியாலே, மகாசதாசிவதேவநாயனா ரதனைத் தரித் தான்மாக்களுக் குபயோகப் படுகையின் பொருட்டுத் தமது மேலான பஞ்ச வதனத்தி னின்றுஞ் சிருட்டி காலத்திலே வேதாகமங்களை யுண்டாக்கினது.

அந்த வேதத்தில் விரித்துக் கூறியவற்றை யுற்றுநோக்கி
யக்ஷபாதர் நியாயத்தையும்
கணாதர் வைசேஷிகத்தையும்
கபிலர் சாங்கியத்தையும்
சைமினிபகவான் மீமாஞ்சையையும்
வாசுதேவன் வைட்டணவத்தையும்
பிரபாகரன் பிரபாகரத்தையும்
வேதாந்தத்தையும்

வேதத்தினவழியே யுண்டாக்கின சாத்திரங்களும் ஆதி நூலெனப் பெறும்.

இவ்வியாகமங்களை யுற்றுநோக்கிச் சிவர், மாயாவாதம ஐக்கியவாதம் ஈசுரைச்யம் சிவசம்வாதம் பேதவாதம் பாடாண வாதி சங்கிராந்தவாதி சமவேதவாதி [illegible] பரிணாமவாதி எனக்கூறிய சமயபேதங்களைப் பிரித்தார்கதி யதனை

றுத்துச் சாத்திரங்களாக்கிக் கூறினவைகளு மாகிநூலென்ன படுமா

"நூலென்னப்படுவது நுவலுங்காலை, முதலுமுடிவு மாறு கோளின்றி, யுண்ணின்றகன்ற வுரையொடு பொருந்தி, நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே" என்று மிலக்கணத்தை யுடைத்தாதலா னூலென்றுரைத்தார்.

அந்தமூன்னூலாகிய விரண்டுநூலுந் தம்மி லொக்குமோ வெனனில்?

ஆரண நூல் பொது	வேதநூல் சாமான்யமெனப் பெறும் அஃதெக்காரணத்தாலெனனில்? அதோமுகமான தற்புருடாதியான நாலுதிருமுகத்தி லுண்டாகையால்

அந்த நாலுவேதமுந் தம்மி லொக்குமோ வெனனில்? அஃதொவ்வா.

சத்தியோசாதத்திற் றோற்றிய இருக்கு, அதைப்பற்ற வாமத்திற் றோற்றிய யசுர்வேதஞ் சிறப்புடைத்து, அதனைப்பற்ற அகோரத்திற் றோற்றிய சாமஞ்சிறப்பு, அதனைப்பற்றத் தற்புருடத்திற் றோற்றிய அதர்வணம் விசிட்டமெனவறிக

எனவே முகபேதத்தா லிதுவு முத்தரோத்தரந் தம்மில் விசிட்டமாயிற்று.

சைவ மருஞ்சிறப்பு நூலாம்	காமிகமுதலிய இவ்வாகமங்க ளிருபத்தெட்டுஞ்சிறப்புநூலெனப்பெறும். அஃதெக்காரணத்தாலெனனில்?

ஈசானமுகத்திற் றோன்றினமையாலு மதற்குமேற் றோற்றமின்மையாலும் இதற்குமேலான நூல்கள் வேறின்மையாலுஞ் சிறப்பாயிற்று.

சிவனுடைய திருவாக்கொன்றாயிருக்கப் பொதுவென் றுஞ் சிறப்பென்று மிருவிசப்படுத்துக் கூறிய தென்னையோவெனில்? அதிகாரிகள் பேதத்தால் பரம்பரமென விரண்டாயிற்று

அஃதென்போலெனில்? கண்ணொன்றாந் தன்மையெல் லாருக்கு மொன்றாயிருக்கவு மிராத்திரியில் § விலாளத்துக்கு மானுடர்க்கும் விலக்கணமாகச் சிவிக்கக் கண்டோமே! ஆதலா லதுபோலெனவறிக.

§ விலாளம் - பூனை.

நீதியினூல காசருஞ் சத்தி னிபாதத்துக்கு நிகழ்த்தியது

அந்த வேதாகமங்களைச் சிவ னிரண்டுப் பேதத்துக் கூறினது "உலகமென்பதுயாக்கோர் மாட்டே" என்பதனால், வேதத்தில் பார்ப்பார்முதலிய வன்னத்தார்க்கும் சதுராசிரமிகளுக்கும் மனுமுதலிய நீதிசாத்திரத்தின வழியினா ரனுட்டிக்கு மதிகாரியாக்குங் கூறியது. சைவாகமத்திற் கூறியது, நால்வகைச் சத்திநிபாதானு குணமாகச் சிவதீக்கையினையுடைய அதிகாரி யாகிய பக்குவான்மாக்களுக்கே கூறியது அஃதெச்சிறப்பினை யுடையதென்னை?

நின்மறையினுழி பொருள் வேதாகமத்திற் லபொருள் சொன்னுரைக்கு நூல் சைவம்

அநேகசாகையினையுடைய வேதநூல் ஓரணமாலையு மாயையாகிய வசித்தையையு மற்றுமொழிவுபட்ட பொருள்களையுங் கூறும், அந்தவேதாந்தத்திலே கூற்றமறபதியினது சொரூபத்தைத் தெளிவுபெறப் பிரித்துக் கூறமாட்டா, இதுவேயந்த மூபபொருளையும் விரித்துக் கூறுமாதலால்.

புறனூ னிகழ் பூர்வம்

வேதத்திற் சொல்லுமது பூர்வபக்கமெனப்படும்.

சிவாகமங்கள் இவ்வாகமங்கள் சித்தாந்த மெனப்பெ
சித்தாந்த மாகு றும். எ-று
ம.

சிறிகாகமங்க ளிருபத்தெட்டையும் பஞ்சவக்த்திரத்திற் றோன்றிற்றென்றும், சிறிதுவசன மீசானத்திற் சிவபேதம் பத்து முபாகமங்க ளுடனே கூடியும், அங்கங்க ளுடனேகூட நாலுவேதமு முண்டாயிற்றென்றுச் சொல்லியிருக்க, ஈண்டீசானத்திற்றானே தோற்றுமென் றுரைத்த தென்னெனில்? சிருட்டி பேதத்தா லாகமபேதங் கூறியதென் றாசாரியர் தாமே விரோதமின்றிப் பொருளுரைப்பது தனமமென்று மதங்காகமத்திற் கூறுகையா லவ்வழியே கொள்க வெனவறிக

இதற்கு காமிக தந்திராவதாரத்து மாசாரியாபிடேகத்தும் பஞ்சப்பிரம பாடியத்தும் சுவாயம்புவத்தும் மோகசூரோத்தரத்தும் மூலதந்திராவதாரத்தும் இரத்தினத்திரயத்துமறிக

“வேதமோடாகம மெய்யா மிறைவனூல், லோதும்பொதுவுஞ் சிறப்புமென்றுள்ளன, நாதனுரையிவை நாடி லிரண்டந்தம், பேதமதென்னிற் பெரியோர்க் கபேதமே” எனவறிக. (௧௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலுமகதபகே புரகடை.

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் - வேதம் சிவாகமமென விரண்டே சாஸ்திரம். பிரமவிஷ்ணுவாதி தேவர்கள் ருஷிகள் பண்ணின சாஸ்திரங்களல்லவோவெனனில்?—

வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதி நூல் - வேதசிவாகமங்க ளல்லாமல் தேவர்களாலும் ருஷிகளாலும் சொ

ல்லப்பட்ட சாஸ்திரங்களெல்லா மிந்த வேத சிவாகமங்களிலே யேகதேசத்தை யெடுத்துக்கொண்டு தங்களுடைய பசுஞானத்தினாலே சொல்லப்பட்ட வாதிசாஸ்திரம்—

அநாதியமலனா றருநூலிரண்டும் - அநாதி நின்மலனாகிய சிவனாலே சொல்லப்பட்டதாகையால் வேத சிவாகம மிரண்டு மநாதி நூலென்று சொல்லப்படும். ஆகில் வேதமென்றுஞ் சிவாகமமென்று மிரண்டாகச் சொல்லவேண்டுவா னேனென்னில்?—

ஆரணநூல் பொதுச் சைவ மருஞ்சிறப்புநூலாம் - வேதமானது சூரியன்முதலாக ஈச்வரனை முடிவாயுள்ள தேவர்களையெல்லா மாராதிக்கச் சொல்லுவதாகையாற் பொது, சிவாகமஞ் சிவனொருவனையே யாராதிக்கச் சொல்லுகையால் சிறப்புநூலாகும். இவ்விரண்டுக்கு மதிகாரிகளாரென்னில்?—

நிதியினுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது - கிரமத்திலே யஞ்ஞாதி யனுட்டானங்களைப் பண்ணிப் புண்ணியவுலகங்களையடைய விச்சிப்பவருலகர், அவர்களுக்குச் சொன்னது வேதம். சிவசத்தி பதிந்தவர்கள் சிவ சாயுச்சியத்தையடைய விச்சிப்பவர் சத்திநிபாதர், அவர்க்குச் சொன்னது காமிகாதி சைவாகமம். ஆகில் வேதமுஞ் சைவமும் வேறேயோவென்னில்?—

நின்மறையி னொழிபொருள் வேதாந்தத் தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் - வேதத்திலே தேவதாராதனையைச்சொல்லி, யதற்குக் கர்ஷணாதி பிரதிஷ்டாந்த முச்சவாதி தீர்த்தாந்தமான தந்திரங்க ளொன்றுஞ் சொல்லாதபடியாலே யவைகளையும், சார்வாகாதி பூர்வபக்ஷமும் நிராகரணமுஞ் சொல்லாதபடியாலே யவைகளையும், வேதாந்தத்திற் குற்றமற்ற சூக்குமார்த்தத்தையும், திருவுள்ளத் தடைத்துக்கொண்டு விளங்கக் கூறியது சைவாகமமாகையால், வேதத்துக்குஞ் சைவாகமத்துக்கும் பேதமில்லை.

பிற நூலதிகழ பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்-வேதசிவாகமங்களுக் கங்கியமாய்ப் பிரகாசிக்கப்பட்ட பசுசாஸ்திரங்களெல்லாம் பூர்வபக்ஷம், காமிகாதி வாதுளாந்தமான சைவாகம மிருபத்தெட்டுஞ் சித்தாந்தமென் றிதன்பொருள்.

× காஷணம் - இழுப்பு

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

அப்படிச் சமய சாத்திரங்களெல்லாம் வேதாகமங்களிற் சுருக்கிச் சூசிப்பித்திருக்கும், அவைகளையுருத்திர தேவருஷிகள் தனித்தனி விரித் தட்சமய புறச்சமய சாத்திரங்களாகப் பண்ணினார்களென்றும், அப்படியாகில் வேதமென்று மாகமமென்றுஞ் சாத்திரமிரண்டு வருவானேனென்ன, பிரகரணவிரோதங்களிருந்தாலும் வியாகரணநீதியிற் சாமானிய விசேஷசாத்திரங்களைப்போற் பொதுச் சிறப்புச் சாத்திரங்களாயிருக்குமென்றும், அப்படி வைதிகசம்மதமாய் விருத்தாசல புராணத்திலு மாகமத்திலு நிரூபணத்திற் குறித் துரைக்கின்றார்.

வேத மூலகர்க் கென்றது-லௌகிகம், வைதிகம், அத்தியான்மிக மென்கின்ற முச்சாத்திரப் பிரசித்த வுலோகதன்ம வருணாச்சிரமவழி வழுவாமைமுதலியவர்க்காதி வைதிகப் பிரமவிசாராதிகளிற் பரபுத்தி பண்ணி யொழுகுமலபரிபாக மில்லாமாந்தர்க்கென்று பொருள்.

சிவாகமஞ் சத்திநிபாதர்க்கென்றது அதிமார்க்க மாந்திரமென்கிற விருசாத்திரப் பிரசித்தமா யுலோகதன்மாதி விடாதும விட்டு மிருக்குஞ் சிவதீக்ஷாவான்களாய்ச் சிவதன்மநிரி

பதார்த்த ஞானத்தின சமாதியுபாயஞ் சம்பாதிக்கும் மிச
சாவானஞ்கென்றும பொருள

நீணமறையி னொழிபொருள-வேதத்திற கூட்டாப பொ
ருள

வேதாந்தத் தீதில்பொருள் - சித்தாந்தத்துக் கொத்து
விரோதியாத வேதாந்தப்பொருள்.

கொண்டு - அங்கீகரித்து.

. பிறநூல திகழ பூர்வம் - வேதவேதாந்த முதலிய சாஸ்தி
ரங்கள பூர்வபட்சம்.

மற்றைய் வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வேதமுஞ்சிவாகமமுமிரண்டும், ஏனையோர் செய்யப்படும வழி
நூல் சார்புநூல் பூருவபக்க நூல்களினின்று முகவைத் தெளிந்
தாகு ஒருவாற்றானுமியைபின்றி அவையனைத்திற்கும் முதனூ
லாகி அநாதிமுத்தனாகிய இறைவனாற் செய்யப்படுநூலாக, ஏனைய
வெல்லாம் இவையிரண்டினுள்ளும் விரிந்த நூல்களாகலின இ
வ்விருவகைநூலுமே நூலென்றுயர்த்துக் கூறப்படுவனவாம.
அற்றேல், முதல்வனாற் செய்யப்படு முதனூலை ஒன்றாகவுந் தெ
ளாமல் இங்ஙன மிருவகைப்படுத் தெண்ணியது என்னையெனி
ன? அஃதொக்கும். முதல்வன் பெருங்கருணையாளனாகலின
உலகத்தாருய்தற் பொருட்டின்கு சதிசியோது மண்டபா ருய்தற்
பொருட்டுந் திருவுளத்திற் கொண்டு பொருள் படைத்த தோன்று
ஞ் சூத்திரமும், அதனை யவ்வாறன்றே வெளிப்படுத்துத் தெளித்துரை
க்கும். பாடியமும்போல, முறையே வேதமுஞ் சிவாகமமுஞ்

செய்யப்பட்டனவாகலான் அவையிரண்டுமே முறையானே பொதுநூல் சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேதத்திற் கூறுங் கருமகாண்டப்பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சிநின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு விளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேறாய வேதத்தின் பூர்வபக்கப்பொருளைச் சொல்லுமேனை நூல்களெல்லாம் பூர்வபக்கநூலெனவும் அதனைச் சித்தாந்தப்பொருளைச் சொல்லுவதாய சிவாகமஞ் சித்தாந்த நூலெனவு மாமென்பதாம்.

சிவாகமத்தின் சிறப்புக் கூறியவாறு.

இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாம் போலியென்பது சொற்கிடக்கை முறையானும் மகுடாகம முதலியவற்றானு மறிக.

இவை மூன்றுசெய்யுளானும் அவ்வ நூல்களினியல்புகூறு முகத்தான் மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

வேதமென்றும் ஆகமமென்றும் புராணமென்கிறது முதலாக இப்படி நூல்கள் வெகுவிதமா யிருக்குமோவென்ற மாணாக்கனை நோக்கி மேலு மருளிச்செய்கிறார்.

வேத நூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் - வேத நூல் என்றும் ஆகமநூலென்றுஞ் சொல்லப்பட்ட விரண்டுமே நூலென்பது, மற்றுள்ள நூல்களெல்லாம் நூலல்லவோ வெனின்?— வேறுரைக்கும் நூலிவற்றின் விரித்தநூல்கள் - இதுவொழிந்து வேறுசொல்லப்பட்ட நூல்களெல்லாம் இவையிரண்டிலே

னின்றும் தங்களுக்கு வேண்டத்தக்க வாக்கியங்களை யெடுத்துக்கொண்டு விரித்துச் சொல்லப்பட்ட நூல்களாம்—ஆதிநூல் - அவையிரண்டையு முன்னூலென்று சொல்லப்படும்—அநாதியமலன்றரு நூலிரண்டும்-அநாதியே மலரகிதனாயிருந்துள்ள பரமேசுவரன் அருளிச்செய்யப்பட்டதா யிருக்கும் வேதாகமங்களிரண்டும் ஒருவ னருளிச் செய்ததாகுமாயின் ஒருநூலே யமையாதோ இரண்டு நூலேன்னெனில்?—ஆரணநூல்பொது - இவையிரண்டில் வேதநூல் சாமானியமா யிருக்கும்,—சைவம் அருளுசிறப்பு நூலாம் - ஆகமந்தான் விசேஷத்துவமுடைய நூலாயிருக்கும். இந்நூல்க ளாருக்குச் சொன்ன தென்னில்?—நீதியினுலகர்க்குஞ் சத்தினிபாதர்க்கும் நிகழ்த்தியது - உலகியலபு வேதநூல் ஒழுக்கமாயிருக்கையால் உலகத்தி லுள்ளவர்களுக்கும், ஆகமநூல் சத்திநிபாதம் பதிந்த பக்குவரா யுள்ளவர்களுக்கும்சொன்னதாயிருக்கும். இந்த நூலிரண்டையும் பொதுவென்றுஞ் சிறப்பென்றுஞ் சொன்னது எப்படியென்னில்?—நீணமறையினொழிபொருளை வேதாந்தத் தெளிபொருளைக்கொண்டுரைக்குநூல்சைவம்-அருநூலாயுள்ள வேதத்திலுஞ் சொல்லாத உபதேசப் பொருள்களையும் வேதாகமத்திலே சொல்லப்பட்ட குறமில்லாத வாக்கியங்களையுங் கூட்டிக்கொண்டு தெளியச் சொல்லப்பட்ட நூல் சிவாகமம்;—பிறநூல் திகழ்பூர்வம்-பெரிய வேதமானது விளங்குகின்ற பூர்வபாகமா யிருக்கும்,—சிவாகமங்கள் சித்தாந்தமாகும்- இவ்விஆகமங்கள் உண்மையாகிய உத்தரவாக்கியமாயிருக்கும்.

இதன்றிச் சொல்லிய வேதாகமங்க ளிரண்டும் அநாதியே பரமேசுவரனாலே யருளிச் செய்யப்பட்டதென்றும் மற்றுண்டான நூல்களெல்லாம் அந்த விரண்டு நூலிலும் விரித்த நூல்களென்றும், வேதம் பொதுவாக வுலகர்க்குச் சொன்னதென

னம், ஆகமம் உண்மையாகச் சத்திநிபாதம் பதிந்தவர்களுக்குச் சொன்னது என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

வேதநூல் சைவநூலெனவிரண்டே நூல்கள்-வேதசிவாகமமிரண்டுமே, ஏனையோர் செய்யப்படும் வழிநூல் சார்புநூல் பூர்வபக்கநூல்களி னொன்றாகவைத் தெண்ணுதற் கொருவாற்று மியையின்றி யவ்வியல்லைத் திறக்கு முதனூலாகி,—அநாதி யமல னருநூல்-அநாதி முத்தனாகிய விறைவனாற் றரப்பட்ட நூலாக,—வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதி-ஏனைய வெல்லா மிவையிரண்டி னின்றும் விரிந்த நூல்க ளாகலின்,—இரண்டுநூல்- இவ்விருவகை நூலுமே நூலென் றியாத்துக் கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனாற் றரப்படு முதனூலை யொன்றாக வைத் தெண்ணாம லிங்ஙன மிருவகைப்படுத் தெண்ணிய தென்னையெனில்? அஃதொக்கும்,—நீதியினா லுலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும் நிகழ்த்தியது,—முதல்வன் பெருங்கருணை யாளனாகலின் முறையி னுலகத்தோ ருய்தற்பொருட்டுஞ் சத்திநிபாதமுடையா ருய்தற் பொருட்டுந் திருவுளத்திற் கருதிப பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமு மதனை யவ்வாறாக வொட்டாது தெளித்துரைக்கும் பாஷியமும் போல முறையே வேதமும் சிவாகமும் செய்யப்பட்டன வாகலான்,—ஆரணநூல்பொதுச் சைவமருஞ்சிறப்பு நூலாம்-அவையிரண்டு முறையானே பொது நூல் சிறப்பு நூலெனப்படும். சூத்திரமும் பாஷியமும்போல வேறுவைத் தெண்ணப்பட்டன —நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் தீதில் பொருள்கொண் டுரைக்குநூல் சைவம் - இங்ஙனம் வேதத்துட் கூறும் கருமகாண்டப் பொரு

ளக்கட் கின்றியமையாது வேண்டப்பட்டெருசி நின்றனவாம் பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குவது சிவாகமமாதலான்,— பிறநூ நிகழ்பூர்வம்-இதனின் வேறாகிய வேதத்தின் பூருவபக்கப் பொருளைச் சொல்லுமேனை நூல்களெல்லாம் பூர்வபக்க நூலெனவும்,— சிவாகமங்கள் சித்தாந்தமாகும்-அதனை சித்தாந்தப் பொருளைச் சொல்லுவதாய சிவாகமம் சித்தாந்த நூலெனவுமாம்.

சிவாகமத்தின் சிறப்புக் கூறியவாறு

இவை மூன்றுசெய்யுளானும் அவ்வவ் நூல்களதியல்பு கூறு முகத்தான் மேலது வலியுறுத்தப் பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் கூறியவாகமத்திலே சிவன் ஞானாசாரியனை
யதிட்டித்து மலங்களைநீக்கி முத்தியடைவிப்ப னெ
ன்று சொல்லியிருக்க வந்தவுண்மை யறிகிலார்க்
கில்லையென வுணர்த்துகின்றார்

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண்சேர்
த்திச் செங்கமொன்றி லேசிவன் முத்தராக்கவைத்தாண்
டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந் தம்பொழிந்து வ
ரும்பிறப்பையறுத்து, முத்தாந்தப் பதமலர்க்கீழ்
வைப்பனென்று மொழிந்திடவு முலகரெல்லா மூகக
ராகிப, பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பா
வப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரென்னேபாவ
தே. (௧௧)

(இ-ள) சித்தாந்தத்தே சிவனறனறிருக கடைககண சோதி — ஆகமததின விசுவாசததை யுடையவான் மாககளை முததி யடைவிககையின பொருட்டுச சிவன றனதகாருணணியததிருலே ஞானாசாரியனை யதிட்டிததுத திருநோககாகிய தீககையைச செய்து,

செநந மொன்றிலே சீவனமுததராகவைத தானேமலங்கழுவி — மநதிர சாமாத்தியத்தாலே வாகீசுர வாகீசுரி யிடததிலே சனிபபித தநேக சனமததுககுக் காரணமாகிய கனமமுதலியபாசங்களைச சோதித்துப் போககி விடுதத வொரு சனனத்திலே தானே வருததமறசசீவனமுததி தனமையை யடைவிபபது.

ஆனமாககளுககு மலமபோனது காணுதபடியாலே மலக்ஷயம பிறநததினறு எனில்? மநதிரசாத்திடைக காணுதிருககவும் விடமபோகக கண்டோமே! அதுபோலக கனமாதியுந தமது பலஙகெட டானமாககளை வாதையணுகு தென வறிக

இதன்றியொருவன றீக்கை பெறுமுன்னுந் தலையினிறுக கபபினபுநிறுத்தா லதனினுங் குறையுமென றுகம மோதுகை யாலுமறிக.

ஞானவாரிமடுதது — இநத சீவன்முத்தனைச் சுவானந் தானுபூதியாகிற சமுத்திரத்திலே யநவரதமும முழுகும்படி யழுத்தி,

ஆனந்தம் பொழிநது — ஆநநதமாக்கடலாஞ்சிற் றம்பலம்” எனறுர், இவனுககுச் சிவத்துவாபி வியததியை நனகுப் பிரகாசிப்பித்து, அஃதாவது ஆணையினிடததிலே வியாபிததிருக்க மநதமானது பருவம் வநதவாறே புறம்பே புறபபடும் பிரகாசிக்குதலை பொழிதலெனறுர். இத்தனமை யுடையனுதலால்,

வரும்பிறப்பை யறுத்து — அனலிடைப்பட்ட வித்தானது மேலு முளைத்தற்குச் சாமர்த்திய மில்லாதவாறு போல இவனு மீண்டு மொருசரீர மெடுப்பி யாகப் படியே பண்ணி.

முத்தாந்தப்ப தமலர்க்கீழ் வைப்பன — முத்திக்கு முடிவாகிய சாயுச்சியமாகிற தனது பாதமாகிற திருவடிக்கீழ் வைப்பன். பாதமென்கிற மலரைப் பதமலரென்றார்.

என்றுமொழிந்திட்டும் — சிவ னிப்படி யான்மாக்களுக் கனுக்கிரகஞ் செய்வனென்று இவ்வாகமங்கள் முறையிடுகையிலு மதனை யறியாமல்,

உலகரெலா மூடராகி — பிரபஞ்சத்திலுண்டான வான்மாக்க ளிந்தச் சித்தாந்த சாத்திரத்தி னுதிக்கதனையு முண்மையினையு மறியாம லிவ்வாறுகைகையினாகண் மயக்கத்தைப் பொருந்தி மூடரானவர்கள் வியாபாரத்தைப் பொருந்தி நானறிவின்றித் திரிவர்கள். அஃதெனபோலெனனில்?

பித்தாநகப் பெருமபிதற்றுப் பிதற்றி — பித்துக்கொண்டவனைப் போலப் பரசமயிகள் சாத்திரமாகிய பசுசாத்திரத்தி லொருப்பட்டிந்தச் சித்தாந்தத்தை நிந்திக்கையால்,

பாவப்பெருங் குழியில் வீழ்ந்து வெறிதவென்ன பிராந்தே. — ஆகமங்களை யதிபாதகமாதலால் ரௌரவமுதலிய நரகத்திலே விழுந்து நெடுங்காலங்கிடந்து நரகசேடம் புசித்தற்பொருட்டு மீளவுஞ் சனனத்துக் கேதுவாகிறார்கள், இதுவென்ன மயக்கந்தான். எ-று.

சிவன - எழுவாய், வைப்பன் - பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரம் கிரணம் மதங்கம் வாதுளம் ஞானரத்நாவலி இரத்தினத்திரையத்து மறிக. (கக)

சிவாக்கிரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சித்தாந்த முத்தியே முத்தியென்பது கூறுகின்றா ரென்றான திருக்கடைக்கண்சோதி மலவசமழி ஞானவாரி படிந்து தாகமொழிந்த சரணவரு மபிறப்பையொழித்து சன னமொன்றிலே சீவன் முத்தராகவைத்து முத்தாந்த பதமலர்க் கீழ் வைப்பனென்று சித்தாந்தத்தே யொழிந்திடவு முலக ரோ மூர்க்கராகிய சித்தாந்தப் பெருமையறியாது பிறப்பிறப் பா வப் பெருங்குழியில் விழுந்திடவே ரிதுவென்னைபயிராகவே - என மாறிய பொருளுணர்க்க - சிவஞானசாரியருக வந்து நின்று பசுரு வானமாக்கலைக் கருணைகடாக்ஷ * வீக்ஷணம் பண்ணிக் கருணு ஜலத்தினுமேல் பந்தானமாகிய வழுக்கைக் கழுவிச் சிவஞான சமுத்திரத்தை யான்மாவினிடத்திலே பிரகாசிப்பித்துச் சிவா நந்தமழையை யொழுகப் பெய்து தனது வசமாக்கி யிரண் டறக்கலந்து இனிமேல் வருஞ் ஜநநத்துக் கேதுவான சஞ்சித காமியங்களைக் கெடுத்து தேகத்திலே பிராரத்தம் புசிப்பதாக ஜீவன்முத்தருக வைத்துத் தேகாந்தத்திலே சாயுச்சிய முத் திக்கு முடிவாயிருக்கிற தம்முடைய பாதமலர்க்கீழ் வைப்ப னென்று சிவாகமத்திலே † சங்கோத்தரங்களுடனே விளங்க க் கூறியிருக்கவும், உலகவாழ்வே பரமப் பிரயோசனமாக மதி ப்பவரெல்லாந் தங்கள் மயக்கத்துக் கேற்ற ‡ சுஷ்க வாக்கங் களைப் பெரிதாகக் கூப்பிட்டுப் பாவமிகுதியினாற் பெரிதாகிய நர கக்குழியிலே விழுவார்கள், இந்தப் பிராந்தருக் கென்ன சொல் லப்போகிறோமென றீசனையொருள்

* வீக்ஷணம் - பார்வை, † சங்கோத்தரம்-வினாவிடை, ‡ சுஷ்கம் - வீண், அதாவது அடியையே மலராகச் சொல்லுவது போல.

பரமென்றது-சிவம்

மலமென்றது - § ரூபகம் அஹங்காரமது, பிவஞானமலம், சிவானந்தத்தேன

சிவஞானானந்தானுபவி யானமா

நிறைவிட்டவென்றது சிவனை யான்மா வியாபியான, ஆன்மாவைச் சிவன் வியாபித்திருப்ப னென்றதை யறிவித்தது

அன்றென்பது சிவ ஞானானந்தானுபவத்தைக் கொடுத்து முத்தியிலுஞ் சிவ ஞானமாவை ரக்ஷிப்பனென்ப தெனவறிக

§ ரூபகம் - உருவகாரம்

இதனால் சிவசமவாதிகள் முத்தியிலங்கமே யான்மா சிவ னாகிறனென்றும், சிவன் ரக்ஷிப்பனென்றும், முத்தியிலே ஸ்வ தந்திரனே! சிவனால் ரக்ஷிக்கவுந் தேவையில்லை, ஞானக்கிரியா பிவியத்தி யொழிந்து சிவானந்தானுபவ மில்லையென்பதை நிரா கரிக்கப்படுகிறது

தமாஹு — பௌருஷ பாஶாம்ஶு உக்ராணேஷு போதீக்ஷிபதிரோஜ்ஜாதே | இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சித்தாந்தத்தினைச் சிறப்பு புணர்த்துகின்றார்.

சித்தாந்தத்தே - சிவாகமாசார்யர்களிடத்திலே,—திருக்கடைக்கண் சோதி - தனது திட்சாரூபக் கிரியா சத்தி சம்பந்தமுடையனி,—ஞானவாரிமடுத்த காணந்தம் பொழிந்து - சிவத்துவக்குறிச் சிறசத்தி சமுத்திரத் தழுத்திச் சிவத்துவாபி வியத்திலடங்க சிவானந்த மனுபவித்து,—முத்தர்க்கப பாதமலரக்கீழ வைப்பன - நின்மல நிர்ச்சய தனசத்திசமான சத்திமானக ளாக்குவன,—இதுவென்னபிராந்தே -இதுவேதுமயக்கம்.

மற்றைய வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

இத்தன்மைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி, வீடுபேற்றிற்கு நேர்வழியென உபமன்னியன் அகத்தியன் முதலிய உபாத்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும், அதனைத் தெளியமாட்டாது தத்தம்மதத்து வேண்டியவாறெல்லாந் துரபிமானங்கொண்டு பிதற்றுமவருலகத்தார் என்கடவரென்பதாம்.

ஓத்துக்கிராதியென்றாற்போல முத்தியாந்தம் முத்தாந்தமென மரீஇயிற்று

பித்தாந்தம் பித்தமுடிபு, பெருட்பித்தென்பதாம்

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

சத்திநிபாதம் பதிந்த பக்குவான்மாக்களை சிவன் இரக்ஷிப்பனென்றதென்னைப்பு, ஆன்மாக்களிலே விசேஷமானவர்களா குருவாய் இரக்ஷிக்குந்தொழிற்கு சிவன் அவரான் மனுஷித கோசரனாயிருக்கையால் அவன் குருமூர்த்தமாகான் என்ற பாட்டாணவாதியை நோக்கியருளிச்செய்கிறார்.

சித்தாந்தத்தே சிவன்றன்றிருக்கடைக்கண் சேர்த்திச்செனனமொன்றிலே சீவன்முத்தராக்கவைத்தாண்டு மலமாசழுவி ஞானவாரியடுத்து ஆனந்தம்பொழிந்து வரும்பிறப்பையறுத்து முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகமெல்லாம்-அன்வயம் - சிவன்றன் றிருக்கடைக்கண் சேரா

த்துச் சன்னமொன்றிலே ஜீவன்முத்தராக மலபாசமுற்றவி ஞான
வாரிட்டுத் தானந்தம் பொழிந்து வருப்பிரபையை யுற்றதுமுப்
தாந்த பாதமலாகிழ வைப்பபென்று சித்தாந்தத்தே
சொல்லா மொழிந்து—வும் என்று பொருட்கூட்டுக.—முன்சன்ம
ங்களிற் செய்த சுபோபலத்தாலே இருவினையொத்துச் சத்தி
னிபாதமடைந்த பக்குவான்மாக்களைப் பரமேசுவரன் தன்
காருண்ணியத்தினாலே திருக்கண் சாத்தியருளி அந்தச் சன்ம
த்தனிலே சரீரத்திலே கூடியிருந்து புசிக்கச்செய்தே அந்த
ஆக்கிறகிற வுணவைமையுந் தரிசிப்பித்து அடிமைகொண்
டருளி ஆணவமலத்தாலுண்டாகிய அஞ்ஞானத்தையும்போக்கி
ஞானசாரத்திலே யுஞ்சித சிவபந்தத்தையு நிறைத்து அநாதி
யே தொன்றுதொட்டு வருகிற சன்னங்களையும் போக்கி முத்தர்
களுக்கெல்லா முதல்வாயிருக்கிற தன் ஸ்ரீபாதத்தினிடத்தே சேர்ப்
பனென்று ஆகமத்திலே யருளிச்செய திருக்குறென்று உபா
த்தோர்கள் எல்லாருஞ் சொல்லுகைச்செய்கையும் ஆன்மாக்கள்
விசேஷவான்களோ ஆசாரியமூர்த்தியென்று,—மூர்க்கராகி—
த்திராஞ் சொன்னவழி யொன்று மறியாமல் மூடராய்,—பிதா
த பெருமபித்தறுப்பித்துத்—பித்தரா ஸ்வாயம்போல அறிய
ம் அறியாமலுமாயிருக்கிற பெரியவார்த்தைகளையுஞ்சொல்லி,—
பாவப்பெருங்குழியில் வீழ்ந்திடுவார்—துக்கங்களுக்கு கேதுவான
பிறப்பென்கிற குழியிலே விழாநிற்பார்கள்,—இதுவென்ன பிரா
ந்தே—இந்த மகிமையக்க மேதென்று அறிந்திலோம்.

என்னவே ஆகமக் குருவே சிவமென்று சொல்லுமென்ற
கருத்து. இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், அ-சூ, ௪-
வெ, "அறிவிக்கவன்றி யறியாவுளங்கள், செறியுமாமுன்னே
குறைக—ணெறியிற, குறையுடைய சொற்கொள்ளார் கொள்ப

...திப் பிறவிடன், குறைவிலசகன் சூழ்கொள் பவர்க்கு" என்று ... கொள்க.

இதனாற் சொல்லியது, ஆன்மாக்களுடைய பக்குவத்திலே ... சாரியா மூர்த்தியாக வெழுந்தருளித் திருக்கண்சாத்தி ... அந்த சனனத்திலே ஜீவிக்கையிலே முத்தராயிருக்கத்தக்க ... யிலேவைத்து இரக்ஷித்து மலத்தைநீயும்போக்கி ஞானாகரத்திலே யமுத்தி சிவானந்தத்தையும் நிறைத்து அநாதி ... வருகிற சனனத்தொந்தங்களையு மறுத்துத் தனது திருவடித் தாமரையின் கீழே வைப்பனென்று ஆகமத்திலே யருளிச்செய் ... டென்று பெரியோர்கள் சொல்லுகைச் செய்கையும், சாத்திரங்களையு மறியாமல் மூடராயப் பித்தரைப்போல வறிவுமறி ... வுமாய்ப் பிதற்றிக்கொண்டு திரிந்து நரகமாகிய பெரியகு ழிகளிலே விழாநிற்பார்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருடை வருமாறு.

இதனாற்றேசிகர் சிவஞான திருக்கடைக்கண் சோதித்து-ஆ ... சாரியமூர்த்தமா யெழுந்தருளிப் பக்குவான்மாக்களுக் ... கு சனனமொன்றிலே திருநோக்கு முதலிய தீக்கைசெய்து,—ஞானவாரிதித்தானந்தம் பொழிந்து - ஞானசமுத்திரத்தின் ... முழுகுவித்துச் சிவானந்த மேலிடச் செய்வதற்கும்,—சென்ம ... மொன்றிலே - இவ்வொரு பிறப்பிற்றானே,—மலங்கழுவி-மும்ம ... லங்களு நீக்கி,—சீவன் முத்தராக்கவைத்து-சீவன்முத்தரா ... க்கச் செய்து,— ஆன்மாக்கள் பிறப்பையறுத்து-அவ்விடத்து மே ... லான நம பிறவியை யொழித்தற்கும்,—முத்தாந்தப் பாதமலர்க ... ழைப்பன-முத்தியந்தத்திற் றிருவடிக்கீழ் டைக்கிறக்கசெ

ம் நரகும வழியாகலான,—என்று சித்தாந்தத்தே யுபகரேலா மொழிந்திடவும் - இத்தனைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி விட்டுப்பிறிதொரு நோவழியென உபமன்னியன் அகத்தியனாமுதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசம்ஹிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்த கோதவும்,—மோக்கராசிப் பித்தாந்தய பெரும் பித்தேறிய பித்தர் - அதனைத் தெளிட்மாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாந் தாபிமானங் கொண்டு பித்தர் முடிவாகிய பெரும்பித்தா பித்தர்,—பாவப் பெருங்குழியில் விழுந்திடுவ ரிதுவென்ன பிராந்தே - அப்பாவத்தா னரகத்தில் விரவா இதுவென்ன மயக்கம்.

மறைஞானதேசிகர் உரை

இப்படி யெல்லா வான்மாக்களுஞ் சிவனுக்குச் சமமான தன்தன்மை யடைந்திருப்பார்களே யெனில்? அநேகேசுரத்துவம் வர வதனைக் குறித்து எல்லாத்தையு மறியுந் தன்மையு மெல்லா முண்டாக்குந் தன்மையுஞ் சாவான்மாக்களுக்கும் அநுக்கிரகஞ் செய்யு முறைமையுஞ் சிவனுக்கே யியல்பாக வுள்ளதென றுணர்த்துகின்றார்.

இறைவனவான் ஞானமெல்லாமெல்லா முதன்
மையநுக் கிரகமெல்லா மியல்புடையானியம்பு, ம
றையாக மங்களினு லழிவெல்லாந்தோற்று மரபினவ
ழி வருவோர்க்கும் வாராதோர்க்கும், முறைமையினு
வினைப்பத்துன் பங்கொடுத்தலாலே முதன்மையெலா
மறிந்துமுயங் கிரண்டுபோகத், திறமதனல் வினைய
றுக்குஞ் செயதியாலே சேருமனுக் கிரகமெல்லாங்
காணுந்தானுஞ் சிவன்பால். (௧௭)

(இ-ா) இறைவனுவான எல்லா ஞானமெல்லா முதன்மை யநுக்கிரக மெல்லா மியல்புடையான் — பரமகர்த்தா வானவன் யாவனெனில்? சர்வஞ்ஞத்துவத்தையுஞ் சர்வகர்த்திருத்துவத்தையுஞ் சர்வானுக்கிரகத்தையுமாக விம்மூன்றினையு மொருவராற் றருதலின்றித் தனக்கியல்பாக வுடையவன் யாவனொருவன் அவனே பரமகர்த்தா மேற்சொற்றத்த முறைபானே வகுத்துணர்த்துகின்றது.

இடப்பு மறை டாகமங்களிற் லறிவெல்லாந்தோற்றும் — சிவன் சர்வஞ்ஞனென் றறியப்படும் அஃதெக்காரணத்தா லெனில்? வேதாகமங்களை யுள்ளபடியறிந்து சொல்லுகையினாலே "நலிந்தது மந்திரத்தூய காணக் கசடின் மை-யெனுங்கவிதை போனமற் றெல்லாம்" எனவறிக. சர்வகர்த்தா வென்பதற்குப் பிரமாணம் யாதெனில்? அன்வயத்தாலே யவன் கருத்தாவென் றறிக. பெண் முதலா காரியத்தைப் பெற்று என்பதனாலறிக.

இதற்குப் பாராக்கியை மிருகேந்திரம் வாயவ்ய சங்கிதையி னறிக.

மரபின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கு முறைமையிற் லின்பத்தன்பங் கொடுத்தலாலே முதன்மை யெல்லா மறிந்தும் — சிவன் சர்வகர்த்தனென் றறியப்படும் அஃதெக்காரணத்தா லெனில்? ஆன்மாக்கடோறுந் தானனன்னியமாய் நிறைந்துநின்றவ னருளிச்செய்த திவ்யாகமங்களிற் சொன்ன வழியே புண்ணியஞ் செய்யுமவர்களுக்கு மதன்வழி வாராமற் பாவஞ்செய்வோர்க்கு மதற்கேற்ற வினைவழிப் பிறழாம லிருவினைப் பலன்களையுங் கொடுக்கையாலே யிவனுக்குச் சர்வகர்த்தத்துவ முண்டென் றறியப்பட்டது சர்வகர்த்தனென்பதற்குப் பிரமாணம்.

"அன்றுவய வெதிரேகத் தாலவனறிவை - யுன்னுக வேதாக் கருத்தா வுறாது" எனவறிக.

இதற்குப் பராக்கிமை மிருகேந்திரத்து மறிக.

முயபகிரணம் போகத் திறமத் தால் வினையறுக் குஞ் செயதியா லே சேதனனுக்கி ரகம்

ஆன்மாக்கட்கு அபரபோகம் பரபோக மாகிய விரண்டினையு மவாக்கள்செய்த வினைக் கீடாக வந்தந்த தேசத்திலே யிருந்து துய்ப்பித்து அக்கொலைந்தவாறே பராமுத்தியை யளிக்கையாலு மிவன்சாவானுக்கிரகனென்னு மதுவு மறிந்தோமாதலாற்,

எல்லாங்காணு தலாஞ் சிவன்பால

இங்ஙனங் கூறிய சாவஞ்ஞத்துவஞ் சாவகாத்திருத்துவமுஞ் சாவானுக்கிரகமு மாக விம்மூன்றுஞ் சிவனிடத்திலே யுண்டாகையா லவனே பரமகாத்தா எ-று.

இதற்கு மிருகேந்திரஞ் சிந்தியவிசுவத்து மறிக.

அந்தாதிகளுங் காத்தாவல்லோ வெனின்? "ஆக்கையுடைய வதிகாரியாக் கெல்லா - மாக்கையிலானேபதியாவான்" "முன்படைப்ப னாக்கையிலா மூலனுயிர்கட்கவனுற் - பின்படைப்ப ராக்கையுடை பெற்றார்" என்பதனாற பரமசிவ னிவர்களுக்குப் படைப்பு முதலிய தொழிலைச் செயவென்று கற்பித்து பின்பவனேவலாற பஞ்சகிருத்தியங்களையுஞ் செயவாக ளென வறிக.

இதற்குப் பௌடகரத்தும் வாயவவிய சங்கிதையினு மறிக. (சஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— o ——

மேல் சர்வஞ்ஞத்துவ சர்வ காத்திருத்துவ சர்வானுக்கிர கத்துவ முடையவனே பரமகாத்தாவாகையா லிந்த லக்ஷண

ஙகளெல்லாஞ் சிவனுக்கே யுள்ளதாகக் காணப்படுகையால் சிவனே பரமகர்த்தாவென்று கூறுகின்றது

இறைவனுவா னெல்லாஞான மெல்லாமுதன்மை யநுக்கிரசமெலா மியல்புடையான்-சகத்து ஸ்வாமியாகிறவ னெல்லா வறிவையு மெல்லாத்துக்குங் கர்த்தாவாகையு மெல்லாத்தொழிலு மநுக்கிரகமே யாகையையும் ஸ்வபாவமாயுடையவன்

அதனாற் சிவற்கே - நாங்காண்பதுஞ் சிவற்கே இந்தலக்ஷணங்கள் நாஞ் சிவனிடத்திலேயே காண்கிறோமாகலாற் சிவனே பரமகர்த்தா, இந்த லக்ஷணஞ் சிவனிடத்திலே கண்டதெவ்வா றெனனில்?

இயம்புமறை யாகமங்களினு லறிவெல்லாந்தோற்றும வனாவின் வழி வருவோர்க்கும் வாராதோர்க்கு முறைமையாலின்பத் துன்பங் கொடுத்தலாலே முதன்மையெல்லா மறிந்து முயங் கிரண்டுபோகத் திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமநுக்கிரகமெல்லாங் காணுதும - சிவன் சொல்லப்பட்ட வேதாகமங்களினுலே சர்வஞ்ஞனென்ப தறியப்பட்டது அந்த வேதாகமங்களின்படியே நடந்துபோகும் நடவாதபேர்களுக்கு கிரமத்திலே சுகத்தையுந் துக்கத்தையும் புசிப்பிக்கையினால் சர்வ கர்த்தாவென்ப தறியப்பட்டது புசிக்கப்பட்ட சுக துக்க போகங்களினால் புண்ணிய பாபங்களையொழிந்து, புண்ணிய பாபங்களொழியவே சத்திநிபாத முண்டாம், சத்திநிபாதத்திலே யநுக்கிரகம்பண்ணுவர். ஆதலால் சிவனே பரமகர்த்தாவென்பது சித்தமென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவன் சர்வஞ்ஞன் சர்வகர்த்தா சர்வாநுக்கிரகன் என்று சாற்றுகின்றார்.

எல்லாஞானம - சாவஞஞதுவம,—எல்லாமுதன்மை-சாவ காததிருததுவம,—எல்லா மனுக்கிரகம - சாவானுக்கிரக துவம இம்மூன்றும,—இயல்புடையான - வேதாகமங்களால் ...கிரீ சிலா சாறறுந தடத்தலக்ஷணமனறிச சுத்த சைவசித்தாந திகள சொலலுஞ சொரூப லக்ஷணமாகவுடையன — இறைவனாயுள்ளவனே - சாவசகத காததாவானவன,—இடமபுகுந்தே யுயிர மங்களினுலல அறிவெலலாந தோறறும-சாவஞஞதுவ மறியப் படும —வாரவினைவழி வருவோாகளும வாராதோருமுயிர் விதிதி லேஷததபபடி நடபபோாகளும நடவாதோாகளும —முதன மையினு வினபததுனபங கொடுததலாலே முதனமை யெல லாமறிநதும - சாவகாததிருததுவ மனுமிததேம,—முடங்கு னெறி போகததிறமகளுல - அனுபவிககப்படுமிருக்கங்களுக்குத் தனமையினுலே,—வினையறுககுஞ செயதியாலே - புனிதராய்ச் சுகாபப போககும பரிசினுல,—சிவாகே-சிவனுககுத்தானே சேருமனுக்கிரக மெல்லாம - பொருந்துஞ சாவானுககிரகம,—காணுதுநாம - அனுமானிததறிவோம

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

முற்றுணாவு முதலிய மூன்றுஞ் சிவபிரானுககே யுளவென்பது மேறகூறியவாறறாற் பெறப்பட்ட மறையாகமமியம்பலின முதலிய மூன்றேதுவானும முறையே யறியக்கிடந்தமையான், அங்ஙன மிம்மூன்றுமுண மியல்பாகவுடைய வம்முதல்வன் றன்னையொன்றிலே திருக்கடைக்கண் சோததி ஞானவாரிமந்தாரன தம பொழிதறகும அச்சனை மொன்றிலேதானே மலங்கமுவிச் சிவனமுத்தராக வைதது காணடு அருளபிரபைய யருத்தற்கும பாதமலாகிழ வைததற்கும் வல்லவனுவானெனபதாம

இறைவனென்றது வல்லவனென்னுந் துணையாய் நின்றுந் பசு சனங்களினு மாகாதவற்றையெல்லாம் ஒருசனந் கூடே தானே யத்தனமாகச் செய்யுமாறு யாங்ஙனமெனப்பாரை நோக்கி, அவ்வாசங்கைக்கேற்ப லேதனை வலியுறுத்திபவாறு

இதனுட் பிறரெல்லாம் ஒழியப்பன்றுதன மேலுங் கூறிய தொன்றேனுமே வழுப்பட்டமைத்துரைப்ப

இவை யிரண்டுசெய்யுளானுஞ் சைவத்திறத் தடைசற சிற ... பட்டது

நிரம்பவழகியருரை வருமாறு.

எனவாகிய கர்த்தாக்களில் சிவனே கர்த்தாவென்றதற்குப் பிரமாண மென்னவோவென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்

இறைவனானவன் - கர்த்தாவென்று சொல்லப்படுகிறவன்,— ஞானமெல்லா மெல்லாமுதன்மை யனுக்கிரகமெல்லா மியல்புடையான் - சர்வஞ்ஞத்துவம் சர்வகர்த்தத்துவம் சர்வானுக்கிரகம் என்று சொல்லப்பட்டவையிற்றை அநாதியே தனக்கேனவே யியல்பாகவுள்ளவன் இந்த முறைமைகளை யுடையவனை அறியும்படி யெப்படி யெனில்?— இயம்புமறையாகமங்களினுற்றிவெல்லாந் தோற்றும் - முன்னூல் வழிநூலின்றியே தன்னிச்சையாலே அவனருளிச் செய்யப்பட்ட வேதாகமங்களினாலே அவனது சர்வஞ்ஞத்துவ மறிந்தோம்,— வனாவினவழி வருவோர்க்கும் வாராதோர்க்கும் - அவனியமித்தவழியே வருகிறவர்களுக்கும் அந்தவழி வாராதவர்களுக்கும்,— முறையினுலின்பந் துன்பம் கொடுத்தலாலே முதன்மையெலாமறிந்தும் - அவரவர் செய்த கன்மத்துக் கிடாகச் சுகதுக்கங்களைக் கொடுக்

கையாலே அவனது சர்வ கிருத்தியமெல்லா மறிந்தோம்,—முற்று கிரணித்துப் போகத்திறந்தனால் வினை யறுக்குஞ் செய்தியாலே-அவரவர்க்குப் பொருந்தப்பட்ட சொர்க்க நரகங்களினுண்டாகிய வினைப்பலன்களைப் புசிப்பித்துத் துலைப்பிக்கிறமுறைமையாலே,—சேதனர்களுக்கெல்லாங் காணுதும் - பொருந்தப்பட்ட சர்வானுக்கிரகமெல்லா மறிந்தோம்,— நானுசிவமுமே - இதுவன்று சொல்லிவந்த முறைமைகளெல்லாம் நாம் சிவனுக்கேயுள்ளதென்றறிந்தோம், ஆகையால் சிவனே கர்த்தா

இதன்றிச் சொல்லியது, சர்வஞ்ஞத்துவமும் சர்வ முதன்மையும் சர்வானுக்கிரகமும் இவை மூன்றும் அநாதியே யியல்பாக வுடையவனே கர்த்தாவென்றும், முன்னூலின்றியே வேதாகமங்களைத் தானே யருளிச்செய்கையாலும், அந்த நூலின்வழி வந்தோர்க்கு இன்பத்தையு மந்த நூலின்வழி வாராதவர்களுக்குத் துன்பத்தையுங் கொடுக்கையினாலும், இப்படி இன்பத்துன்பங்களைப் புசிப்பித்துக் கன்மத்தைத் துலைப்பித்து இரக்ஷிக்கையினாலும், முன்சொன்ன முறைமைகளெல்லாம் சிவனுக்கே யுண்டாயிருக்கையினால் சிவனே கர்த்தாவென்னு முறைமையும் அறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

எல்லாஞான மெல்லாமுதன்மையெல்லாமநுக்கிரகஞ் சிவற்கே நாங்காணுதும் - முற்றுணர் வுடைமையும் முடிவிலாற்றலுடைமையும் பேரருளுடைமையும் ஆகிய மூன்றுஞ் சிவபிரானுக்கே உளவென்பது,—இயம்புமறைக ளாகமங்களினு லறிவெல்லாந் தோற்றும்- சொல்லுகின்ற வேதாகமங்களை யருளிச்செய்த வேதுவா லெல்லாஞான முடைமை தெரியப்படும்,—மரபின்

வழிவருவோர்க்கும் வாராதோர்க்கு முறைமையினே வினைப்ப
யனைக் கொடுத்தலாலே முதன்மையெல்லாமறிதும் - வேதாகம
வழி நெறிச் செல்லுவோர்க்குஞ் செல்லாதோர்க்கும் முறை
யாற் சுகதுக்க மளித்தலாகிய யேதுவா னெல்லா முதன்
மை தெளிப்படும்,—முடங்கிரணேடு போகத் திறமதனால் வினை
யறுக்குஞ் செய்தியாலே யநுக்கிரக மெல்லாஞ் சேரும் - அநு
பவியாநின்ற சுகதுக்கமாகிய கூறுபாட்டாலகற்கேதுவாகிய
விருவினைகளை நீக்குமேதுவா னெல்லா மநுக்கிரக முடைமை
தெரியப்படும்—இயல்புடையா னிறைவனுவான - அங்ஙனமிம
மூன்றுகுண மியல்பாக வுடைய வம்முதல்வனை சனனமொன்றி
லே திருக்கடைக்கணசாத்திஞானவாரிமடுத்து ஆனந்தமபொ
ழிசறகும் ஜனன மொன்றிலேதானே மலங்கழுவி சிவனமுதக
ராகவைத்து ஆணவெருமபிறப்பை யறுத்தறகும பாசமவா
கழி வைத்தறகும வல்லவனுவன.

இவையிரண்டு செய்யுளானுஞ் சைவத்திறத்தடைதற் சரப
புக கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யான்மாக்களுக் குபகரிக்கிற சிவனது சரியை
முதலிய தொழிலைத் தொகுத் துணாத்துகினறா

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ரமார்க்கந் தாத
மார்க்கமென்றுஞ் சங்கரனையடைய,* நன்மார்க்க நாலி
வைதான் ஞானயோக நற்கிரியா சரியையென்று நவிற
றுவதுஞ்செய்வர், சன்மார்க்க முத்திகள்சா லோகசிய
சாமீபிய சாரூபியசாயுச்சியமென்று சதுர்விதமா,

முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர்
மூன்றினுக்கு முத்திபதமென்பர். (௧அ)

(இ-ள்) சன்மார்க்க சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாசமார்க்க மென்றுஞ் சங்கரனையடையு நன்மார்க்கநாலு

சன்மார்க்கமுதலிய நல்வழிகள் சிவனையடையு மதற்கு நான்கு முதற்கோத்ரோங் தாழுங்கபலத்தையுடையன அவையாவை யெனில்?

இவை தான் ஞானயோக நற்கிரியா சரியையென்ன விற்றுவதுஞ் செய்வார்

அவைகளுக் கடையே ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதஞ் சரியாபாதமென்று பரியாயப் பெயராகிப் பிரிந்துக்கூறுவார்கள். தான் - அசை.

இங்ஙனம் கூறிய நாலுக்குப் பெறும்பல மியாதெனில்?

சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர்வித மாம்

சைவரடையு நல்வழி சன்மார்க்க முதலிய நான்கினுக்கு எதிர் நிறைநிறையாக அவனுடன் புசிக்கப்பட்ட சாயுச்சியமு மவனைப்போல மானமழுவுங் காளகண்டமுமாயிருக்குஞ் சாரூபமும் அவன் சமீபத்தி லிருக்குஞ் சாமீப்பியமு மவனுலகத்தி லிருக்குஞ் சாலோகமுமாக நான்குவகைப்பட்டிருக்கும்.

முன்மார்க்க ஞானத்தாலெய் துமுத்தி முடிவென்பர்

முதற்கண் கூறிய சன்மார்க்கமாகிய ஞானபாதத்தின் வழியின் நடைப்படுக்கு மதற்குலடையுஞ் சாயுச்சியமே பரமமான முத்தி,

டகாரோபிருதமாயு மதனறிச சாலமப சிவசாக்ஷாதகாரமெ னறுஞ சாலமப சிவாபரோக்ஷ ஞானமெனறுஞ சொலலபபடு ஞ சாலமபனாஙகி சிவபோகததிற கஙகச சிவபோகமாயுமிருககு ம பிராகிருத மனசசஙகறபக கிரிடையுணமணககு மபரோக்ஷம போ லபிநபக குறிபபிராகிருத பவுதத சிவஞானச சிறபபுப பி ரவாகலக்ஷண சாலமபசிவசமாதி மூலசாலமபசிவததியானமே யோகமெனறுஞ சகமாரககம,—

சறபுததிர மாரககம - சிவபூசாதி,—

தாத மாரககம - சிவசேவாதி,—

சனமாரகக முததிகள - நலலமாரகக முததிகள்-

சதாவிதம - நானகுவகை,—

மூனமாரகக ஞானததால்-சனமார்கக சமாதியால,—

முடிவெனபா - பரமுததியெனபா

மறனறிய வெளிபபொருள

சனமாரகக முதலிய நானகினும் பொதுச சிறபபாகச சனமாரககததிற சனமாரககம சனமாரககததிற் சகமாரககமு சனமாரககததிற் புததிரமாரககமு சனமாரககததிறறுதமாரககம, சகமாரககததிற சனமார்ககமு சகமாரககததிற சகமாரககமு சகமாரக்கததிர் புததிரமாரககஞ் சகமாரககததிற றுதமாரககம, புததிரமாரககததிற சனமாரககம புத்திரமாரககததிற சகமாரககம புததிரமாரககததிற புத்திரமாரககம புததிரமாரககததிற றுதமாரகக்ம, தாதமாரகத்திற சன்மாரககம தாத்மாரககததிற சகமாரககமதாதமாரககத்திற புத்திரமாரக்கமதாதமார்ககததிற றுதமார்கம் எனறிப்படி சனமாரககமுதலியநானகுந தனிததனி ஸ்ரீகணடநாத அனநதேசுர சதாசிவ சாலோககியாதி அவரவர் சமபல சாயுசசியாநதமுத்திகளாயுஞ் சதாசிவ தத்து

லசதாகதமேற சதத ததுவததான சிவததுவததான ததுவ நிதமாகிய பரசிவததான முததானவானிலே பரசிவ சாலோககியாதி சாவததிர பரசிவ சமபல பரசிவ சாயுசசியாநத முததிகளாயிருககும நயிஷ்டிகீ தீக்ஷாமுததிகளாயுங காலாககினியாகி யனுசிருதாநத புவனபதி சாலோககியாதி புவனபதி சமபல புவனபதி சாயுசசியாநத முததிகளாயிருககும பவுதிகீ தீக்ஷாமுததிகளாயும அனநதவிதமா யிருககுமெனவறிக

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

அஙஙனஞ் சைவததிறததடைநதார் சிவனடியைச சேரதறகுரிய நெறி காதமாாககமுதலிய நானகுவகைப் படுதலின, அவையே சரியைமுதலிய பெயரான வழங்கபபடும அவறறிறகுப பயன முறையே சாலோகமுதலிய அபரமுததியுஞ சாயுசசியமாகிய பரமுததியுமா மெனபகாம

சாலோககிய முதலியவறறிறகுப் பொருள் வருகினற செயயுட்க ஞனகினும ஆசிரியா தாமே மொழிபெயர்த துரைககினறவாறறு னறிக

இதனுனே, சைவததிறத் தடைநதாரால் செலுத்தப்படுஞ சரியை முதலிய நானகும முததி நெறியாதற்கடபடும் பேதமும அவற்றின பயனுங கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

இப்படி முனசொல்லப்பட்ட சிவனே யான்மாக்கள செனறு பொருநதுகிற முறைமை ஒரு பிரகாரமாயிருககுமோ பல

பிரகாரமாயிருக்குமோவென்றால் மார்க்கத்தை நோக்கி நாலுபிரகாரமாயிருக்குமென்று மேலருளிச்செய்கிறார்.

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாசமார்க்கமென்று சங்கரனையடையு நன்மார்க்க நால்வகைதான் - சன்மார்க்கமென்றுஞ் சகமார்க்கமென்றும் நல்ல புத்திரமார்க்கமென்றும் தாசமார்க்கமென்றும் பரமேசுவரனைப் பொருந்துகிற நல்லவழி நாலுவகையாயிருக்கும்;— அவைதான் ஞானயோகக் கிரியாசரியையென்று நவிற்றுவதுஞ் செய்வர் - ஞானமென்றும் யோகமென்றும் கிரியையென்றும் சரியையென்றுஞ் சொல்லுவதுஞ் செய்வார்கள். இதுவன்றியும் சன்மார்க்கமுத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியங்களென்று சதுர்விதமாம் - சன்மார்க்க முதலான நாலு மார்க்கத்துக்கு முத்திகள் சொல்லுமிடத்து சாலோக்கியமென்றும் சாமீப்பியமென்றும் சாரூப்பியமென்றும் சாயுச்சியமென்று நாலு பிரகாரமாயிருக்கும்;— முன்மார்க்கஞானத்தாலெய்து முத்தி முடிவென்பர் - முன் சொல்லப்பட்ட சன்மார்க்க ஞானத்தாலே பெறுகிற மோக்ஷத்தையே முடிந்த முத்தியென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்;— மூன்றினுக்கு முத்திபதமென்பர் - நின்ற சாலோக்கிய மாதியாயுள்ள மூன்றினையும் பதமுத்தியென்று பெரியோர்கள் சொல்லாநிற்பார்கள்.

இதனாற் சொல்லியது, பரமேசுவரனை ஆன்மாக்கள் பெறுகிற முறைமை தாசமார்க்க முதலாக நாலுமார்க்கமாயிருக்குமென்றும் ஞானபாத முதலாக நாலுபாதமாயிருக்குமென்றும் சாயுச்சிய முதலாகப் பேறு நாலாயிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———0———

சங்கரனை யடையு நன்மார்க்கம்-அங்ஙனம் (அ)டைவதற் குரியதோர் சிவனடியைச்சேர்தற் குரிய நெறியாயவை,—தாச மார்க்கஞ் சற்புத்திர மார்க்கஞ் சகமார்க்கஞ் சன்மார்க்க மென்னு நான்கு-தாசநெறி யென்று நன்மையாகியபுத்திரநெறி யென்று சகமார்க்கநெறி யென்று நன்னெறியென்று நான்கு வகைப்படும்.—அவைதான் சரியை கிரியா யோக ஞானமென நவின்று அவற்றுக்குச்செயலா-அவையே சரியை நல்கிரியை யோக ஞானமென்னும் பெயரான் வழங்கப்படும்,—சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சன்மார்க்க முத்திகள் சதுர்விதமாம்.-அவற்றிற்குப்பயன் முறையே சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்கிற நன்னெறியாகிய முத்திகள் நான்கு வகைப்படும்,—மூன்றிற்கு முத்திபதமென்பர் - சாலோக சாமீப சாரூபமென்றாகும் அபரமுத்திக ளாகிய பதமுத்திக ளென்பர்,—முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர்-சன்மார்க்க ஞானவழியா லெய்துஞ் சாயுச்சியமாகிய பரமுத்தியே முடிவாகிய முத்தியாம்.

இத்தொடரே சைவத்திறத் தடைந்தோரார் செலுத்தப்படுஞ் சரியை முதலிய நான்கு முத்திநெறியாந்தகட் பிம யெகமும் அவற்றின் பயனுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேற் குருமார்க்க முணர்த்து கின்றார்.

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன்கோயிற் (பு)ல மலகிட் டிலகுதிரு மெழுக்குஞ்சாத்திப், போதுகளு

போதுகளுங் கொய்துபூந் தார் மாலைகண்ணி புனிதற்குப் பலச மைத்துப் புகழ்ந்துபாடித், தீதில்திரு விளக்கிட்டுத் தி ருநந்தவனமுஞ் செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ, தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணி யும் இயற்றுவது சரியைசெய்வோ ரீசனுலகிருப்பர்.

(கக)

(உ-ரை) தாதமார்க்கஞ் சாற்றில் — சரியைத் தொழிலாகிய தாதமார்க்கத் தைச் சொல்லின,

சங்கரன் றன் கோயிற் றலமலகிட்டு இலகு திருமெழுக்குஞ் சாத்தி — நித்தியகன்மஞ் செய்து, திருக்கோபுரந் தூலலிங்கமாகையா லதனைவணங்கிப் பலி பீட முதலாயினவற்றை வணங்கி நந்திகேசுர னனுமதிபெற் றுள்ளேசென்று, விதிவழியுண் டாகிய தென்னலகாற்றானு முஞ்சிப்புல் லாற்றானுந் திருவலகை கொண்டலகிட்டு "அடப்புமலரி முடைமலமுந்தினப்பதென்னும் - மாதரானுந் துய்ய கல்லவர்" என்னுங் குற்றமற்ற கோமயமும் வடித்தெடுத்த நீரும் வார்த்து மெழுகிப் பின்பு,

போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி புனிதற்குப் பல சமைத்து — கான்வைத்த மரத்தின் பூவே யுத்தமமா தலின் திருப்பள்ளித் தாமமெடுத்துச் சிவ னுக்குத் தொடை நெற்றிமாலை விசுமாலை முதலிய பணிப்பற்றிச் சூட்டுவித்து,

புகழ்ந்துபாடி — அவன் கீர்த்தியை வடமொழி தமிழ்மொ ழி முதலியவற்றுற் பூபாளமுதலிய விராக ங்களைக் கொண்டு குணமாக வறித்துத் தோத்திரஞ் செய்து,

த்திருவிளக்கிட்டு

கோட்டையி னுண்டாகிய கனற்கு கபிலை முதலிய பசுவின் நெய்யாற் றிருவிளக்கும் பார்த்து, தீபமெனவே தூபமுங் கூறியதாயிற்று இதனைப் பின்னர்க் கூறியதென்னெனில்?

"விரும்புநல் விளக்குத் தூபம் விதியினி னிடவல்லார்க்குக், கரும்பினிற் கட்டிபோலுங் கடவூர்வீரட்டனாரே" இதனுள் தூபத்தைக் கூறியது பலாதிக்கத்தாலும், தூபமின்றித் தீபமின்மையாலுமென வறிக. "விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும், அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே" எ-ம், "தீபமாலை தூபமுஞ் செறிந்த கையர்" எ-ம் அறிக.

திருநந்தவன முஞ்செய்து

கோட்டுப்பூ முதலிய நால்வகையினையு முண்டாக்கி, எனவே திருக்கோயில் மடமுதலானவுங் கூறியதாயிற்று.

திருவேடங் கண்டாலடியேன் செய்வதியாது பணியீரென்று பணிந்தவர் தம் பணிபுரியற்றுவது

அதிலெழுந்தருளியிருக்கு நைட்டிகா முதலாயினார்க்குத் தானே வேண்டியதுஞ்செய்து வணங்கி யவரேவினதுங் கேட்டு "எவரேனுந்தாமாக விலாடத்திட்ட திருநீறு காணலாமே" "ஆமாத்தூர்மேயா னடியாட்பட்டேன் பெற்றனன் பெற்றனன் போந்து போந்திற வாமைக்கே" எனவும் "நிலைபெறுமா றெண்ணுகியே அலருங்கில்லே" எனவுமறிக.

இச்சரியைசெய்வோ ரீசனுலகிருப்பர்

இந்தச் சரியைத் தொழில் செய்வோர் சிவனுலகத்தை யடைவார்கள் எ-று.

செய்வோர் - எழுவாய், இருப்பர் - பயனிலை.

இதற்குக் காமிகம் சுப்பிரபேதம் காரணாகிகாரம் சிவதன்மம் சிவஞானபோத சங்கிரக வோதசங்கிரகத்து மறிக. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேல் * தாசோகம் † பாவிதனான சமயிபனானுஞ் சரியை யிலக்கணந் தொகுத்துக் கூறுகின்றார்.

இதற்குப் பொருள் வெளி.

* தாசோகம் - நானடிமை, † பாவிதன் - பாவிக்கப்பட்டவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

தாதமார்க்க முதலானதின் ஸ்வரூபம் நாலுந் திருவிருத்தத்தாற் சொல்லுகின்றார்.

இது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

புறத்தொழின் மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியையெனப்படுமென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

முன் சொல்லிவந்த நான்மார்க்கத்தில் தாதமார்க்கத்தின் முறைமை மேலருளிச்செய்கிறார்.

தாதமார்க்கஞ் சாற்றில் - பரமேஸ்வரனுக்கு அடிமைப்பட்டு அடிமைத்திறஞ் செய்கிறவர்களுடைய வழிபாட்டைச்

சொல்லில்,—சங்கரன்றன்கோயிற்றலமலகிட்டிடைத் திருவெழு
க்குஞ்சாத்தி - சிவலிங்கப்பெருமானுப்பனு மெழுந்தருளியிருக்
கிற திருக்கோயிலுக்குத் திருவலகுமிட்டு விளங்கத் திருமெழு
க்குஞ்சாத்தி,—போதுகளுங்கொய்து பூந்தாமமாலைகளைப் புனை
ந்து பலசமைத்து - திருப்பள்ளித்தாமங்களுமெடுத்து பொ
லிவினையுடையதாகிய தொடையல் மாலைகோவை கண்ணி தம
பிரானுக்குச் சாற்றுகிறபடிக கிடாகப் பலவாகப் பத்திப
ணி,—புகழ்ந்துபாடி-அவனுடைய கீர்த்திகளையுஞ்சொல்லி வா
ழ்த்தி,—தீபதிருவிளக்கிட்டு - குற்றமற்ற திருவிளக்குக்களு
மிட்டு,—திருநந்தவனமுஞ்செய்து - நன்றாகத் திருநந்தவனங்க
ளும் வைத்து,—திருவேடங்கண்டாலடியேன்செய்வ தியாது
பணியொன்று பணிக்கவாதுபணியுமியற்றுவது - சிவனுடை
ய வடியாராகிய திருவேடத்தாரைக் கண்டால் அடியேன் செ
ய்பத்தக்க பணிவிடை யாதென்று தண்டன்பண்ணி யருளிச்
செய்ய வேணுமென்றுகேட்டு அவர்களருளிச்செய்த பணிவிடை
யுஞ்செய்து முடிப்பது.—இச்சரிகை செய்வோரீசனுலகிருப்பார்-
இந்தச் சரிகைத்தொழிலைச் சாத்திரஞ்சொன்ன முறைமையி
லே செய்து முடித்தவர்கள் சிவலோகத்திலே யிருப்பார்கள்

இதனாற் சொல்லியது தாதமார்க்கத்துக்குச் சொல்லப்ப
ட்ட திருவலகிடுகிறது முதற் சிவனடியாரை வழிபடுகிறது யீறா
கச் சொல்லப்பட்ட திருத்தொழில்களை இந்த முறைமையிலே
செய்தவர்கள் சாலோகத்தியத்தைப் பெறுவார்களென்னு முறை
மையை யறிவித்தது

சுப்ரமணியதேசிகருரை வருமாறு.

—0—

தாசமார்க்கஞ் சாற்றில் - தாதநெறியைச் சொல்லுமிடத்
து,—சங்கரன றன்கோயிற்றல மலகிட்டு-சிவபிரா னெழுந்தரு

ளியிருக்கின்ற திருக்கோயிலுட் டிருவலகிட்டும்,—இலகு திருமெழுக்குஞ் சாத்தி - விளங்குகின்ற திருமெழுக்கிட்டும்,—போதுகளுங்கொய்து - திருப்பள்ளித்தாமங்களெடுத்தும்,—பூத்தாமமாலைகளைக்கட்டி நிகரற்ற பலசமைத்து - பொலிவினையுடைத்தாகியமாலை யிண்டை முதலிய கண்ணிகளுஞ் சிவபிரான் றிருமேனியிற்பொலிவுறும் வண்ணம் பலவாகவமைத்தும்,—புகழ்ந்துபாடி - முதல்வனுடைய புகழ்நிறைந்த மேலாகிய சீர்த்தியினை வாயாற வாழ்த்தியும்,—தீத்திருவிளக்கிட்டு - குற்றமற்ற பிரகாசம பொருந்திய விளக்குகளிட்டு,—திருநந்தவனமுஞ் செய்து - அழகிய நந்தவனங்கள் வைத்தும்,—திருவேடங்கண்டா லடியேன் செய்வ தியாதுபணியீரென்று பணிந்து - சிவனடியாராகிய திருவேடத்தாரைக் கண்டா லடியேன் செய்யத்தக்கபணி யாதென் றருள்வேண்டுமென்று வணங்கி,—அவர்தம் பணியு மியற்றுவது - அவரருளிச் செய்யும் பணிவிடையுஞ் செய்வதாம்,—இச்சரியை செய்வோ ரீசனுலகிருப்பர் - இச்சரியைத் தொழிலினை யுடையடித்தொண்டர் சாலோகமாகிய பதமுத்தியைப் பெறுவர் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற்புத்திரமார்க்க முணர்த்துகின்றார்

புத்திரமார்க்க கம்புகலிற் புதியவிரைப்போதும் புகையொளிமஞ் சனமமுது முதல்கொண்டைந்து, சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச்சுத்த, பத்தியினா லர்ச்சித்துப் பரவிப்போற்றிப் பரிவினொடு மெரியில்வருகாரியமு

படணனி, கிருதருமிக கிரியையின் பயாநுப... க
ணினமலனற னருகிருபபா கிரியையுமகாமே (௨௦)

(இ-ள்) புத்திர	சரியாபாக மாகிய புத்திர மார்க்கத்து
மார்க்கமபு	பருதியைச் சொல்லின
கவின	
புதிய விரைப்	பழம் பூவிலும் மணம்பொருந்திய மலர்
போதுபுகையொ	முதலானது கொண்டு
ளிமஞ்சன மமு	
தமுக்கல் கொண்	
டு	
ஐந்து சுத்தி	பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்தியையு
செய்து	செய்து
ஆசன மூர்த்தி	ஆதாரசக்தி யாதி சக்தியந்தமாகவுள்ள ஆ
மூர்த்தி மானுஞ்	சனம் பூசித்ததனமேல வித்தியா தேகம் க
சோதியையும்பா	மூர்த்தியை கற்பித்து அதன்மூர்த்திக்க
விந்தாவாகித்து	டாதாவா யிருக்கிற சோதிரூபத்தைத் தியா
	வித்தாவாகித்து
சுத்த பத்தி	சுத்த பத்தியிருல் லேகாகத்தமான பா
யிறு லாசித்து	கை யுடைத்தா யிருந்து மூனமற சுத்தி
	கணமலகளையு மேற்செய்யுஞ் சேதநாவு

சாரகளையுஞ் செய்துமுடித்து.

பரவி	சுவாமி தேவரீர் யான்செய்யும் கிரியா வி
	ஷக்ச் சிவலிங்கத்திலே பெருந்தருளி யிரு

ந்து கைக்கொள்ள வேணுமென்று வேண்டிக் கொண்டு,

போற்றி	தோத்திரஞ் செய்து
பரிவி னெடு	வைதிகம் சைவம் வைதிகசைவமாகிய
மெரிவில்வரு கா	மூவிதத் தருக்கமான வக்கினி காரியத்தை வி
ரியமும் பண்ணி	ருப்பத்துடனே செய்து.

[illegible]

இந்தக் கிரியை நாடோறு முட்டாமலிரு
ந்தோர்களிருக்குமிடம் விசாரிக்கில் சிவன
து சமீபத்திலே யிருப்பார்கள் எ-று

இப்பரிசோர் - எழுவாய், இருப்பர் - பயனிலை,

“திருமலிதாமரை யெருமுளை நறுமலர்; புகைமிகு வளரொ
ளி நிறைபுனல் கொடுதினம், [illegible] வழிபடு மடிய
[illegible] பதமான [illegible] பிறைசூடி” எனவும்
“முட்டாதே நாடோறு நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்றுபோதுந்,
தட்டாக விளக்கிட்டுக் கொண்டடிசேர்த்து மக்கள” எனவும்
“[illegible] பொருந்திக் கைவிட நானுடையேனே” எனவுங் கூறிய
இதற்குக் காமிகம் அநேகமான ஞானரத்நாவலி இவை
களிலறிக (௨௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

* மேல் புத்திரகனை பண்ணுங் கிரியாவிஷயமாக தொகுத்துரை
க்கின்றது

இதற்குப் பொருள் வெளி.

ஞானப்பிரகாசருரை வருமாறு

விரைப்போது - மணம் பொருந்திய புஷ்பம்,—புகை ஒளி - தூபதீபம்,—ஐந்து சுத்தி - ஆன்ம ஸ்தான திரவிய மந்திர லிங்க சுத்தி,—ஆசனம் - சத்தி யாதி சத்திபரியந்த பத்மரூப விதது,—

ஜோதி - விந்து மத்தியத்தெழுந்து கண்டா சிருதியாய்த் திரு
மப விந்தியா தேகரூப வியாபகமாயிருக்கும் நாதம்,—ஜோதி
கிமானுஞ் சோதி - விந்தியா தேகத்துக்குச் சீவனும் பரசிவ
தேஜஸ—
பரமெய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

புறத்தொழி லகத்தொழிலென்னு மிரண்டாலும் அருவுரு
வத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியையெனப்
படுமெனபதாம

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் புத்திரமார்க்க மருளிச் செய்கிறார்.

புத்திர மார்க்கம் புகலில் - பரமேசுரனுக்கு உபதேசத்தி
னாலே புத்திரரா யுள்ளவர்கள் செய்யுங் கிரமத்தைச் சொல்லி
ல்,—புதிய விரைப்போது - நவமாயிருக்கப்படாநின்ற திரு
நெய்ப்பூச்சுமுதலான பரிமளத் திரவியங்களும் இருப்பள
ளித தாமமும்,—புகைவொளி மஞ்சன மமுதாதிகள் கொண்டு-
தூபதீபம் திருமஞ்சனம் அமுது முதலானவை யெல்லாம் கன
ருகவரத கேடிலைத்துக் கொண்டு,—[illegible]-பூச
சுதலி ஆன்மசுத்தி [illegible] மந்திரசுத்தி [illegible]யென்
றுசொல்லப்பட்ட [illegible]—[illegible]மூர்த்தி
மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித்து [illegible]-ஆதன மூ
ர்த்தியும் மூலமாக சாதித்து அக்கமூர்த்திமானன சோதியை

தியானிக்கும்படி பிரமாமுதல் சதாசிவ மீறாகத் தாவாகசாந்தத்திலே கூடிக் கோடி சந்திரப்பிரகாசம் போலே பாவித்துத் இந்தப் பொருளைச் சிவலிங்கப் பெருமானிடத்திலே ஆவாகனம் பண்ணி,—சுத்தபத்தியிலுள்ள ஆசனத்து-அழுக்கற்றநின்மலமாயிருக்கிற அன்புடனேகூடியிருந்த ஆசனத்து,—பரவிப்போற்றி-புகழ்ந்து தோத்திரங்களுஞ் செய்து,—பரிவினொடு மெரியில் வருகாரியமும் பண்ணி - விருப்பத்துடனே அகனிகாரியமுஞ் செய்து,—நித்தலுமிக்க கிரியையினை யியற்றுவோர்கள் - நாடோறுஞ் சாத்திரஞ் சொன்ன முறைமையிலே இப்படி சிவனை யர்ச்சிக்கிறவர்கள்,—நின்மலனருகிருப்பர் நினையுங்காலே-மலரகிதனாயிருக்கிற சிவனுடைய சமீபத்திலே யிருப்பார்கள் விசாரித்துப் பார்க்குமிடத்து.

இதனாற் சொல்லியது புத்திர மார்க்கத்தாருக்குச் சொல்லப்பட்ட புதியவிரை போதுமுதல் அக்கினிகாரிய மீறாக நாடோறு மிந்தமுறைமையிலே செய்து முடித்தவர்கள் சாமீப்பியத்தைப் பெறுவார்க ளென்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

புத்திரமார்க்கம் புகலின் - புத்திரநெறியைச் சொல்லுமிடத்து,—புதியவிரைப்போது புகையொளி மஞ்சனமமுது முதல்கொண்டு-புதிதாகிய வாசனை பொருந்திய போதுகளுந் தூபதீபத் திருமஞ்சன மமுது முதலியனவெல்லாந் தேடிவைத்துக்கொண்டு,—ஐந்துசுத்திசெய்து ஆசனமூர்த்தி மூர்த்திமானும் - ஐவகைச் சுத்திகளையும் பண்ணி யாசனமூர்த்தி மூலங்களாலே மூர்த்திமானாகிய சிவத்தை,—சோதியையும் பாவித்தாவாகித்து-சோதியுருவாகப் பாவித்து ஆவாகனம்பண்ணி,—சுத்தபத்தியி

னாலர்ச்சித்து-நிருமலமாகிய மெய்யன்பினாலர்ச்சனை செய்து,—டறிவென்னும் பரவிப்போற்றி-விரும்பத்தோத்திரித்து வழிபாடியற்றி,—நித்தலு மெரியில்வரு காரியமும்பண்ணி-நித்தியாக்கினி காரியமும்பண்ணி,—நினையுங்காலக்கிரியையினை யிடற்றுவோர்கள்,—நினையுமிடத்துக் கிரியையினை யனுட்டித்தோர்,—நிருமலனாரருகிப்பர் - சாமீபமாகிய பதமுத்தி பெறுவர் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற்சகமார்க்க முணர்த்துகின்றார்.—

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டு
ஞ் சலிப்பற்று முச்சதுர முதலாதாரங்க, ளகமார்க்க ம
றிந்தவற்றி னரும்பொருள்களுணர்ந்தங் கணைந்துபோ
ய மேலேயி யலர்மதிமண்டலத்தின், முகமார்க்க வ
முதுடல முட்டத்தேக்கி முழுச்சோதி நினைந்திருத்த
ன் முதலாகவினைக, ளகமார்க்க வட்டாங்க யோகமு
ற்று முழுத்துழுந் தவாசிவன்ற னுருவத்தைப்பெ
றுவர். (உக)

(இ-ள்) சகமார்க்க — யோகபாகமாகிய சகமார்க்கமாவது,
ம் புலனொடுக்கி — பதுமம் முதலிய வாசனங்களி லொன்றி லிருந்து புலன்வழி செல்லாதபடி யாமை யானதவயவங்களை யுள்ளே யடக்குமாறுபோல வடக்கி, இஃ தாசனம்.

தடுத்துவளியி — ரேசகபூரகங்களில் மாறிச்சலிக்குமதனைத்
ரண்டுஞ் சலிப்ப — தடுத்துக் கும்பித்திருக்கும் பிராணவாயுவை
ற்று — ச[illegible] இஃது பிராணாயாமம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

முச்சதுர மு — தனது சரீரத்திலுள்ள முக்கோணமுஞ்
தலாதாரங்களக — சதுரமுதலிய வாறு ஆதாரங்களி னதாகிருந்தவையு
மாகக் கருதி — மந்திருக்கின்ற தானங்களையும் வடிவுமுதலிய
வற்றை யதுவதுவாக வறிந்து,

உவற்றினுறும் — மூலாதாரமுதலிய வாதாரங்க டோறு
பொருள்களுணர — மிருக்கும் பதுமதளங்களையு மவைகளி லி
ந்து — ருக்கு மதிதேவதைகளையு மவைகளி லிருக்
கு மக்கரங்களையு மறிந்து தியானித்து

அங்கணைந்து — மூலாதாரத்திலிருக்கு மக்கினிமண்டலத்த
போய மேலேறி — தினக்கினியைச் சொலிப்பித்து, அந்தச் சந்
யலாமதி மண் — திரமண்டலமாகிய நாபித்தானத்திலிருக்கு
டலத்தினை முக — ங் குண்டலினி சத்திச்சொரூபினி யாயிருக்
மாக்க வமு — கிற வமிர்தத்தை யுருகப் பண்ணி, மற்றவா
துடல முட்டத் — தாரங்களிலுள்ள மகோமுகமான பதும
தேக்கி — ங்களினது கிரந்திகளை யுடைவே யதனைக்
கொண்டுபோய், மேலேசென்று விந்துத்
தானத்தினை யழிவிப்பிறங்கிய பெருகாநின்ற வமிர்த தாராபிர
வாகத்தைத் தனதுடல முழுது நிறைந்தவாறே யியலுக்கு மந்
திரசோகத்காரமுச்சரிக்கிற தெல்லாம் விளங்க நிற்கும்

முழுச்சோதி — தான் மூன தியானம் பண்ணப்படுவது,
நினைந்திருத்தல் — பொருளி னிடத்திலே யடிக்கிற காற்றுன
தெப்படிச்சலியாமல் வியாபித்திருக்கும், அ
தபோலப் பரிபூரணமான பிரகாசாந்தத்திலே யழுந்தி யிரு
த்தலே சமாதி இதனாற் பயன் யாதெனின்?

முதலாகவினை — இடமைக்கன் கன்மமுதலிய பாசங்களி
களுக — னது வலிகெடுப் போம்படியு மறுமைக்க

மார்க்க வட — சகமார்க்க மாகிய யோகபாதத் தட்டா
ட்டாங்க யோகமு — ங்க போகத்தை யியமநியம முதலாக நா
றாமுழுத்து ஞ் — டோறும் வருந்திச் சாதித்தவர்கள்,
முந்தவர்

சிவன் றனுருவ — சிவனது திருமேனியைப் போலத் தாங்க
தைப்பெறுவா — ருமவடிவை யெடுத்துக்கொண்டவன் சமீ
பத்திலே யிருப்பார்கள் எ-று.

சகமார்க்கத்தைத் தலைக்குறைத்து மார்க்க வட்டாங்க மென்றார் "இயமநியம மிணங்காதன மியாமம், மயாவில் பிரத்யாகாரமாகு—முயலுங்காற், ருரானை யோடு தியானஞ் சமாதிபு மென, றேரிருநானகுமே யோகு" என வறிக.

இது பொழிப்பு

றேலகலம

மூலாதாரமாவது:—குதத்துக் கிரண்டங்குலத்துக்கு மேலிலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழெனவறிக.

விஞ்ஞான கலருக்குக் கன்மம் காரணமென்று மலபரிபாக
காரணமாதலானும், சுத்தகன்ம முண்டென்று ஆகமங்க கூ
றுகையாலும் பரபோகத்தைப் புசித்திருப்பார்களென வறிக

பாசத்தைய றுத்துத் தவமாரும் பிறப்பொன்றிற் சார்ப்பனேனா — அநேக ஜநநமெடுத்துத் தனடந்த கிரியாக்ய முத்தினடை யெளிதினிலடைதற்குத் தவத்தைப் பண்ணுதற் கேற்றதொரு ஜநநத்தை யெடுப்பித்து ஞாநாசாரியனை யெளிதினி லடைதற்குத் தவத்தைப் பண்ணுதற் கேற்றதொரு ஜநநத்தை யெடுப்பித்து ஞாநாசாரியன் றிருக்கையிலே பாசத்தைச் சேதிக்கும்படி பண்ணி,

சரியைகிரியா யோகந் தனின் ஞானசாரமே — சரியை முதலியவற்றைப் பொருந்தி யத்தாலே வருந்தி யனுஷ்டித்த தந்தப் பலத்தினாலே யடையவேணுமென்னும் நியமமுமின்றி, இஃதில்லாவிடத் தெக்காரணத்தாலெனின்?

நவமாருந் தத்துவ ஞானத்தை நல்கி — நினைக்குந்தோறு நினைக்குந்தோறும் புதுமைபொருந்தி யிராநின்ற சத்தியஞானத்தைக் கொடுத்து,

நாதனடிக் கமலங்க ளணுகுவிக்குந் தானே — அந்தத் தானப்பலத்தினாலுண்டாகிய ஞானத்தாலே சிவனது திருவடித் தாமரைகளைப் பொருந்துவிக்கும். எ-று

தானம் - எழுவாய்.

அணுகுவிக்கும்-பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரம் மிருகேந்திரம் பௌட்கரத்து மறிக. (உகூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் தானமும் சாமானியருக்குக் கொடாமற் சிவஞானிகளுக்கு கொடுக்கில் சுவர்க்க பலமாத்திரமன்றி முத்திக் கேதுவா மென்பது கூறுகின்றது

சிவஞானச செயலுடையோர்கையிற் றானந்திலமளவுசெ
ய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து பரபோகந்துய்ப்பித்து—காஷ்
டத்திலே மறைந்திருந்த அக்கினியானது * மதனத்தினாலே பிர
காசித்துக் காட்டத்தை மறைத்துத் தானேயாய் நின்றதுபோ
ல முன் ஞானமாயிலே மறைந்திருந்த சிவனது ஞானக்கிரியாச
த்திகள் கேட்டல் சிந்தித்தல் தெளிதலினாலே ஆன்மாவினுடை
ய ஞானக்கிரியா சத்திகளிலே பிரகாசித்து அவைகளை யடக்கித்
தானேயாய் நிற்கும் அவ்வாறு பெற்றபோ சிவஞானச்செய
லுடையோர் அவர்கள் கையிலே யெள்ளளவாகிலும் ஒருவஸ
துவைப் பக்தியுடனே கொடுத்தால் அது ரத்தினங்கள் முதலா
ன சர்வ வஸ்துக்களையு முடைத்தாய பஞ்சாசத்கோடி விஸ்
தீரணமுடையிருக்கும் பூமியையும் ஸ்வர்ணமயமாகிய மகாமே
ருவையும் வேத வேதாங்கங்களை யோதியுணர்ந்து வழுவற அக்
னிஷ்டோமாதி சத்திரயாக பரியந்தம் பண்ணும் கனமகாண
டிகையினாலே கொடுக்கத் தகிலும் அதிகமாக விளங்கி இந்திர
போக முதலான வுலகங்களிலே மேலான போகங்களைப் புசிப
பித்து,—பவமாயக் கடலி லழுந்தாதவகையெடுத்துப் பாசத
தையறுத்துத் தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணி—ஆசா
ரியராலே ஜநந மரணமாகிய மாயா சமுத்திரத்திலே நின்றுங்
கரையேற்றி யாணவ மாயை கன்மமென்கிற பாசத்தையொழி
க்கும்படிச் சிவகுருவாகிய † தபோதனருடைய குலத்திலே
யொரு ஜநநத்தை யெடுப்பித்து,—சரியைக்கிரியாயோகங்களி
லும் சாராமே - சரியைக்கிரியா யோகங்களைச் சாதியாமலே,—
நவமாருந் தத்துவஞானத்தைக்கொண்டு - புதுமையாகிய பரதத
துவமாகிய சிவஞானப் பிரகாசத்துக் கேதுவாய்;—தாளடிக
கமலங்க ணணுகுவிக்குந்தானே - சுவாமியாகிய சிவனுடைய
சாயுச்சியத்தை யடைவிக்கும் சிவஞானிகள் கையிற் றானமென
றதனபொருள்.

* மதனம - கடைதல், † தபோதனா - தவத்தைத் தன மாகவுடையார

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

நிஷ்பிரபஞ்சமாதி நிலைபெற்றோர் பெருமை நிகழ்த்துகின் றார்

சிவஞானச் செயலுடையோர் - நிராலம்ப சிவயோக சமாதி மானகள்,—சித்துவஞானத்தை - நிராலமப சிவயோக சமாதியை,—நல்கி - கொடுத்து,—நாதனடிக்கமலஙகள - ஞானநத ஞானக்கிரியா சத்திசமான சத்திலக்ஷண சிவதத்துவத்தை மறறைய வெளிப்பொருள

சிவஞானயோகியருரை வருமாறு

—o—

விதிவழியினறிப் பத்திவழியினின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவினகண் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவரெனபதாம.

பத்திநெறியின்னோர்க்குப் பக்குவ மிகுதிப்பாட்டாற் சரியைகிரியாயோகம் எனிதிற கைகூடி மூன்றும்பெறுவனவலறி ஏனோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையுமுடையனவல்லவென்பார், சரியைகிரியாயோகங் கன்னிலுஞ்சார்ந்தோரெனறு ராகலின, சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வரென மேற்கூறிய சோபானமுறையோடு முரணுமையறிக.

இவை நானகு செய்யுளானும் ஐவகைவேள்வி யாற்றினோர் பெறும பயனும சரியைமுதலியவற்றிற் சரித்தோர் பெறும பய

றும் சிவஞானிகட்குச் செய்யுந் தானப்பெருமை கூறுமுகத்தா ற் பதிநெறியினின்றோர் பெறும் பயனும் உணர்த்துமுகத்தா னே, எந்நெறியினின்றோர்க்கும் வீடுபேறெய்துதற்கு ஏதுவாகிய ஞா னநெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

பாத்திரா பாத்திரங்களை யறிந்து தானஞ்செய்யு முறை மை யருளிச்செய்கின்றார்.

சிவஞானச் செய்தியுடையோர் கையிற் றானந் திலமா த்திரையே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து - தேகாதிப் பிரபஞ் சத்தைவிட்டு நீங்கியிருக்கிற சிவஞானிகள் கையிலே கொடுக்கப் பட்ட திரவியமோ ரெள்ளளவாகிலும் அது பூமியினளவும் உ டான மகாமேருவென்னச் சக்கிரவாளகிரியென்ன விட்டுவளர ந்,—பவமாயக்கடலி லழுந்தாதவகை யெடுத்து - ஜனனமா மாகிய மயக்கத்தைப் பொருந்தியிருக்கிற துக்கசாகரத்திலே யழு ந்து அழுந்தாதபடி யெடுத்து,—பரபோகந் துய்ப்பித்து,- மே லான போகங்களைப் புசிப்பித்து,—பாசத்தையறுத்து,- பாசப ந்த நாசமாகும்படி,—தவமாருட பிறப்பொன்றிற் சரியையா னை-அரியதவங்களைச் செய்யத்தக்க க்ஷேத்திரங்களிலே வைத்து முறைமையெடுத்து,—கிரியை கிரியாயோகத்தினிலுஞ் சாராமே- சிவஞானிகள் கையிற் கொடுக்கப்பட்ட தனமானதைக் கையிலே தி வ்விய கரணங்களிலுண்டாகிய தொழிலைச் செய்யுங் கிரியைக் கி ரியை யோகமென்று சொல்லப்பட்டவைகளிலும் பொருந்தா மல்,—நவமாகிய தத்துவஞானத்தைக்கொண்டு ஞானஞானமாம் பத மைபொருந்தி யிருக்கப்பட்டதாகின்ற வுண்மை ஞானத்தைப் பு

சேர்ந்து,—நாத னடிக்கமலங்களை நண்ணுவிக்குந்தானே - தம்பிரானுடைய ஸ்ரீபாத கமலங்களிலேதானே பொருந்துவிக்கும்.

இதனாற் சொல்லியது, திலமளவாயினுஞ் சிவஞானிகளுக்குச் செய்ததான மகாமேருபோல மகத்தாகிய பிறவிக்கடலிலே நின்றுமெடுத்து மேலான போகங்களைப் புசிப்பித்து பாசநாசமாம்படி தவமேகாத்திரத்திலேவைத்து ஒரு ஜன்மமெடுப்பித்து சரியை கிரியை யோகங்களையும் அனுட்டியாமல் உண்மை ஞானத்தையு முண்டாக்குமென்றும் அந்த ஞானந்தானே தம்பிரானுடைய திருவடித்தாமரைகளிற் கூட்டுவிக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

—o—

சிவஞானச் செயலுடையோர்கையிற் றானம் - விதிவழியினறிய பாத்திரவழியினின்று சிவஞானிகள் கையினிற் கொடுத்த தானஞ் செய்த தனித்தபொருள்,—திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து - சிறிதாயினு மலைபோல வளர்தலால்,—பரபோகந் துய்ப்பித்து - மேலாகிய சாலோகாதி பதங்களை யொருகாலையாகந்தணனி யாண்டனவாகிய வின்பங்களை யநுபவிக்கச்செய்து,—பவமாயக்கடலி லழுந்தாவகையெடுத்து - ஜனனமரணக் கடலின்க ணழுந்தாதவண்ணங் கருணையோ டெடுத்து,—பாசத்தையறுக்க - பாசத்[illegible]—[illegible]ரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணி - தவஞ்செய்தற்குரிய வுயர்ந்த குலத்தி லொரு பிறவியை யடையச்செய்து,—சரியை கிரியா யோகந் தனின்றுஞ் சாராமே - சரியை கிரியா யோக மேனோர்க்குப்போலக் காலநீட்டிப்பு மருமையுமின்றி யெளிதிற் கைகூடி முற்றுப்பெறச்செ

யது,—நவமாருந் தத்துவ ஞானத்தைநல்கி நாதனடிக் கமலங்களைஞ்சுதவிக்குந்தானே - முடிவின்கண் ஞானநெறியைக் கூறப்பட்ட முதல்வன் கமலம்போன்ற திருவடியிற் கலத்தலாகிய வீட்டினை யெய்துவிக்கும்

இவை நான்குசெய்யுளானு மைவகைவேள்வி யாற்றினோரெய்தும்பயனும் சரியை முதலியவற்றிற் சரித்தோர் பெறும்பயனும் சிவஞானிகட்குச் செய்யும் தானப்பெருமை கூறுமுகத்தாற் பதிநெறிநின்றோர் பெறும் பயனு முணர்த்து முகத்தானே பசுநெறியினின்றோர்க்கும் வீடுபே றெய்துதற்கண் ஞானநெறியாகிய சன்மார்க்கமின்றி யமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது

மறைஞானதேசிகர் உரை

ஆகலான் ஞானத்தினாலே தானே முக்தியென்
றுணர்த்துகின்றார்.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள்புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவாமென்னு, மூனத்தா
ரெனகடவா ரஞ்ஞானத்தா லுறுவதுதான் பந்தமுமா
மெய்ஞ்ஞானந்தா, னானத்தா லதுபோவ தலர்கதிரமு
னிருள்போ லஞ்ஞான மறப்பந்த மறுமுத்தியா
கு, மீனத்தார் ஞானங்க ளெல்லாஞான மிறைவனடி ஞா
னமே ஞானமென்பர். (உஎ)

(இ-ள்) ஞானத் நான்மறைகளும் பதினெண்புராணமு மிரு
தால் வீடெ பத்தெட்டுத் திவ்வியாகமங்களு மிவைக
ளன்றே நான் னெல்லா ஞானத்தினாலே முத்தியென்று

பனைகள் புராண முறையிட்டுச் சொல்லியிருக்க அவையப்
ஈனவாகமஞ் வன -
சொல்ல

இருக்கில், பிராமணத்திலும் உருத்திரசூத்தத்திலும் ஞானத்தினாலே முத்தியெனவும்,

இரண்டாம் வேதத்தி லாரணத்திலும் பரதாரணைத்து மாஞானத்தினான முத்தியெனவும்,

சாமத்திற சாகதோக்கியத்தி லாறுவதில ஞானத்தால் முத்தியெனவும்,

அதர்வசிரசில ஈஸ்வர சாடசாத்காரத்தினாலே முத்தியெனவும் கூறுகையாலும்,

இஃதன்றிச் சைவபுராணத்தும், சூதசங்கிதையிலும், ஞானத்தால் முத்தியெனப்சாலும்,

சுப்பிரபேதத்தும் சிவதருமோத்தரத்தும் ஞானத்தினால் முத்தியெனகையால் ஆகமத்துங் கூறியதாயிற்று

அல்லவாமென் இந்த ஞானத்தினாலே முத்தியிங்கே என
று மூனத்தாரே மத்தினாலே முத்தியெனறும் சிவதீசையி
னைகட்டுவார ஞலே நானே முத்தியெனறும் சாவஞா
னோத்தரமுதலிய ஆகமத்தும் காசிபுராணத்தும் பிருகு சாபத்திரயத்திலும் சைவதீக்கையினாலே முத்தியென் ஞோதியிருக்க, 'எனனே ஞானத்தால்' என்று கூறிய தெனனெனில்? 'கிரியையென மருவுமவையாவுஞானங் கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும்' என்கையாலும்,

பார்க்கிபை தேவிகாலோத்தர மென்னு மாகமங்களிற கிரியை சரியை யோக மிம்மூன்றும் ஞானத்துக்கு அங்கமென

று கூறுகையால் இவ்வாசிரியரு மிக்கருத்தையேபற்றி யருளிச்
செய்ததென வறிக

அஞ்ஞானத்	இப்படி யறியாமற் சொல்லுகிறதனாற் குப
தாலுழலுந்தா	பலம் யாதெனில், சரீரபந்தமான பிறப்
மபந்தம்	ண்டாகையால் முத்தி யடைந்தாரென்று
	சொல்லப்பெறு
உயா மெய்ஞ்	இந்த ஞானத்தால் பெறும்பலம் யாதெ
ஞானந்தானே	னில்? அஞ்ஞானமான ஜநநமரணத் துற
ஞானத்தாலது	று வாரையுமு மவனது திருவடியை யடை—
போவது	ந்திருக்கிறதே! அஃதெதைபோலவெனில் ?
அலர் கதிர் மு	பிரகாசத்தினை யுடைய வாதித்தனது மு
ன்னிருள்போல	ன்னே யந்தகார நில்லாம னீங்குமாறு போ
ஞானமறப் ப	ல, அஞ்ஞான மிவனைவிட்டு நீங்கவே
ந்தமறுமுத்தி	பாசபந்தமு மற்று முத்தியையு மடைவன
யாகும்	
ஞானந்தா	பரசமயிகள் தங்கள் தெய்வத்தை யடை
ஞானங்களெல்	ந்திருப்பதே முத்தியென்பர்கள், அந்தஞா
லாஞான	ன மிவர்கள் சொல்லு ஞானம்போலன்று,
	இந்தச் சிவஞானத்துக்குப் பரமு மில்லைச

சமானுமில்லை யாதலால்.

இறைவனடி	அநாதி யமல முத்தனுமாய்த் தத்துமா
ஞானமே ஞான	யரசத்தமே வடிவாயிருக்கிற கர்த்தாவின து
மென்பர்	திருவடியைச் சேர்க்கு ஞானஞ்சுத்தமெ வி
	ளங்கச் செய்வதனா ... இதைத திருப

பிரு மேலான ஞானமென றறிவாளுயர்க்கே சொல்லுவார்
கள் எ-று (௨௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மோக்ஷம் ஞானத்தினாலே யல்லது சரியை கிரியா யோகங்களினாலில்லையென்பது கூறுகின்றது.

(ஞானத்தால் - ஞானமென்பர்) ஞானத்தினாலே முத்தியென்று நாலுவேதங்களிலும் பதினெண் புராணங்களிலும் இருபத்தெட்டாகமங்களிலுஞ் சொல்ல, அப்படியன்று யாகாதி கன்மங்களினாலே மோக்ஷமென்று சொல்லும் பூர்வமீமாம்சகரும், தீக்ஷாகன்மத்தினாலே மோக்ஷமென்று சொல்லும் பூர்வசைவரும், குறைந்த * மதிமான்களானகையாலே என்ன சுகத்தைப் பெறக்கடவர் அவர்கள் சொல்லுங் கன்மங்களெல்லாம் அஞ்ஞானமான மாயா காரியத்தினாற் செய்வது மாயா காரியத்தினாலே பொருந்துவது பந்தமே நின்மலா சத்தி ஞானத்தினாலே யந்தப்பந்தம் நீங்குவது அதெவ்வாறெனில்? விரிந்த பிரகாசத்தையுடைய ஆதித்தனாலே இருள் நீங்குவது போல இவ்வாறு சிவஞானத்தினாலே அஞ்ஞான நீங்கவே பந்தநீங்கி முத்தியாம் அந்த ஞானந்தான் ஈனவாதிகளாகிய உலகாயிதராதி நிரீச்வர சாங்கியராக்கும் ஆன பெயருடைய ஞானம்போலே ஒத்த ஞானமல்ல, பின்னை ஏதெனில்? சிவஞானமே பரமமுத்தியைக் கொடுக்கும் பரஞானமென்று பெரியோர்கள் சொல்லுவர்களென்றிதன்பொருள்.

* மதிமான் - புத்தியுள்ளவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஜட கன்மத்தால் முத்தியென்று மீமாம்சன் விளம்ப மறுத்துச் சிறந்த ஞானத்தாலே முத்தியென்று செப்புகின்றார்.

ஞானந்தானே வீடுபேறே-நிராதார தீக்ஷையிற் றிரிபதார்த்த கர்ப்ப தீக்ஷாகலா கலாபமறிந்து பண்ணவேண்டு மாதலால்

சிவனது ஞானசத்தி கிர்த்தியக்குறித் தீக்ஷாங்க ஞானமும் ஞானம்

பின்னவனது தீக்ஷாக்குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்ப சிற்கனமும் ஞானம்

அதுவன்றிச் சாதார தீக்ஷையில் திரிபதார்த்த கர்ப்ப தீக்ஷாகலா கலாப மறிந்து பண்ணவேண்டு மாதலாற் குருவினது ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனதெழுந் தெளிதிற செயற்கைத் தீக்ஷாங்க யோகாங்க ஞானமும் ஞானம்

பின்னவனது காயிக வாசிக மானசிக தீக்ஷாகமம் மிற்று க காயவாக்கு மனத்தசைவு பண்ணூந் தீக்ஷாக குறிக கிரியா சத்தி சிறப்பிருப பிச்சாசத்தி கிர்த்திய சங்கற்பக்குறிச் சிறகனமும் ஞானம்.

அதுவன்றிச் சாதார வசத்தியோ திருவாணைத் தீக்ஷையிற் சூனது திரிபதார்த்த கர்ப்ப யோகசகலா கலாப மறிந்து பண்ணவேண்டுதலாற் சிஷனது ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனதெழுந் தெளிதற் செயற்கைத் தீக்ஷாங்க யோகாங்க ஞானமும் ஞானம்.

பின்னவனது யோகக்குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்ப சிற்கனமுமன்றி ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிறப்பு ஞானப்பிரவேச தீக்ஷாங்க யோகாங்க தியானமும் ஞானம்.

இப்பானத் தசைவற நற்குறித்த நியமச் சத்திய தீக்ஷாங்க யோகாங்க சமாதியும் ஞானம்.

சமாதி சாத்தியப் நிருத்த கிரியாசத்தி யோகபயோ விதேகப முத்தி சாக்ஷாத்கார சாதன தீக்ஷாங்க சந்தேக சேதன முத்தி சாக்ஷாத்காரமும் ஞானம்.

இஞ்ஞானங்களிற் சித்திர ருத்தானமியமாயுஞ் சித்திலாந்டமாயு மனுசரிக்குஞ் சாக்ஷான மோக்ஷமும் கிடைப்பிக்கும் சங்கற்ப தீக்ஷண நிரீக்ஷணம் பண்ணுஞ் சிவக்கிரியா சத்திச் சிரபரிருப பிசசாசத்தி லக்ஷண தீக்ஷையும் ஞானம்.

அப்படிச் சுபபிர பேதம், சுவாயம்புவம், பௌஷ்கர முதற சிவாகமங்களிற் சொடபித்திருத்தலால் தீக்ஷையும் ஞான மென்பது சிவாகமப் பிரசித்தம்.

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்று மவரவாச் சுருக்கமாய விடபிக்கூட்டி விதிக்கும் அநேகவித ஞானத்தால மோக்ஷ மென்றே பொதுச் சிறப்பாய,—

நான மறைகள புராண நல்லவாகமஞ் சொலலவல்லவா மென்று மொனத்தாரெனகடவார் - பிராகிருத காமிக வாசிக மானசிக ஜபதத கனமத்தால் முத்தியென்று செப்பும ஞானமினராகும கனம மீமாமசா முதலோ ரேது பிரயோஜனத்திற சருகா, நிஷ்ட பிரயோஜனர்களே !—

அஞ்ஞானத்தால் - அஞ்ஞான மூலவஞ்ஞானப்பெய ராணவமல மாரோபித விபரீத ஞானரூப யோக்க கிரியாகாசதிருதருவக்குறி போகத் திருத்வத்தால்,—

உறுவது தான பந்தம் - மாயா கன்ம தேகபோகம் கட்டிப பொருந்தும்.—

உயர் மெய்ஞ்ஞானத் தானத்தால் - சொல்லிய வந்த சசிவ தீக்ஷா சிவஞான சிவயோக சிவ சரியாங்கி யகஞானத தால்.—

அதுபோவது - அந்தப் பந்தம் நீங்குவது காரணமிருக்க அப்படிப்போம்?—

அர்க்கன்முன் இருள்போல - சூரிய கிரண சந்நிதானத்தில் அந்தகாரம் போமாப்போல்,—

அஞ்ஞான மறப் பந்தமறும் - மலம் நீங்க மாயா கன்மங் கட்டு விடும் —

முத்தியாகும் - பின் சிவத்துவாபிவியத்தி சித்திக்கும்

சொல்லிய அங்காங்கி ஞானங்களுளங்கி ஞான முக்கியமென்பது எதனாலெனின் —

ஏனைத்தரா ஞானங்களெல்லாஞானம் - சிவ தீக்ஷா சிவஞானம் சிவயோக ஞானயாத்திரர்களல்லாச் சாங்கியன் வேதாந்தி முதலோர் சொல்லும் பிரகிருதி புருஷ விவேகப் பிரம விவேகப் பயு புருஷ ஞானங்கள் சைவதேசிகன் சொல்லுஞ் சீவ சிவ ஐக்கிய விஷய சிவசத்திப் பிரமாணிக பௌருஷப பிரமித்திக குறித்து ரக்ஷாங்க காங்கி ஞானம்.

இவைகளெல்லா ஞானம் சங்கற்ப சித்கன்ம கிர்த்திய ஞான காரணஞ் ஞானம் —

இறைவனடி ஞானமே - சிவக்கிரியா சத்திச் சிறப்பிருப பிரசாதத்து லக்கண தியதிக்ஷையே —

ஞானமெனபர் - ஞானச் சிறப்பென்று சிவ சித்தாந்திகள் செப்புவார்கள்.

சைவ சித்தாந்திப்போல் மறைந்து சாங்கிய வேதாந்தி மதத்த நாயாசாரகளாய்ச் சஞ்சரிக்குஞ்சிலர், இயானை ஞமாதிச அநலமச சிறப்பு ஞானமென்று செப்பாது ஞானத்தியான சமாதி சீவன் முத்தி சாக்ஷாத்கார சர்வாங்காங்கியாயிருக்கும் தீக்ஷை ஞானத்துக்கங்கமென்று மாறிக்கொண்டு சீவ சிவ ஐக்கிய விஷய சிவசத்திசரண நைமித்திக பௌருஷ போத ஞான மு

தந்திரமே இறைவனடி ஞானம், அதுவே சமாதி, அதுவே ஞான மென்பர்

அவர்கள் முன்னாசாரியார் தீக்ஷையே மோக்ஷ சாதன மென் றநேகந் திருவிருத்தத்தில் விதந்தரித்த வாக்கியங்களுக்கு முன்பின் விரோதமாய்ப் பொருள்கொள்ளாது தங்கள் மனங்கொள்ளுகைக்கிணங்கப் பொருள் கொண்டு முன்பின் விரோதிக்கப் பண்ணி யக்குருவாக்கியங்களைப் பிராந்த வாக்கியங்களாகவும் விப்பிரலம்ப வாக்கியங்களாகவும் பண்ணிப் பேசும் பேயர்களோடு பேசச்சே திருக்கின்றது.—

ஏதிப்போ நீர் கீதிரப்பிச் செப்பிற்றென்று கீழ்த்தியது: மலங்குணமது அஞ்ஞானமே, அஞ்ஞானங் குணகுணித்திரவியமென்று மலமாகுமந்த வஞ்ஞானமுஞ் சிப்பி வெள்ளி ஞானம்போல ஞானமாத்திரத்தா னீங்கும்.

நன்று நீ சொல்லியது, மலங்குணம் அஞ்ஞானமாகி லத ற்குக்குணியொன்று கூறவேண்டும். ஆன்மாவென்னிற் பாவஞானம்போல அஞ்ஞானமான்மா வென்னும் நையாயிக வைசேஷிக மதமாம் ஆன்மாவுக் கன்னிய மக்குணி யென்னி லதுவே மலம் அஞ்ஞானமென்றது மலக்குணமென்றமைக் கயிந்த ஞானத்தியக்தா பாவ லக்ஷணம் மவுட்டியமாகும் அஞ்ஞானமல்ல. குறிகொள்வோ மகன கொக்ஸேர வென்னும் வைபஞான மயோ லைபஞான மாகு மஞ்ஞானமே.

அல்ல இதவெள்ளியெனுஞ் சிப்பிவெள்ளி விபரீத ஞானம் போற் சவிகற்ப விபரீத ஞானமாகு மஞ்ஞானமே தான, நன்றி து வன்று. குணியொன்று குறிக்குமிடத்துச் சாகங்கார புத்தி தத்துவமாதலால், புத்திதத்துவமுமற் றதுவெபிளையதது முத திப் பிரசங்கம வரும். அப்போது இருசந்திரனென்னும் விபரீ

ய ஞானம்போற் புத்தி பொருந்தாத சரீர நானென்று சற்
றேதோற்று ஸாவிகற்ப விபரீத ஞானமாகு மஞ்ஞானமே.

அதுவும் நன்றன்று, ஞானம் சுதந்திரச் சித்தும் விபரீதம் சுதந்திரகு மலக்கலை யனந்து கலந்த வித்தையுங் குணியாதலால், இயற்கைக் குணிமாறி மயங்கிச் செயற்கைக் கலைகலந்த வித்தியா தத்துவ முதற் றத்துவப் பிரளயந்த முதத்திப் பிரசங்கம் வரும்.

அதுவன்றி, இருசத்திர ஞானமாகு மஞ்ஞான மொருசத்திரமென்னு முண்மை ஞானத்தா லுணரிக்க முற்றாலுட் ஒப்புமா தந்திரத் துதிகருஞ் சிப்பி வெள்ளி ஞானமாகு மஞ்ஞானஞ் சிப்பியென்னு முண்மைஞானத்தா லுணரிக்கம் புறநீக்க முற்று முறுமபோனற்போல நேத்திரபடல திரவிய நீக்கமன்றிப் புறநீக்க முறாததுபோலச் சரீர நானென்னுஞ் சரீரானம ஞானமாகு மஞ்ஞானமுஞ் சரீரத்துக் கன்னிய மானமா நானென்னு முண்மை ஞானத்தா லுணரிக்க முற்றாலு மொரு மலத் திரவிய நீக்கமன்றிப் புறநீக்க முறாது மல திரவியமும் படலமென நீவொரு திரவியப் பொருளென்னு முண்மை ஞான மாத்திரத்தாற் படலம்போல மல மென நீவொரு திர வியப் பொருளென்னு முண்மை ஞானமாத்திரத்தால் நீங்காது.

நேத்திர படல திரவியம் படல நீக்கு முபாய ஞானத்துவை யுடைய வைத்திய சத்தி சத்திர கன்மத்தால், நேத்திர விபரீத விருத்தி நிமித்தாக்கிய விருத்தியோடு நீங்குவது போல், மல திரவியமு மல நீக்கு முபாய ஞானத்தினையுடைய சிவதீக்ஷாக்குரிக கிரியா சத்திச சிறப்பிருப் பிச்சாசத்தி செருத்தியக் குறிச சங்கற்ப சிறகணமத்தாற் கலை கலக்க வித்தியா தத்துவ விபரீத விருத்தி நிமித்த மவுட்டிய விருத்தியோடு நீங்குமாதலால்,

சாங்கியர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர ஞானத்தால், பாதஞ்சலர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர யோகத்தால், வேதாந

UPADHYAYA

திகளபோற சொல்லுஞ் ஸ்வதந்த்ர சந்நியாசத்தால், மீமா ஞ்சகர் போற சொல்லுஞ் சுவதந்திர கன்மத்தால், மோக்ஷமி ல்லை

சீஷ பௌருஷ சிவஞானாதிகளும் சீஷபௌருஷ சிவயோகாதிகளும், சாதார வசத்தியோ நிர்வாண தீக்ஷாங்க மாத்திராங்கங்கள் குருசிவஞானாதி குருசிவ யோகாதிகளும், சிவ சிவஞானாதிகள் சுவ சிவயோகாதிகளு முறைமையிற சாதார நிராதார சத்தியோ நிருவாண தீக்ஷாங்க மாத்திராங்கங்கள். சீஷ பவுருஷ சிவ ஞானாதி சிவ யோகாதிகள் மோக்ஷகாரிய முற்று மொத்துச செல்லாது ஓரிடத்தில் வியபிசாரிகளாதலான

மோக்ஷ காரிய முற்று மொத்துச் சொல்லுஞ் சொல்லிய சிவசத்தி லக்ஷண தீக்ஷையாற் றானே மோக்ஷ மென்று ஸ்வ தந்திர தீக்ஷா சிறகனமதத்தால் மோக்ஷம் ஸ்வ தந்திரமல்லா ஞான கோடிகள் தீக்ஷாங்கங்களன்றி ஸ்வ தந்திரங்களாயச் சூறங்காலு மோக்ஷமில்லையாம். ஆகலாற் சொல்லிய சிவ தீக்ஷா சத்தி சங்கற்ப சிறகனமதத்தாற்றானே மோக்ஷமென்று சித்தாந்தம்

சிவஞானயோகியருரை வருமாறு.

மேற்கூறியவாற்றால் ஏனையவெல்லா ஞானத்தைப் பயப்பிக்கும் ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமாவதெனபது வேதமுதலிய பிரமாணநூல்கட்கெல்லாந் துணியாகவும், அவற்றோடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தீக்கை மாத்திரையேயமையும், ஐவகை வேள்விமுதலிய கன்மங்களேயமையும், பத்திநெறிமாத்திரையே யமையுமென்று இவ்வாறு பிதற்றும பேதைகிராா ஒருவாற்றானுந் தெருட்டற்பால ரல்லரெனவும், ஞா

னமல்லாதனவெல்லா மஞ்ஞானமாகலின் அவ்வஞ்ஞானப் பகுதிகளாற் பந்தமுறுதலின்றி வீடுபேறடைதல் கூடாதெனவும், அவ்வஞ்ஞானப்பகுதிகளெல்லாம் ஒளிமுன்னிருள்போல் ஞானத்தின் முன்னாச சத்திகெட்டொழியும் அவை யொழியவே அவற்றானாய பந்த நீங்கும் அது நீங்கவே முத்திநிலை கைகூடுமாகலான் ஞானமொன்றே முத்திக்குச் சிறந்தகாரணமெனவும், ஞானத்தாளருந் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதிமுதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலான் அவையும் பந்தமுறுத்துவனவேயன்றி வீடெய்துவிக்க மாட்டாமையின் அவற்றின் வேறாய திருவடிஞானமொன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவுங் கூறவா அந்நூல்களி னுண்மை யுணர்ந்தோரென்பதாம்.

ஏகாரமிரண்டும் பிரிநிலைக்கண் வந்தன.

சொல்லவுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

தானிரண்டும் அசை.

ஆனத்தால் ஆனவதனாலென்க.

ஆனவென்பதனு ளகரமும் அதனாலென்பதனு ளன்சாரியையுந் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன? "பெற்றத்தாற் பெற்றபயன்" என்றாற்போல.

ஆகல் உண்டாதல்.

இதனானே, பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்தகாரணமல்லவாதல் இனிது விளங்கி மேலது வலியுறுத்தப்பட்டது.

இத்துணையும் ஞானத்தினியல்பும் அதன் பயனும் பொதுவகையாற் கூறி, இனிச் சிறப்புவகையாற் கூறுகின்றார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

ஞானத்தைக் கலக்கி மோக்ஷத்தைக் கொடுக்குமென்று கென்னப்பு, கிரியையினாலே மோக்ஷமென்ற சைவரை நோக்கி மேலருளிச்செய்கிறார்

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள்புராண நல்லவாகமஞ்சொல்ல - சரிதைகிரியா யோகங்களுக்குப் பதமுத்தியொழிந்த மோக்ஷமுண்டாகாது, ஞானத்தாலே மோக்ஷமென்று நாலு வேதங்களுஞ் சிவஸியாகமங்களும் புராணங்களுஞ் சொல்லியபோது,—அல்லவாமென்னு மூனத்தாரொனகடயார் - அந்த ஞானத்தாலே மோக்ஷமில்லையென்று சொல்லுகிற அறிவில்லாதவர்களுக்கு ஞானமில்லாததுகொண்டு அஞ்ஞானமுண்டாம்,—அஞ்ஞானத்தா லுறுவதுதானபந்தம் - அந்த வஞ்ஞானத்தா லுண்டாவது ஜனனமொன்றுமே! அந்த ஜனனந் தான் போமபடி யெப்படியெனனில்?—உயர்மெய்ஞ்ஞானந்தா ஞனத்தா லதுபோவது - எல்லாத்துக்கு மேலாயிருக்கிற சிவஞானமுண்டானா லந்த ஜனனமபோம அல்லது போகாது அது வென்போல?—அலாகதிரா மூனவிருளபோல் - வீட்டு விளக்கானின்றவாதித்தனை சன்னதியி லந்தகாரம் போனாற்போல்,—அஞ்ஞானமறப் பந்தமறுமுத்தியாகும் - இவனை அநாதியே மறைந்துக்கொண்டு நிற்கிற மலசம்பந்தம் போகவே ஜனனமற்று ஞானம் பிரகாசிக்கும. அந்த ஞானத்தாலே மோக்ஷமுண்டாம.—ஈனத்தார் ஞானங்களல்லாஞானம் - இக்கச் சிவஞான மொழிந்து வேறுசொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் போதகீனர் சொல்லுகிற ஞானங்களாம். போதவானகள் சொல்லுகிற ஞானமேதெனனில்?—இறைவனடி ஞானமே ஞானமெனபர் - ஆகையால பரமேசுவரனுடைய சீர்பாதத்திலே பொருந்துகைக

கு உண்டான சிவஞான மெய்ஞ்ஞானமென்று சொல்லுவார்கள் அறிவாலுயர்ந்த பெரியோர்கள்.

இதற்குப் பிரமாணஞ் சங்கற்பநிராகரணம், "பலபணி ஞான காரணமென்கிற - ஞாலபணிதொறுமயன றெடுப்ப தனுலு-மொருபணிசெய்யாச சிரபுரச்சிறுவரு-மாசராயத் தருணத் தலைவரு-முதிர் பரசமயத் திதமுறுமாசரும-ஞானமபெற றனைமையினுலு - மீனமில்பணியரு- கேதுவன்றென்றல் - ஞானறபத்தி நிமித்தமிக்தொழிலென-வேறேன்றிகிறைனு லியம்பிறறெனனும" என்றும், சிவஞானபோதம், அ-சூ, க- "வெதவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து, பவஞ்செய்து பற்றறுப்பா ராகத—தவஞ்செய்த, நற்சாரியில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலே, கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு" என்னுமதுங் கண்டுகொள்க

இதனுற் சொல்லியது, சிவஞானத்தாலே ஆன்மாக்கள் சிவனுடைய திருவடியைப் பெறுவார்களென்றும், அந்த ஞானத்தினுலே ஜனன மறுமென்றும், அல்லாத ஞானங்களெல்லாம் ஞற்றத்தப் பொருந்தின ஞானமாகையால் ஜனனத்தைப் போக்காதென்று முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

ஞானத்தால் வீடென்றே - மேற்கூறிய வாற்றால் ஏனைய வெல்லா ஞானத்தைப் பார்க்கிலும் ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமென்பது,—நான்மறைகள் புராணங் கல்வாகமஞ்சொல்ல - நான்குவேதங்களும் பதினெண்புராணங்களும் நன்மையான இருபத்தெட்டு ஆகமங்களுமாகிய பிரமாண நூல்கட்கெல்லாம் துணிபாகவும்,—அல்லாமென்னு மூன்றதாரென்கடவர் - அவற்றொடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தகை

மாத்திரையே யன்மையும், ஐவகை வேள்வி முதலிய கன்மங்களேயன்மையம பத்திநெறி மாத்திரையே யன்மையுமென்று இவ்வாறு பிதற்றும்பேதையரா ரொருவாற்றானுந்தெருட்டற்பாலரல்லரெனவும்,—அஞ்ஞானத்தா லுறுவதுதானபந்தம்-ஞானமல்லாதனவெல்லா மஞ்ஞானமாகலின அவ்வஞ்ஞானப பகுதிகளான பந்தமுறுதலின்றி வீடுபேறடைதல் கூடாதெனவும்,—அலாகதிர்முனிருள்போ லுயர்மெய்ஞ்ஞானந்தா னுதித்தா லதுபோவது - அவ்வஞ்ஞானப் பகுதிகளெல்லா மொளிமுன விருள்போல ஞானத்தின முன்னா சத்திகெட் டொழியும்,—அஞ்ஞானமவிட்டப் பந்தமறு முத்தியாகும் - அவ்வஞ்ஞான மொழியவே யவற்றானாய பந்தநீங்கும், அது நீங்கவே முத்திநிலை கைகூடு மாகலான், ஞானமொன்றே முத்திக்குச் சிறந்த காரணமெனவும்,—ஏனைத்தா ஞானங்களெல்லா ஞானம - ஞானத்துவஞ ந்தாரகக்கா சாங்கிய மாயாவாதி முதலியோர்கூறு ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலா னவையும பந்த முறுத்துவனவே யன்றி வீடெய்துவிக்க மாட்டாமையின,—இறைவனடி ஞானமே ஞானமெனபர் - அவற்றினவேறாய திருவடி ஞானமொன்றே யப்பெற்றித்தாகிய ஞானமாமெனவும கூறுவர் அந் நூல்களினுண்மை யுணர்ந்தவர்.

இங்ஙனே பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்தகாரண மல்லவாத லினிது விளக்கி மேலது வலியுறுத்தப்பட்டது.

இத்துணையு ஞானத்தினியல்பு மதன்பயனும பொதுவகையாற் கூறி யினிச் சிறப்பு வகையாற் கூறுகின்றார்.

மறைஞானதேசிகர் உரை.

இந்த வான்மாவுக் கனுக்கிரகஞ் செய்தற் பொருட்டு அருபியாயிருக்கிற சிவனருளே யாசாரியனா

னும வடிவைப்பெற்றுத் துபசரிக்கு முறைமை
யுணர்த்துகின்றது

சூரியகாந்தக்கல்லி னிடத்தேசெய்ய சுடர்தோ
ன்றி யிடச்சோதி தோன்றுமாபோல, ஆரியனா மாசா
னவன் தருளாற்றோன்ற வடிஞான மான்மாவிற் றோன
றுந்தோன்றத், தூரியனாஞ் சிவந்தோன்றுந் தானுந
தோன்றுந் தொல்லுலக மெல்லாந்தன னுள்ளேதோ
ன்று, நேரியனாய்ப் பரியனுமா யுயிர்க்குயிராயெங்கு
நின்றநிலை யெல்லாமுந் திகழ்ந்துதோன்றும். (உஅ)

(இ-ள்) சூரியகாந்தக்கல்லி னிடத்தே செய்யசுடர்தோன்றியிடச் சோதிதோன்றுமா போல — சிவந்த வாதித்தப் பிரகாசங் கோன்றின விடத்துச் சூரியகாந்தக் கல்லினிடத்திற் டக்க அக்னிப்பிரகாச முண்டானவாறு போல

ஆரியனா மாசானவன் தருளாற்றோன்ற — சிவனற்ன தனுக்கிரகத்தால் பூசிப்படுவ னவ்வாசாரியனவந் திவனுக்கு ஞானோபதேசஞ் செய்தவிடத்து

அடிஞான மான்மாவிற் றோன்றுந்தோன்ற — அதசப்படியே நாடோறு மநுசந்தானம் பண்ணியிருக்கவே யிவனிடத்திலே சிவஞானம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தவாறே 'அடிகளது ஞான மடிஞானம்' என்னவே சிவன ஞானமென்றதாயிற்று, "அடிகே ளுமக்காட் செய்யவஞ்சு தமென்றமரர்பெருமானை யாரூரனஞ்சி" என்வறிக.

தூரியனாஞ் சிவந்தோன்றும — அருபியாயிருக்கிற சிவனும் வெளிப்படுவன.

தானுந் தோன்றத் தற்சொரூபமும் விளங்கும்
ஆம்

இவ்விடத்து விளங்குமென்றது அசுத்தமாயா காரியமாகிய தத்துவ முப்பத்தொன்றும் விட்டு நீங்கினவிடத்துச் சுத்தமாயா தத்துவரூபியாய் நிற்பன், அப்பொழுது இவன் சுத்தமாயா ரூபமாகிய தன்னுடைய தனுகரணங்களைக் காண்கிறதே யென்றறிக

இத்தன்மையுண்டாகவே,

தொல்லுலகு பழமையாய் வருகின்ற சுத்தத்தத்துவ புவன
மெல்லாந் தன் த்திலிருக்கு மானமாக்களு மிவனிடத்திலே
னுளே தோன்ற விளங்கத்தோன்றும். இந்தச் சுத்தமாயா
மும் பந்த நீங்கவே,

நேரியனுய்ப்ப சிவனணுவுக்கணுவாயு மகத்துக்கு மகத்
தியனுமா யுயிர்க் தாயு மான்மாக்களுக் கெல்லாம் பிராணநா
குயிரா யெங்கு யகனு மெவ்விடத்தும் விட்டு நீங்காமற் பிர
நின்றநிலை யெல் காசித்து நிற்கு முறைமையெல்லாந் தரிசிக்க
லாமுந் திகழத் ப்படும் எ-று.
தோன்றும்.

“சூரியகாந்தமுஞ் சூழபஞ்சும்போலச் - சூரியகாந்தஞ் சூழபஞ்சைச் சுடமாட்டா - சூரியனைச் சன்னிதியிற் சுடுமாறுபோ - லாரியன்றோற்றமுன் னற்றமலங்களே” எனவுமறிக.

தேவதேவ வாதிபுராணை - மாயப்படலங்கீறித் தூயஞான நாட்டம்பெற்றேன - பெற்றபின் மெய்ம்மையி னைப்பெருந் தன்மையுங் - கண்டேன் கண்டது - மென்னையுங் கண்டேனபிறரையுங் கண்டேனனைத்து மென்னினைந் - தனையன்னே யெனக் காணுமாதர் - தம்மையுங் காணுந் தன்மையோரே” எனப் பிள்ளை வாக்கினு முணர்க. (உஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— o ——

மேலந்தச் சிவஞானஞ் சித்திக்கு முறைமையும் அதனாற் றரிசனப்படுவதனைக் கூறுகின்றது.

ஆரியனுமாசானவன் றருளாலுரைக்கின்ற வடிஞானமானமா விற்றோன்றும் - சர்வதேவ முனிகணங்களினாலும் பூஜ்யனான சிவன் கருணையினாலே ஆசாரியமூர்த்தியை யதிஷ்டித்துவந்த பக்குவான்மாவினிடத்திலே சந்நிதானம் பண்ணச் சிவஞானம் ஆன்மாவிலே அபிவியத்தியாம் அஃதெனபோலவெனில்?—சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய சுடர்தோன்றியிடச் சோதி தோன்றுமாபோல - ஆதித்தன் சூரியகாந்தத்தினிடத்திலே சந்நிதானம் பண்ண வதனிடத்திலே அக்கினி யுண்டானதுபோல,—தோன்றாத சூரியனுஞ்சிவந்தோன்றும் தானுந்தோன்றும் கொலலுலகமெல்லாந் தன்னுள்ளேதோன்றும் கேசியனுப்ப பரிடனுமா யுயிர்க்குயிராயெங்கு நின்றதில் எல்லாமுன விகழ்ந்த தோன்றும்-இவ்வாறு சிவஞான மான்மாவிலே பிரகாசிக்கவே முன் வாக்குக்கு மனத்துக்கும் விருத்திஞானத்துக்கு மெட்டாதே நின்ற சிவன் ஆன்மாவிலே வேறறத் தோன்றுவன். அந்தச் சிவனிடத்தில் தன்னையும் வேறற ஸ்வரூபஞானத்தினாலே காணப்படும் அநாதியாகிய பிரபஞ்சமெல்லாம் பரிபூரணமான தன்னிடத்திலே யேகதேசமாய்க் காணப்படும். தேகத்துப் பிரேரகன் ஜீவான்மாபோல் சிவன் ஜீவான்மாக்களுக்குப் பிரேரகனாய்ப் பரமான்மாவாய் நிட்கள தக்களினும் முறைவற நிற்கு முறைமையும் விளக்கத் தெரியுமென் றிதன்பொருள்.

——

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அப்படிக் குருஞானமுதி சாங்க சாகார சத்திபோ நிருவாண தீக்ஷையினால் விதேக பரமுத்தி சாக்ஷாத்காரஞ் சத்தி மெளங்குமென்றாஞ் சிஷஞானமுதி சாங்க சாகார வசத்திபோ நிருவாண தீக்ஷையினால் சதேக சீவன் முத்தி சாக்ஷாத்காரமெல்லாம் விளங்குமென்றுஞ் சமாதி நடுவொரு திருவிருத்தத்தால் காட்டி யிரு திருவிருத்தத்தா லிசைக்கின்றார்

இதுமுதல் இரண்டு செய்யுள் - ௫௦ - வது செய்யுளுரையிற் காண்க

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

தனது கிரணத்தோடும் தோன்று ஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே சூரியகாந்தக்கல்லின்கண் ணெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல, கேட்டித்தலோடு தோன்றுமாசிரியன் சந்நிதிமாத்திரையானே மாணாக்கனமாட்டு மேல் 'அசிராங்கடாக்கிளக்கின் ஞானம்' என்றவாறுள் முக்கிய ஞானமாகிய கேட்டலறிவு விளங்கித் தோன்றும். அது தோன்றவே, பதிமுதலிய முப்பொருளும் அவை யொன்றியொன்று வியாபக வியாப்பியங்களாமாறும் நிருவிகற்பமாய்த் தோன்றுமென்பதாம்

அருளாலெனப்புழி ஆன் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது. "தங்குலையா னொக்குடையான்" என்றாற்போல

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலாற் கேட்பிக்கவியுணர்த்திற்று.

ஆசிரியன் நூற்பொருளுரைக்குமவழி ஆசிரியனுணர்வே மாணாக்கனமாட்டுச் சென்று பற்றுவதுபோலுமென்னு மாசங் கை யறுத்தற்பொருட்டுத் தோன்றத்தோன்றுமென்றார்

உவமை கூறியதுமது

சடத்துக்கணிச்சித்துக்குச் சங்கிரமங் கூடாதென்பது சிவாகமநூற்றுணிபெனக

அணுவோரண்டமாம்படி நேரியனாகலால் உயிர்க்குயிரா தலும், அண்டமோரணுவாம்படி பரியனாகலால எங்குநிறை வும் பெறப்படுமெனபார், 'நேரியனாய்ப்பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்றனை' என்றார்

முன்னிகழ்ந்தென்பதனை யாண்டுக் கூட்டுக

முன்னிகழ்ந்த தோற்றமாவது சவிகற்பத்துக்கு முன்னாக நிகழும் நிருவிகற்பத் தோற்றம

இதனானே கேட்டலாமாறும் அதனகணிகழுமனுபவமுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

அருவமாய் வாங்மனாதீத கோசரனாய் நின்ற சிவனை உரு வமாய் வந்து இரக்ஷித்த தெப்படியென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்யசுடர் தோன்றியிட ச் சோதிதோன்றுமாபோல் - சூரியகாந்தமென்கிற கல்லினிட த்திலே சிவந்த வாதித்தர் வந்து பிரவேசிக்க அருபமாய்நின்ற வக்னி உருபமாய்த் தோன்றுகிற முறைமைபோல்,—சூரியனாமீ சானவன தருளாற்றோன்ற வடிஞான மான்மாவிற்றோன்றும்.

சுத்தனு யருவமாய்நின்ற சிவன் ஆன்மாக்கள்மேல் வைத்த
காருண்ணியத்தினாலே தானதானே ஆசாரியமூர்த்தியாக வந்
து தோன்றப் பெத்தத்தன்மையி லிவனை யுபகரித்துக்கொண்டு
நிற்கச்செய்தேயுந் தோன்றுமல்நின்ற சிவஞானந் தன்னிடத்தி
லே பிரகாசிக்கும—தோன்றத் சூரியனுஞ் சியந்தோன்றும-
அந்த ஞானம் பிரகாசிக்கவே இத்தனைகாலமுந் தோன்றுமல்
நின்ற சிவதரிசனமுண்டாம்,—தானுந்தோன்றும் - ஆன்ம தரி
சனமுமுண்டாம்,—தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளேதோன்
றும - பழயதாய்வருகிற விசுவங்களெல்லாம் அசத்தியமென்கி
ற முறைமையுந் தன்னிடத்திலே தரிசிக்கலாம் இவையொழிந்
து மந்தஞானத்தாலே,—நேரியனாய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா
யெங்கு நின்ற நிலையெல்லா மொன்றி கழுந்துதோன்றும- அந்தச
சிவன் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய சர்வான்மாக
களுக்கும் பிராணனாய் எவ்விடத்தும் பரிபூரணனா யசைவற
நின்ற நிலைமையெல்லாஞ் சந்தேகமற விளங்காநிற்கும

ஆரியனுமாசானவந் தருளாற்றோன்ற வென்றது பாடா
ணவாதி.

ஆன்மாக்களிலே விசேஷவான்கள் குருவா யிவனை இர
க்ஷிக்கும தொழிந்து சிவன் வாங் மனுஷீத்தனுகையால குரு
மூர்த்தி யாகானென்னச சிவனே குருவா யிரக்ஷிப்ப னென்றத
ற்குப் பிரமாணம, சிவஞானபோதம் - அ - சூ, ரு-வெ, இல்லா
முலைப்பாலுங் கண்ணீருமேந்திழைபால், கல்லாயுளதாமல் நீ
நிழல்போ—லில்லா, வுருவாகிநின்றுனை யாரறிவார்தானே, யுரு
வாகித் தோன்றானே லுற்று" என்றுங்கண்டுகொள்க

இதனாற் சொல்லியது அருவமாகிநின்ற சிவன் ஆன்மாக்
கண்மேல் வைத்த கிருபையாலே யாசாரியமூர்த்தியாக வந்து
தோன்ற இவனிடத்திலே யநாதியேயப்பிரகாசமாய்நின்ற சிவ

ஞானம் பிரகாசிக்கு மென்றும் அந்த ஞானத்தினாலே சிவதரிசனம் ஆன்மதரிசனம் பிரபஞ்சமாகிய பாசதரிசனம் என்னும் மூன்று தரிசனப்படுமென்றும், இவை யொழிந்து மந்தச சிவன் சட்சித்துக்க ளிரண்டினும் பரிபூரணனாய்நின்ற முன்றமையும் இவனுக்கு விளங்கா நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தோன்றியிடச் செய்தசுடர் - தனது கிரணத்தோடுந் தோன்றுஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே,—சூரியகாந்தக் கல்லினிடத்தே சோதிதோன்றுமாபோல - சூரியகாந்தக் கல்லின்கண் நெருப்புவிளங்கித் தோன்றுமாறுபோல,—அருளுணர்வகத்தரிபனுமாசானென்ற-கேட்பித்தவோபதேசத்தோன்று மாசிரியன் சந்நிதிமாத்திரையானே,—ஆன்மாவினிடை ஞானந்தோன்றும-மாறுகைகளையாட்டுமேல் சரிரணடாநகிளக்கின ஞானமென றவற்றுண முந்திய ஞானமாகிய கேட்டலறிவு விளங்கித்தோன்றும்—தோன்றத்துரியனுஞ் சிவந்தோன்றும் தானுந்தோன்றுந தொல்லுலகமெல்லாந் தனுள்ளே தோன்றும் - அதுதோன்றவே முதல்வனாகிய பதியும் ஆன்மாக்களாகிய பசுவும் பழைய பிரபஞ்சமாகிய பாசமும் என்ற முப்பொருள்களுந் தன்னுள்ளே தோன்றும்,—நேரியனாய்ப் பரியனுமாய் - அணுவேரண்டமாமபடி நேரியனும் அண்டமோரணுவாம்படி பரியனுமாய் நிற்றலால்,—உயிர்களுயிராயென்று நின்றநிலையெல்லாமுணர விகழ்ந்து தோன்றும் - உயிர்க்குயிராதலுமென்னுநிற்றலும் மவையொன்றிலொன்று வியாபக வியாப்பியங்களாய்மாறு நிருவிகற்பமாயத் தோன்றும்.

இதனுேன கேட்டலாமாறு மதனைக் ஊிகழு மறுபவமும கூறபபட்டன

மறைஞானதேசிகர் உரை.

இவ்வாறடைந்த சிவமுத்தித் தன்மை யுணர்த்துகின்றார்.

மிக்கதொரு பக்குவத்தின மிகுசத்திநிபாதமே வுதலு ஞானம்வினங் தோர்குருவினருளாற, புக்க னுட்டித் தேநிட்டை புரிந்துளோர்கள் பூதலத்தே புகழ்சிவன் முத்தராகித், தக்கபிரி யாப்பிரிய மினறியோ டிற றபணியத்திற் சமபுத்தி பண்ணிச்சங்கரனே, டொக்கவுரைந் திவனவரை யவரிவனே விடாதே யுடந தையாய்ச் சிவனருேறற மொன்றுமே காணபா.(உகூ)

(இ-ள்) மிக்க தொரு பக்குவத்தின மிகு சத்திநிபாத மேவுதலும்	ஆணமாக்கட்கெங்கு மொக்க மலபரிபாக முண்டா யுள்ளளவில் அப்பொழுதிற் சிவனி வனிடத் துண்டாய மலத்தைக் கெடுப்பித் தித் தீவரதரமான சத்தியைப பதித்தள்ள ளவிற் சம்சாரத்தில் வைராக்கியம் பிறந்து,
ஞானம விளை கதோர் குருவின ருளால்	ஒருஞானாசாரியனை யதிட்டித்துக் கொண் டு சாதிகாரை யென்னுந் தீக்கையைப் பெற று
புக்கனுட்டித் தே கிட்டைபுரிந் துளோர்கள்	அவ ரருளிச்செய்த வாகமத்தினவழி யா ராய்ந்து வைகல்யமற வனுட்டித்த பலத்தா லே, காட்ட மானதுபோல வசைவினறி யி

ருந்து நிட்டையைப் பொருந்தினவர்கள் எ
ச்சிரட்டையை யுடையோ ரெனில்?

புகலத்தே புக்க சமுசீவன் முத்தராய் — பூமியின்கண்ணே யெல்லாராலும் சீவன் முத்தரென்று கொண்டாடப்பட்டிருப்பார்கள், அவர்கள் பூதலத்தே சஞ்சரிக்குமிடத்து.

தத்ச பிரியாப் பிரியமின்றி — ஆன்மாக்களுக்குத் தகைமைப் பாட்டையுடைய சுகதுக்கமு மித்துருசத்துருவென்றும் விகற்பமின்று இஃதில்லாமையால்

ஓட்டிற் றம்பொனிற் பத்திற சமபுத்தி பண்ணி — எப்படி யோட்டினிடத்தில் விருப்பற்றார் அதுபோலப் பொன்னினிடத்தும் விருப்பற்று,

சகலத்தே யொக்கவுறைந்து — சிவனுடைய வியாபகத்துடனே தானும் வியாத்தனாய்

அவனிவனை வி(டாதே) இவனவனை விடாதே — சிவனு மான்மாக்களை விடாமல் ஆன்மாக்களு மந்தச்சிவனை விடாமற் கலந்திருப்பார்கள். இக்கலப்பு யாதெனில்? அநாதியந்த சமவாய மென்னப்பெறும்

உடங்கையாய் எச்சிவனே றுற்ற மொன்றுமேகர லபா. — விசுவமெங்குஞ் சிவனை வியாபித்து நிற்கையா லஃதெல்லாஞ் சிவனுடைய சொரூபமாகவே கண்டிருப்பார்கள். எ-று.

நிட்டை புரிந்தோர் - எழுவாய், காண்பர் - பயனிலை.
ஏகாரம் தேற்றம்.

இதற்குப் பௌட்கரம் சிவதருமோத்தரம் சுப்ர பேதத்துமறிக (௨௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

(மிக்கதொரு பக்குவத்தில.. காணபா) ஏகபாதம ஆனவாறல மிகவும பரிபாகமான காலத்தில தீவிரசத்திநிபாதமபதிய வொபபற்ற ஆசாரியனுடைய கருணையினாலே சிவஞானம பிரகாசித்து விஷயமுகத்தைவிட்டுச சிவாபிமுகனுகப் பொருந்தி நிட்டைகூடினபோ திந்தப்பூமியின கண்ணிலே யெல்லாரு மேத்தப்பட்ட ஜீவன்முத்தராகி யிச்சை யுண்டாகத்தக்க பதார்த்தத்திலே பிரியமும அல்லாத பதார்த்தத்திலே துவேஷமு மில்லாமற பொன்னையு மோட்டையும சமமாகக் கண்டு சுகத்தைப் பண்ணுகிறவராகையால் சங்கரனென்று பெயருடைய சிவனுடனே பிரிவற்று, சிவன ஜீவன்முத்தனைப் பிரியாமல் ஜீவன் முத்தா சிவனைப்பிரியாம லோரியல்பாய்ச சிவானந்தோதய மொனத்தையுமே யனுபவிப்பரென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

௩௦ - செய்யுளுரையுட் காண்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

பக்குவமுதிர்ச்சியா னுலாஞ் சத்திநிபாத மேவப்பெற்றார்க்கு அக்கேட்டலறிவு மாத்திரமாதலின்றி முதிர்ந்த முறுக விளையும், அப்பொழுது தம்மாசாரியராதல் தம்மோ டொருசாலை மாணக்கராய்த் தம்மின் மூத்தாருளொருவராதல் சிந்திப்பிசகப்பெறு மக்குறைபொருளின் கண்ணே கருத்தொருங்கி நுழை

த்து முனைவனுடைய மலைவரை ஏது திருட்டாந்த முதலியவற்றா
ற் சிந்தித்து நிட்டை கூடுதற்கண் வேட்கை மிக்குடையராகப்
பெறாரும், சிந்தித்தற் கருமமே மேற்கொண்டு ஆற்றுகின்ற
பற்றொன்றின்றிச் சீவன் முத்தரோடொத்துப் போதிவாகிய சி
வமும் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றொளியுங் கண்ணொளியு
ம் போலத் துவிதமாய் நிற்றலான், ஆணவத் தாமுளராக அறிய ப
பெறுது செய்தற்றோற்றமொன்றே காணப்பெறாது நிருவிகற்ப
சவிகற்பமெனுமிரண்டிற்கு மிடைநிலத்தே நிற்பரென்பாராம்

மிக்கதொருபக்குவத்தின் மிகுசத்திநிபாத மெய்து ஞானா
ம் விளைந்தனவே, அஃதானவை மேவாதவழி அசகேட்டறிவு
முறுகுதலின்றி யஃகி நிகழுமெனப்பதாயிற்று.

விளைந்ததுழியென்பது விளைந்தனத திரிந்தது

ஒரு குருவெனப் பொதுப்படக் கூறினார், ஒருசாலை மாணா
கராயத் தமயின மூத்தாரையுந் தழுவுதற்கு

புரிதல் விரும்புதல்.

சீவன் முத்தராகி யென்புழி ஆக்கச்சொல் உவமைப் பொ
ருள் குறித்து நின்றது. "ஆனவாரிவிமாடாவேனே" என்றாற்
போல

உடன்தையாயுறைந்து காணப்பெறாது, மனமூடெய்து கு
ணமிறைந்த தென்றாற்போலக் காரணகாரியப்பொருட்டாய் நி
ன்றது.

உம்மை சிறப்பு

ஏகாரம் பிரிநிலை

'அடைபவா சிவமேயாகு மதுவன்றித் தோன்றுமென்றா கட
னதென' என்பதும் இந்நிலையெனக் கொள்க.

இத்துணையே சித்திக்கலாமாறு மதங்களிகழு மறுபவமுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி முன்சொல்லப்பட்ட சிவதரிசனம் ஆன்மாக்களுக் குண்டாம்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

மிக்கதொரு பக்குவத்தினை - இருவினையொப்பு வந்து ஆன்மாக்களுக்குச் சிவனைப் பெறவேணுமென்று மிகுந்ததொரு வாஞ்சை யெழுந்திருந்த வவசரத்து,—மிகு சத்திநிபாத மேவுதலால் - தீவிரம் தீவிரதரம் எனனும் மிகுந்த சத்திநிபாதம் பொருந்துதலால்,—ஞானம் விளைந்து - அந்தச் சத்திநிபாதத்தாலே இவனிடத்திலே ஞானம் பிரகாசித்து,—ஓர் குருவினருளாற் புக்கனுட்டித்தே நிட்டைபுரிந்தவர்கள் - இவனுக்குப் பிராணனுடனின்று பிரகாசித்த அந்த ஞானந்தானே ஒப்பற்ற வாசாரியனாக வெழுந்தருளிவந்து இரக்ஷித்து அவனருளிச்செய்த முறைமையிலேநின்று நிட்டைகூடினவர்கள்,—பூதலத்தே புகழ்சீவன் முத்தராகி - பூமியிலே சொல்லப்பட்ட ஜீவன்முத்தராயிருப்பார்கள் இவர்களுடைய இலக்ஷணம் எப்படி யெனவில்?—தக்கபிரியாப் பிரியமின்றி - சுகதுக்கங்களைப் புசிக்குமிடத்துத் தக்குமுறைமையான விகாரங்களுமில்லையாய்,—ஓட்டிறம் வியந்திறஞ் சமபுத்தியன்றி - மட்குடமுடைக்க ஓடும் பொற்குடமுடைக்க வோடும் இரண்டும் பிருதிவியென்று இரண்டையுமொக்கக் கண்டு இந்தப் பிரபஞ்ச வியாபாரத்தைவிட்டு நீங்கி,—சங்கரனோடொக்கவுறைந்து - பரமேசுவரனுடனே இரண்டறக் கூடிப்பொருந்தி,—இவனவரை யவரிவனை விடாதே -

இந்தவானமா அந்தச் சிவனைவிட்டு நீங்காமல்நிற்க அந்தச் சிவனிந்தவானமாவைவிட்டு நீங்காமனிற்க,—உடனாகையாய் - ஆன்மபோதஞ் சிவியாமல் அந்தச் சிவபோதமேயாய் ஒன்றுபட்டு நிற்பார்கள் அப்படி நின்றவர்கள்,—சிவன் வேறற்றொன்றுமே காண்பார் - பிரபஞ்சஞ் சிறிதுந் தோன்றாமல் சிவனுடைய சுகசொரூப மொன்றுமே கண்டுகொண்டிருப்பர்கள்.

சங்கரனோ டொக்க வுறைந் திவனவரை யவரிவனைவி
டாதே யென்றது ஆன்மதரிசனம்.
உடனாகையாய் என்றது ஆன்மசுத்தி
சிவன் வேறற்றொன்றுமே காண்பரென்றது ஆன்மலாபம்

இங்ஙன சொல்லியது மிருத்த பக்குவான்மாக்கள் ஆசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே ஞானத்தையடைகூடி இந்தப் பூமியிலே ஜீவன்முத்தா விருப்பு வெறுப்பின்றி யிருப்பார்களென்றும் அவர்களுக்குச் சிவதரிசனமொன்று மொழிந்து மற்றொன்றுந் தோன்றாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மிக்கதொரு பக்குவத்தின் - பக்குவமுதிர்ச்சியான,—திருசக்தி நிபாத மேவுதலும் - நாலாஞ் சத்திநிபாத மேவப்பெற்றோர்க்கு,—ஞானம் விளைந்து - அக்கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்து முற்றக விளையும் —ஓர் குருவி னருளாற் புக்கு-அப்பொழுது தம்மாசிரியராதல் தம்மோடொருசாலை மாணாக்கராய தவமின் முத்தாகுமொருவராதல் சிக்ஷிப்பிக்கப் பெறும் அந்நூற்பொருளின் கண்ணே கருத்தொருங்கி யமைந்து,—அநுட்டித்தே நிட்டை புரிந்தனோர்கள் - முன்னுரைத்தபின் மலவற வேதநிட்டாந்த முதலிய வற்றைச் சிந்தித்து நிட்டை கூடுதற்

கண் வேட்கை மிக்குடையராகப் பெறுரா,—பூதலத்திற் றங்கப் பிரிப்பப் பிரியமின்றி - இவ்வுலகின்கண் விருப்பு வெறுப்பின்றிச் சந்தித்தற் கருமமே மேற்கொண்டு,—ஓட்டிற் றாணிபதத்திற் சம புத்திபண்ணி - ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவராய்ப் பற்றொன்றிற் பற்றென்றின்றி,—புகழ் சீவன் முத்தராகிப் புகழ்த்தக்க ஜீவன்முத்தரோ டொத்து,—சங்கரனோ டொக்க வுறைந்து இவரவனை யவனிவரை விடாதே யுடைந்தையாய் - பேரறிவாகிய சிவமுந் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற் றொளி யுங் கண்ணொளியும் போலத் தவிதமாய் நிற்றலால்,—சிவன் றொற்றமொன்றுமே காண்பர் - ஆணவந் தாமுளதாகலறியப் பெறாது சிவற்றொற்றமொன்றே காணப்பெற்று நிருவிகற்பஞ் சவிகற்பமெனனு மிரண்டிற்கு மிடைநிலத்தே நிற்பரென்ப தாம்.

இதனானே சுத்தத்தலாமாறு மதனைக் கணிகழு மறுப்பவுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இந்த ஜீவன்முத்தர் ஞேயத்தழுந்தமுறை
புணர்த்துகின்றார்.

அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினு லறியாதே யறிந்து, குறியாதே குறித்தந் தக்கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப் பையாகிற, பிரியாத சிவன்றனைப் பிரிந்துதோன் றிய பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த்தோன்றி, நெறியாலே யிவையெல்ல மல்லவாகி நின்றிறன்றுந் தோன் றிடுவ னிராதாரனே. (௬௦)

(இ-ள்) அறியாமை யறிவகற்றி — அறியாமையாகிய ஆணவத்தால் மறைப்புண்டு மயக்கமுறுங் கேவலத்திலேயுங் கருவிகரணங் கூடின சகலாவத்தையிலேயு மாவிரணங் கூடாமல்,

அறிவினாலே யறிவுகளை — சுத்தாவத்தையிலே இவனிடத்திலே அறிவுக்கறிவாய்த் தோன்றி நிற்குஞ் ஞானப் பிரகாசத்தினாலே,

அருளினாலறியாதே யறிந்து — சிவனது கிருபையினாலே பஞ்சகரணத்துடனே கூடி யறியாமற் சிவகரணமே தானாய் நின்றறிந்து,

குறியாதே குறித்து — பாராதே பார்த்து, அஃதாவது —

"ஊனக் கண்ணிற வீக்கை றுகூட்டி யறியாதே யறிந்த, அருட்கண்ணைக் கொண்டு மகாருஜ பெறுமே" எனவும், "என்றென்று நினைந்தவா தாம்பா லுணர்வினாற் மகிழ்ந்தனன்" எனவு மறிக.

அந்தக்கரணங்களோடுங் கூடாதே — சிவன் கருணைக் கலாற் புத்தியாதி கிழக்காமாகலால் அந்தக் கரணத்தா லறியாமல்

வாடாதே — அவத்தைகளிலும் பொருந்தாமல்

குழைந்திருப்பையாகில் — அந்த ஞேயத்துடனே கூடி ஐக்கியமாயிருப்பையாகில்

"எப்பொழுதும் இறைவன் வெண்ணீர் வளையூர் மருவு ளானைக் குழைந்து செய்யீரே" எனவுமறிக.

பிரியாதே சிவனருளே பிறிந்து தோன்றி — சர்வான்மாக்களிடத்திலும் பிரண்டற வியாபித்திருக்கிற சிவனருளே யிவனிடத்திலே பிரகாசித்து,

ஆன்மாவி லடிஞானந்தோன்றும் - உயிரினகமேனே யெ ன்றபடிக் தபசரிக்கப்பட்ட சரணகுரு ஞானக்கிரியா லக்ஷணமான தனமசின்ன முன்னுள்ள சிறசத்தியின் தறிகல பனை நீறுக்கல கிருத்தியாகிருதி சாக்ஷாத்காரஞ் சடிதிமல முத்தமாய வ்யக்தமாம்.—

தோன்ற - அப்படி யாவிர்ப்பவிக்க,—

அரியனுஞ் சிவந்தோன்றும் - மலசத்தியால் மூர்த்தமாகு முன சிறசத்திகளின் மறையப் பிரத்தியக்ஷமன்றி யிருந்த சிவன் பிரபொருளறிவி லுதித்த சாக்ஷாத்காரத்திற பிரத்தியக்ஷமா வான் —

தானுந்தோன்றும் - அப்படி முனனிருந்த ஆன்மாவுந் தற பொருளறிவி லுதித்த சாக்ஷாத்காரத்திற கிடைத்த ஒத்தற முருவனுப்ப பிரத்தியக்ஷமாவன.—

தொல்லுலகமெல்லாந் தன்னுளளே தோன்றும் - அநாதி சித்த சடசித்துப் பிரபஞ்ச மெல்லா மொத்த வியாபகமாயு மொவ்வொர் வியாபியமாயும பிரத்தியக்ஷமாம் —

தேரியனுப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்ற நிலை யெல்லாமும் நிகழ்ந்த தோன்றும - பிரத்தியக்ஷமாகிய சிவ னு சிறப்பா யணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய்ப் பசு வாகப் பிரேரகனும் முதகாணமயித்திரனுயிருக்கு முறைமை முறறுஞ் சாட்சாத்காரமாம். (உஅ)

மிக்கதொரு பக்குவத்தில் - தீவிரதர பக்குவ மல காலத் தில்,—

மிகுசத்தி நிபாத மேவுதலும் ஞானம் விளைந்து - பாவநா னைபதன பயம்பண்ணுதல்போல வனுக்கிரக சத்தியினது சமசார பயம பண்ணுஞ் சங்கற்பம் பொருந்ததலும், சமசார பயஞ்சிறி து ஒருபிரகாரம பரோக்ஷ சிவபுத்தியும பிறக்கத் தீக்ஷித சிவ

சொரூபத்தைச் சிவசாக்ஷாத்காரப் பரோக்ஷரூபதரிசனப் பயி ற்சித் தியானியபிக்குச் சமாதிப்பித்துப் பின் சிவனைப் பிரத்தி யக்ஷமாயக் காட்டும் குருவைத் தேடி யோடித் திகைக்கச் சிவ னைவந்து காட்டிக் கூட்டக்கூடிய,—

ஓர் குருவினருளால் - கடாக்ஷித்த தவனைப்பலனனுந் தீக்ஷாக னமாரூட சாக்ஷாத் தீக்ஷாலக்ஷண சிவசத்தி சமவதாரப் பிறக்கனம த்தால் சிவாகமக் கேள்விக் கருத்தர்களாய்,—

புக்கனுட்டித்தே - கேட்டுச் சிந்தித்தப் பரோக்ஷ சிவ நிச் சயம் பண்ணிப் பின்னப்ரோக்ஷம்போ லபிநயித்து நடிக்கும் தி யானஞ் செய்தே,—

நிட்டை புரிந்துள்ளோர்கள் - தியானத்துறைப்பு ரூப ச மாதி சாதித்தோர்கள்,—

பூதலத்தே புகழ் சீவன் முத்தராகி - சதேக சீவன் முத்தி சாக்ஷாத்கார வானந்த ளாகுகைக்குக் கீர்த்திக்கும் யோக்கியா களாய்,—

தக்க பிரியாப் பிரியமின்றி - விருப்பு வெறுப்பு மின்றி,—

ஓட்டிறறாணி புகழிற சமபுத்தி பண்ணி - ஓடுஞ் செம்பொ னு மொப்ப நோக்கி,—

சங்கரனொடொக்க வுறைந்து - சிவ சத்தி வியாத்திக் கொப்பத் தங்கள் சித்சத்தி விரிவு சிந்தித்து,—

அவனிவரை யிவரவனை விடாதே யுடனாகையாய் - நிரந்தர நினைப்புறறு நிரந்தர மினைப்பு நீங்காதே,—

சிவனைத் தோற்ற மொன்றுமே காண்பர் - சமாதி முதிர்வுக்கு ஞ சாக்ஷாத் காரத்திற் சிவன் முகத் தித்த சித்துவன்ப முற றுங் கைக்கலந்து வெளிக்கேள் அங்ஙோக்கத்திற் போதுற்ற வி ளங்குமாறுறும் சமாதியிலேகாக்கிர மாத்திர மாதலாற சிவ விறகு நிலைமாத்திரஞ் சித்திப்பார்கள்.

பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பாரென்று பேசவேண்டாம், சிவ சித்தாந்திகட்குப் பாதஞ்சலர் முதலோர்க்குப் போற் சமாதி யோகமன்று, சாக்ஷாத் காரமாகு மங்கியோகத்திற்கு அங்கமாதலால்

"ஸாயார்த்த பாசகம் ஞானம்
சிவயோகந்து சாசவதம்"

என்றிருத்தலானுஞ் சாக்ஷாத் காரமாகும் சிவயோகத்துக் கங்கம் சாக்ஷாத்கார யோகமே!

தியானம் சமாதி யோக மென்ப தங்கமாகையா லுபசாரம் (௨௧)

தியானம் ஞானத்திற்கு முறைமையும், சமாதி தியானத்திற்கு முறைமையும், சதேகசிவன் முத்தி சாட்சாத்காரஞ் சமாதியின் முகிழ்க்கு முறைமையும் சாற்றுகின்றது

அறியாமை யறிவகற்றி யென்பன முதலியன ஸ்ரீகுருத்திருவாய் மலர்ந் துபதேசிக்கு மொரு வார்த்தையென றுலகுரைக்கும் வசிமாற நீருமப் பீற்றிருசுழி யொருமொழியிற் "கோவாமமசிம" என்னும் வடமொழி விருவில் உக்காரமொப்புச்செப்புதலாகு மயமந்தியாதி படாகளை முனிவில் தலைமை முக்குறி மூவாகயம் மும்முப்பதம் மும்முப்பத மொட்டு மூவெழுத்து மும்முப்பதத்தில் மூவெழுத்திற் குறிக்கும் வாச்சிய லக்கிய விரும்பொருள்.

அவவிரு முப்பொருளில் இலக்கியப் பொருளாகும் ஆன்ம பரசிவ முக்குறி முப்பொருள்களின் முதற் பொருண் முறைமயிறருகக்குஞ் சுழுத்தி துரியம் துரியாதீதம் மூசகுறி மூவயத்தை சாக்கிரஞ் சொப்பனந் தாக்குஞ் சுமேனா மட்டு மூட்டுஞ் சகிககும்பசோப சாந்திமேல் உணமனோ மூலசங்கோபரிய பாரந்தங்களில் அப்படி யப்பொருள் தாக்கிப் பணைப்பமிக கேவல கும்பக

சூனிய குமபக சூனியாநத குமபக முககுறி முககுமபகஞ சாம பவி சேசரி சாககிரஞ சொபபனங தாககிய தாதலால.

அபபடி யபபொருள தாகஞ்ஞ சினமுததிரை மவுன முததிரை மவுனுநதமுததிரை முககுறி முாமுததிரை

அபபடி யபபொருள தாககுந தியானஞ சமாதி சாட்சாத காா முககுறி முகறிவு முனசொல்லிய முபமுப்பததகளிஞ மும முபபத மொடடு மூவெழுத்துககளிஞம்,நபபத முதலெழுதது களுககு வாசசியப்பொருள அஞுபடச ஸ்வரூப சிவயோகங குறிகதால, பூதானம சததுவானம அநதரானம சிவானம மந திரானம பஞசானமா,

சபபுபடச சிஉரூப சிவயோகங் குறித்தால்,குருலிங்க சங கமாதி,

இலககியபபொருள முறைமையி ஞனமனை யுற்ற சினமா ததிரானமா அநதிக கிராநத விநதுக சிவமாததிர பரசிவம

முககாபக முதலெழுதுககளுக்கு வாசசியப்பொருள பிரமாதி பரசிவமூாததி ஈசான மூர்த்தி பரியநத அஞுபட்ச அபரசிவம

நாதத துள்ளெழுந தொளிருஞ சுதத பூதாதி யுபாதியுற்ற பஞசானமாவுஞ சூககும பரசிவ ரூபியாயிருநதாலு மொருபிர கார மீசானமூாததி முதல் அஞு படச அபரசிவ ரூபியாதலா லப பொருளாம.

இலககியப பொருள் அதிக்கிராந்த விந்துக பரசிவ மாகு மஞுபடச சமபுபடச இருபரம்.

முடிவிற பதமுடி வெழுத்துகளுக்கு வாச்சியப்பொருள தியாந சமாதி யுபாதித தியாசசியததினும் சொரூபலட்சண சிவ கோடிக்குட குறிக்கும தியான சமாதி யுபாதியுற்ற அஞுபட்ச

சாப்பட்ச சின்மாத்திரானம் பரவுகள் இலக்கிட்டபொருளாக் கத்து சிவமாகு மணுப்பட்ச சாப்பட்ச இருசிவார்

ஆன்மாத்த தியானத்தானம், பரசு சமாதித்தானம், சிவ சாட்சாத் காரத்தானம்

பின்னொரு பகுப்பு மிதுபோ லிரு சிவத்தியானங் குறித்துச் செப்பப்படும்; அது செப்புவாம்

சிவ சத்தி யநந்தேசுர சத்தியாதிக் துவாரத்தினாலே பஞ்சாக்கிராதி லோகாதி யாரூடமாய் சுத்தராக அசுத்த கலையசுத்த வித்தை யிவற்றின் மறைந்து விளக்கினின்ற செயற்கைப் பட்சுகரண மென்றும் பசுப்பிரமாண மென்றும் படிக்கப்படுங் கற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிறசத்திகளைப் பொதுச் சிறப்பாய் மணத்தினாலும் மியற்கையினாலும் மசுத்தப்பிராகிருத மனோங்கார புத்திகள் பசுகரணங்களென்றும் பசுப் பிரமாணங்களென்றும் படிக்கப்படும்.

சிவசத்தி சாட்சாத் சிவாகமாரூடமாயுஞ் சிவமந்திராரூடமாயும் நாதத்தை யொழுந்தொளிருஞ் சுத்த மனோங்கார புத்தி காயமாயிருக்குஞ் சுத்த ராக்ஞ் சுத்தகலை சுத்தவித்தை யிவற்றின் மறைந்து விளக்கினின்று மியற்கையினாலுஞ் சிவகரண மென்றும் பதிப்பிரமாண மென்றும் படிக்கப்படும்

தற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிறசத்திகளைப் பொதுச்சிறப்பாய் மணத்தினாற் செயற்கையினாற் சிவகரணங்களென்றும் பதிப் பிரமாணங்களென்று மந்த முறைச் சொன்ன மனோங்கார புத்திகள் படிக்கப்படும்.

முறைமையில் அதிற் சிவாகம வழிச்சென்று மனோங்கார புத்தியிற் படிப்பவனது பசுத்துவ சிவத்துவ விவேகத் திரிபு தாரதக விவேக பரோக்ஷ தீக்ஷாயோகாங்க விகற்ப சங்கற்ப காவபோத ஞான விசேஷங்களைப் பண்ணும், சிவமந்திரவழிச் செ

லுமேருகங்கார புத்திகள் காலாக்கினியாதி யநுசிருதாகத புவனத் தத்துக்கும் அபரசித்தி பராபரசித்தி பரசித்தி முசசித்தி கள் விருப்ப முறைமையிற் சித்திக்கும் பொருட்டும் முடிவின முத்தி சித்திக்கும்பொருட்டும் பிருதிவிமுதற் குணமிருக்கும், அசுத்த கோடி பிரக்கிருதி முதற் கால மிருக்கும், சுத்தாசுத்த கோடி சுத்த தவித்தை முதற் சிவமிருக்கும், சுத்தகோடி முக்கோடிகளிற் சா டசாத் தரங்களாயு மணிப்பிரபைபோ லுபரி விரியும் வியாபார த் துவாரத்தினாலும் பூதானமாதி மந்திரானமாந்த பஞ்சான ம சாம்ப சிவபோக பஞ்சமார்க்கங்களி லொருவழியிற் பிர வேசித்த விகற்ப சங்கற்ப காவ போக வியாபாரங்களைப் பல விசமாயப் பலனும் அந்த விகற்ப சங்கற்ப காவ போகங்க ளாம்.—

அறியாமையறிவசத்தி - அறிவகற்றி அறியாமை யகற்றி யென மாறுக அறிவகற்றி யென்பது தத்துவசுத்தித் துவாரத்தினாலே ஆன்மசுத்தி தானே பண்ணப்பட்ட தாகிலும் தத்துவசுத்தி பிரதானமாகையால் தத்துவசுத்தி பண்ணியென்றே சாற்றப்படும்.—

அறியாமை அகற்றி என்பது மலமல வாசனை சுத்தித்துவாரத்தினாலே யான்ம சுத்தி பண்ணப்பட்டதினாலும் ஆன்மா பசுத்துவ மென்னும் மலோபாதியாற் பசுத்துவ மென்று வேறுசதவமாய படிக்கப்படுமாதலால் மலம் பசுத்துவத்தோடு பசுத்துவ மென்று படிக்கப்படும்

மலசத்துவ மென்று வேறு தத்துவமாய் மதிக்கப்பட்டதில்லையாதலாலும் ஆன்மசுத்தி பிரதான மாகையா லான்மசுத்தி பண்ணி யென்றே யுரையப்படும்.

இது தொகைப் பொருள்.

அறியாமை யசுத்த தத்துவமென்றும் அறிவு சுத்த தத்துவமென்றுஞ் சொல்வாருமுளர்.

வகைப்பொருள்

விரிவுப்பொருள் ஒருமிக்க வகுத்துரைப்பாம் —

அறிவுசற்றி - நிருவிகற்பம் புணர்ந்த தத்துவிக்குஞ் சவிகற்பமாய தேவர் நராமுதற் பசுவர்க்க மாயா சகல வாக்கத்திற் காணப்படுஞ் சிற்றறிதல் சிறுசெயற் றொழில்களையும் விபரீதவேதனை விக்கிரக போகங்களையும் பண்ணும்படி சிறிதுமலஞ்சிகத்தும் அசுத்தகலாதி கஞ்சுககலா வசியத்துவ தெளரிந்திரியக்குறி யசுத்த சகலத்துவமுற்றுக்கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவ லட்சண சித்துவ சின்ன அசுத்த போகக் கிரியா கர்த்திருத்துவமாகிய வசுத்த போத்திருத்துவ மாத்திர பொதுக்குறித் தூல புருஷ தத்துவத்தினது புத்திரப் போலிய போக்கிய போத்திருத்துவ போக்கோப போத்திருத்துவமாகிய வசுத்த போகத்திருத்துவச் சிறப்புக்குறித் தூல சிவத்துவ மேகம்.

நிர்விகற்பம் புணர்ந்த தத்துவிக்குஞ் சவிகற்பமாய மந்திரேசுவர மாயாசுத்த சகலபதி வாக்கத்திலும் மந்திர மந்திரமகேசுவர மகாமாயா சுத்த சகல பதிவர்க்கத்திலும் காணப்படுஞ் சாதிசய பேரறிதல் பெருஞ்செயற் றொழில்களையு மற்ப விபரீத வேதனை விக்கிரக போகங்களையும் பண்ணும்படி பரிபாகியில மலவாசனை தடைக்குங் கலாதி கஞ்சுகமற்றுக் கலாவசியத்துவ வைந்திரியக் குறிச் சுத்த சகலத்துவ முற்றுச் சாதிசய சாவஞ்ஞத்துவ சாவ கர்த்திருத்துவ லக்ஷண தூல சிவத்துவ சின்ன சுத்தபோகக் கிரியா கர்த்திருத்துவமாகிய சுத்த போத திருத்துவமாத்திரப் பொதுக்குறிச் சூக்கும புருஷதத்துவத்தினது

புததிரபபோலி போககிய போததிருததுவ போகோப போத்
திருததுவச் சிறபபுககுறிச் சூககும சிவத்துவ மேகம
இம்மந்திர மகேசுராதி யபரபதிவாககததுக கூறிய கு
றியுட கூடிய சுததி சகலததுவ முறற பொதுககுறிச சிறிது சின
னமுஞ சூககும சிவததுவ விளககு விககிரக விசிஷட சகலதது
வ முறற சிறபபுககுறிச சிறிது சினனமுமுடைய வணுசதாசிவ
வணுவஙகபதி வாகாததின முனசொலலிய பொதுககுறிய பர
புருடததுவததினது புததிரபபோலி போககிய போததிருதது
வ போகோப போததிருததுவச சிறபபுக குறிய பரசிவததுவ
மேகம

இம முபபுருடததுவப் புததிரப் போலி முச்சிவத்துவமு
முபாதிச சிததுவமும் தூல சிவத்துவமுஞ சூககுமசிவததுவமு
ம நிரதிசய பரசிவத்துவ சொரூபலடசண சிவ சமசுத்த சிவனு
யிருககினற நமககுச சொரூப லடசணமமனறு, தடஸ்த லடச
ணமேயென்று மகாவாககிய நடுமுத லிருபதஙகளுக்கு வாச்சி
யார்த்த தடஸ்த லடசணமததுவ தடஸ்த லட்சண சிவதது
வ சுததிககுறி முபபுருஷததுவப புததிரப்போலி முச்சிவதது
வசுததி ததததுவசுத்தி பணணிததானே யேறறயநதனை யினறிப
பணணப்படு மாதலால் முச்சிவததுவ தடஸ்தவறிவு விளககாத
லா லறிவென றுபசரிககப்படுக் தத்துவஙக ளாதலா லறிவுக
றறி யெனபதறகாத்த மிதுவாகத் ததததுவசுத்திபண்ணி,

ஈதிம்முறை பண்ணவெனப திசைக்கினறும்.

சாதக சாமாத்தியததுக்குத் தக்க சிவஞானத்தினைச் சி
த்த சிவகனமயோகி பண்ணுக் தத்துவ தட்ஸ்த ஆன்ம தடஸ்த
சிவ முப்பதார்த்தங்களின் இலட்சண வப்ரோட்ச நிரீட்சணைக
குறித நிரூபம்,

ஒன்றுகொன்று ததுவ முதற் திரிபதார்த்த லடசண

விலட்சண பரோட்ச பரீட்சாரூப நிரீட்சணைக் குறித்த திரிகரிசனம்

மனோவிகற்ப சங்கற்ப பிரவிர்த்தமாய்ச் சிவோகஞ் சிவோகஞ் சிவ சிவ வென்பது முதற் பலவித வகங்கார புத்தி விர்த்திப் பிரவாக சின்ன தியானக் குறி தியானசித்தி சின்ன சமாதிக் குறி திரியோகஞ் சமாதி சித்தி சின்ன சாட்சாத்காரக் குறித் ர்ம்பாகம்

மூலமந்திர முச்சரித்துள்ளிருக்குஞ் சரிகாஸ்திர மதித்துத் தொடுத்த இருதயாகத்தை தொட்டுத் துயர்த்சாகத்தைக் குறித்துச் சமஞ்நந்த மட்டு முட்ட முறைமையிற் போயப் போயத்தான தேசகால சத்திஞ்சுத்தக்க திருக்கயத் திருத்துதான சூலியப் பிராசாத முச்சரித்துள்ளிருக்குஞ் சரிகாத்திர மதித்துத் தொடுத்துத் தத்துவங்களையு மாமாயாவிலுஞ் சிவனிடத்திலுந் தத்துவ தட்டஸ்தத்திஞல வைத்த தட்டஸ்த தன்மைகளையு மறுத்துக் காரணத் தடைவிலொடுக்கி யகண்டிதங்களாகப் பண்ணப்பட்டவைபோ லட்சித்த தனது தத்துவ வசியத்துவத் திபாசசியம் பண்ணித் தத்துவங்கள் தனக்கு வசியங்களாகத் தான் வசியாயிருத்தலாகுந் தரிசுத்தி

இவைகளைத் தான்பண்ணிச் சிவஞானத்துணைச் சாத்திய சிவகணமயோகி பண்ணுஞ் சொல்லியகுறிப் பரோக்ஷரூபத் தரிசனம் யோகங்கூடிய மரியாதி மனோவாயு ஜயவச மாத்திரத் திஞலே யொரு பிரகாரந் தன்வச மாக்குதலாகும் திரிசுத்தி

இவைகளைத் தான்பண்ணி யோகசாமர்த்திய மில்லாதிருந் தால், நேதிநேதி நியதலட்சணை சிவகணம மாத்திரத் துணைச் சாத்திய சிவஞானயோகி பண்ணுஞ் சொல்லியகுறிப் பரோட்ச ரூபந் தரிசன மநாத மங்யாத் மாபிமானத் தியாகமாகுந் திரி

இவைகளைத் தானபண்ணி, அதிமல பரிபக்குவத்தராலாவி ரப்பவிக்கு மதிமோட்ச வாஞ்சையின தாவேசத்தாரான அது வனறித தேசகலா சத்தி சங்கடத்திஞறான வித்தார சுத்தி விருப்பமில்லையேல மமகார வகங்கார மாத்திரத் தியக் சிப மாத்திரமாகுஞ சுத்தி தானபண்ணி,

அல்ல திலகுயாய்த தத்துவ தாத்துவிக்ப பிரபஞ்ச மனை தது நிராகார நிராலமப மாயா மகா மாயாத தோறற மாத லா லப்படி யகண்டிதமாய்க் காரணாகார நிராதார நிராலமப நிஷ்பிரபஞ்ச சிந்தனைமாத்திரமாகுஞ சுத்திதான பண்ணி,

இப்படிச் சுத்திபண்ணு மிடத்துச் சுத்திமாகக பேதமு ணடு, அது சொல்லுவாம.

முக்திமாத்திரம் விரும்பின் நிராலம்ப சிவயோகம் பண ணும பொருட்டு குரு போதிப்பச சிவாகமஞ சிகாரமாகக மாத்திரஞ செபபுங் குருவாக்கிய மாத்திரந்தான கேட்டுச் சித தித்துத தெளிந்து இருதயமுதற் றுவாதசாந்த வியாபியாயிரு ககும பிரமரந்திர முடிவாகும் பஞ்சாதாரங்களிற றங்கித தவ கிக கமல முடிச்சுக் கவிவு திறந்து நிறந்து தத்துவமுதலிய ரூப பதார்த்த ரூப தரிசனமுதலிய பண்ணிப்பண்ணிப பழகிப்பழ கிப பின ருணங்களிற் றங்காது சுத்த சதுரே தாகந்த தாக்கி மூன சாதகிய முறைமையின மூச்சிவயோகிகளபண்ணு முட்ப குப்புத தத்துவமுதலிய மூப்பதார்த்த மூச சுத்திபண்ணி, ப ணணுமிடத்து,

பிரமாதி பரசிவமூர்த்தி ஈசானமூர்த்தி பரியநத சிவமூர்த தி பதங்களில் விரும்பிய சிவமூர்த்தி பதமுத்திபெறும் பரமுத திகுறிச சிந்திகுறித்து, மூச் சிவயோகிகள் பண்ணு முறைமை யிற சுவாவதி சுத்தியோடு விரும்பிய தத்துவ தத்துவாருகா ணம சிவமூர்த்தி சிவசிவ மூர்த்தி திரூப தரிசன யோகபோகங

கப்ப பண்ணுமிடத்தும் சித்திக்குப்பின் முத்திவிருப்பின் முத்திவழி பழக்க சுத்தியோடு பண்ணுமிடத்தும் பவுதிக தேகாதிக்குறிப் பூதாதி மந்திராந்த வைம் பொருள்கட்குந் தத்துவநக்கொன்று பெயர் சாற்றப்படு மாதலாற் பூதானம் தத்துவானம் வந்தரானம் சீவானம் மந்திரானம் சாலம்ப சிவயோகமார்க்கங்களிற்பழகிய வொருவழிமைத்தய பின்வழிப்படக்கிச் சுத்த பூதாதி தொடங்கச் சமனுந்தமட்டு முடிம் பூதானம் சித்துபாதித் தூல தேகக்குறிப் பூதங்களிற்றுன் றத்துவானம் சித்துபாதிச் சூக்கும தேகக்குறித் தத்துவங்களிற் றுன அந்தரானம் சித்துபாதி பரதேகக்குறி யந்தரத்திற்றுன் சீவானம் சித்துபாதி யகங்கார மாத்திரக்குறிச் சீவனிற் றுன மந்திரானம் சித்துபாதிக்குறிப் பிராசாத முதலிய மந்திரத்திற்றுன் ரூப தரிசன யோகபோக சுத்திகள் பண்ணப்படும்

அறிவகற்றி யென்பதற் காத்த மிவ்வள வமைந்தது —

கழிகாமத்தராயினோர்க்கு, அத்தொடர்புடையார் திணக்கம் அக்காமப்பையைச்சூழ வளர்க்கு நீராதல்பற்றி அக்கட் கழிபே ருவகையும், அல்லார்திணக்கம் அதனைப் பாற்செய்வதுகளையா தலபற்றி அவர்கண் வெறுப்புமிகுதியும் உளவாமாறுபோல, மாறு சிவானுபவ மருவிக்கொண்டு அரனமலரடிக்கீழிருக்கப்பெற்றோர்க்கு, அதனை வளர்க்கு நீரையராகிய வத்தொடர்புடையாரோடிணக்குநர்கண் உவகைமிகுதியும், அதனைக் கெடுக்கு நீர்மையராகிய பிறரோடிணங்குநர்கண் வெறுப்புமிகுதியும், இயல்பாயுளவாமென்பதாம்.

விதிமுகத்தாற் கூறினார், சுவைப்பொருட்டுண்ணப்படும் பால் மருந்துமாமாறுபோலச் சாதனமுமாமாறுணர்த்துதற்கு

முன் வருவனவற்றிற்கு மிஃதொக்கும்

காமுகனாயினொருவன் ஒரு வனிதையிடத் தன்புடையனென்பது அவளொக்கலைக் கண்டுழி நிகழுமனவெழுச்சி பற்றியே தெளியப்படும். அதுபோல ஈசனுக்கன்புடைமை அவனடி

யவரைக் கண்டு நிகழு மன்பினளவு பற்றியே தெளியப்படுமாக லான அடியவராக கண்பிலவழி ஈசனுக் கன்புடையார்போலொழுகுதல் நாடகமாத்திரையே பிறிதில்லையென்பார் அடியவர்க் கன்பில்லா ரீசனுக் கன்பிலரென்றும், எவ்வுயிர்க்கணு முளனாகிய வீசனிடத்து அன்புடையார்க்கே அத்தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கு மன்புடையராதல் கூடுமென்பார் ஈசனுக்கன்பிலா ரெவ்வுயிர்க்கு மன்பில்லாரென்றும், இவ்விடங்களி லன்பிலவாதார் தாமுயிர்க் குறுதி செய்துகொள்வா ரல்லரென்பார் தமக்கு மன்பில்லாரென்றுங் கூறினார்

"அன்பிலா ரெல்லார் தமக்குரியர்" என்புழித் தம்மென்றது உடம்பை நோக்கியாகலின், அஃதீண்டைக்கு முரணாமை யறிக

இத்திருமறை முகத்தால் அடியவர்க் கன்புடையாரது பெருமையுங் கண்டுகொள்க

அவர்கருமம் முன்கருமமாகச் செய்தலுந் தற்போத முனைந்து நின்று செய்யிற் குற்றமாமென்பார், அருண்ஞானக் குறியினின்றா

கூசுதல் அவருயர்வும் தன்னிழிவும் நோக்கி நிகழ்வது

குழைதலுங் கட்டியிடுதலுங் கூத்தாடுதலும் உவகையிற் றியி நிகழு மெய்ப்பாடு.

இதனானே இரண்டாங்கூறு தெரித் துணர்த்தப்பட்டது.

முதற்கூறு செங்கமலத் தாளிணைகள் சேரவொட்டாத நிமலங்களொன் றுண்டே யுடம்போடு புணர்த்தோதி வலியுறுத்தமையின், வேறு கூறிற்றிலர்.

நிரம்பவழகியருரை வருமாறு.

இவைமுதனார் புகலவர்கள் சிவபத்த ரல்லாதவருடன்

கூடலாகாதென்றுஞ் சிவபத்தர்களுடனே கூடவேண்டுமென்று மருளிச்செய்கிறார்.

ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லார் - பரமேஸ்வரனிடத்தப் பத்தியில்லாதவர்கள் சிவனுடைய வடியாரிடத்திலும் பத்தியில்லாதவர்களா யிருப்பார்கள். இதன்றியும்,—எவ்வுயிர்க்கு மன்பில்லார் - சராசரமாக்க ளிடத்திலு மான்ம இரக்கமுமவர்களிடத்தி லுண்டாகாது,—தமக்கு மன்பில்லார் - முன் சொன்ன விடயங்களி லன்புடையவருகிற ராங்களுக்கும் பிழைக்கலாம், அது மில்லாததுகொண்டு தங்களுக்குத் தாமுங் கிருபையில்லாதவர்கள்—பேசுவதென் னறிவிலாப் பிணங்களை - இப்படிக்கொத்த அறிவுகெட்ட பிணங்களை யென்னென்று சொல்லுவேம்—காயினங்கிற பிறப்பிலும் பிறப்பிலும் பிணங்கி வாய்விடீ - காமவர்களுடனே கூடிலமைச்சுப் பிராணனுய்கிற்கிற சத்தியத்தைத் தரிசியாத வண்ண மயக்கத்தைச் செய்து ஜநநத்திலு மரணத்திலு மாறிமாறி வருகிற துக்கத்தை யுண்டாக்குகிற புத்திர மித்திர களத்திராதிகளோடுங் கூடுகலை நீவிட்டு நீங்கி,—ஆசையொடு மரனடியா ரடியாரையடைந்திடு - விருப்பத்துடனே கனவிலு நனவிலுஞ் சிவனை யல்லது மற்றொன்றையு மறியாத சிவனுடைய வடியார்களுடைய வடியார் திரட்சியிலே கூடிக்கொண்டு,—அவர்கரும முன்கருமமாகச் செய்து - அவர்க ளருளிச்செய்த பணிவிடையை யுன்னுடைய காரியமென்றே பிரியத்துடனே செய்து,—கூறிமொழி சருளஞானக் குறியி னின்று - அப்படிச் செய்தே யாவ செய்தேனென்னுங் கர்த்தாமறந்து அந்தச் சிவபத்தர்களைப்போல நீயுஞ் சிவனுடைய காருண்ணியமாகிய சிவஞானத்தாலே சத்தியத்தைத் தரிசித்து அந்த நிலையிலே நின்று,—கும்பிட்டுக்கட்டமிட்டுக் கூத்தாடித்திரியும் அந்தச் சிவபத்தர்களை திருக்கூட்டத்தைத் தண்டனைபண்ணிக்

கையுங்கொட்டிக் கூத்தமாடித் திரி, அப்படிச் செய்தகாலாரச் சித்தமான கன்மம் பொருந்தா.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் சஉ-சூ, உ-வெ "மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ், சிறப்பிலார் தந் திறத்துச் சேர்வை—யறப்பித்துப், பத்தரினத்தாய்ப் பரனுணர் வினாலுணரு, மெய்த்தவரை மேவா வினை" என்னுமதனுங் கண்டுகொள்க.

இங்ஙனஞ் சொல்லியது, ஞானவான்களாயுள்ள சிவபத்தர்களோடுகூடிப் பிரபஞ்சத்தாருடனே முன்புகூடி வந்த வாழ்க்கை யொழியவே ஆகாமிய மிவர்களுக் கேறுமென்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சாமுகனுவா ரொருவன் ஒரு வணிகனிடத்து அன்புடையனென்பது அவனொடுக்கலக்குமிடத்து நிகழு மனமினாலும் பற்றியே தெளியப்படும், அதுபோல ஈசனடியவரைக் கண்டவிடத்து நிகழு மன்புடைமை பற்றியே, ஈசனுக்கன்புடைமை தெளியப்படுமாகலான்,— அடியவர்க் கன்பில்லா ரீசனுக்கன்பில்லார் - அடியவர்க்கன்பில்வழி யீசனுக் கன்புடையார்போ லொழுகுதல் நாடகமாத்திரையே பிறிதில்லை,— எவ்வுயிர்க்கு மன்பில்லார் - எவ்வுயிர்க்கண்ணு முளனாகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே யத்தொடர்ப்புபற்றி எவ்வுயிர்க்கு மன்புடையராதல் கூடும்,— தமக்கு மன்பில்லார் காம்பேசுவதென - இவ்விடங்களினல் பில்லார் தம்முயிர்க் குறுதிசெய்து கொள்ளுவா ரல்லராகலி னதனை யாஞ்சொல்லுவதென்னை, கழிகாமத்தா ராயினு மக தொடர்புடையார் நினைக்கும் அககாமப் பைங்கூழ் வளாக

குரோதலபற்றி அதனகட கழிபே ருவகையாமாறுபோல அர
னடியாரடியாரை யடைந்திட டவாக்கரும முனகருமமாக ஆ
சையுடனசெயது - மாருதசிவாறுபவ மருவிககொண டரனம
லரடி கீழ் இருககப பெறறார்ககு அகனவளாககு நீரமையராகிய
வததொடாபுடையாரோ டிணங்கி யவாபணிவை யுளபணியா
கவே தறபோத முனைததலின்றி விருப்பததுடன செய்தறகண
உவகை மிகுதியும காமுகரல்லாதார திணகக மதனபயாரசசெ
யும கலயாதலபற்றி யதனசண வெறுப்பு மிகுதியாமாறுபோ
ல,—அறிவிலாபிணங்களோபிணங்கிறபிறபபினுமிறப்பினுமம
பிணங்கிடுவா விடுக-அதனைகெடுக்கு நீர்மையராகிய அறிவில
லாரோ டிணங்கிற பிறபபிறபபிற பட்டுதுவராதலின அதனகண
வெறுப்பு மிகுதியும உளவாம, அதனைவிட்டு நீங்கி,—கூசிமொ
ழிச தருணஞானககுறியின்று - அடியாரதயாவு முனதிழிவு
நோக்கிக கூசி நயமொழி கூறிச சிவஞானததா லிரணடறவக
கலித நிலையின்று,—கும்பிட்டுத தடடமிட்டுக கூத்தாடி
த திரியே - அவவுவகை மிகுதியாற் கும்பிட்டுக கைகொட்டிக
கூததுமாடித திரிவாயாக வெனபதாம.

இதனுளே இரணடாங்கூறு தெரித்துணாததபபட்டது
முதறகூறு செஙககமலத் தாளினைகள சேரலொட்டாத திரிமல
ஙகளென வாணடே யுடமபொடு புணாத்த ஒதி வலியுறததமை
யின வேறு கூறிறறிலா.

கஉ-சூ, உ-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

சிவன திருவேடத்தாரை யுடனாக்கிச சர்வாணமாக
கலயுமீடேற்றுகையின்பொருட டோர
சிரபபுவிதி புணாததுகினறார்

அறிவரியான் றனையறிய வாக்கையாக்கி யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற், செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ் சிவோகம்பா விக்குமத்தாற் சிவனுமாவர், குறியதனை விதயத்தே யரனைக் கூடுங் கொள்கையினா லவனவர் குறியொடுதா மழியு, நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று நேசத்தாற் றொழுதெழுநீ பாசத்தாள் விடவே. (௯)

(இ-ள்) அறிவரியான்றனை யறியவாக்கையாக்கி — ஆன்மாக்களுடைய மனோவாக்குக் கெடாத சிவன்றனது காருண்ணியத்தாலே யாவருந் தன்னை யுணர்ந்து வழிபடுதற்பொருட்டு மாயாகாரிய மாகிய வுடலை யெடுப்பித்து,

அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்து — எண்பத்து நான்கு நூறாயிரம யோனிபேதங்கடோறு மவ்விடத் தவ்விடத்திலே யான்மாக்கடோறு முயிர்க்குயிராய்நின் றதற்கேற்ற ஞானத்தைப் பிரகாசிப்பித்து நிற்றலால்

அருளாற் செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவேயாகும் — சிவன்றன் திருவருள் அவ்விடங்கடோறும் வியாபித்து நிற்கிறத்தினாலே யவனது வேடமாகிய திருநீறு முருத்திராக்கமுந் தரித்திருக்கு மடியார்களையுஞ் சிவனுடைய திருமேனியென்றே கொள்ளப்படும். அஃதன்றி,

சிவோகம் பாவிக்குமத்தாற் சிவனுமாவர் — சோகம் பாவனை பண்ணும்பொழுது அத்துவிதமாகப் பாவிக்குமதனாலே இந்த ஞானவான்களைச் சிவனென்று சொல்லப்படும். அஃதன்றி,

குறியதனு வி நயந்தே யாரை க கூடினகொள கையிறு லவனு வா	ஆசாரியன காட்டின குறிவழியே நின்று தங்கள் இருதயங்களிலே சிவனை யந்தரியாக மாகப் பூசித்து முடிவிலகட கோதண்டத் தானத்திலேயிருபம பிரபயித்துக கொண டிருந்து கோடபாட்டினாலும சிவனுக்கே திற பார்கள்.
குறியொருநோ மழியு நெறியத னற சிவமேயா ய் நினறிடுவா	இபபடிப் பலவாகத் தாங் குறித்துக்கொ ணடு நினற குறிபபுக்களுங குறிக்கறியும புத தியாதிகளும சேர விலயச்சைப் பொருந்தி னவிடத்து கிட்டைபப பொருந்தி நிறகிற வழிபாட்டினாலும சிவமேயாய் விடுவா
எனறால்	இப்படி யேதுகள் பலவாகக் காட்டுகை யினறு திருவேடத்தாரோ டணிக அஃ தெதகாரணத்தா லெனில?
நேசத்தாற் றொழுதெழுமின பாசத்தாள விட வே	பாசத்தாள விடவே நேசத்தாற் றொழு தெழுமின எனப் பதமாறுக யாதாமொரு வ ரொருவன வீட்டிற் களவுகொள்ளக கரு துமவன அவன வீட்டுத் தாளுக்குப பொடிப் போட்டுத்தி யதனை விடுவிக்குமாறபோல,

இந்த வாணமாக்களையுஞ் சிவன முத்தி யடைவிக்கையின பொ ருட்டு இவர்களை வணக்கஞ்செய்பவே யுனனைவிட்டு நீங்கவொ ட்டாம லிருக்கிற அஞ்ஞானமாகிற கபாடத்தைப் பதித்தி ருக்கிற பாசமாகிற தாள கழன்று நீங்கி யதுபோகவே பிரகாச முண்டாம். எ-று.

இரண்டா முருபு காணாமுருபாய் மயங்கிற்றென வறிக.

இதற்குக் காரிகமென வறிக. (௯.)

சிவாகரயோகியருள் வருமாறு.

—o—

மேலெத்தச் சிவபத்தர்க ளிற்கு நிலைமையாற் சிவனெனவே வழிபடுகவென்று கூறுகின்றது.

அறிவரியான றனையறிய வாக்கையாக்கி யக்கையகே யுயிராக குயிரா யறிவுகொடுத் தருளாற் செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவேயாகும் - பாசவறிவாலும் பசுவறிவாலும் மறிதற்கரிதாகிய சிவன் றன்னை யுணருமாறு தவமபலனும் தேகத்தையும் தபோவேஷத்தையுங் கொடுத் தந்த தேகத்தில் ஜீவான்மாக்களிடத்திலே பரமான்மாவாக நின்று சிவஞானத்தைப் பிரகாசிப்பித்துக் கருணையினாலே பிரிவறப் பொருந்துகையினாற் சிவனுடைய வேஷத்தைத் தாந்த தேகம் சிவனுடைய திருமேனியேயாம். இது ஞானசரியைபண்ணு மவர்க்குச் சொன்னது — சிவாகம பாவிக்குமத்தாற் சிவனுமாவர் - பூதசுத்தியானந்தரம் சீகண்டாதி மாதிருக்கைப் பஞ்சப்பிரம ஷடங்க காஷடத்திருமந்த கலா வியாசங்களைப் பண்ணிச் சிவோகமென்று பாவனைபண்ணு மத்தாற் சிவபாவனையும், உண்மையினாற் ஜீவபாவனையு முடையவர்களாவார்கள். இது ஞானத்திற் கிரியாவானைச் சொன்னது — குறியதனுலிதயத்தே யரனைக்கூடுங் கொள்கையினாலவனாவர் - அஷ்டகலாப + பிராசாதத்தை இந்தயாதியாகப் பிரம்மாதி காரணத் தியாகக்கிரமத்திலே துவாதசாந்தமாகிய உன்மனை சத்தி சகிதரான — அகாசிருகரை வேறறப் பொருந்து முறைமையினாலகண்ட பரமசிவனும். இது சிவஞானயோகியைச் சொன்னது — குறியொடு தாமழிவு செறியதனாற் சிவமேயாய் நிற்பவர் - ஞாதுரு ஞானஞேயமென்னு மூன்றும் கழுவதினாலே சத்தி சிவாகனமா மென்னும் பேதமறச் சிவமேயாவார் கொரகதேற்றம். தேற்றமாவது, சிவனேயல்லது ஜீவபாவனு சற்றுமில

லை யென்றது,—என்றால் - இவ்வாறு ஜீவன்முத்தரான போக
ளை சிவனேயென்று வேதாகமங்கள் சொல்லுகையினாலே,—ஈங்
சத்காரமெழுந்திடு நீ பாசத்தாரவிடவே - சிவனைப்போல் மிருந்
த வனியிலே நீ வணங்கி வழிபடு, உன்னைப் பந்தித்திருக்கும்
பாசங்களானது நீங்கிவிட

பாசத்தா ரென்றது இழிவின் வந்த உயர்திணை வாய்ப்பாடு

ஏகார மீற்றசை

+ ப்ராசாதம்-உபபரிகை, — அநாசிருதர்-ஒன்றையும்பொருந்தாதவர்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவோகம் பாவனை பண்ணு மவர்களுக் தாசோகம் பாவனை சத்தருவாளுலும் பராக்குற்ற பொது பாவனை பலிக்கு முபாயம் பண்ணலாமென்று படிக்கின்றார்.

சிவோகம் பாவிக்குமத்தால் - அறியாமை யறிவகற்றியெனும் திருவிருத்த முதலியவற்றிற் செப்பியபடி சிவோகம் பாவனை பண்ணுதலால் பாவனு சாமர்த்திய மில்லாத போது,—குறியதஞ்சிதயதத்தே யானைக் கூடிய கொள்கையினால் - இருதய கமலத்துற நிர்பா கிருதி காதா கிருதி சதாசிவா கிருதி முதற சகள நிட்கள சகள சாகாரத் தன்மையினுற சிவனைத் தியானிக்குஞ் செயதியினலே,—அவனவர் - சிவ சமான சாதிச சியனவர்,—துறிபொடு தாமழியும் நெறியதனல்- நிராகார சிவ சமாதியில்,—சிவனேயாய நின்றிடுவர் - சிவனைப் போற் சிவனவர்.

மறைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வேடத்தாலும் பாவனையாலுஞ் செயலாலுந் தன்மையாலுந் திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாதல் தெளியக்கிடத்தலின், அதுபற்றி யவரை அரனெனவே தேறி வழிபடுக, ஏனைப் பாசப்பற்றுடையார் தம்பற்று விட்டொழிதற் பொருட்டென்பதாம்.

சிவமாதல் தெளிந்தக்கோட்டாற்கு வேடமுங் கலையுவரறு சொனறேயமையுமென்பார், சிவமாதலை யவற்றோடு தனித்தனி கூட்டுக கூறினார்.

உவ வேடமுடையாரென வெடுத்துக்கொண்டு முரைக்க பாசத்தார் ஆகுபெயர்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவபத்தர்களது திருவேடத்தைப் பரமேசுவரனெனக் கண்டு வழிபடுகவென் றருளிச்செய்கின்றார்.

அறிவரியான் ஐந்தியறிய பாசகையாக்கி - அனமம்போதத்தா லியாவராலு மறிதற்கரிய பரமேசுவரன் தன்னை யறியு நிமித்தமாகத் தன்னுடைய பத்தர்களுக்குத் திருவேடமாகிய தன் திருமேனியைக் கொடுத்து,—அங்கங்கே யுயிர்களுயிரா யறிவுகொடுத்து- தன்னை யிவர்களறியும்படிக்கு இட்டக அவர்களிருந்த யத்திலே யவர்களுக்குப் பிராணனும் நின்ற முறைமையாலே ஞானத்தையும் பிரகாசிப்பித்து,—அருளாற் செறிகின்ற திருவேடஞ் சிவனுருவேயாகும் - தன்து காருண்ணியத்தினாலே இவர்களிடத்திலே தானே பொருந்தி நிற்கையா லிந்தத் திருவுருவு சிவனுடைய திருமேனியென்றே கொள்ளப்படும் —சிவோக

ம்பாவிக்குமத்தகாற சிவனுமாவர் - நானென்றொரு பூசலில்லைசாயுமுரு சிவனென்று திபாவிக்கைப்பா லிவர்களைச் சிவனென்று சொல்லப்படும்,—குறிப்பது லிதயத்தே யரனைக்கூடுங் கொள்கையிலுலவுவா - ஆசாரியன் தரிசிப்பித்த வந்தத் திபானத்திலேநின்று தங்க ளிருதயங்களிலே பரமேஸ்வரனை ஏகிபாவமப் பிரபித்துக்கொள்ளுகிற கோட்பாடுகளாலே சிவனுக்கே நிற்பார்கள் —குறியொடு தாமழியுமென்றி யதனோடு சிவமேயாய் நின்றிடுவர் - தாம்பப்படி கொள்ளுகிற திபானங்களும் நீடானிந்து நிற்கிற தங்களுடைய ஆன்மபோதங்களும் பின்பு சேரவழிந்துபோகிற முறைமையாலே ஆன்மபோதமும் ஜீவியாம லந்தச் சிவமேயாய் நின்றுவிடுவார்கள் என்னவே யிவர்களிடத்திலே பரமேஸ்வர னிப்படிப் பிரகாசிப்பன், அல்லாதவிடத்தில் நிறகச்சேயும் தோன்றுமலிறபன்,—என்றும் - வேதாகமங்களிப்படியென்று சொல்லுகையால்,—நேசத்தாரநெஞ்சிலங்கி பாசத்தாரிடவே - உன்னுடைய பாசமானது விட்டுப் போம்படி இப்படிச் சொல்லப்பட்ட மயேஸ்வரர்களைச் சிநேகத்தாலே பணிவாயாக

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் கஉ-சூ, ௩-வெ, "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத், தன்னுணரத் தாமு மிருத்தலால்—றன்னுணரு, நேசத்தார் தம்மா நிகழுந் தனிசெய்வோர், பாசத்தாரக் கின்றும்பதி" என்னுமதுக் கண்டுகொள்க

இதனாற் சொல்லியது, மயேஸ்வரரிடத்திலே சிவன் பிரகாசியா நிற்பனென்றும் அல்லா விடங்களி லப்பிரகாசரூப நிற்பனென்றும் ஆகையால் மயேஸ்வரரைச் சிவனுக்குக் கரம் வழிபாடுசெய்யவே யிவனுக் குண்டான பாசம்விட்டு நீங்குமென்னு முறைமையு மறிவித்தது,

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அறிவறியான் - அசிந்திதருய்நின்ற பரமபொருள்,—தன்னை யறிய - உலகத்துள்ளார் தன்னை யறிதற்பொருட்டு,—யாக்கை யாக்கி - திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தன்வடிவத்தைத் தன் அன்பர்க்களித்து,—அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்து - யாண்டு முயிர்க்குயிரா யறிவினைவிளக்கி,—அருளாற்செறிதலினால் - அருளாற் கலத்தலால்,—திருவேடஞ் சிவனுருவேயாகும் - அத்திருவேடத்தானுஞ் சிவமேயாதல் தெளியக் கிடத்தலானும்,—சிவோகம் பாவிக்குமத்தால் - சிவோகம்பாவனையானும்,—சிவனுமாவர் - சிவமேயாந் தெளியக்கிடத்தலானும்,—இதயத்தே குறிப்பதனு லரனைக்கூடும் கொள்கையினால் - இருதயத்தானத்தி லொரு குறியினைக் கண் வைத்து முதல்வனைக் கூடும் செயலானும்,—அரனாவர்,—சிவமேயாதல் தெளியக்கிடத்தலானும்,—குறியொடு தாமழியுநெறி பதனால் - குறியுடனே தாமெனப் தோன்றின்றாகிய தன்மையானும்,—சிவமேயா யநின்றிடுமொன்றால் நேசத்தானீ தொழுதிடு - சிவமேயாதற்றெளியக் கிடத்தலானும், அதுபற்றி யவரை யானென்னவேத்தி நீ வழிபடு,— பாசத்தாவிடவே - வினைப் பாசப்பற்றுடையாரதுபற்று விட்டொழிதற் பொருட்டென்பதாம்

மறைஞானதேசிகர் உரை

சிவன் சர்வ வியாபியாயிருந்தாலுந் தன்னிடத்
தன்புடையார்க்குச் சாந்நித்திய மாகு
முறைமை யுணர்த்துகின்றார்

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே, யு
ருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு முளனங்கு
மெய்க்குமில னிங்குளனென் பார்க்கு, விருப்பாய வடி-
வாகி யிந்தனத்தி னெரிபோன் மந்திரத்தின் வந்தி
ப்ப னிருஞ்சுரபிக் கெங்கு, முருக்காண வொண்ணாத
பான்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப்
பட் டருளுவ னன்பர்க்கே. (௪)

(இ-ள்) திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே — சிவாலயத்துக்குள் ளெழுந்தருளி யிருக்கிற சிவலிங்கத்தினிடத்திலே சதாசிவனென்று கருதுமவர்க்கு அவ்விடத்திற் சாந்நித்தியமாகாநிற்பன். திருக்கோயிலுள் இலிங்கமாயிருக்க அதனைக் கூறாமற் திருமேனியெனக் கூறிய தென்னையெனில்?

கோயில் தேகமும் அதிலிருக்குஞ் சிவலிங்கந் தேகியுமாதலாற் கூறிய தென வறிக.

சிவனெனவே யென்று தேற்றங் கூறுகையா லந்த மூர்த்தியிடத்திலே வியாபித்திருக்கும் பரமசிவனைக் கூறியதாயிற்று. வியாப்பிய வியாபக பாவத்தினாலே தேகத்துக்குந் தேகிக்கும் பேதமில்லை யென வறிக.

உருக்கோலி மந்திரத்தாலே நினையுமவர்க்கு முளனங்கு — வியத்தலிங்கம் வியத்தாவியத்த லிங்கம் அவ்வியத்த லிங்கமென மூவிதமாகக் கூறிய திருமேனியை யதி—டா சுத்தமாதலாற் சுத்தனுக்கு மாயேயம் பொருந்தா தாகையாற் சுத்தமான மந்திரமே திருமேனியாக

லால் முப்பத்தெட்டுக் கலைமுதலியவற்றால் திருமேனியாக்கித் தியானஞ் செய்யுமவர்க்கு அந்தக் குறியிடமாகத் தானே பிரகாசியாநிற்பன்.

எங்குமுள னிறை	பரிபூரணமா யெங்கும் வியாபித்திருக்கி
குளனென்பாராக	ற சிவனெவ்விடத்து மில்லை சாலப்பழுத்
கு விருப்பாய வ	லிய ஆர்வர்களுக்குத் திருத்தியங்களைப் பண்ணு
டிவாகி	கையா லிங்கத்தானே யுள்ளனென் றுறுதியி
	டவர்களுக்கு அவ்விடத்திற்றானே யருச்சித்து

ப பிரகாசியாநிற்கும் அஃதென்போ லெனின்?

இந்தனத்தி	தாபரமான வேர்முதல் நுனியீறாக மரத்
னெரிபோல்	தினை வியாபித்து நிற்கிற அக்கினியான
	து, அரணியைக் கடையிலேற்றிக் கடை

ந்தவிடத் தக்கினியானது பிரகாசித்தாற்போலவும்,

மந்திரத்தின்	பிராசாத மந்திரோச்சாரணத்தினாலே
வந்துதிப்பன்	அவ்விடத்துப் பிரகாசியாநிற்பன்
இருஞ் சுரபிக்	பெரிய சுரபியினுடைய கொம்புமுதற் குளம்
கெங்குமுருக்கா	பிருக்கப் பாலானது வியாபித்திருக்கவு மவ்
ளை வொணாதத	விடத்திற் றோன்றாமற் கன்றுக்கிரங்கித் தா
பால் முலைப்பா	னே முலைக்கண்ணிலே யிறங்கி விம்மித்தோ
லவிம்மி பொழு	ன்றி பொழுகுமாறுபோல அந்தச் சிவனு மன்
குவது போல	பாகதே யுருகி நிட்களமானவன்றானே மூர்
வெளிப்பட்டரு	த்திகரிக்கு முறைமையு மித்தன்மை எ-று
ளுவ னன்பாக	
கே	

இதனாற் றாபர சங்கமங்களிடத்தில் வியாபித்து நிற்கு முறைமை கூறியதாயிற்று. இதற்குச் சூக்குமத்தும் நிசுவாசத்தும் சுப்பிரபேதத்து மறிக. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சிவலிங்கத்தை வழிபடு முறைமை கூறுகின்றது

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனென்றே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கு-திருக்கோயி லுள்ளிருக்குஞ் சிவலிங்கமே சிவனென்று பாவித்து வழிபடுமவர்க் கந்தச் சிவலிங்கத்தி னிடத்திலே சாந்நித்தியம் பண்ணுவன்,—அங்கே மந்திரத்தாலுருக்கோலி யுளனென்ன நினையுமவர்க்குமுளன்-அந்தச் சிவலிங்கத்தி னிடத்திலே பஞ்சப்பிரம ஷடங்கமந்திரங்களினாலே யுளனென்று பாவித்த போகர்க்கு மவ்வாறு மந்திரமூர்த்தியாகச் சாந்நித்தியம் பண்ணுவன்,—எங்குமில னிங்குளனென்பார்க்கு விருப்பாயவடிவாகி யிந்தனத்தினெரிபோன் மந்திரத்தின் வந்துதிப்பன்-சிவனகண்ட பரிபூரணனென்றறியாமல் மந்தமதிகளா யெங்குமில்லை, இந்த மூர்த்தியிலேயே தனக்குத் தனக்கிஷ்டமான விக்கிரகத்திலே மந்திர நியாசங்களைப் பண்ணி வழிபடக் காஷ்டத்திலே வன்னிபோல வந்து மந்திரத்திலே சாந்நித்தியமாவன். இவ்வாறு பாவிக்கவே,—இருஞ்சுரபிக்கெங்கு முருக்காணவொண்ணாத பான் முலைப்பால் விம்மியொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவ னன்பர்க்கே-பாலானது பசுவினுடைய தேகமெல்லாம் வியாபித்திருக்கும் பின்னை யோரிடத்தில் காணப்படாமற் றன்னுடைய கன்றைக் கண்டபொழுது முலையிலே விம்மி யொழுகுவதுபோல ஆராத்த வாவிலுஞ் சிவனிறைந் திருந்தானேயாயினு மந்திராத்த வாவிலே பிரகாசித்துப் பத்தர்கள் வேண்டியது கொடுத்தருளுவனென் றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

யோக சாமாத்திய மில்லாக்குத் தியானோ பாய முரைக்கின்றார்

ஸ்ரீகண்ட தேசியால் தரிசனங் கொடுப்ப னென்று சித்தாந்தம்

மறைறய வெளிப்பொருள்

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பகுத்துணர்தலின்றிச் சிவலிங்கமுதலிய திருமேனியே சிவனெனக் கண்டு வழிபடுஞ் சரியையாளர்க்குச் சிவன் ஆண்டு வெளிப்படாது நின்று அருள்செய்வன். அருவப்பொருளாகிய சிவனை ஈசானாதி மந்திரங்களாற் சிவலிங்கமுதலிய திருவுருக்கோலினுள்ளெனக் கருதி மந்திரந்யாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும், யோகிகளுள்ளும் எங்கணு மில்லமாக வாழுஞ் சிவன் இந்த திருமேனியிலுமிருந்து பூசைகொண்டருளுவனெனக் கருதிச் சாத்தியமந்திரங்களால் வழிபடும் யோகிகட்கும், கடைந்துழித் தோன்றுமெரியுங் கறந்தவழித் தோன்றும் பாலும்போல அவ்வம் மந்திரங்களா லவரவர் விரும்பிய வடிவாய் அத்திருமேனிகளில் அப்போதப்போது தோன்றிநின்று அருள்செய்வன். அவ்வாபோலேகதேசமாகக் குறித்தலின்றி அன்புமாத்திரையானுண்டு வழிபடு ஞானிகட்கு, கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால்போல, கருணை மிகுதியால் அவ்வவனே தானாய் எப்போதும் மாண்டு வெளிப்பட்டு நின்று அருள்செய்வன்; ஆகலான் அஃதறிந்து வழிபடுக வென்பதாம்.

ஆகலான் அஃதறிந்து வழிபடுசவென்பது குறிப்பெச்சம்.

உங்கேயென்பது யாண்டுஞ் சென்றியையும்.

மந்திரத்தா லுருக்கோலி யென மாறுக.

கோலியென்பது பெயர்.

உள்ள உள்ளம்

இலனென்பது இலவென்னு மிடப்பெயரடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

இங்குமென்னுமும்மை இறந்தது தழீஇயிற்று.

அன்பரகத்து விம்மி யொழுகுவதுபோ லெனவே யோகிகட்குக் கறக்கவொழுகும் பால்போலென்பது பெறப்பட்டது.

அன்பரென்றது ஈண்டு ஞானிகளைமேற்று, "அன்பரொடு மரீஇ" என்புழிப்போல.

திருவேடஞ் சிவனெனத் தெளியுமாறு தொழப்படுவோரது கருத்துவகைபற்றிக் கூறினார், சிவாலயத்தைச் சிவனெனத் தெளியுமாறு தொழுவாரது கருத்துவகைபற்றிக் கூறினாரெனவுமுணர்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—○—

மேற் சிவலிங்கப் பெருமானிடத்திலே சிவன் விசேஷமாகப் பிரகாசித்துநிற்கிற முறைமை யருளிச்செய்கிறார்.

திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனிதனைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே - அழகிய சிவாலயத்துக் குள்ளே எழுந்தருளி யிருக்கிற சிவலிங்கப்பெருமான் றன்னைச் சிவனென்றே யுபதேசத்தினாலே பற்றினவர்களுக்கு மவ்விடத்திற் சிவன் பிரகாசித்து நிற்பன்,—உருக்கொலி மந்திரத்தா

லே கிரியையுமவர்க்கு முள்ளன - அந்தந்த திருமேனியிலே மந்திரங்களாலே திருமேனியாகக் கொண்டவர்களுக்கு மங்கே பிரகாசியாநிற்பன,—எங்குமிலங்குமருள் னென்பார்க்கு விருப்பாய வடிவாகி - காணப்பட்ட வெல்லாவுருவங்களுந் தானாயிருக்கச்செயத்தே தற்சொரூபந் தோன்றும நிற்பன. இந்தச் சிவலிங்கப் பெருமானிடத்திற் றோன்றி நிற்பனென்கிறவர்களுக்கு விருப்பத்துடனே யந்தத் திருமேனியி லெப்பொழுது மிருப்பன அதெங்ஙனெனனில் ?—இந்தனத்தி னெரிபோல மந்திரத்தின் வந்தந்த - காட்டத்தி லுண்டான வக்கினியானது முன்பு காணப்படாமனின்று பின் பிவனுலதியப்பட்ட தோருபாயத்தினு லந்தக் காட்டத்தி லுண்டானாற்போலத் தோன்றி,— இருஞாயிற்கெங்குமுருக காணவொண்ணாத பான முலைப்பால விம்மி யொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவனன்பாக்கே - பெரிய சூரியர்க்குக் கொம்புமுதல குளமட்டுமுங் கெவ்விடத்திலும பால வியாபதமாய நிறபினு மவ்விடங்களிற பாலினது ஸவரூபந் தோன்றுமனின்று முலைக்கண்ணிலே விம்மித் தோன்றித் தானாயாகப் பொழிபுமதுபோலச் சிவலிங்கத்திலே பிரகாசியா நிற்பன அவ்விடத்திலே வழிபடுகிற பத்தர்களுக்கு

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் கஉ-சூ, ச-வெ, "கண்டொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கியே, றுண்டல்போ னின்றங் குளதாமாற—கண்டவுருத், தானதுவா யனுருவா தானதுவாய்த் தோன்றுமே, தானதுவாயக் காணுந் தவர்க்கு" என்றுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, காட்டத்தி லக்கினியானது முன்பு தோன்றுமனின்று ஒருத்த ரரணிகொண்டு கடைய வவ்விடத்திலகந் தோன்றிய தன்மைபோல எவ்விடத்திலும் தோன்றும ல்நிற்ற சிவனும் பெரியோர்கள் சிவலிங்கப் பெருமானிடத்திலே

கண்டு வழிபட, அவ்விடத்திற் பிரகாசியா நிற்பனென்னு முறைமை யறிவித்தது

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

——0——

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னை - பருத்தன்னாதலின்றி ஆலயத்தெழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கமுதலிய திருமேனியை,—சிவனெனவே கண்டவர்க்கு - சிவமெனக் கண்டுவழிபடுஞ் சரியையாளர்க்கு,—சிவனங்கேயுறைவன - சிவ னாங்கு வெளிப்படாது நின்று அருள்செய்வன,—மந்திரத்தா லுருக்கோலின்னென நினையுமவர்க்கும்-அருவப்பொருளாகிய சிவனைச் சாஞ்ஞி மந்திரங்களாற் சிவலிங்க முதலிய திருவுருக் கோலின்னென்னக்கருதி மந்திரநியாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும்,—உளனெனக்கு மிலனிங்கே யுள்ளனென்பார்க்கும்-யோகிகளுள்ளன் மெங்கணு மிலமாகவாழும் சிவனித்திருமேனியிலுமிருந்து பூசைகொண்டருளுவனெனக்கருதிச் சாத்தியமந்திரங்களால் வழிபடும் யோகிகட்கும்,—இத்தனத்தினெறிபோல் பான்முலைப்பால் கறக்கவொழுகுவதுபோல் மந்திரத்தில் விருப்பாய வடிவாகி வந்துதித்தும - கடைந்தவழித் தோன்றுமெரியுங் கறந்தவழித் தோன்றும் பாலும்போல அவ்வம்மந்திரங்களா லவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளி லப்போதப்போது தோன்றி நின்றருள்செய்வன,—அன்பர்க்கு-அவர்போலச்சேதமாயக் குறிக்கலின்றி யன்புமாத்திரையா னண்டுவழிபடும் ஞானிகட்கு,—யிருஞ் சுரபிக்கன்றுக்கு முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மிபொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவன - கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால்போல அக்கருணை மிகுதியால் அவ்வன்பர்க்காருய் எப்போது மாண்டு வெளிப்பட்டு நின்று அருள்செய்வானாகலா னஃதறிந்து வழிபடுக வென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙன மிலிங்கத்தினையுந் திருவேடத்தாரையும் வழிபடுமெ
வழிபாடு முணர்த்தி ஞானாசாரியனைச் சிவனெனவே
வழிபாடுசெய்யு முறைமையு மூன்று திருவிருத்
தத்தா லுணர்த்துகின்றார்.

ஞானயோ கக்கிரியா சரியைநாலு நாதன்றன் ப
ணிஞானி நாலினுக்கு முரியன், ஊனமிலா யோகமுத
ன் மூன்றினுக்கு முரியன் யோகிகிரியா வானன்றெ
ன கிரியை யாகி, யானவிரண் டினுக்குரியன் சரியையி
னி னின்றோ னச்சரியைக் கேயுரிய னாதலினாலியார்க்கு,
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே யீசனிவ னன்
றென்று மிறைஞ்சி யேத்தே. (௫)

(இ-ள்) **ஞானயோகக்கிரியா சரியை நாலு நாதன்றன் பணி** — சிருட்டி காலத்திற் பரமேசுரன் திவ்வியாகமங்களை நாலுபாதமாகப் பிரித்ததிகாரானுகுணமாக வருளிச்செய்ததனுட் சிவனாற் கற்பித்த தொழில்களே!

ஞானி நாலினுக்கு முரியன் — மேலான பாதத்தின் வழிநின் றனுட்டித்த ஞானி ஞானம் யோகங் கிரியை சரியையெனக்கூறிய நாலுபாதத்துக்கு முரியவன்,

ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் யோகி — யோக பாதத்தின் வழிநின் றட்டாங்க யோகத்தை யனுட்டித்த யோகி குற்றமில்லாத யோகபாத முதலிய மூன்று பாதத்தின் வழிநின் றனுட்டித்தற் குரியவன்,

கிரியாவான கிரியா பாததநின வழிநின றனுடடிககு
குருவெனுஙகிரியை மவன குருவ கிரியை சரியையடாகிய விரணடி
யாதியான விர ணையு மனுடடிததற குரியவன,
ணடினுக குரியன
சரியையினி னி சரியைத தொழிலிலேனின றனுடடிததவ
னே குருவென சசரி னநதச சரியைமாததிரமே யனுடடிததற
யைககேயுரியன குரியவன, இவவாறு பேதிததுக கூறிய தெ
னனெனில ?

உபாததியாய ரானவா மாணுககர பககுவததுக கேடாகக சர்பிககுமாறு போலச சிவனு மானமாககளுடைய பககுவதது க கேடாக நாலுபாதஙகளாகப பிரிததுக கூறியதென வறிக

ஆகலினு லியா ஒவவொருவ ரொவவொரு பாதததினவ
ராகது மீனமிலா ழி நினறனுட்டிததற் குரிததாதலால எல
ஞான குருவே கு லாப பாதமு மனுடடிததற குரிய மேலான
ருவு மிவனே ஞானுசாரியனு மிவனென வறிக.
ஈசனிவன குரு இநத ஞானுசாரியனே சிவனெனக கருதி
னென்று மிறை வணஙகித துதியுஞ செயக எ-று
ஞ்சி யேததே

ஏகாரந தேற்றம.

இதறகுக கிராணுகமம் வாயவவிய சஙகிதையினு மறிக (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல மகேஸ்வரரை பினனுரை யினஞா வழிபடுகவென று முறைமை கூறுகினறது.

ஞானயோக கிரியாசரிதைத நாலும் நாதனறன் பணி-நிர்ப தாரக்கதகையும ஞான முதலாகிய நாலுபாதத்தையு முபதே சிக்கிறது சிவனுடைய கிருததியம,—ஞானிகாலினுககு முரியன-

ஞானாசாரியனந்தச் சிவனே யாகையால் திரிபதார்த்தத்தையும் ஞானமுதலாகிய நாலுபாதத்தினையு முபதேசிக்கச் சுவதந்திரன்,—ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் யோகி - யோகாசாரியன் அடயோகமல்லாத சிவயோகமாகிய யோக முதலான மூன்றுபாதத்தினையு முபதேசிக்கக் கர்த்தன்,—கிரியா வானொன்றொழிஞ்சரியை யாதியா மிரண்டினுக்கு முரியன் - கிரியாசாரியனானவன் கிரியை சரியை யிரண்டுபாதமு முபதேசிக்கக் கர்த்தன்,—சரியையினின்றோன் சரியைக்கே யுரியன் - சரியாபாதத்தை யனுஷ்டிக்கிறவனந்தச் சரியாபாதத்தைத் தானனுஷ்டிக்கவே கர்த்தன், பிறர்க்குபதேசம்பண்ணக் கர்த்தனல்ல,—ஆதலினாலெவர்க்கு மீனமிலா ஞானகுருவே குருவு மிவனே யீசனிவனென்று மிறைஞ்சிடத்தே - ஆதலினாலே சரியையைப் பண்ணுகிறவன் கிரியையைப் பண்ணுகிறவன் யோகத்தைப் பண்ணுகிறவனிவர்கள் மூவர்க்கும் பாசபசுஞானமின்றிச் சிவஞானமூர்த்தியாயுள்ள ஞானாசாரியனே யாசாரியன்? இவனே ஈசுவரனென்று நமஸ்கரித்துத் தோத்திரம்பண்ணி வழிபடுகவென்றிதன்பொருள்.

இதனாற் சரியாவான் கிரியாவானையும் யோகியையும் ஞானவானையும் கிரியாவான் யோகியையும் ஞானவானையும் வாணாசிரமானுகுணமாக வணங்கி வழிபடுகவென்றிதன்பொருள்

இவர்களில் ஞானிக்கு வாணாசிரம மில்லையெல்லாராலும் பூசிதனென்று சாவசாத்திரசித்தம்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஆகையால் நிராலம்ப சிவயோக சமாதிமானாகிய ஞானி நிராலம்ப சிவயோகமாகு ஞானானுட்டானத்தோடு சாலம்ப சிவ

யோகமாகும் யோகக்கிரியா சரியாவுடனான மூன்றிற்குரியன; மற்றையோர் மூவருந் தங்கள் தங்கள் மரியாதிக்குரியரென்று மந் ஞல நிராலம்ப சிவயோககுருவே குருவென்று நிகழ்த்து கின்றார்

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேலைச் செய்யுளிற் கூறிய நால்வகைக் கருத்தும் அவரவர் மாத்திரைக்கேயுரித்தாயிருக்கச் சரியையாளரைப்போல ஞானி வழிபடுதலெற்றுக்கெனின்? நாலுபாதத்தினிகழும் கிரியையெல்லாங் கத்தாவின் துணைமைப்பணியாகலால், உலகின் மருவாத வினைப்பத்துள வைத்தக் குருவினுபகாரத்தைக் கருதி நால்வகைத் தொழிலும் ஞானி செய்கவே கடப்பாடென்பது உடற்றொழில் செய்வார் புறத்தொழிற்கு முரியரென்னு முறைபற்றியும், ஏனையோர் தத்தந் தொழிற்கேயுரியரென்பது புறத்தொழில் செய்வார் உடற்றொழிற் குரியரல்லரென்னு முறைபற்றியு முணர்ந்து கொள்ளப்படுவன. இனி டந்நால்வகைப் பாதத்தினிற்கு மாணுக்கர்க்கு ஆசிரியனமார் உபதேசித்தற்கட்படு முரிமையும் இவ்வாறே வைத்துணர்க, எல்லார்க்கு முபதேசித்தற்குரிய ஞானகுருவே தலையாய குருவென்றும், ஈண்டுக் கூறிய தாபரசங்கமங்களும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் தேறி, அவ்விரண்டினும் வழிபடுக வென்பதாம்.

மேற்கூறிய நால்வகைக்கருத்துக்கு முரியராவாரைக் கூறுவார், அவற்றையுள்ளடக்கி நிற்கும் ஞான முதலியவற்றை யுடையாரது இயல்பினைமேல் வைத்துக் கூறினார்.

சொற்பல்காது மாட்டேற்றினமேல்வைத்துணர்ந்து கோடற்பொருட்டு, ஆகலின் இறைஞ்சியேத்தே யென்பதனையும் ஈண்டுடன் கூறினார்.

திருவேட மாலயங்களெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சுதற்கட்படும் விசேடங் கூறியவாறு.

ஈசனிவனென்புழி இவனென்பது பகுதிப்பொருள் விகுதி.

ஈண்டு ஈசனென்றது திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியை.

என்றுமென்னு மும்மைய எதிரது தழீஇப் பிறருகதித் திருவேடமு மிவனேயென றிறைஞ்சிடேத்தெனவு முரைத்துக்கொள்க.

இவைமூன்று செய்யுளானும் மூன்றுங்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

ஆசாரியனை வழிபடுகிற முறைமை மேலருளிச்செய்கிறார்.

ஞானயோகக் கிரியாசரியைநாலு நாதனறன்பணி - ஞானமும் யோகமும் கிரியையும் சரியையும் இவை நாலும் பசுவான மாக்களை யிரட்சிக்கைப் பொருட்டாகப் பரமேஸ்வரன் கற்பித்தருளின பணிவிடை, முன் சொல்லிவந்த நாலு பாதத்திலும் நிற்கிற நாலுபேருக்கு மறிவொத்த திருக்குமோ வென்ற மாணுக்கனை நோக்கி ஒத்திராதென றருளிச்செய்கிறார்.—ஞானிநாலிலுக்குமுரியன் - ஞானபாதத்திலே நிற்கிறவனிந்த நாலு பாதத்துக்கு முரித்தாயிருப்பன்,—ஊனமிலாயோக முதன்மூன்றிலுக்குமுரியன் யோகி - யோகபாதத்திலே நின்றவன் குற்றமில

லாத யோகமுதல மூனறினுககு முரிததா யிருபபன,—கிரியா வானறு னெனுங் கிரியையாதியான விரண்டினுககு முரியன - கிரியாவிதியானவனறு னமுகிய கிரியையாதி யான விரண்டிற்கு முரிததாயிருபபன,—சரியையி லின்றே னெனுஞ்சரியைக்கே யுரியன - சரியையிலே நினறவன சரியை யொனறினுககுமே யுரிததாயிருபபன,—ஆதலினு லியாககு மீனமிலா ஞானகுருவே (ஏ)ருவும-தான நாலுபாதததுககுங கததனாயிருந்து இந்நான்கு சொலலிவநதவாகட்கு நாலுபாததையுங கொடுககிறவ னுனகயாலே குறறமிலலாத ஞானசாரியனே ஆசாரியனும.—இவனேரசனிவனே றுனெனறு மிறைஞசியேததி-பரமேசுவரனை றுறு மிநதஞானசாரியனை றுவேனெனறு அட்டாங்க பஞ்சாங்க பாகுதமாட்டினபஞ்சாளிந தோத்திரங்களுஞ் செயது வழிபடுவாயாக

இதனுற சொலலியது, ஆனமாககள பககுவததுககுத தககதாக ஞானயோக கிரியா சரியையெனகிற நாலு பாதததுநிறுததி அததறகுததக்க முததியையுங கொடுக்கிறவன ஞானசாரியனெனறு மிவனே சிவனெனறும ஞானவானகளுக்கு ஞானம பிரகாசிததாலுங குரு வழிபாடு செயயவேணடு மெனறு முறைமையு மறிவிததது

—

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஞானயோகக கிரியாசரியை நானகு நாதனறனபணி - ஞானயோகக கிரியா சரியையெனனு நானகுபாததின விசமுமம கிரியையெலலாம காததாவினது உணமைப் பணியாகலான,—ஞானிநாலினுககு முரியன - ஞானி ஞானமுத னனகினுககுமுரியன,—ஊனமிலா யோகமுதன மூனறினுககு முரியனயோகி - யோகி அறிவிலலாத யோகமுதனமூன றிறகு முரியன,—கிரியா

கருள

வானன்றோ ஞானசரியை யாதியான விரண்டினுக்கு முரியன — கிரியாவான் ஞானமொழிய கிரியை முதலிய விரண்டினுக்கு முரியன்,—சரியையி னன்றோ னச்சரியைக் கேயுரியன் - சரியாவான் சரியை யொன்றற்கே யுரியன்,—ஆதலினால் யார்க்கு மீனமில்லா ஞானகுருவே குருவாம்-ஆகலின் னெல்லார்க்கு முபதேசிக்கற்குரிய ஞானகுருவே தலையாய குருவென்றார்,—இவனே யீசனிவனன்றோ னென்றும் இறைஞ்சியேத்தே-ன்டுக கூறிய தாபாசசக்கமங்களும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் தெறியவிரண்டினும் வழிபடுக வென்பதாம்.

இவை மூன்றுசெய்யுளானும் மூன்றுசூத்திரந் தெரித்துணர்த்தி வலியுறுத்தப் பட்டது.

---

௧௨ - சூ, ௩-ம், அதிகரணமுடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இந்தவாசாரியனைச் சிவனெனப் பாவிப்ப தெவற்றிற்கோ வெனில் இந்தப்பாவனை யில்லாவிட்டால் தவனுபதேசித்த மந்திர முதலானவை பலியாதாதலால் ஆசாரியரை வழிபாடுணர்த்தியதென் றுணர்த்துகின்றார்.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தயோகத்தான் மணிபிரதக் குளிகையினான் மற்று மற்றுந், தந்திரத்தே சொன்னபடி செய்யவேதச் சகலகலை ஞானங்கடிரி கால ஞானமந்தமிலா வணிமாதி ஞானங்களெல்லாமடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம், வந்திடுமற் றொன்றாலும் வாராதாகு மற்றவையு மிவனருளால் மருவுமன்றே. (௬)

(இ-ள்) மந்திரத்தான் மருந்துகளால் வாட்டத் யோகத்தால் மணியிரத குளிகையினான் மற்றுமற்றுந் தந்திரத்தே சொன்னபடி செய்ய

மந்திரங்களாலும் ஔஷதங்களாலுங் கனகருசு சித்தித்த யோகங்களாலும் ஒளியையுடைய இரசகுளிகையாலும் வேறுவேறு சாத்திரங்களினாலே சொன்னபடியே செய்தால

வேதசகலகலை ஞானங்கடிரிகாலஞான மங்கமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா மடைந்திடும்

நாலுவேதமுஞ் சகலகலை ஞானமும் பரகாயப்பிரவேச முதலியவற்றா லுண்டாகிய திரிகாலஞானமும் பைசாச முதலியவற்றுக்கு மேன்மேல் விசிட்டமான அணிமாதியான வெட்டுச் சித்திகளு மிவையெல்லா முண்டாகா நிற்கும்

ஆசா னருளா லடிசேர் ஞானம் வந்திடுமற்றொன்றேலும் வாராதாகும்

ஆசாரியன் கடாக்ஷத்தாற் றிருவடி ஞானமுண்டாம்; இதனையொழிந்த இவை வேறொருவராலும் வேறொன்றினாலும் உண்டாக மாட்டா.

மற்றவையு மிவனருளால் மருவு மன்றே

முன்பு சொன்னவைக ளெல்லா மிந்த வாசாரியன் பிரசாதத்தினா லுண்டாகா நிற்கும். எ-று

மற்றுமென்பதனால் தீர்த்தத்தினிடத்துந் தேவரிடத்தும் காலவிதானஞ் சொல்லுஞ் சோதிடரிடத்தும் பிராமாண்ய புத்தி பண்ணவேணுமெனக் கூறியது.

வாயத்தயோக மென்பது "வாயுரைச் செய்தத செயலாக வாயத்தத்தற் கடையாளங்க, ளாயுராரோக்கியாதி யவர்களைய

வுடலங்காட்டு, மாயமுமனத்தினில்லை வசமுறும் புலன்களொ ன்றாங், காயத்தின் மலநீமற்று நோயதெனக் கழியுமன்றே'' என வகையா லறிக

இதற்குக் கந்தகாலோத்தரமும் பிரவு முளவெனவறிக (௬)

சிவாகமயோகியருளை வருமாறு.

மேலிரண்டு விருத்தத்திலே அந்த ஞானாசாரியனே சித்தி முத்திக் கொடுப்பவனாதலா லவனையே வணங்கி வழிபடுக வென்னு முறைமை கூறுகின்றது

மந்திரத்தால் மருந்துகளால் வாயுத்தயோகத்தால் மணி யிரதகுளிகைகளால் மற்றுமற்றுந் தந்திரத்தே சொல்லப்பட்ட வேதசகலகலைஞானங்கட் டிரிகாலஞான மந்தமிலாவணி மாதி ஞானங்களெல்லா மடைந்திடும் - இது வெளிப்பொருள் ;—

ஆசானருளா லடிசேர்ஞானம் வந்திடு மற்றொன்றாலும் வாராதாகும் - ஞானாசாரியனனுக்கிரகத்திலே சிவசாயுச்சியத்தை யடையும் சிவஞானமானதுண்டாம், வேறே யுபாயங்க ளினாலு முண்டாகாது ;—

மற்றவையு மவரனருளால் மருவுமன்றே - முன் மந்திராதி யுபாயங்களினாலே வேதாதியானவித்தைகளும் அணிமாதி அஷ்டமகா சித்திகளும் அந்த ஞானாசாரியனுடைய கருணையினாலே பொருந்துவதா மென்றிதன்பொருள்

“அன்றெனக்கிளவி யாமெனத்தகுமே”

ஏகாரம் - ஈற்றசை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

மந்திரத்தாற் சாலப்பயோக முதலிய தந்திரத்தாற் சாந்திக சுவாஸ்திக திரிகால ஞான முதலிய பல முண்டாம், நிராலம்ப சிவயோக சுரூப தேசத்தாற் சிவத்துவம் பொருந்தும், நிராலம்ப சிவயோகப் பொருட் சித்தாந்த மகாவாக்கிய ஞானம் வரும், மற்றொன்றால் வாராதென் றுரைக்கின்றார்.

வெளிப்பொருள்.

—

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

ஏனை ஞானங்களெல்லாம் ஆசிரியனையின்றியு மமையும், திருவடி ஞானம் ஒருவாற்றானு மாசிரியனை யின்றி யமையாது, ஆகலால் இவனேயீச னிவனன்றென்று மிறைஞ்சி யேத்தென்பதாம்.

ஆகலாலிவனேயீச னிவனன்றென்று மிறைஞ்சியேத் தென்பது குறிப்பெச்சம்.

அவ்வாறேத்தத்தகற்குரிய பெருமை கூறியவாறு.

மற்றவையு மவனருளான மருவுமென்றது இயைபின்மைக் கருதற் பொருட்டு.

—

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

எல்லா ஞானங்களுஞ் சாத்திரஞ்சொன்ன முறைமையிலே செய்யவுண்டாம் சிவஞானத்தினாலே சத்தியத்தைத் தரி

சிததச சிவானுபவததைத யனுபவிககிற சாயுசசியம ஞானாசாரிய னாலொழிந துணடாகாதெனறு மேலருளிசசெயகிறா

மநதிரததான மருநதுகளால வாயததயோகததான மணியிரத குளிகைகளான மறறுமறறுந தநதிரததே சொனனபடி செயய-இனனவினன மநதிரஙகளாலே யினனதினன துணடாமெனறு சொலலுகிற மநதிரஙகளாலும, இனனவினன ஔஷதஙகளாலே யினனதினன துணடாமெனகிற ஔஷதஙகளாலும, பிராணாயாம முதலாகச சொலலபபடட நலயோகஙகளாலும, ஒளியுடைய விரதகுளிகையினாலும, இவையொழிநதும வேறும வேதசாஸ்திரஙகளிலே சொனனபடி செயதால,—வேத சகலகலை ஞானஙகள திரிகாலஞான மநதமிலாவணிமாதி ஞானஙகளெலலா மடைநதிடும - நாலு வேதததையும பல கலைஞானததையும அறிபததககு வறிவுகளும செலகாலம வருஙகாலம நிகழகால மெனகிற மூனறையு மறியுமறிவும முடிவிலலாத அணிமா மகிமா லகிமா கிரிமா பிராததி பிரகாமியம ஈசததுவம் ஆக விவை யெடடுமாக விஙஙனஞ சொலலபபடட வறிவுகளெலலா முணடாகாநிறகும சிவ ஞான மிவறறினுணடாகாது அநத ஞான முணடாமபடி எபபடியெனனில?—ஆசானருளா லடிசேர ஞானம வநதிடு மறறொனறாலும வாராதாகும - ஆசாரியனுடைய கடாடசததினாலே சிவனுடைய சீபாததததிலே பொருநதி யிரணடறக கலநதிருககிற ஞானமபிரகாசிககும, இபபடி யொழிநது வேறொனறினா லுணடாகாது இநத ஞான மொழிநது,—மறறவையு மவனருளான மருவுமனறே - முனபு சொனனவைதானு மிநத வாசாரியனுடைய வனுககிரகததினாலே யுணடாம.

இததிற சொல்லியது, சாஸதிரஙகள சொனன முறைமையிலே மநதிர முதலானவறறினாலே வழுவறச செய்தாலவ

ரவர்க்கு வேண்டின் ஞானங்க ளுண்டாமென்று சிவஞானங் குருகடாட்சத்தா லொழிந் துண்டாகா தென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமணியதேசிகருரை வருமாறு.

——0——

மந்திரத்தால் - மந்திரங்களாலும்,—மருந்துகளால் - மருந்துகளாலும்,—வாய்த்த யோகத்தலால் - பொருந்திய யோகத்தாலும்,—மணிபிரத குளிகையினால் - இரசக் குளிகையினால்,—மற்றுமற்றுந் தந்திரத்தே சொன்னமுறைசெய்ய - வேறுவேறு சாஸ்திரங்களிலே சொன்னபடி செய்தற்கும்,—ஈவத் சகலக்கலை ஞானங்கள் - வேதாகம முதலிய கலைஞானங்கள்,—திரிகால ஞானம் - திரிகால ஞானங்கள்,—அந்தமிலா வணிமாதி ஞானங்களெல்லாம் - முடிவில்லாத அணிமாதிமுதலிய ஞானங்களெல்லா வற்றிற்கும்,—ஆசானருளா னணைந்திடும் - ஆசாரியனையின்றி யமையும்,— அடிசேர் ஞானம் வந்திடு மற்றொன்றாலும் வாராதாகும் - திருவடிஞானம் ஒருவாற்றானு மாசிரியனை யின்றி யமையாது ஆகலான்,—அவனருளான் பற்றனையு மருவுமன்றே - குருவருளா னெல்லா மருவப்பெறு மாதலி னிவ்வனை யீசனிவனன்றென்று மிறைஞ்சியேத்தே

மறைஞானதேசிகர் உரை.

அந்தப்பாவனு பலத்தா லாசாரியனைப் பரம
சிவனெனக் கருதினாக் கனுக்கிரகஞ்செய்
யுமுறைமை யுணர்த்துகின்றார்

பரம்பிரம மிவனென்றும் பரசிவனா மென்றும்
பரஞான மிவனென்றும் பராபரனா மென்று, மரண

ரானார் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை
வழிபட்டே யவனிவனாய் ஞயே, யிரங்கியவா ரணமா
மை மீனண்டஞ் சினையை யியல்பினொடும் பரிசித்து நி
னைந்தும் பார்த்தும், பரிந்தவைதா னாக்குமாபோற் சி
வமே யாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தா
னே (எ)

(இ-ள்) பரமசி — இந்த ஞானாசாரியனே பரப்பிரம சுரூப
ரமமிவனே — னென்றும்
என்றும்
பரசிவன்று — பரமமான சிவனென்றும்
னென்றும்
பரஞான மிவ — மேலான சிவஞான மிவனேயென்றும்
னென்றும்
பராபரன்று — இவனேபராபரவத்
னென்றும்
ஊனநிலையெ — இவனுமவனும் பேதமறவிருக்கிற வைக்கிய
நிலையெல்லாமிவ — நிலையிலே யவனுக்குண்டாய சிறப்பியா
னே யென்றும் — தெனறதுவெல்லா மிவனுக்கே யென்றும்
அருட்குருவை — இப்படிப் புத்திபண்ணிக் கிருபையே வடி
வழிபட்டே யவ — வாயிருக்கிற ஞானாசாரியனை நாடோறும் வ
னிவனாய் ஞயே — ழிபட்டே யந்தச்சிவ னிந்த வாசாரிய மூர்த்
தியைப் பேதமற வதிட்டித்துக்கொண்டு

இரங்கியவார — கோழிபான திரக்கத்தா லண்டத்தைப்
ணமாமை மீன — பரிசித்துக் கொண்டிருந்தும் ஆமையானது
னண்டஞ் சினை — அதனையே நினைந்துக் கொண்டிருந்தும் மு
யை யியல்பினொ — ட்டையானதைத் யிருபாலுங் கூட்டுக் மீனு
டும் பரிசித்து நி — னது சினையைப் பார்த்துக்கொண்டிருந்தும்
னைந்தும்பார்த்து
ம

பரிநதிவைகா ஞக்குராபோல சிவமேயாகு பரிந்தருசி நகிநதுபயாத தநதானே

சினைசததுடனே யிவையிறறைச சொல லிய முறைமயே தறசொரூப மாககுமாறு போல

ஞானசாரியனுமானககருட சிலரைப பரிசநதிகைகயைச செயதுமசிலரை வாசக நதிககைகயைச செயதுமசிலரைத திருநோக கெனறுந திககைகயைச செயதுமசாயககி யறுககுச சமமானருபததை யுணடாககுவ ன எ-று

எகாரந தேறறம

சிவம பிரமததுககு பரமாதலாற பரபபிரமமெனறும

முததானமாகசளுககும சிவதவ முணடாதலாற பரசி வமெனறும

அபரஞானததுககு வேறாதலாற பரஞானமெனறும

பரமாயகுணடலிககு மேலாயநிறறலாற பராபரமெனறும

இதறகு விசுவசாரோததரம (௭)

பனனிருபனுவலும பணணிபபதபபொரு - ளனனித திரிவ றவுணாநதபெருமைய - னனியமறற வமலனடிககிழ - அழி யாவினபத தனுபவரவரே - இழியாருலகினனு கியறறா தொழி லுந - தீணடிககுளிகை செமபு தனகளிமபு - மாணடறககளக மாமததனககே - மறறொருசெயபிற களிமபினமாறறும - பெ றறியுங களிமபினைப பெறுசலுமினறே - யனனநிலையா மமல னை யடைநதா - ரனனியமறறு மடைபவாதாமே - திருநது ரையூரச சைவன திருநதுமறையுர - விரிததுரைககும வேதியன மெயகணடான - கருததி, னருணநதி தேவ னருணமொழிபாய நதே - யிருணநத மபாற கணடிலேமே

சிவஞான சித்தியார் சுபக்ஷத்திற்

கோாவகை யானே காண்டிகை முற்றும்.

மாசிலுபசார மஞ்சனமபூ கந்த, நேசமிகு தூபமொளிநீர முதம்—தூசடைக்கா, யாடிகுடைசவரி யாலவட்டம விசிறி, யா டலொடுவாசகமபீ ரெட்டாகும

நிலையுடைய வணுதினமு நினையெனது மனமே, தொலைவிலரு டருமகலு மலமுமுறுதுயரு, மலைவுடைய யுனதுமட மதியுடை யவருளு, முலைவினமறை ஞானமுனி யுரைசெயதிருமொழியே

சிவாகரயோகியருரை வருமாறு

—0—

பரமபிரமம மிவனென்றும பரசிவனு மென்றும பரா ஞானமிவனென்றும பராபரனு மென்று மாணருஞ்சீர நி லையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே - சிவ னுக்குச் சத்தியினுலும விந்துவினுலும அஞ்சவத்தைக யுளவி, அ ந்த அஞ்சவத்தையி னின்ற நிலைகளெல்லாம இந்த வாசாரி யனை என்று வழிபடுக அவைகளாவன குணநாமக் கிரியைக ளொன்றுமின்றி நிர்விசறப ஞானஸ்வரூபமாகப் பெரியாயிரு ன்றது பரமபிரமம, பினபு பருஃத்திதோனறிச சிவனென நி ன்ற நாலுசத்திகளுந தனனிடத்தி லுணடாகச சுத்தமாக நின றவவதாம பரசிவன, ஞானசத்தி மேதிதிமாறு யானமாகக்ளு டைய கனமங்களையு மதின பக்குவங்களையும பாரகநதிரியங்க ளையுங கணடு நிற்கு மவசரம பரஞானம, பரமாகிய சுததாசு ததமாயைக்கு மேலாயக கிரியாசத்தி மேதிதிமாறுயச சுத்த மாயையில காரியங்களை யுணடாக்கு மவசரம பராபரம, சதா சிவன மகேசுவரன ருத்திரனெனனு நாமங்களை யுடைத்தாய சுத்ததாத்துவ மிசிராதத்துவ அசுத்ததாத்துவ கிருத்தியங்களைப ப ணணுவது அரனருஞ சீர்நிலை இவவாறு பஞ்சாவஸ்* தாரூ சயூதனாய்நின்ற சிவமிந்த வாசாரியனேயென்று கருணையினு லே கொண்ட குருமூர்த்தி சித்தத்தின வழித்தாய நடக்க

வே;—அவனிவனாகு மொப்பெயிரங்கி - அந்தப் பரசிவ னிந்த வாசாரியனே யாகிக் கருணைபூர்த்து,—வாரண மாமை மீனண்டஞ் சினையை யியல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் பரிந்தவைகா ளாக்குமாபோற் சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே - கோழியு மாமையு மீனும், முட்டையையுஞ் சினையையும் பரிவினாலே யணைத்தும் நினைந்தும் பார்த்து முதலிருந்த ஆவரணங்க ணீங்கத் தன்று ஸ்வரூபமாக்கிக் கொண்டவைபோல வாசாரியனும் பரிசதீக்ஷையினாலே மாயையையும் மானச தீக்ஷையினாலே கன்மத்தையும் + சாட்சுஷ தீக்ஷையினாலே யாணவமலத்தையும் நீக்கிச் சிவமே யாக்குவன்

ஏகாரத்தினாலே சிவகுண சங்கிராந்தி சமூபத்தி சமாவேச சிவசமமென்னு மூர்த்திகளெல்லாமல் சிவதாதாத்மியமென்றதெனவறிக

ஆக்குவனென்பதற்கு ஆக்குமென்பது வினைமுற்று

* அநுசயூக்ன - கலந்தவன், + சாட்சுஷம - கண்ணினது

ஒருமலமு மிருவினையுங் குணங்கண் மூன்று
முட்கரண மோரைந்தும் புலன்க ளைந்தும்
வருபகைக ளோராறும் பவங்க ளேழு
மாயந்திட்டப்பே ரின்பமெட்டும் வகைய தாகத்
தருவதுவாயப் பரஞான மூர்த்தி தானே
தாரணிமேற் குருவுருவந் தரித்து வந்தோன்
திருவருளாற் சிவஞான சித்தி யென்னுந்
தொன்னூலுங் குறைவிரித்தோன் றெரிந்த வாறே

இரவியெழுந் திருளதனை நீக்குவபோ லென்று
மிறைஞ்சுமடி யவாமனத்தி னிருளதனை நீக்கக்
கருணைபொறை தவந்தருமங் கல்விசிவ ஞானங்
காசினியி லொருவடிவாய்க் காட்டியபோற் றோன்றிய

பரசமய கோடாரமே னின்றநெறி கொண்டு
பலகலையு முணர்ந்துசைவ பரிபாலனுக்குத்
திரமருவு சிவஞான சித்திக்கரு பொருளைத்
தெளிந்திடவே விரித்துரைத்தான் சிவாக்கிர தேசிகனே

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

குருவினது பெருமை கூறுகின்றார்

பரம - சுத்த சிவனென்றும்,—பிரமம - சுத்தசிவ மத்திய நித்தசிவம்,—இவனென்றும்,—பரசிவனென்றும் - இருபர சிவனென்னு மிலய சிவனென்றும்,—பராபரனென்றும் - அநாகத சிவனென்னும் போக சிவனென்றும்,—பரஞான மிவனென்றும் - ஞானக்கிரியாப் பிரவிருத்தி மானாகிய சதாசிவனென்னு மதிகார சிவனென்றும்,— அரனருஞ் சீர்நிலை யெல்லாம் - மகேசுரன் உருத்திரன் மால் பிரமன் முதற் சிவபேத மனைத்தும்,— இவனென்றும்,— ஆரோபித சிவாத்து விதகத்தினாலே,— அருட்குருவை வழிபடவே - அந்தச்சிவ னிந்தக் குருதேகத்தி லாவேசித்து இந்தக் குருவாயே கிருபா சமுத்திரனாகிய தேசிகனைப் பாவனைபண்ண,—அவனிவனேயே - அந்தச் சிவன் இந்தக் குருதேகத்தில் ஆவேசித்த இந்தக் குருவாய்

இரங்கி வாரணமுதற் பதப் பொருள் வெளிப்பொருள்

இம் முத்திருட்டாந்த தார்ட்டாந்திகப் பொருளுணர்ந்து ஞாக்கு மிடத்துயிராக வியற்கையாய் மலத்தின் மறைந்த சிவத்துவஞ் சிவனால் விளங்குமென்னும் பொருள் விளங்குகிறது

சொல்லினுவிற் றுரிசறுஞ் சோதகிரத்
தொல்லு மேறசிவ ஞான முதித்திடு

செல்லு மெய்யருளாக்கிச் செய்சித்திக்கு
நல்ல ஞான பிரகாசன் விற்றுரை

சிவஞானயோகியருரை வருமாறு

—o—

சிவபேதமனைத்துங் குருமூர்த்தமேயெனத் தேறி ஞானாசாரியனை வழிபடுக, அங்ஙனம் வழிபடப்பெறின் சிவன் இக் குருவை யாவேசித்து நின்று நாடோறுஞ் செய்யும் பரிசமுதலிய மூன்றும் அவ்வுயிரைத் தன்வண்ணமாகச் செய்தருளுவ னென்பது.

அவ்வாறேத்தினார்க்கு வரும் பயன் கூறியவாறு

பரப்பிரமமென்றது சொரூப சிவத்தையெனவும், பரசிவமென்றது தடத்த சிவத்தையெனவும், பரஞானமென்றது அருட்பெயரான அதனையுடையாரையெனவும், பராபரனென்றது ஏனைத்தாபர மூர்த்தத்தையெனவும், அரனாருஞ்சீர் நிலையென்றது அறுபத்துமூவர் நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்கள் எல்லாவற்றினையு மெனவும் கொள்க

பரஞான மிவனென்றும் பராபரனென்றும் வழிபடுதலதிகாரப் பட்டமையின் ஏனையவு முடன்கூறினார்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவனே யாசாரியனென்றும் ஆசாரியனை வழிபாடு செய்யப் பரமேசுவர னிவனைத் தானாக்குவ னென்று மேலருளிச்செய்கிறார்.

பரம்பிரமமிவனென்றும் - எல்லாத்துக்கு மேலாயிருக்கிற பரமிந்த வாசாரியனென்றும்,—பரசிவனாமென்றும்-எல்லா

தத்தக்கு மேலான சிவனிந்தவாசாரியனென்றும்,—பரஞானி யனென்றும் - மேலானஞானமுமிந்த வாசாரியனே யென்றும்,—பராபரனுமென்றும் - எங்கும் பரிபூரணனான பரமசிவனே இந்த வாசாரியனே யென்றும்,—அரனருஞ்சீர் நிலையெல்லா மிவனேயென்றும் - பரமேசுரனுக்குண்டாகப்பட்ட சிறப்புடையுடைய நிலைமைகளெல்லா மிந்த வாசாரியனே யென்றும்,—அருட்குருவை வழிபட்டே யவனிவனுருவே யிரங்கி - ஞானாசாரியனை வழிபட்டே அந்தப் பரமேசுர னிந்தவாசாரியனுருவேயாய கிருபை ஜனித்து,—வாரண மாமைமீனண்டஞ் சினையை யியல்பினாலே பரிசித்தும் நினைத்தும்பார்த்தும்-நிறைநிறை - கோழியு மாமையு மீனு முட்டையுஞ் சினையு முறைமையாக, கோழி தன்னுடைய முட்டையைப் பரிசித்தும், ஆமை தன்னுடைய முட்டையைத் தூரத்தே கிடந்து நினைத்தும், மீனானது சினையைப்பார்த்தும்,—பரிந்திடுதானுக்குமா போல - முன் சொன்ன மூன்றும் பிரியப்பட்டு, கோழிமுட்டையைக் கோழியாக்கின தன்மைபோலவும், ஆமை முட்டையை யாமையாக்கின தன்மைபோலவும், மீன் சினையை மீனாக்கின தன்மைபோலவும்,—சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே-போதங்களாலே பரிசித்தும், திருவுளம்பற்றியும், திருக்கண்சாத்தியும் இந்த வான்மாவை யந்தச் சிவமேயாக்குவ னிந்த வாசாரியன்.

ஞானயோகத்தால் பரமபிரமமென்கிற திருவிருத்தமூன்றுக்கும் பிரமாணம் சிவஞானபோதம், கஉ-சூ, எ-வெ, "தன்னை யறிவித்துத் தானாய்ச், செய்தானைப், பின்னைமறத்தல் பிழையலது—முன்னவனே, தானேதானாச்செய்துந் தைவமென்றுந் தைவமே, மானே தொழுகை வலி" என்னுமதுகண்டு கொள்க.

இதனாற சொல்லியது, அதத உணமையைத தரிசிததத ஜீவ னமுததரா யுளளவாகள பரப பிரம முதலான திருமேனிக ளெலலா மிநத வாசாரியன ருனேயெனறு தேகாநத முளளளவுங குரு வழிபாடுசெய்து வரககடவாகளெனறும அபபடி செய்ய வே கோழியு மாமையு மீனு மணடததையுஞ சினையையும பரிசி ததலுஞ சிநதித்தலும் பாாததலுங காணுக்கின முறைமைபோல வி நத வானமாவையும ஆசாரியா பரிசிததலுஞ சிநதிததலும பாாத தலுந தற சொருபமாகிய சிவமே யாககுவனெனனு முறைமை யையு மறிவிததது

சதது மசததுஞ் சதசததுஞ் சததிய மாகிநிறகுஞ
சிததனை நிருவமல பலவாணை னெனனுளாஞ சோதனைனாற்
சுததம பயினற பதிபசுபாசததைச சொல்லுஞ சதத
மதத மதரகு ளாறுபோகவ காணடற சரிதலலவே

செய்ய சிவஞான சித்திக சடற பொருட்கு, உயயு நெறி தோனற வுளஙகொண்டு—மெய்யுயிரை, யூட்டுநெறி தோனற வு ளைபகாரததான ஞானவழி, காட்டு கிரமப வழகன.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பரம்பிரம சிவனெனறும - சொருபசிவமே யிவனெனறு ம,—பரசிவனருளெனறும - தடத்தசிவமே யிவனெனறும,— பரஞானசிவனென்றும் - பரஞானததையுடையா ரிவனெனறு ம,—பராபரனருளென்றும் - ஏனைத தாபரமூர்த்தங்களை யிவ னெனறும்,—அரனறாற்சீர் நிலையெல்லா மிவனேயெனறும்,—அ றுபததுமூனமை நாயன்மாா முதலிய சிவபததர் பெருமானும். ஆணடானடி வெளிப்பட்டருளி மறையு மோததகைகொல்லா மா கிய சிவபேதமனைத்தும் குருவெனததேறி,—அருட்குருவை வ ழிபடவே - ஞானசாரியனை வழிபடுக அநுபவம வழிபடப் பெறில,—அவனிவனாகுமே - சிவன இககுருவை யாவேசிதது

த்தன்று,—இரத்திய வாரணமானது மீனணடைந்து சியோடை - நீ
ருமுற்ற கோத்திரமை மீன முறையே முடைடையினை,— டலம்
ஒன்றிம பரிச்சித்த நீரைக்கும் பாதகமும் பரிசுத்திவைகா ரு
குமாபோல-இப்பாகனை திருவடியும் கருதியும் நோக்கியும் பரி
வுற்றுத் தன்வண்ணமாகச் செய்யுமாறுபோல,—தானேயா சி
தனு சிந்திக்கும் பாதகமும் சிவமேயாகக்கும் - தானுடோம
செய்யுமா பரிசமுதலிய மூன்றும் அவ்வுயிரைத் தன்வண்ண
மாகச் செய்தருளுவன் என்பதாம்.

அயவா றேத்தினர்க்கு வருமபயன கூறியவாறு

இன்னும் இந்நூலினைகளை விரித்துக் குருமுகமாகக்கேட்
கிற்றபாலன அநேகமுள; அவை கைலாய பரம்பரைச் சி
—சந்தானத் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்திகளின்
குரு விளங்குகின்ற அம்பலவாண தேசிகர் திருவடிகளைப் பொ
அநுபவமுடையவர்களை முறையில் வழிபட்டுக் கேட்டறிக.

கஉ - சூ. புறநடை முடிந்தது.

பன்னிரண்டாஞ் சூத்திர முற்றிற்று.

சிவப கணபதி வைபவகரமு மிருபதமும்
முற்ற பன்னிரண்டாஞ் சூத்திரமும்
ஏழும் முற்றிற்று

திறையிலை மூவொன்பதொடு மூன்றாய
சிவஞான சித்திசுப பக்கமெனத் தெளிபே
சானும் சிவஞான சித்தியார் சுபக்ஷ
திருவிருத்த முன்னூற்றிருபத்தெட்டும்
உரையுடன் முற்றுப்பெற்றது

ஆக பாயிரமுட்பட - ௩௨௮.